கஷ்புல்

கஸ்ஸாலீ

மௌலவி மூ. முஹம்மது ஹஸன் காதிரி,
ஆர். பி. எம். கனி பி. ஏ., பி. எல்.,
எழுதியது.

முதல் பதிப்பு: செப்டம்பர் 1954.
நூல் உரிமை முற்றும் பிரசுரித்தவருக்கே.

விலை இரண்டே கால் ரூபாய்

கிடைக்குமிடம்:

ஆர். பி. எம். கனி பி. ஏ., பி. எல்.,

128, மூர் தெரு,

சென்னை - 1.

முன்னுரை

எனது அருமை நண்பர் மௌலவி மூ. முஹம்மது ஹஸன் காதிரி அவர்கள் தர்ஜுமாச் செய்த "கிதாபுல் கஷ்பி வத்தப்யீனி பீ குரூரில் ஹல்கி அஜ்மயீன்" என்ற நூலின் ஏட்டுப் பிரதியைப் படித்தேன். உடனே அதை வெளியிடுவதென்று தீர்மானித்தேன். அத்துடன் அதற்குத் துணையாகும் முறையில் இமாம் கஸ்ஸாலீயின் வாழ்க்கை, தத்துவம் பற்றிச் சுருக்கமாக எழுதிச் சேர்த்துக்கொள்ள முடிவு செய்தேன். பல ஆண்டுகள் இமாம் அவர்களைப்பற்றிய பல நூற்களை ஆர்வத்தோடு படித்தும் குறிப்பெடுத்தும் வந்ததுடன், சில இலக்கியப் பத்திரிகைகளில் அவர்களைப்பற்றிக் கட்டுரைகளும் எழுதியுள்ளேன். எனவே, அந்த அனுபவத்தைப் பயன்படுத்திக்கொண்டு நான் எழுதியுள்ள பகுதி, சுருக்கமாக எழுத முயல்வதால் உண்டாகும் சில குறைகளையுடையதாய் இருப்பினும், கூடியவரை விஷய விளக்கமுள்ளதாகவும், ரஸமானதாகவும் இருக்குமென்றே நம்புகிறேன். எனது நண்பருடைய நூலின் நடையிலும் போக்கிலும் அவசியமான திருத்தங்கள் செய்து பதிப்பித்துள்ளேன்.

இமாம் கஸ்ஸாலீயிடம் பற்றுதல் மிகக்கொண்ட தமிழ் நாட்டு அன்பர்கள் இதை வரவேற்பார்கள் என்றும், அவர்களுடைய மற்ற அருமையான நூற்களும் தமிழில் வெளிவர இஃது ஓர் ஆரம்பமாக விருக்கப் பிரார்த்திப்பார்களென்றும் நம்புகிறேன்.

ர. பா. மு. கனி

உள்ளடக்கம்

		பக்கம்
இமாம் கஸ்ஸாலீ (ரஹ்)	...	5
கல்வி ஞானம்	...	7
போதனாசிரியர்	...	12
துறவு	...	13
இஹ்யாவை எழுதுதல்	...	16
மீண்டும் விரிவுரையாளராதல்	...	20
அமைதியும் அதன் குலைவும்	...	23
மறைவு	...	24
குடும்பம்	...	28
பண்பு	...	29
இசையைப் பற்றி இமாமவர்கள்	...	35
இமாமவர்களின் பாடல்கள்	...	37
,, உபமானங்கள்	...	39
,, நூற்களும் செல்வாக்கும்	...	47
,, நூற்களுக்கு உணர்ச்சி யூட்டியவை	...	57
,, ஆத்ம ஞானபோதம்	...	60
கஷ்புல் கஸ்ஸாலீ ...	...	101
மானிடர் தம் மதிமயக்கம்	...	105
மூமின்களின் மதிமயக்கம்	...	118
ஆலிம்களின் மதிமயக்கம்	...	124
ஆபிதுகளின் மதிமயக்கம்	...	154
பணக்காரர்களின் மதிமயக்கம்	...	171
ஸூபியாக்களின் மதிமயக்கம்	...	183
முடிவுரை ...	...	198

இமாம் கஸ்ஸாலீ (ரஹ்)

தோற்றம்

ஞானகுரு, சத்தியத்தின் வழிகாட்டி, ஜமாலுல் இஸ்லாம், ஹுஜ்ஜதுல் இஸ்லாம், அல் இமாமுல் அஃலம், அபூ ஹாமீத், முஹம்மது இப்னு அஹ்மது, அல் தூஸி, அஷ் ஷாபிஇ, அல் கஸ்ஸாலீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் இஸ்லாத்தின் மாபெரும் சிந்தனையாளர்கள், மிகப் பெரிய மார்க்க ஞானிகள், நீதிவான்கள் சிலருள் ஒருவராவார்கள். இமாம் கஸ்ஸாலீ என்ற இப்பெரியார் தன் வாழ்க்கை முழுவதையும் இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்காகவே அர்ப்பணித்தவர்களாவார்கள். நூற்றுக்கு மேற்பட்ட அரும் பெரும் கிரந்தங்களை எழுதியும், தம் காலத்தே மார்க்க உபதேசம் புரிந்தும் மனித கோடிக்குச் சேவை செய்த பேராசிரியர் இமாம் கஸ்ஸாலீ. தம் காலத்தே தம் நூற்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாதாராலும், தம்மீது துவேஷங் கொண்டோராலும் தூற்றப்பட்ட இப்பெரியாரின் நூற்கள் இன்று உலகினரால் வியந்து கொண்டாடப்படுகின்றன. ஏற்கனவே யூத, கிறிஸ்துவத் தத்துவ நூற்கள் எழுதப்படுவதற்கு இமாம் கஸ்ஸாலீயின் பல நூற்கள் உறுதுணையாய் அமைந்துள்ளன. இன்றோ ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி கலாச்சாரப் பிரிவு அவர்கள் நூற்களை ஆங்கிலம் ஆய மொழிகளில் ஆக்கவேண்டும் என்று துணிந்துள்ள அளவுக்கு அவர்கள் புகழ் ஓங்கி நிற்கிறது. இத்தகைய மகான் அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும்

நூற்களைப்பற்றிய விவரத்தையும், ஆத்ம ஞான போதனையையும் ஓரளவேனும் அறிந்து கொள்வது அவசியமாகும்.

பழைய பாரஸீக சாம்ராஜ்யத்தின் வடகிழக்கிலுள்ள குராஸான் மாகாணத்தில் தூஸ் என்று பெயர் பெற்ற இடமொன்றுண்டு. அது மலைவளம் நிறைந்தது. ஆறுகளும் நீரூற்றுக்களும், சோலைகளும், பழமரங்களும், கனிப்பொருள்களும் மிகுந்தது. இயற்கை எழில் நிறம்பிய இந்த மாவட்டம் மகாபெரும் ஸூஃபி ஞானிகளான அபாயஸீது பிஸ்தாமியையும், மன்ஸூர் ஹல்லாஜையும் நல்கிற்று; பாரஸீகக் கவிஞர்களான பிர்தௌஸியையும் உமர் கையாமையும் உலகுக்கு அளித்தது. இதே இடத்தில்தான் இமாம் கஸ்ஸாலீயும் தோன்றினார்கள்.

தூஸில் வாழ்ந்த முஹம்மது கியாமுத்தீன் கஸ்ஸாலீ என்பார் தன் தந்தையின் தொழிலான ஆட்டு ரோமத்தால் கம்பளி நெய்யும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வாழ்க்கை நடத்திவந்தார். அவருக்கு நீண்ட நாட்களாகக் குழந்தைப்பேறு இன்மையால் அவர் தமக்கு நெசவுத் தொழிலில் கிடைக்கும் ஊதியத்தை ஸூஃபியாக்களான ஞானியர்களுக்குச் சேவை செய்வதில் செலவிட்டுவிட்டு, அவர்கள் உபதேசங்களைக் கேட்பதும், தனக்கு உபதேசியாயும் ஸூஃபியாயும் வரக்கூடிய ஒரு புதல்வனை அருளுமாறு துஆக் கேட்பதுமாகக் காலங்கழித்தார். இதன் பயனாய்ப் பிறந்த முதல் ஆண்மகவே நமது அபூ ஹாமீது முஹம்மது கஸ்ஸாலீயாவார்கள். அவர்கள் பிறந்தது ஹிஜ்ரி 450 ரபீயுல் அவ்வல் 27 (கி. பி. 1057 ஜனவரி 16) ஆகும்.

அவர்கள் பிறந்தகாலை முஸ்லிம்களுடைய நிலைமை மிகவும் க்ஷீணமானதாய் இருந்தது. முஸ்லிம் உலகம் பல இன்னல்களுக்கு ஆளாகியிருந்தது. சிலுவை வெறியர்கள் பீட்டர் என்ற சாமியாரின் தூண்டுதலோடு

ஐரோப்பா முழுவதிலுமிருந்தே கிளர்ந்தெழுந்து பைத்துல் முகத்தஸின்மீது படையெடுத்தனர். ஐரோப்பாவிலே அந்தலூஸ் எனும் ஸ்பெயினிலிருந்து அறிவொளி கொளுத்திய அரபியர் நசிந்து, அவர்களிடத்திலே மூரிய முஸ்லிம்கள் ஆட்சி செலுத்திய அக்காலையில் இரண்டாம் அல்பான்ஸோ எனும் கொடியோன் அவர்களை இனநாசம் செய்யத் திட்டமிட்டு எழுந்து கொந்தளித்துக் கொண்டிருந்தான். வெளியார் ஆக்கிரமிப்பை விரட்டியடிக்க இயலாத அளவுக்கு முஸ்லிம்கள் வீரிய மிழந்துவிடவில்லை. ஆனால், அவர்கள் வீரிய நதி உள்பகையெனும் மாயப் பாலையில் சோர்ந்து வீணாயிற்று; இஸ்லாமியப் பூங்கா கருகி வாடிக்கொண்டிருந்தது. சிறிய மாகாணங்களும் தான்தோன்றி ஆட்சி தொடங்கின. கொலையையே உறுதுணையாகக் கொண்ட அரசியல் கட்சிகள் பல முளைத்தன. உலமாக்களில் பெரும் பகுதியினரோ தம் கடமையை மறந்து காலத்தை யனுசரித்து நடக்கத் துணிந்தனர். ஸூபியாக்களில் பெரும் பாலாரோ தம் உடையளவில் மட்டுமே ஸூபியாக்களாக விளங்கலாயினர். அடித்துப் பேசி, திரு குர்ஆன், ஹதீஸின் ஸ்தானங்களை மீண்டும் நிலைபெறச் செய்யும் ஒரு முஜத்திதை வேண்டிக் காலம் கரைந்து கொண்டிருந்தது. இமாம் கஸ்ஸாலீ தோன்றினார்கள் - ஹஜ்ரத் கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகை அவர்கள் உதிப்பதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்னதாக.

கல்வி ஞானம்

சன்மார்க்கப் பண்பு வாய்ந்த இமாம் கஸ்ஸாலீயின் தந்தையார், அவர்களுடைய பால பருவத்திலேயே காலமாகிவிட்டார். தாயின் அரவணைப்பிலும், ஒரு ஸூபி பெரியாரின் மேல்பார்வையிலும் கஸ்ஸாலீ திரு குர்ஆன், ஹதீஸ், ஞானியர் வரலாறுகள், ஞானக் கதை

கள் ஆகியவற்றைக் கற்றூர்கள். தமது தந்தையார் விட்டுச் சென்ற சொற்ப திரவியமும் செலவான பின்னர், ஒரு மத்ரஸாவிலேயே சேர்ந்து கல்வி பெறலானூர்கள். ஆனால், அக்காலக் கல்வி முறையும், இக்காலத்தினதைப் போலப் பதவி பெறவோ, பட்டம் பெறவோதான் பயன் படுவதாய் இருந்தது. எனவே, இதுபற்றிப் பின்னர் அவர்கள் எழுதுகையில், "அல்லா(ஹ்)வை யன்றி வேறு எதற்காகவோ நாம் கல்வி கற்றோம்; ஆனால், அவனோ தனக்காகவே யன்றி வேறு எதற்காகவும் அதை அனுமதிக்க மறுத்துவிட்டான்" என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

மத்ரஸாவில் பொதுவான கல்விகளைப் படித்து முடித்ததும் கஸ்ஸாலீயவர்கள் தமது ஊரிலிருந்த பெரியாரான ஷைகு அஹ்மது பின் முஹம்மது அல் ராத்கானீ என்பாரிடம் பிக்ஹு பாடங்களைக் கற்றூர்கள். பிறகு ஜர்ஜான் எனும் ஊர் சென்று இமாம் அபூ நஸருல் இஸ்மாயீலி எனும் பெரியாரிடம் பாடங் கேட்டார்கள். அக்காலையில் தாம் கற்றவைகளையும் கேட்டவைகளையும் குறிப்புக்களாக எழுதி வைத்திருந்தார்கள். ஒரு தடவை அவர்கள் ஜர்ஜானிலிருந்து தூஸ் திரும்புகையில் கொள்ளையர்கள் வசம் இக்குறிப்புக்களும் சிக்கிக் கொண்டன. "நான் கஷ்டப்பட்டுப் படித்ததெல்லாம் வீணுகி விடுமே!" என்று வருந்திய அவர்கள் தமது குறிப்புப் புத்தகங்களை மட்டுமாவது திருப்பித் தரும்படி கொள்ளையர்களிடம் வேண்டினூர்கள். அவற்றை அலக்ஷியமாகத் தூக்கி அவர்களிடம் எறிந்த கொள்ளையர் தலைவன், "இந்தத் தாட்களுடன் மறந்துவிடக்கூடிய படிப்பைத் தானே நீ படித்தாய்!" என்று ஏளனஞ் செய்தான். இது அவர்களின் இளம் மனத்தில் சுருக்கெனத் தைத்தது. இனிப் படிக்கும் பாடங்களையெல்லாம் மனனம் செய்து விடுவது என்று அப்போதே முடிவுசெய்து அதன்படியே

நடந்து வந்தார்கள். அவர்கள் படிக்கும் எதுவும் உடனே அவர்கள் மனத்தில் பதிந்துவிடும். அவர்களுடைய அபாரமான ஞாபகசக்தியின் உதவியால் மனனஞ் செய்த எதையும் தேவையான சமயத்தில் நினைவு படுத்திக்கொள்ள முடிந்தது.

தூஸ் திரும்பியபின் மஃரிபாவின் பக்கல் மனம் இழுக்கப்பட்டவர்களான இமாம் கஸ்ஸாலீ, யூஸுப் அல் நஸ்ஸாஜ் என்ற பெரியாரிடம் ஆத்ம ஞானம்பற்றிய விவரங்களைக் கற்கலானார்கள். இக்கால அனுபவம்பற்றி அவர்கள் பின்னர் எழுதியுள்ளதாவது: "ஆரம்ப தசையில் ஸாலிஹீன்களின் ஆத்ம நிலைகளையும், ஞானியர்களின் படித்தரங்களையும்பற்றி நான் ஏதும் அறியாதிருந்தேன். பின்னர் எனது ஷைகு யூஸுபு அல் நஸ்ஸாஜுடன் தூஸ் நகரில் தொடர்பு கொண்டேன். அவர்கள் எனக்குத் தந்த ஞானப் பயிற்சிகளுக்குப் பின்னர், எனக்கு உண்டான இல்ஹாம் எனும் உதிப்புகளின் மூலமே எனக்கு நம்பிக்கையுண்டாயிற்று. என் கனவில் 'அபூ ஹாமீத்!' என்று அல்லா(ஹ்)வின் குரல் ஒலித்தது. அழைப்பது ஒரு வேளை ஷைத்தானின் குரலாய் இருக்குமோ என்று ஐயுற்றேன். ஆனால், அக்குரல் கூறிற்று, 'இல்லை, இஃது உன் ரப்பு; அவன் எங்கும் உன்னோடிருக்கிறான். அபூ ஹாமீத், உன் சம்பிரதாயங்களைக் கைவிட்டுப் பூமியில் என் நேசர்களாக நான் ஆக்கியுள்ளோர்களின், எனக்காக அவ்வுலகையும் கவனத்தையுமே ஒதுக்கி வைத்துவிட்டவர்களின் நட்பைத் தேடு!' நான் சொன்னேன், 'உனது மகத்துவத்தால் நான் உன்னைப்பற்றி நேர்மையாக எண்ணும்படி நீ செய்யவில்லையா?' என்று. அவன் சொன்னான், 'ஆமாம், இவ்வுலகம் பற்றிய எண்ணங்கள்தாம் அவற்றிலிருந்து உன்னைப் பிரிக்கின்றன. எனவே இழிவான முறையில், நீ வெளியாக்கப்படுமுன் நீயாகவே அவற்றை விட்டு அப்

பாலாகிவிடு. உன் மீது எனது சந்நிதானத்தின் ஒளி படு மாறு செய்துள்ளேன்.’ பிறகு நான் மகிழ்வுடன் எழுந்து எனது ஷைகு (யூஸுபு) அவர்களிடம் சென்றேன். என் கனவைக் கூறினேன். அவர்கள் புன்னகையுடன் பகர்ந் தார்கள், “அபூ ஹாமிதே, நாம் ஆரம்பத்தில் உபயோ கிக்கும் ஏணிகள் இவை. இவற்றை நாம் உதைத்துத் தள்ளி விட்டோம். ஆனால், நீர் என்னோடு சேர்ந்திருப் பீரானால் உம் அகக்கண் தெய்வ உதவியின் கடாக்ஷம் பெறும். அவன் சந்நிதானத்தையும் அங்கு இருப்பவர் களையும் காணும்வரை பயிற்சி பெறவேண்டும். அந் நிலையை அடைந்தபின் உம் கண்கள் காண இயலாததை நீர் சிந்தையில் காணும்வரை திருப்தியுறமாட்டீர். இவ் விதம் உம் மானிடத் தன்மையிலுள்ள இழிகுணங்களி லிருந்து விடுபடுவீர்; உம் அறிவின் கட்டுப்பாடுகளுக்கும் அப்பால் செல்வீர்; ‘நானே அல்லாஹ், படைக்கப் பட்ட சகல வஸ்துக்களுக்கும் இறைவன்’ என்று மூஸா (அலை) கேட்ட அல்லாஹு ஸுப்ஹானஹுவின் குரலை நீரும் கேட்பீர்.”

ஹிஜ்ரி 470 (கி. பி. 1077)-ல் கஸ்ஸாலீ நிஷாப்பூர் சென்றார்கள். அங்கே புகழ் மிகுந்து விளங்கிய நிஜாமியாக் கல்லூரியில் மாணவராகச் சேர்ந்தார்கள். அங்கே ஆசிரி யராய் இருந்த அபுல் மஆலி அல் ஜுவைனி என்ற இமாமுல் ஹரமைன் (புனித ஸ்தலங்களின் இமாம்) அவர் கள் நடத்திய வகுப்புகளிலமர்ந்து, மார்க்க சாஸ்திரங் கள், தத்துவம், தர்க்கம், மொழியாராய்ச்சி, இயற்கை விஞ்ஞானம் முதலிய பாடங்களையும் ஆத்ம ஞானக் கல்வியையும் பயின்றார்கள்.

இக்காலையில் கஸ்ஸாலீயின் திறமை பல வழிகளி லும் வெளிப்படலாயிற்று. ஏனைய மாணவர்களோடு அவர்கள் விவாதங்கள் நடத்துவதும், அவர்களுக்குப் பிர சங்கங்கள் நிகழ்த்துவது முண்டு. மிகவும் கடுமையாக

அவர்கள் உடல் வருந்திக் கல்வி கற்றதால் அவர்கள் உடல் நலமும் கெட்டதுண்டு. அவர்களுடைய இயற்கையான திறனும், எதையும் உடனே விளக்கும் இயல்பும் அவர்கள் ஆசிரியரைப் பெருமைகொள்ள வைத்தனவாயினும், பொறுமைக்கும் ஆளாக்கின. இமாம் கஸ்ஸாலீ தமது இருபத்து மூன்று, இருபத்து நான்காம் வயதிலேயே மாணவராய் இருந்துகொண்டே நூற்கள் எழுதத் துணிந்துவிட்டார்கள்.

அக்காலையில் அவர்கள் எழுதிய முதல் புஸ்தகம் "கிதாபுல் மன்கூல்" என்பது. இந்நூலை அவர்கள் தம்முடைய ஆசிரியரிடங் காட்டினார்கள். அதைக் கண்ணுற்ற ஆசிரியர், கஸ்ஸாலீயிடம் கூறினார்கள், "நான் உயிரோடிருக்கும்போதே நீர் என்னை நல்லடக்கம் செய்துவிட்டீர். நான் மௌத்தாகும்வரை காத்திருக்குமளவுக்காவது பொறுமை வேண்டாமா? உமது இந்நூல், நான் இதுவரை எழுதியவற்றை இடம் தெரியாமலாக்குவதாய் இருக்கிறதே!" என்று.

இதன்பின் இமாமவர்கள் மார்க்க, ஆத்மஞான சம்பந்தமான சுய ஆராய்ச்சியில் ஈடுபட்டார்கள்.

"கேள்விப் பேச்சை ஒதுக்கு;
நீ பார்ப்பதை நம்பு!
சூரியனே உதயமான பின்னர்
சனிக் கிரஹத்தின் வெளிச்சம் தேவைதானா?"

என்று தன் கருத்தை வெளியிட்டார்கள். "ஐயுறாதவன் ஆராயமாட்டான்; ஆராயாதவன் உணரமாட்டான்; உணராதவன் கண் மூடியாய்ப் பிழையிலழுந்துவான்" என்று எழுதினார்கள். இச்சமயத்தில் தூஸ் நகரிலிருந்த இன்னொரு பெரியாரிடமும் ஸூஃபி ஞானங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

போதனசிரியர்

நிஷாப்பூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்திய ஸெல்ஜூக் மன்னர் மாலிக்ஷாவிடம் காஜா ஹஸன் நிஜாமுல் முல்க் என்ற மந்திரியொருவர் இருந்தார். இவர் மிகுந்த கலாவிற்பன்னராய் விளங்கிப் பல கலைக் கழகங்களைக் கண்டார். பக்தாத், பல்க், நிஷாப்பூர், ஹிரத், இஸ்பஹான், பஸ்ரா, மெர்வ், அமுல், மோஸுல் முதலிய இடங்களில் கல்லூரிகளை உண்டாக்கினர். இக்கல்லூரிகளில் விரிவுரையாளர்களாக நியமிக்கப்படும் அறிஞர்கள் பரந்த ஆராய்ச்சியும் எதையும் திறம்பட விளக்கும் ஆற்றலும் உடையவர்களாய் இருந்தனர். அவர்கள் நிகழ்த்தும் விரிவுரைகளுக்குக் கால வரம்பு இருக்கவில்லை; எவ்வளவு நேரமாயினும் பேசலாம். ஆனல், மற்றொரு விரிவுரையாளரின் எழுத்து மூலமான அனுமதியின்றி அவரியற்றிய நூற்களிலிருந்து மேற்கோள்களை எந்த விரிவுரையாளரும் கையாளக்கூடாது. இது போன்றே கல்வி பயிலும் மாணவர்களும் தமக்குச் செய்யப்படும் விரிவுரைகளின் சாரத்தைப் பிரஸ்தாப ஆசிரியரின் அனுமதியின்றி உபயோகப்படுத்திக் கொள்ளக்கூடாது.

இத்தகைய காலத்தில் கஸ்ஸாலீயின் கவர்ச்சியான சொல்வன்மையையும், கல்வி ஞானத்தையும் கண்ட நிஜாமுல் முல்க் அவர்களைப் பக்தாத் நிஜாமியாக் கல்லூரியிலேயே ஒரு சொற்பொழிவாளராக நியமித்துவிட்டார். அப்போது பக்கீஹ்களில் தலையாய சிலர் இமாம் கஸ்ஸாலீயிடம் வந்தனர். "பேராசிரியர் பதவி ஏற்கும் யாரும் இந்நகரிலுள்ள பக்கீஹ்களை அழைத்து ஒரு சொற்பொழிவு நிகழ்த்துவதுண்டு; நீங்களும் எங்களை அவ்விதம் அழைக்கவேண்டும்" என்று அவர்கள் கேட்டுக் கொண்டனர். கஸ்ஸாலீ சொன்னர்கள், "தாராளமாக! ஆனல், நான் போடும் இந்த இரண்டு நிபந்தனைகளில் ஒன்றை நீங்கள் ஏற்றாகவேண்டும்: நீங்கள் விருந்து

தாருங்கள், நான் சொற்பொழிவாற்றும் நாளை நிச்சயிக்கிறேன். அல்லது நான் விருந்து தருகிறேன், நீங்கள் சொற்பொழிவு நிகழ்த்தும் நாளைக் குறிக்கலாம்'' என்று. "அப்படியானால் நாங்கள் தேதி குறிப்பிடுகிறோம். நீங்கள் விருந்துக்கு ஏற்பாடு செய்யுங்கள்'' என்றனர் பக்கீஹ்கள். "நான் தரக்கூடிய விருந்தில் காய்ந்த ரொட்டியும், காடியும், பச்சிலைகளும்தாம் இருக்கும்'' என்றார்கள் கஸ்ஸாலீ. இது கேட்ட பக்கீஹ்கள், "அப்படியானால் நீங்கள் நாளைக் குறிப்பிடுங்கள், நாங்கள் விருந்துக்கு ஏற்பாடு செய்கிறோம்'' என்றனர். உடனே கஸ்ஸாலீ, "சரி, இரண்டு வருஷங் கழித்து நான் சொற்பொழிவாற்றுகிறேன்'' என்று நாளைக் குறிப்பிட்டார்கள். இது கேட்ட பக்கீஹ்கள் தாங்கள் ஏமாந்ததை ஒப்புக்கொண்டு, சகல ஏற்பாடுகளையும் செய்துகொள்ளும் பொறுப்பை அவர்களிடமே விட்டு விட்டனர்.

இமாம் கஸ்ஸாலீயின் அருமையான சொற்பொழிவுகள் யாவரையும் வியப்பிலாழ்த்தின; யாவர் மனத்தையுங் கவர்ந்தன. அமீர்களும் பிரபுக்களும், தலைவர்களும் கல்லூரியில் வந்து மாணவர்களுடனமர்ந்து அவற்றைக் கேட்கலாயினர்.

துறவு

இமாம் கஸ்ஸாலீயும் இரவு பகல் என்று பாராது பல்வேறு நூற்களைப் படிப்பதும், சொற்பொழிவாற்றுவதுமாகவே காலங் கழித்தார்கள். அவர்கள் அறிவுத் தீபம் மிகவும் பிரகாசமடையலாயிற்று. சத்தியத்தை விளக்கும் தம் வேலையில் அவர்கள் சிறிதும் சளைக்கவில்லை. இவ்விதம் இடையறாது உழைத்துத் தம் புகழை அவர்கள் நெடுகிலும் பரப்பிக் கொண்டிருக்கையிலேயே அவர்களின் உடல் நலங் கெட்டது. அதற்கு அவர்களைப் பற்றிய சிந்தனையும்

ஒரு காரணம் எனலாம். அவர்கள் கற்ற மார்க்க ஞான நூற்களும் தத்துவ நூற்களும் அவர்கள் மனத்தைக் குழப்பத்திலாழ்த்தின. ஸூபியாக்களின் நூற்கள் தாம் சற்று நம்பிக்கையை உண்டாக்கின. ஆனால், தஸவ்வுபு ஞானம் அனுபவப் பூர்வமானதாய் இருக்கவேண்டும். ஏட்டிலிருந்து படித்துப் புரிந்து கொள்வதன்று என்பதையும் அவர்கள் உணர்ந்தார்கள். இதுபற்றி அவர்கள் தன்னுடைய "அல் முன்கித் மினழ் ழலால்" (வழி கேட்டிலிருந்து விடுவிப்பது) என்ற நூலில் எழுதியுள்ள தன் சாரமாவது: ஸூபியாக்களிடமிருந்து கற்றுக் கொள்பவைகளிலிருந்து, அல்லா(ஹ்)வின் வழியைப் பெறுவது, அவ்வழியின் அனுபவம் பெறுவதற்கு இணையாகாது; உலகப் பற்றுகளை உதறுவது என்பது என்ன என்று விரிவாக அறிந்து கொள்வது, உலகப் பற்றுகளை முற்றும் உதறிவிடுவதற்கு இணையாகாது. தஸவ்வுபு ஞானம் என்பது வார்த்தைகளில் இல்லை; பிரத்தியக்ஷ அனுபவத்தாலேயே உண்டாகிறது. மறுமையை எய்துவது என்பது, இம்மையைவிட்டு விலகி அல்லா(ஹ்)விடமே தன் முழுக் கவனத்தையும் செலுத்துவதாகும். இதற்காகப் புகழ், செல்வம், உலகச் சிந்தைகள், பந்தங்கள் முதலிய சகலமும் உதறித் தள்ளப்பட வேண்டும்.

ஆனால், தாமோ தம் சுய புகழுக்காகவும், புகழ் பெறும் இச்சைக்காகவுமே தம் காலத்தையெல்லாம் விரயமாக்குவதாகக் கஸ்ஸாலீ உணர்ந்தார்கள். இது பற்றிப் பின்னர்த் தமது 'இஹ்யா உலூமுத்தீ'னில்(பாகம் 4, பக்கம் 67, 68-ல்) அவர்கள் இவ்விதம் எழுதியுள்ளார்கள்: "படைக்கப்பட்ட சிருஷ்டிகள் யாவும் ஆத்மாவைக் கட்டிப்போடும் பலமான பந்தங்களையுடையவை; பதவி மோகம், அதிகார ஆசை, அடக்கியாளும் விருப்பம், தலைவனாக வேண்டும் என்னும் பேரவா முதலியவை

அறிவாளிகளின் ஆத்மாக்களேயும் இன்று ஆட்கொண்டுள்ளன. அதன் நோக்கம், அல்லா(ஹ்)வின் வஸிபத்துகளில் ஒன்றான 'ருபூபிய்யத்' ஆக இருக்கும்போது, அஃது அப்படி இல்லாமலிருக்க முடியுமா? ஆதிக்க ஆசை இதயத்தால் இயற்கையாக நேசித்து விரும்பப்படுகிறது. ஏனெனில், அது தெய்வீகமானதொரு தொடர்பு உடையதாய் இருக்கிறது. அதிகாரமடைய விரும்புதல் குறை கூறப்பட வேண்டியதன்று; ஆனால், அதிகாரத்தில் இரு வகைகளுண்டு. அவை சகலவிதமான கவலைகளேயும் சூழச் செய்து விரைவில் மறைந்துவிடும் அதிகாரம், நிரந்தரமான மறுமைக்குரிய அதிகாரம் என்பனவாகும். மரணந் தழுவ வேண்டியவனான மானிடன், அழிபவற்றின்மீது ஆசை கொள்கிறான்; லோக இச்சைகளால் மனம் பேதலிக்கப்படுகிறான். தாம் ஒரு மலையுச்சியில் நிற்பதுபோலும், தாம் பின்னால் காலெடுத்துவைக்காவிட்டால் கீழே விழப்போவதுபோலும் இமாமவர்கள் உணர்ந்தார்கள். பல நாட்கள் சிந்தித்தார்கள். காலையில் உலகப் பந்தங்களே உதற எண்ணமுண்டாகும்; மாலையில் உலக ஆசைகள் வந்து தொத்திக் கொள்ளும். அவர்கள் மனச்சாட்சியோ சதா தார்க்குச்சியால் குத்திக் கொண்டே இருந்தது. "புறப்படு, புறப்படு... இப்போது நீ மறுமைக்குத் தயாராகவில்லையென்றால், இனி எப்போது தயாராகப் போகிறாய்? இப்போது விடுவித்துக் கொள்ளாவிடில் இனி எப்போது?" என்று அஃது இடித்துத் தள்ளிற்று. ஆறு மாதங்கள் பெரும் போராட்டங்கள் நடந்ததால்தான் அவர்கள் உடல் நலம் அதிகமும் பாதிக்கப் பட்டதாயிற்று. "யாராவது ஓர் அறிஞன் ஏதாவது ஒரு கஷ்டத்தால் உடல் நலம் குன்றுகையில் அவன் தலேயும், மார்பும் பாதிக்கப்படுகின்றன; அவன் ஆத்மா சகல ஞானத்தையும் ஒதுக்குகிறது; அவன் தான் கற்ற கல்வியையே மறக்கிறான்; எல்லாம் குழப்பமாகின்றன;

கடந்த காலத்தில் அவன் அடைந்த அறிவு யாவும் அவன் நினைவைவிட்டு மறைந்து கொள்கின்றன” என்று அவர்கள் “ரிஸாலாத்துல் லதுனிய்யா” எனும் தங்கள் நூலில் எழுதியிருக்கும் நிலையையே அடைந்துவிட்டார்கள். அவர்கள் பிணியைப் போக்கக் கலிபாவே தமது அரண்மனை வைத்தியரை அனுப்பினார். ஆனால், ஆத்ம நோய்க்கு மருந்து தர அவர் எங்கே அறிவார்? அவர்களுடைய சுகக்குறைவின் காரணத்தையே அவரால் கண்டுபிடிக்க இயலவில்லை. அவர்கள் தம்மை அல்லா(ஹ்)வின் கருணையிடம் ஒப்படைத்து விட்டார்கள்.

இதன் பின்னரே அவர்கள் உலகை உதறித்தள்ளும் உறுதிபெற முடிந்தது. தமக்குப் புகழையும், பதவியையும், பொருளையும் தந்து வந்த ஆசிரியப் பதவியை உதறினார்கள். அந்த ஸ்தானத்தில் அப்போது பேராசிரியராகும் ஆற்றல் பெற்றிருந்த தமது இளைய சகோதரர் அஹ்மது கஸ்ஸாலீ அவர்களை அமர்த்தினார்கள். தம் பெண்டுகளுக்கும் பிள்ளைகளுக்கும் வேண்டிய வசதிகள் செய்யத் தேவையானது போக, பாக்கிச் செல்வங்களைத் தான தருமங்களில் செலவிட்டார்கள். பேராசிரியருக்குரிய உயரிய உடையை அகற்றி ஸூபியாக்களுக்குரிய முரட்டு உடையை அணிந்தார்கள். ஹிஜ்ரி 488 (கி. பி. 1096)-ல் பக்தாதை விட்டுப் புறப்பட்டுவிட்டார்கள்.

‘இஹ்யா’வை எழுதுதல்

கால்நடையாக நெடுகிலும் அலைந்து பல கஷ்டங்களைக் கண்டார்கள். ஸிரியா நாட்டின் பல்வேறு இடங்களிலும் தங்கி தியானத்திலும், தொழுகையிலும், மனத்தைப் பழக்குவதிலும் ஈடுபட்டார்கள். ஹிஜ்ரி 489 (கி.பி 1096)-ல் ஸிரியாவின் தலைநகரான திமிஷ்க் நகரில் எளியவரின் உடையுடன் நுழைந்து, யூப்ரடீஸ் நதிக்கரையிலே இருந்த கான்காஹ் அஸ் ஸமீஸதிய்யா

எனும் தியான மடத்தின் கதவைத் தட்டினார்கள். ஊர் பேர் தெரியாத ஒரு பக்கீர், அவர்கள் உள்ளே போகலாம் என்று அனுமதி யளித்தார். அந்தத் தியான மடத்தில் பகலெல்லாம் வேலைக்காரனாக அவர்கள் வேலை செய்வார்கள். மடத்தின் முற்றத்தையும் தாழ்வாரங்களையும் பெருக்கிச் சுத்தம் செய்வார்கள். யாராவது பக்கீர் சொல்லும் குற்றேவல் வேலையைச் செய்வார்கள். இரவு முழுவதும் திமிஷ்க் நகரிலிருந்த உமய்யா மஸ்ஜிதில் சென்று அங்கு ஒரு மினாரினுள் அமர்ந்து தொழுகையிலேயே ஈடுபட்டிருப்பார்கள். அது ஷைகு நஸ்ருல் மக்திஸி எனும் ஒரு பெரியார் தவத்தில் ஈடுபட்டிருந்த இடம் என்று சொல்லப்பட்டது. ஆனால், இமாம் கஸ்ஸாலீ அதில் தியானஞ் செய்ததால் அஃது இப்போது அல் கஸ்ஸாலீயின் மினார் என்றே வழங்கப் படுகிறது. இந்த மினாரினுள் அவர்கள் தியானத்தில்லாத சமயங்களில் தங்களின் மகத்தான கிரந்தமான "இஹ்யா உலூமுத்தீ"னை எழுதி வந்திருக்கிறார்கள். இந்நூல் முழுவதையும் இவ்விடத்திலேயே எழுதி முடித்ததாகச் சொல்லப்படுகிறது.

இவ்விடத்திலிருக்கும்போது ஒரு நாள் அவர்கள் திமிஷ்க் நகரக் கல்லூரி யொன்றைக் காணச் சென்றார்கள். அங்கே ஒரு விரிவுரையாளர் தமது விரிவுரைக்கு மேற்கோள் காட்டும் நோக்குடன், "அல் கஸ்ஸாலீ சொல்கிறார்கள்........" என்று ஆரம்பித்தார். இதைக் கேட்டதும் இமாமவர்கள் அவ்விடம் விட்டே அகன்று விட்டார்கள். பல நாட்களாகத் தியானத்தாலும், தவத்தாலும் அடக்கி ஒடுக்கப்பட்டுவரும் நப்ஸ், தான் புகழப்படுவதைக் கேட்டதும் மீண்டும் அகந்தை கொண்டுவிடக் கூடாதே என்றுதான் இவ்விதம் அகன்றார்கள்.

ஒரு நாள் உமய்யா மஸ்ஜிதின் முன் மண்டபத்தில் ஒரு தூணில் சாய்ந்தபடி அவர்கள் அமர்ந்திருந்தார்கள்.

அப்போது ஒரு கிராமவாசி அங்கே வந்தான். அதே மண்டபத்தில் சற்றுத் தொலைவில் திமிஷ்க் நகரின் பிரபல பக்கீஹ்கள் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். கிராமவாசி அவர்களிடம் சென்று ஒரு மார்க்கப் பிரச்னைக்குத் தீர்ப்புக் கேட்டான். அப்பிரச்னை மிகவும் சிக்கலானதாய் இருக்கவே அவர்கள் எந்தப் பதிலும் கூற வில்லை. கிராமவாசி ஏமாற்றத்துடன் திரும்பினான். அவன் கேட்ட கேள்வி இமாம் கஸ்ஸாலீ அவர்களின் காதிலும் விழுந்ததாதலால், அவர்கள் அவனை அழைத்து அதற்கான விடையைக் கூறினார்கள். கிராமவாசியோ ஒரு சாதாரணப் பக்கீர் உடையிலிருந்த அவர்களை ஏளனமாக நோக்கினான். அவர்கள் கூறிய விடையை ஏற்க அவன் தயாராயில்லை. இதைக் கவனித்த பக்கீஹ்கள் அவனை அழைத்து, அவர்கள் கூறிய விடையைக் கேட்டனர். அதை அறிந்ததும், அது கிராமவாசியின் கேள்விக்கு மிகவும் பொருத்தமானதாய் இருக்கக் கண்டனர். தங்களால் சொல்ல முடியாத அந்த விடையைத் தந்தவர் யார் எனக் காணும் ஆவலில் இமாமவர்களிடம் வந்தனர். அவர்கள் இமாம் கஸ்ஸாலீயை இனம் கண்டு கொண்டனர். உடனே அவர்களுக்குப் பெரும் மரியாதைகள் செய்தனர். மறுநாள்தொட்டு அங்கே அவர்களுடைய உபன்யாசங்கள் நடத்தப்பட ஏற்பாடு செய்தனர். ஆனால், அன்று இரவிலேயே இமாமவர்கள் திமிஷ்க் நகரைவிட்டுப் போய்விட்டார்கள்.

இமாம் கஸ்ஸாலீ பைத்துல் முகத்தஸ் சென்றார்கள். அங்கே சில காலம் தியானத்திலீடுபட்டிருந்து, பின்னர் இப்ராஹீம் நபியவர்களின் கபுருஸ்தானத்தின் முன் நின்று ஒரு பிரதிக்ஞை செய்து கொண்டார்கள். இனி எந்த அரச அவையிலும் நுழைவதில்லை; அரசர்கள் தரும் சம்மானங்களை ஏற்பதில்லை; யாருடனும் விவாதங்கள் புரிவதில்லை என்பதே அப்பிரதிக்ஞையாகும். பின்

னர் மக்கா சென்று ஹஜ் செய்தார்கள்; மதீனு சென்று எம்பெருமான் (ஸல்) அவர்களின் ரௌலா ஷரீ பைத் தரிசித்தார்கள். பிறகு அங்கிருந்து நீங்கி காஹிரா, இஸ்கந்திரியா முதலிய நகர்கள்வரை பல் வேறு இடங்களிலும் சுற்றி, நாதாக்களுடைய அடக்க ஸ்தலங்களில் ஸியாரத் செய்தும் தியான மடங் களிலமர்ந்து தியானித்தும் வந்தார்கள். உலர்ந்த ரொட்டித் துண்டுகளே அவர்கள் உணவாய் இருந்தன. கந்தலை உடுத்திக் கைத்தடி பிடித்து ஒரு சிறிய சாக்குப் பையுடன் மட்டும் அவர்கள் பிரயாணஞ் செய்து வந்தார்கள்.

அவர்கள் பக்தாத் நிஜாமியாக் கல்லூரியில் நிகழ்த் திய சொற்பொழிவுகளைக் கேட்ட ஒருவர், இச்சமயம் அவர்களைச் சந்தித்தார். "இமாமவர்களே, பாட போதனை செய்யும் வேலை இதைவிட உயர்ந்ததல்லவா?" என்று அவர் அவர்களிடம் வினவினுர். "ஆசையென்னும் அடிவானத்திலே பேரின்ப மகிழ்வெனும் பூரணச்சந்திரன் உதயமானதும், அறிவெனும் சூரியன் தன் அஸ்தமன இடத்தை அடையவேண்டியதுதானே!" என்று இமா மவர்கள் அலக்ஷியமாகப் பதிலளித்தார்கள்.

இதன்பின் இமாம் கஸ்ஸாலீ மீண்டும் பக்தாத் வந்தடைந்தார்கள். அவர்கள் மீண்டும் மார்க்க மகோ பன்யாசங்கள் புரியத் தொடங்கினுர்கள். தம்முடைய உயரிய நூலான இஹ்யாவைப் பற்றிய விளக்கச் சொற் பொழிவுகளை நிகழ்த்தினுர்கள். அவர்களுடைய உபன் யாசங்கள் மிகவும் உருக்கமானவையாயும் ஜனங்களின் மனத்தை நெகிழச் செய்வனவாயும் இருந்தன. அவர்க ளுடைய இந்த உபன்யாசங்களி லொன்றைக் கேட்ட அபூ ஸையிதுல் நவ்கானீ என்ற பெரியார் சொல்லுவதாவது:

இஹ்யாவைப்பற்றி இமாமவர்கள் உபன்யாசிக்கும் போது இக்கருத்துள்ள அரபிப் பாடலை உருக்கமாகப் பாடினார்கள் :

அவர்கள் தாய்ப் பூமிகளை அவன்
அவர்களுக்கு அருமையானவை யாக்கினான்;
அவற்றில் தரிபட அவர்கள் இதயங்கள் தவிக்கின்றன.
தமது இல்லங்களை நினைவுகூரும் மாந்தர்
தமது பாலப் பருவத்தை நினைவுபடுத்துகின்றனர்;
அங்கே திரும்ப வேண்டும் என்ற தாபமடைகின்றனர்.

இவ்விதம் பாடிய இமாமவர்கள் உணர்ச்சி வசப்பட்டு அழுதார்கள். சபையோரும் அவர்களுடன் சேர்ந்து அழுதனர்.

பக்தாதில் சில காலம் மகோபன்யாசங்கள் நிகழ்த்தி விட்டுத் தம் சொந்த ஊரான தூஸ் சென்று தனிமையி லிருந்து தியானிக்கலானார்கள். பற்பல நூற்களையும் அங் கிருந்தவாறு எழுதி முடித்தார்கள்.

மீண்டும் விரிவுரையாளராதல்

இப்போது மந்திரி இமாமுல் முல்க் காலமாகி, அவர் புத்திரர் பக்ருல் முல்க் பிரதம மந்திரியாய் இருந்தார். அவருடைய தலைமைப் பீடம் குராஸானிலிருந்தது. இமாமவர்களின் பெருமையை அறிந்த இவர் அவர்கள் இருப்பிடத்தை நாடி வந்தார். அவர்களின் உபன்யாசங்களைக் கேட்டார். இத்தகைய மகா மேதை ஒரு மூலையில் புழுதியால் மறைபட்டுக் கிடப்பதா என்று எண்ணினார். அவர்களின் திறமையெல்லாம் விரயமாவதா என்று மனம் வருந்தினார். பக்ருல் முல்க் அவர்களை மிகவும் வேண்டினார். கட்டாயப்படுத்தி நிஷா பூருக்கு அழைத்துச் சென்று அங்கிருந்த மைமூனா நிஜா மியாக் கல்லூரியில் விரிவுரையாளராக்கினார். இது ஹிஜ்ரி 499 (கி. பி. 1106-7)-ல் நடந்தது.

இவ்விதம் மீண்டும் தாம் விரிவுரையாளரானது அல்லா(ஹ்)வின் திருச்சித்தத்தால்தான் என்று இமாம் அவர்கள் கருதினார்கள். முஸ்லிம் பொதுஜனங்களிடையே மார்க்கம் செல்லரித்ததாகி விட்டிருந்தது; உலமாக்களிடையே வெளி வேஷத்தில் மட்டுமே தீன் வெளிச்சம் போட்டுக்கொண்டிருந்தது. அரசர்கள் மார்க்க அக்கறை அற்றவர்களாகி விட்டிருந்தனர். அரசியலோ மிகவும் இழியதாகிவிட்டது. எனவே, இவற்றைத் தாம் எதிர்த்துப் போராடும்படி அல்லாஹ் இதன் மூலம் தூண்டிவிட்டான் என்று இமாமவர்கள் கருதினார்கள். மேலும் அவர்கள் இதுபற்றி ஞானப் பெரியார் பலரிடம் கலந்தாலோசித்தார்கள்; யாவரும் ஒரு முகமாய் அவர்கள் பொதுப் பணியில் இறங்கவேண்டும் என்றனர். தாங்கள் அதற்கிணக்கமான கனவுகள் கண்டதாகத் தெரிவித்தனர். ஹிஜ்ரி 500 ஆரம்பமாவதால், அந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜனங்களைச் சீர்திருத்தித் தீனை நிலை நாட்டும் ஒரு முஜத்தித் தோன்ற வேண்டும்; அத்தகைய முஜத்திதாக இமாம் கஸ்ஸாலீ ஆவதற்காகவே இத்தகைய சந்தர்ப்பம் உண்டாகியுள்ளது என்று அவர்கள் கூறினர். "ஒவ்வொரு நூற்றாண்டின் தொடக்கத்திலும் மார்க்கப் புத்துணர்ச்சி உண்டாக்கப்படும் என்று அல்லாஹு ஜல்லஜலாலுஹு வாக்களித்துள்ளான்; எனவே, இஃது அல்லாஹ் எனக்குத் தந்த வேலை என்று உணர்ந்தேன். இவ்விதத் தூண்டுதல் என்னகத்திலிருந்து உண்டாகவில்லை; அல்லா(ஹ்)விடமிருந்தே உண்டாகியுள்ளது. செயலாற்றுபவன் நானல்லன்; அல்லாஹ்தான் என்னைச் செயலாற்ற வைத்துள்ளான்" என்று இமாமவர்களே அச்சமயம் எழுதியுள்ளார்கள்.

இப்போது அவர்களுடைய போதனைகளும் உபன்யாசங்களும் மிகுந்த வேகமும் காரமும் உள்ளவையா

பின. ஆயிரக் கணக்கில் மக்கள் தத்தம் மார்க்கக் கடமையை உணரலாயினர். மாணவர்கள் இதயங்களிலும் தீனின் ஜோதி சுடர்விடலாயிற்று. ஆயினும், இமாமவர்கள் அக்காலையில் நிலவிய குற்றங்களை இடித்துக் காட்டித் திறமைமிக்க ஒரு வைத்தியன் ரண சிகிச்சை செய்து உடம்பிலுள்ள கட்டியை அறுத்தெறிந்து அதிலுள்ள கிருமிகளைச் சுட்டிக் காட்டுவது போலச் சமூகத்தினிடையில் புரையோடியிருந்த தீயவற்றைக் காட்டியபோது கண்மூடிகளாய் இருந்த கற்றோர் பலர் அவர்களைக் கசப்புடன் நோக்கினர். முன்பு அவர்கள் புகட்டியதும் கல்விதான்; இப்போது மீண்டும் ஆசிரியப் பதவியை ஏற்ற பின் புகட்டியதும் கல்விதான். ஆனால், இரண்டுக்கும் எத்தனை பெரிய வேற்றுமை! முன்பு அவர்கள் செய்த விரிவுரைகள் அவர்களுக்குப் புகழைச் சேர்த்தன; இப்போதோ அதற்கு நேர்மாற்றமானதைக் கொணர்ந்தன. ஆயினும், தன்னுடைய சேவையில் தனக்கு வழிகாட்டி அருளுமாறு அல்லா(ஹ்)விடம் துஆ இரந்தார்கள். அல்லா(ஹ்)வின் பாதையில் தாங்கள் அடைந்த அனுபவங்களைத் தங்கள் மாணவர்களுக்கு அவர்கள் கூறுவதுமுண்டு.

ஹிஜ்ரி 500-ல் ஸுல்தான்களையும், மந்திரிகளையும், பிரபலஸ்தர்களையும் கொல்வதென்று திட்டமிட்டு வேலை செய்துவந்த பாத்தினி வகுப்பினன் ஒருவனால் பிரதம மந்திரி பக்ருல் முல்க் கொலை செய்யப்பட்டார். அவர் மறைந்ததும் இமாம் கஸ்ஸாலீக்குத் தொல்லைகள் பெருகலாயின. அதுவரை அவர்களிடம் கசப்படைந்திருந்தவர்கள் இப்போது அவர்கள்மீது எந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தலாம், அவர்களை எப்படிப் பழிவாங்கலாம் என்று திட்டமிடலாயினர். இதை அறிந்த இமாம் கஸ்ஸாலீ, பதவி தம்மை விடுமுன்பே தாம் அதைக் கைவிட்டுவிட்டார்கள்.

அமைதியும் அதன் குலைவும்

மீண்டும் அவர்கள் தூஸ் சென்றடைந்தார்கள். அங்கே ஒரு கல்லூரியை அமைத்து மாணவர்களுக்குப் பாடபோதனை செய்தார்கள். ஸூபியாக்கள் வந்து தங்கவும் ஆத்மப் பயிற்சிகள் பெறவும் ஒரு கான்காஹ்வையும் ஏற்படுத்தினார்கள். இக்காலையில் அவர்கள் பக்தாதிய நிஜாமியாக் கல்லூரியின் தலைமையாசிரியப் பதவியை ஏற்கவேண்டும் என்ற அழைப்பு வந்தது. அதற்கு அவர்கள் இணங்கவில்லை.

தூஸ் நகரில் அவர்கள் திரு குர்ஆனையும், ஹதீஸையும் மீண்டும் படித்துச் சிந்தனை செய்வதில் தமது நேரத்தின் பெரும் பகுதியைச் செலவிட்டார்கள். இதனால் அவர்கள் இக்காலையில்தான் ஹதீஸைச் சரிவரக் கற்றார்கள் என்று கூறுவாருமுண்டு. இது சரியன்று. அவர்கள் ஆசிரியப் பதவி ஏற்கு முன்னரே ஹதீஸ் ஆராய்ச்சியிலும் சரியான தேர்ச்சி பெற்றவர்களாகவே விளங்கியுள்ளார்கள். தம்மைக் காண வரும் ஸூபிப் பெரியார்களிடம் உரையாடுவதிலும் அவர்களுக்கு இன்பமதிகம். ஆனால், தாம் ஓய்வு எடுத்துக் கொண்டதாக அவர்கள் ஒருக்காலும் கருதவே இல்லை. எச்சமயமும் ஏதாவது வேலை செய்துகொண்டே இருப்பார்கள்.

இத்தகைய அமைதியான வாழ்க்கையையும் அவர்கள்மீது கசப்புக் கொண்டவர்கள் குலைத்துவிட்டனர். அச்சமயம் ஸெல்ஜூக் ஸுல்தானாக ஆட்சிசெய்துகொண்டிருந்த ஸஞ்சரிடம் அவர்கள் முறையிட்டனர். இமாம் கஸ்ஸாலீ பேசியவையும் எழுதியுள்ளவையும் மார்க்கத்துக்கு முரணானவை என்று கூறி அவரைக் கொண்டு வந்து விசாரணைக்கு நிறுத்தவேண்டும் என்றனர். உடனே ஸுல்தான் ஸஞ்சர், இமாம் கஸ்ஸாலீ தம்

அவைக்கு வந்து அவர்மீதுள்ள குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கவேண்டும் என்று உத்தரவிட்டார்.

இவ்வுத்தரவு அவர்களைச் சங்கடத்திலாழ்த்திற்று. பைத்துல் முகத்திஸில் அவர்கள், எந்த அரச சபையிலும் நுழைவதில்லை என்று பிரதிக்ஞை செய்துகொண்டுள்ளார்களன்றோ! எனவே, அவர்கள் ஸுல்தானுக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினார்கள். எனினும், அவர்கள் ஸுல்தானின் சபையில் ஆஜராகவேண்டும் என்ற உத்தரவு மாற்றப்படவில்லை. இதனால் அவர்கள் தம்மீதுள்ள குற்றச்சாட்டுகளை மறுக்கும் நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக அங்குச் சென்று ஒரு சொற்பொழிவாற்றினார்கள். அவர்கள்மீது குற்றங் கூறியவர்கள் தலை கவிழ்ந்தனர். ஸுல்தான் தன் தவற்றை உணர்ந்து வருந்தினார்; இமாமவர்களிடம் அவர் பகிரங்கமாய் மன்னிப்புக் கேட்டுக்கொண்டதுடன், தாம் செய்த இத்தவற்றுக்குத் தண்டனையாக, அவர்கள் தம் முன்பு செய்த பிரசங்கத்தைப் பிரதிகள் தயாரித்துத் தன் ஆட்சியிலுள்ள ஊர்களிலெல்லாம் பரவச் செய்தார். இமாம் கஸ்ஸாலீ தமது ஊருக்கு வந்து, தங்கள் அமைதியான வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். எனினும், எண்ணற்ற நூற்களை எழுதியும் ஏராளமான மனோபன்யாசங்கள் புரிந்தும் அடைந்த களைப்பின் பின்னர், ஸுல்தான் ஸஞ்சரின் சபையில் தாம் ஆஜராகவேண்டும் என்ற வற்புறுத்தலும் சேர்ந்து அவர்கள் உடலைப் பெரிதும் பாதித்துவிட்டது. அவர்கள் தமது ஐம்பத்து நான்காம் வயதிலேயே மரணத்தை எதிர்பார்த்தார்கள்.

மறைவு

அவர்கள் எழுதினார்கள்: "ஆத்ம ஞானி சதாவும் மரணத்தை எதிர்நோக்குவான்; அவன் காதலி அவனோடு சேர்வதாய் வாக்களித்துள்ளாளன்றோ! அவ்வாக்குறுதியைக் காதலன் ஒருக்காலும் மறக்கமாட்டான்." எனவே,

அவர்கள் மரணப் படுக்கையில் கிடந்த சமயம் ஸூஃபி ஞானி ஷிப்லியின், "நீ வாழும் வீட்டுக்கு விளக்குத் தேவையில்லை" என்ற வாசகத்தைக் கூறிக் கொண்டு சாந்தமாகக் காத்துக் கிடந்தார்கள். கடைசியில் அந்த வேளையும் வந்தது. "அவர்களின் காலத்தினர்மீது தான் அளித்த நன்கொடையைக் காலம் வாபஸ் பெற்றுக் கொண்டது; அல்லாஹு ஸுப்ஹானஹு தன் சந்நிதானத்தின் ஜோதிக்கு அவர்களை அழைத்துக் கொண்டான்."

ஹிஜ்ரி 505 ஜமாத்தில் ஆகிர் பிறை பதினான்கில் (கி.பி. 1111 டிஸம்பர் 18) இமாம் கஸ்ஸாலீ காலமானார்கள். அவர்கள் மரணத்துக்கு முன்பு நடந்த இச்சம்பவத்தை அவர்கள் சகோதரர்கள் அஹ்மது கஸ்ஸாலீ தெரிவித்துள்ளார்கள்: இமாமவர்கள் மரணித்த தினத்தன்று காலை பஜ்ரு நேரத்தில், அவர்கள் எழுந்து ஒலுச்செய்து தொழுதுவிட்டுத் தன் கபன் துணியைக் கொண்டுவரச் செய்து, அதை எடுத்து முத்தமிட்டுக் கண்களிலொற்றிக்கொண்டு, "மிகவும் உளமகிழ்வுடன் நான் அரசனின் சந்நிதானத்தில் நுழைகிறேன்" என்று கூறியவர்களாய் கால்களை நீட்டிப் படுத்தார்கள். அவனைச் சந்திக்கச் சென்று விட்டார்கள். அவர்களுடைய உடல் தபரானுக்கு வெளியில், கவிஞர் பிர்தௌஸியின் கபுருக்கு அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அவர்களுடைய மரணம்பற்றி அதிக ஆதாரமில்லாத ஒரு செய்தி சொல்லப்படுகிறது. அஃதாவது: தம் உடல் நலம் கெட்டு, மரணம் அண்மிப்பதை உணர்ந்ததும், இமாமவர்கள் தம் அருகிலிருந்தவர்களைப் அப்பால் போகச்சொல்லிவிட்டார்களாம். மறுநாள் அவர்கள் படுத்திருந்த அறையினுள் பார்த்தால், அவர்கள் உடல் கபன் உடுத்தப்பட்டு, முகம் கிப்லாவை நோக்க, அவர்கள் இறந்து கிடக்கிறார்களாம். அவர்கள் தலைமாட்டில் ஒரு

தாள் இருந்ததாம். அதில் கீழ்க்காணும் கருத்துடைய பாடல் எழுதப்பட்டிருந்ததாம்:

நான் இறந்து கிடப்பதைக் கண்ணுற்று
எனக்காக அழுது, துயருறும்
என் நண்பர்களிடம் கூறுக :
நீங்கள் காணும் இந்த மய்யித்
நான் என்று நம்பவேண்டாம் !
அல்லா(ஹ்)வின் பெயரால் சொல்கிறேன்,
இது நானல்லன்.
நான் ஜீவன்; இது மாமிசக் கட்டி.
ஒரு காலக் கெடுவரை
இது என் உறையுளாயும் உடையாயுமிருந்தது.
நான் தாயத்துள் மறைந்திருந்த பொக்கிஷம்...
தன் சிப்பியை விட்டகன்ற நன்முத்து நான்.
அது நான் துயரத்தோடு காலம் போக்கிய சிறைக்கூடம்;
பறவையாகிய நான் அடைபட்டிருந்த கூண்டு.
அதைச் சின்னமாக விட்டுவிட்டு
நான் பறந்து விட்டேன்.
என்னை விடுதலையாக்கி விட்ட
அல்லா(ஹ்)வுக்கே சகல புகழும் !
அவன் வானுலகிலும் உன்னத ஸ்தானத்தை
எனக்காகத் தயார் செய்து வைத்துள்ளான்.
இன்றுவரை, உங்களிடை உயிருடன் இருப்பினும்,
நான் மரணமடைந்தவனாய் இருந்தேன்.
இப்போது உண்மையில்
அந்தக் கபுர் துணியை உதறிவிட்டு
உயிர் பெற்றுள்ளேன்.
இன்று நான் உயரேயுள்ள ஞானியரோடு பேசுகிறேன்;
லௌஹுல் மஹ்பூல் எனும்
விதிவசப் பட்டோலையைப் படிக்கிறேன்.
இருந்ததையும், இருப்பதையும்,

இருக்கப் போவதையும் காண்கிறேன்.
என் வீடு அழிவுக்கு ஆளாகட்டும்;
என் கூண்டைப் பூமியில் புதையுங்கள்.
தாயத்தின் மேல்மூடி ஒரு சின்னம் மட்டுமே !........
உங்களைப் பின்னால் விட்டுவிட்டு
நான் என் பாதையில் முன்னேறிச் செல்கிறேன்.
நீங்கள் வசிக்குமிடம் எனக்கு உகந்ததல்ல.
மரணம் மரணம்தான் என்றெண்ணவேண்டாம் !
அதுவே ஜீவன்—
நாம் கனவும் காணமுடியாத ஜீவன்.
மரணம் நெருங்குகையில் அஞ்சவேண்டாம் !
பாக்யமான வீட்டுக்குப் பயணம் புறப்படுதலே அது.
உங்கள் ரப்பின் கருணையையும் அன்பையும் கருதுங்கள்.
அவனுக்கு ஷுக்குர் செய்து அச்சமகற்றி வாருங்கள்.
நான் இப்போது வந்துள்ள நிலைக்கு நீங்களும் வருவீர்கள்.
சகலரின் ஆத்மாக்களும்
அல்லா(ஹ்)விடமிருந்தே வந்தன.
சகலரின் உடல்களும் ஒரே பண்புடையவைதாம்.
நன்மையும் தீமையும் நம்முடையவையே.
இப்போது நன்மகிழ்ச்சியின் செய்தியைத் தருகிறேன்;
அல்லா(ஹ்)வின் சாந்தியும் மகிழ்வும்
என்றும் உங்களுடையவையாய் இருக்குமாக !

இமாம் கஸ்ஸாலீ காலமான பின் பலர் அவர்களைத் தமது கனவுகளில் கண்டதாகக் கூறினர். அபுல் அப்பாஸ் என்ற பெரியார் கண்டதாவது: கஸ்ஸாலீ சுவர்க்கலோக வாயிலில் அதன் திறந்த கதவுகளின் முன் இருக்கிறார்கள். மலக்குகள் பச்சை உடைகளுடனும் உயர் ஜாதிக் குதிரையுடனும் அங்கே இறங்குகின்றனர். அவர்களை அவ்வுடையை உடுத்தச்செய்து, அந்தக் குதிரையின்மீது ஏற்றி வைத்துத் தம்மோடு கொண்டு செல்கின்றனர்.

ஏழு சுவர்க்கங்களையும் கடந்த கஸ்ஸாலீ அப்பாலும் போகிறார்கள். எழுபது திரைகளையும் தாண்டுகிறார்கள்.

இக்கனவை அபுல் அப்பாஸ் கண்டபோது, அவர் இமாம் கஸ்ஸாலீ இறந்த செய்தியைக் கேள்விப்படவில்லையாம். கஸ்ஸாலீயின் கராமாத்துகள் பற்றியும் பல கதைகள் சொல்லப்படுகின்றன.

குடும்பம்

இமாம் கஸ்ஸாலீயின் மரணப் படுக்கையில் அவர்கள் அருகேயே இருந்து கவனித்த அவர்கள் தம்பி அஹ்மது கஸ்ஸாலீ தம் தமையனிடம் மிகுந்த பற்றுதல் கொண்டிருந்தார்கள். அஹ்மது கஸ்ஸாலீ இமாம் கஸ்ஸாலீயின் இணையற்ற நூலான இஹ்யாவைச் சுருக்கமாக்கி ஒரு நூல் தயாரித்தார்கள். அதன் பெயர் "லுபாபுல் இஹ்யா" என்பதாகும். இவர்கள் இமாம் கஸ்ஸாலீயின் மறைவுக்குப் பின் பதினைந்து ஆண்டுகள் வாழ்ந்திருந்து மறைந்தார்கள். இமாமவர்களுக்குப் பல சகோதரிகள் இருந்தனர். அவர்களின் அன்னையார் தம் மகன் பெரும் புகழ் பெறுவதைக் கண்டுவிட்டே காலமானார்.

இமாம் கஸ்ஸாலீ இருபது வயது எய்து முன்பே மணமுடிக்கப் பெற்றார்கள். அவர்களுக்குப் பிறந்த ஆண் குழந்தைகள் யாவும் சிசுவிலேயே இறந்து போயின. அவர்களுக்கு மூன்று பெண் மக்கள் இருந்தனர். அவர்களிடம் அவர்கள் மிகுந்த அன்பாய் இருந்தார்கள்; தம் புதல்வியரோடு நேரம் கழிப்பதில் அதிக இன்பங்கண்டார்கள். இப்புதல்வியருக்கு மணமாகி ஆண் குழந்தைகள் இருந்தன. அவர்களின் சம்ரக்ஷணைக்குப் போதியதை மட்டுமே இமாமவர்கள் விட்டுச் சென்றிருந்தார்கள்.

அவர்களின் உற்ற நண்பர்களிலும் பள்ளி மாணவரி லும் பலர் மிகவும் புகழ் பெற்றவர்களாய் விளங்கியுள்ள னர் என்றால் அதில் வியப்பிருப்பதற்கில்லை.

பண்பு

இமாம் கஸ்ஸாலீ மிகவும் சரளமாகப் பேசிப் பழகும் குணமுடையவர்கள். ஒரு நண்பனிடம் அறிவு, கவர்ச்சி, உயரிய நீதிப்பண்பு, பேராசையின்மை, அந்தரங்க சுத்தி ஆகிய ஐந்து குணங்கள் இருக்கவேண்டும் என்று அவர்கள் கூறியுள்ளார்கள். இக்குணங்கள் யாவும் அவர்களிடம் மிகைத்து நின்றன.

இமாம் கஸ்ஸாலீ நெடுகிலும் பிரயாணஞ் செய்வ தில் பிரியமுள்ளவர்களாய் இருந்தார்கள். அவ்விதஞ் செய்ய வாய்ப்பையும் உண்டாக்கிக்கொண்டார்கள். இஹ்யாவில் (பாகம் 3, பக் 54.) ஒருவன் தன் ஏழை நெஞ்சையும் கோழைத்தனத்தையும் தனக்குள்ளேயே உணர்ந்தவனாய் குளிர் காலத்தில் அலைகள் அதிக மிருக்கும்போது படகில் (திகிரிஸ் நதியில்) பிரயாணஞ் செய்வதுண்டு என்று கூறப்படுவது அனேகமாக அவர் களையே தான் என்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். பிரயாணஞ் செய்வதால் பல இடங்களையும், காட்சி களையும், கற்ற, ஞானமிக்க பெரியார்களையும் காண லாம் என்கிறார்கள். ஆனால், பிரயாணம் செய்கை யில் தனிமை கூடாது, துணைவேண்டும் என்கிறார் கள்.

இமாம் கஸ்ஸாலீ தருமகுணமும் தயாள சிந்தை யும் உடையவர்களாய் விளங்கினார்கள். விருந்தினரை முகமலர்ந்து உபசரிக்கும் பண்பு அவர்களிடமிருந்தது. யாரையும் இழிவாகப் பேசுவதையும், புறங்கூறலையும் அவர்கள் வெறுத்தார்கள். யாரிடமும் கடுமையாகப் பேசக்கூடாது-கடுமையான பதத்தைத் தொடர்ந்தாவது

அன்பாகப் பேசுதல் இல்லாவிட்டால் கடுமையாகப் பேசுதல் கூடாது-என்று அவர்கள் எழுதியுள்ளார்கள். அவர்களிடம் சகிப்புத்தன்மையுணர்ச்சி மிகுதமாய் இருந்தது. அவர்களுடைய எழுத்திலும் இக்குணம் அதிகம் தென்படுகிறது. இமாம் ஹுஸைன் அவர்களின் மரணத்துக்குப் பொறுப்பாளி என்று குற்றஞ் சாட்டப்படும் யஸீதின்மீது அவதூறு கூறுவதுகூடச் சரியன்று என்கிறார்கள். ஒரு முஸ்லிமைத் திட்டுவதோ சபிப்பதோ கூடாதென்று இருக்கையில், வயல்களை உழும் மிருகங்களைக்கூடச் சபிக்கக்கூடாது என்றிருக்கையில், யஸீதும் ஒரு முஸ்லிமாய் இருந்தான் என்று நம்பும் நாம் அவனைச் சபிப்பது சரியன்று என்கிறார்கள். யஸீது ஒரு முஸ்லிமாய் இருந்தது நிச்சயம்; ஆனால், அவன் இமாம் ஹுஸைனைக் கொலை செய்ததோ, அதற்கு உத்தரவிட்டதோ, அவர்கள் சாவதற்கு இணங்கியதோ நிச்சயமில்லாத விஷயம். இத்தகைய நிச்சயமற்ற நிலையில், அவன் அவர்களைக் கொன்றான் என்று நினைப்பது எங்ஙனம்? ஒரு முஸ்லிமைப்பற்றித் தவறாக நினைப்பது கூடாது. திரு குர்ஆனிலிருந்தும், ஹதீஸிலிருந்தும் இமாம் கஸ்ஸாலீ இதற்குப் பல மேற்கோள்கள் காட்டுகிறார்கள். நம்முடைய காலத்தில் நம் அருகில் கொலையுண்ட மந்திரிகள், அரசர்கள் முதலானோர் கொலை செய்யப்பட்ட சந்தர்ப்பங்களையே நாம் சரியாக அறிய முடியாத நிலையில், நானூறு ஆண்டுகளுக்கு முன்பு வெகு தொலைவான ஓர் இடத்தில் யஸீது எப்படித்தான் உண்மையில் நடந்து கொண்டான் என்று அறிவதெப்படி?... "ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமைக் கொலை செய்துவிட்டான் என்றே வைத்துக் கொள்வோம். அப்போதுங்கூடக் கொலைகாரனைச் சபிக்கக்கூடாது என்பதே திறமான பெரியார்களின் தீர்ப்பாகும். ஏனெனில் இச்செயல் அல்லா(ஹ்)வுக்குக் கீழ்ப்படியாமைதான். கொலையாளி இறக்குமுன் இறைவனிடம் மன்னிப்புக்

கேட்டு மன்றாடினாலும் மன்றாடலாம். இணைவைக்கும் ஒருவன் தன் இணைவைத்தலைவிட்டு மாற்றப்படக்கூடிய நிலையில், அவனைச் சபிக்கக் கூடாது என்றிருக்கையில், தான் கொலை செய்ததற்காக மனம் வருந்திப் பாவமன்னிப்புத் தேடும் ஒருவனைச் சபிப்பது எத்தனை தூரம் அனுமதிக்கப்படாதது என்பதை உணர வேண்டாமா? மேலும் இமாம் ஹுஸைன் அவர்களைக் கொலை செய்தவன் பாவமன்னிப்புத் தேடாமல் இருந்தான் என்று கூறுவதெப்படி? 'அவன் தன் அடியார்களின் பாவமன்னிப்பை ஏற்பவனாய் இருக்கிறான்' (9:105.) ஒரு முஸ்லிமை, அவன் காலமானபின் சபிப்பதும் முறையன்று. ஆதலால், அவனைச் சபிப்பவன் அல்லா(ஹ்)வுக்குக் கீழ்ப்படியாதவனாகிறான்.........யஸீதின்மீது அல்லா(ஹ்)வின் கருணை இறங்கப் பிரார்த்திப்பதுகூட அனுமதிக்கப்பட்டதுதான். ஏனெனில், ஒவ்வொரு தொழுகையிலும் மூமீன்களான, ஆண் பெண்கள் யாவரையும் மன்னித்தருளுமாறு (அத்தஹியாத்தின் இறுதியில்) நாம் கேட்டே வருகிறோம். யஸீதும் ஒரு மூமின்தான். என் அபிப்பிராயம் சரியா என்பதை அல்லாஹ் அறிவான்." (இப்னு கல்தூனின் ஜீவிய சரித்திர அகராதி இரண்டாம் பாகம், பக்கம் 230-ல் இவ்விஷயமுள்ளது.) இமாமவர்களின் இந்த அபிப்பிராயத்தை அவர்களை எதிர்த்தவர்கள் கண்டித்திருக்கின்றனர்.

தனது நம்பிக்கையை வெளியிடும் மனோதிடம் அவர்களிடமிருந்தது. முஸ்லிமல்லாதாரின் அபிப்பிராயங்கள் விஷயத்தில்கூட அவை இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு முரண்படாதவரை அவர்கள் சகிப்புத் தன்மை காட்டவே செய்துள்ளார்கள்.

அவர்கள் நிரம்பவும் பணிவு நிறைந்தவர்களாய் விளங்கினார்கள். அவர்களின் நூற்களில் நெடுகிலும் இப்பணிவைக் காணமுடிகிறது. ஊர் பேர் தெரியாத

பக்கீரோக அவர்கள் நெடுகிலும் சுற்றியபோதும், திமிஷ்க் நகரில் தங்கியிருந்தபோதும் காட்டிய பணிவு குறிப்பிடத்தக்கது. தன்னைவிட மற்றொருவன் கீழான வன் என்று நினைக்கும் எவனும் அகந்தையுடைய வனாவான். இமாமவர்கள் இஹ்யாவில் (பாகம் 4 பக்கம் 207-208) ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிய ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள். ஒரு நாள் இரவில் ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களைக் காண ஒருவர் வந்தார். அவர்கள் படித்துக்கொண்டிருந்தார்கள். அங்கே எரிந்துகொண்டிருந்த விளக்கில் எண்ணெ யில்லை. தீபச்சுடர் சிறிது சிறிதாய் மங்கிவந்தது. தான் எண்ணெய் எடுத்து வந்து ஊற்றலாமா என்று வந்தவர் கேட்டார். "தன் வீட்டுக்கு வந்துள்ள விருந்தாளியை ஒரு பணியாளின் வேலையைச் செய்யவைப்பது கௌரவ மன்று" என்று அவர்கள் கூறினார்கள். அப்படியானால் பணியாளை எழுப்பலாமே என்றார் வந்தவர். பணியாள் இப்போதுதான் கண்ணயர்ந்திருக்கிறான். அவன் தூக்கத் தைக் கலைக்கவேண்டாம் என்று கூறிய ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் தாமே எழுந்து சென்று, தோல்பையி லிருந்த எண்ணெயை எடுத்து வந்து விளக்கில் ஊற்றினார் கள். வந்திருந்தவர் கேட்டார், "அமீருல் மூமினீனே, நீங்களா எழுந்து இதைச் செய்ய வேண்டும்!" என்று. அவர்கள் சொன்னார்கள், "நான் எழுந்து செல்கையில் உமராக இருந்தேன்; நான் திரும்பியபோதும் உமரா கவே இருக்கிறேன். நான் எதையும் இழந்துவிடவில்லை. அல்லா(ஹ்)வின் பார்வையில் பணிவு கொண்டிருப்பவனே மானிடருள் சிறந்தவன்" என்று.

இமாம் கஸ்ஸாலீ மானிடரிடம் அன்பு காட்டியது போலவே பிராணிகளிடமும் பக்ஷத்துடன் நடந்து கொண்டார்கள். அவற்றை மிகவும் கூர்மையாகக் கவ னிப்பார்கள். அவர்களே ஒரு பூனை வளர்த்திருக்கிறார்

கள். அதன் காம்பீர்யத்தைப் பற்றிப் புகழ்ந்து பேசு கிறார்கள். அவர்கள் குறிப்பிடும் கீழ்க்காணும் சம்பவம் கவனிக்கத்தக்கது: அபுல் ஹஸன் நூரீ என்ற பெரியார் வணக்கத்தில் கொஞ்சங்கூட உடல் அசையாது, ஏகாக் கரச் சித்தமாக நிற்பதைக் கவனித்த ஸூபி ஷிப்லி அவ ரிடம் அதுபற்றிப் பின்னர் வினவினார். நூரீ சொன்னார்: 'எங்கள் வீட்டில் வளர்த்த ஒரு பூனையிடமிருந்து இதை நான் கற்றுக்கொண்டேன். அது தன் வேட்டையின்மீது பாயுமுன் எலிப் பொந்துக்கு மேலே பதிபோட்டு உட் காரும்; அதன் ஒரு ரோமங்கூட அசையாது'' என்று. இது போலவே வீட்டில் காவல் காக்கும் நாயின் விஸ் வாசத்தையும் அவர்கள் பாராட்டியுள்ளார்கள்.

பிராணிகளிடம் கொடூரமாய் நடப்பதுகூடாது என்று அவர்கள் மீண்டும் மீண்டும் வற்புறுத்தியுள் ளார்கள். அதற்குப் பல ஹதீஸ் ஆதாரங்களையும் காட்டி யுள்ளார்கள். பறவைகளைக் கூர்ந்து கவனிப்பதில் அவர் கள் தனியானதோர் ஆர்வங்காட்டி வந்துள்ளார்கள். புறாக்களின் வாழ்க்கையை, அவை பறப்பதையெல்லாம் வெகு கவனத்தோடு அவர்கள் நோட்டமிட்டிருக்கிறார் கள். சேவலைப் போற்றி அவர்கள், "அல்லாஹு ஸுப் ஹானஹுவுக்கு (அதிகாலையில் கூவும்) சேவலின் குரல், திரு குர்ஆனை ஓதுபவனின் குரல், அதிகாலையிலே பாவ மன்னிப்புத் தேடிப் பிரார்த்திப்பவனின் குரல் ஆகிய மூன்று ஒலிகளும் மிக உகப்பானவை'' என்ற ஹதீஸை ஆதாரங் காட்டுகிறார்கள். ஷைகுல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அரபி ஒரு சம்பவத்தைக் கூறியுள்ளார்கள். அஃதாவது: இமாம் கஸ்ஸாலீ அவர்கள் பைத்துல் முகத் தஸில் தங்கியிருந்த சமயம், ஒரு காகமும், புறாவும் இணைபிரியாது ஒன்றுடன் ஒன்று இணைந்தபடியாய் இருந்ததைக் கண்டார்கள். "வெவ்வேறு ஜாதியினவான இப்பறவைகள் இரண்டும் இத்தனை அன்னியோன்னியம்

காட்டுவதைக் கண்டால், அவற்றுக்கிடையில் ஏதோ ஒரு பந்தத்துவம் இருக்கவேண்டும் என்றே காண்கிறது" என இமாமவர்கள் கூறினார்கள். கூறியவாறு அவர்கள் அவற்றைச் சுட்டிக் காட்டினார்கள். அவை ஒன்றை விட்டு ஒன்று பிரிந்தன. அந்தோ, அவை இரண்டும் கால் நொண்டிகளாய் இருந்தன!

ஸூபியாக்களில் சிலர் காட்டில் மிருகங்களுடன் வாழ்வதையும் அவர்கள் பாராட்டியுள்ளார்கள். அல்லா(ஹ்)விடம் அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையைக் காட்ட அந்த வாழ்க்கை பயன்படும் என்கிறார்கள். அவர்களும் அவ்விதம் காட்டில் வாழ்ந்து அனுபவம் பெற்றிருப்பதும் சாத்தியமே. வேட்டையாடும் சிங்கம், புலி போன்ற காட்டு மிருகங்களை அடக்கிப் பழக்கும் சக்தி ஞானியர்களிடம் இருந்தது என்று அவர்கள் கூறுகிறார்கள். காட்டில் வாழும் ஞானியர் சிலரிடம் சிங்கங்கள் நாய்க்குட்டிகள் போல் வாலைக் குழைத்துக்கொண்டு வருவதை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இமாமவர்கள் பிராணிகளை எத்தனை கூர்மையாகக் கவனித்து வந்துள்ளார்கள் என்பதற்கு அவர்களின் அந்திய காலத்தில் நடந்த ஒரு சம்பவமும் நல்ல சான்றாகிறது. அவர்கள் உடல்நலங் குன்றிப் படுத்திருந்த போது வீட்டின் முகட்டிலே இரண்டு வெளவால்கள் ஒன்றை ஒன்று துரத்திக்கொண்டு கடைசியில் ஒன்று கூடின. இமாமவர்கள் ஸலவாத் ஓதுவதையும் நிறுத்திவிட்டு அவற்றையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அவை கூடி, விந்துவின் ஓரிரு துளிகள் கீழே விழுந்தன. இமாமவர்கள் புன்னகையுடன் அருகிலிருந்தவர்களிடம் அதைச் சுட்டிக் காட்டினார்கள். அதுவரை வெளவால்களுக்கு விந்து இல்லை என்று எண்ணி வந்தது தவறு என்பதைத்தான் அவர்கள் காட்டியது.

'தப்ஸீர் பத்ஹுல் கரீம்' ஆசிரியர் ஆலிமுல் பாவில் நூஹு இப்னு அப்துல் காதிர் அவர்கள் எழுதிய 'அத் துரர் பீ ஹிகாயாதில் குரர்' என்ற நூலில் (பாகம் 2 பக்கம் 100-ல்) காணப்படும் ஒரு சம்பவ விபாத்திலும், அவர்களுடைய ஊன்றிக் கவனிக்கும் சக்தி மிக அருமை யாக விவரிக்கப்பட்டுள்ளது. அஃதாவது: ஸாலிஹீன் ஒருவர் இமாம் கஸ்ஸாலீ அவர்களைக் கனவில் கண்டு "அல்லாஹ் உங்களை என்ன செய்தான்?" என வினவினர். அதற்கு அவர்கள் சொன்னதாவது :

"ஆண்டவன் என்னை அவனுடைய சமூகத்தில் நிறுத்தி, 'அபூ ஹாமிதே, நான் உமக்கு எக்காரணத்தால் பிழை பொறுத்தேன் தெரியுமா?' என வினவினன். அதற்கு நான், 'ஆண்டவனே, நீ மிகவும் அறிந்தவன்' என்று சொன்னேன். அதற்கு அவன், 'நீர் நூல் எழு தும்போது ஓர் ஈயானது தாகித்ததாய் வந்து உம் முடைய எழுதுகோலில் இருந்த மையைக் குடிக்க அதன்மீது உட்கார்ந்தது. அந்த ஈயிடம் நீர் இரங்கி அது தாகம் தீரக் குடிக்கும்வரை உம் எழுதுகோலை ஆடாமல், அசையாமல் வைத்துக் கொண்டிருந்தீர். அந்த ஈயிடம் நீர் இரங்கினபோது நான் உம் பேரில் இரங்கி உம்முடைய பிழையெல்லாம் பொறுத்தேன்' என்று சொன்னன்."

புற்பூண்டுகளையும், தருக்களையும்கூட இமாம் அவர் கள் வெகு உன்னிப்பாகக் கவனித்துப் பல விஷயங்களை அறிந்து கொண்டிருக்கிறார்கள். தோட்டம் வைத்து உண் டாக்குவதில் அவர்களுக்கு அதிக ஆர்வமிருந்தது.

இசையைப்பற்றி இமாமவர்கள்

சங்கீதத்தை அவர்கள் பொதுவாக ஆதரித்துள்ளார் கள். பாவத்துக்குக்கொண்டு செல்லும் எதனுடனும் சம்பந்தமற்ற சங்கீதம் ஆகுமானதே என்கிறார்கள்.

புல்புலின் தீங்குரலையோ, பிற பறவைகளின் கீதங்களையோ யார்தான் ஆகாதவை எனல் முடியும்? ஒரு தொண்டைக்கும் இன்னொரு தொண்டைக்குமுள்ள வேற்றுமைதான் என்ன? மூடப் பிராணியான ஒட்டகங்கூட ஒட்டகமோட்டியின் பாடலால் பெரிதும் உணர்ச்சி வசப்பட்டதாகிவிடுகிறதே! தன் மீதுள்ள பாரத்தையும் உணராது, கழுத்தை நீட்டிப் பாட்டைக் கேட்ட வண்ணம் நடைபோடுகிறதே! ஓர் அடிமைப் பையனின் இனிய பாடல்களில் பரவசமான பல ஒட்டகங்கள் மயங்கி இறந்து விழுந்திருக்கின்றன. சங்கீதம் மனத்திற்கு உவப்பளித்து, இச்சைகளை விட்டு மனத்தைத் திருப்புகிறது. ஆனால், மன இன்பத்துக்காக மட்டும் பாட்டுக் கேட்பது அனுமதிக்கப்பட்டதாயினும், சகல பிராணிகளுக்குமுரிய கீழ்த்தரமான ரஸனையாகும். (இஹ்யா: பாகம் 2, பக்கம் 239, 243.) புரிந்து அனுபவிப்பது அதைவிட உயர்ந்த ரஸனை. அல்லா(ஹ்)வுக்கும் ஆத்மாவுக்கும் உள்ள தொடர்பை உணரச் சங்கீதத்தைப் பயன்படுத்தலே உயர்ந்த தரமாகும். இதுவே முரீதுகளின் ரஸனையாகும். அவர்களுக்குப் பேரின்ப இசை பரவச நிலையை உண்டாக்கிவிடுகிறது. ஆனால், இதையும்விட உயர்ந்த ரஸனை பல படித்தரங்களைக் கடந்துவிட்ட ஞானியருடையதாய் இருக்கிறது. தம் நப்ஸையும், நடவடிக்கைகளையும், உலகுடனுள்ள தொடர்பையும் மறந்து, அல்லா(ஹ்)வின் உணர்வு மட்டுமே உள்ளத்தில் நிறையப்பெற்ற, பனா நிலையை அடைந்துவிட்ட இவர்களுடைய ரஸனையே உன்னதமானதாகும். (இஹ்யா: பாகம் 2, பக்கம் 246, 247.) 'கவிதாவுத் தையா' என்ற தமது நூலில் இமாம் கஸ்ஸாலீ அவர்கள் ஆத்மா ஏன் இம்மையில் பாடலுக்கு மயங்குகிறது என்று விளக்குகிறார்கள். ஆத்மா அதற்கு இப்போதுள்ள உடல் தரப்படுவதற்கு நெடுநாட்களுக்கு முன், கோளங்களின் இனிய இசையைத் தான் கேட்ட

தன் நினைவு தூண்டப்படுவதாலேயே அதில் பரவசமடைகிறதாம். தொட்டிலில் கிடக்கும் சிசு இனிய பாட்டால் இன்பமடைந்து, அமைதி பெறுகிறதெனின், அல்லா(ஹ்)வைப் புகழ்ந்து சுழலும் கோளங்கள் பாடிய இனிய இசையை ஆத்ம லோகிலிருந்து தான் கேட்டுக் கொண்டிருந்ததை நினைவுபடுத்திக் கொள்கிறது. இதேபோன்று தான் ஞானியும் தன் இதயத்தில் கோளங்களின் பேரின்பப் பரவச இசையைக் கேட்கிறார்; புரிந்துகொள்கிறார்.

இமாமவர்களின் இந்த அபிப்பிராயங்களைச் சில ஆலிம்கள் கண்டித்துள்ளனர்.

இமாமவர்களின் பாடல்கள்

இமாம் கஸ்ஸாலீ உயரிய வசனகர்த்தாவாக இருந்ததுடன், சிறந்த கவிதைகளையும் எழுதியுள்ளார்கள். அவர்கள் எழுதிய கவிதைகளின் தொகுப்பு நூல் "முஆமலாத் அஸ்ராருத்தீன்" எனப்படும். அதில் அவர்கள் பச்சைப் பசும் காட்சிகளையும், இனிய நீர்த் தண் சுனையையும், அழகிய வதனத்தையும் பற்றியெல்லாம்-பல ஸூபி கவிஞர்களைப் போலவே எழுதியுள்ளார்கள். அவர்களுடைய ஆரம்ப காலக் காதல் பாடல்களில் ஒன்று வருமாறு:

அவள் நெற்றிக்கு மேலுள்ள கேசச் சுருள்கள்
அவள் வதனச் சந்திரனில் வந்து விழுகின்றன;
அவள் ஒளி பொருந்திய அழகுக்கோ ஈடிணை இல்லை.
தேளின் சின்னத்தில் பன்முறை
நாம் சந்திரனைக் கண்டுள்ளோம்.
சந்திரனில் தேளைக் காண்பது
மிகவும் அரியதொன்று.

(இமாமவர்கள் கேசச் சுருளுக்கும் தேளுக்கும் 'அகாரிப்' என்ற ஒரே பதத்தைத்தான் உபயோகிக்கிறார்

கள். மறைத்துள்ள பல திரைகளுக்குக் கேசச் சுருள்கள் என்றும், தெய்வ சாந்நித்யத்துக்கு வதனம் என்றும் அவர்கள் பரிபாஷை உபயோகித்திருப்பதாகக் காண்கிறது.)

வெள்ளி முலாம் பூசிய பித்தளை போன்ற தமது கால அரசியல்வாதிகள் பற்றியும் அவர்கள் கவிதை எழுதியுள்ளார்கள். அவர்கள் துறவு பூண்ட பின் எழுதியவை மிகவும் அருமையான பாடல்கள். அவற்றில் ஒன்றன் கருத்தாவது:

ஒருக்கால் நான் அடிமையாய் இருந்தேன்;
இச்சை என் எஜமானனாய் இருந்தது.
அது பின்னர் என் பணியாளாயிற்று;
நான் சுதந்தரவானானேன்.
மானிடரின் உறைவிடம் விட்டகன்று
ஏகாந்தமாய் உன் சந்நிதியை நாடினேன்;
உன்னிடம் என் தோழமையைக் கண்டுகொண்டேன்.

அல்லா(ஹ்)விடம் காதல் கொள்வது பற்றி அவர்கள் எழுதியுள்ள பாடல்களில் ஒன்றன் கருத்து வருமாறு:

காதல் என்னை வருத்திடினும்,
அஃது என்னைத் துயரப்படுத்தவில்லை.
அகம் மடிவது என்பது, எனது காதல்
உன்னிடம் ஜீவன் பெறுவதுதானே!
அதுவே உன் இஷ்டமாயின், தாகித்திருப்பதே
எந்தப் பானத்தையும்விட எனக்கு இனிமையானது.
உன்னிடமிருந்து என்னைப் பிரிப்பதன்றி
வேறு எதுவும் இப்போது எனக்குத் துயரளியாது;
உன்னுடனிருப்பின் எதுவும் என்னைத் துன்புறுத்தாது.

அல்லா(ஹ்)வின் சேவைக்கென முற்றும் தன்னை அர்ப்பணித்துவிட்ட ஒருவனைப்பற்றி எழுதுகையில் அவர்கள் கூறுவதாவது:

பளுவின்றிப் பிரயாணஞ் செய்வதற்காக
அவன் தன் புஸ்தகக் கட்டை வீசிவிட்டான்;
தன் உணவையும், ஏன், தன் காலணியையுமே
ஒதுக்கிவிட்டான்.

இமாமவர்களின் உபமானங்கள்

இமாம் கஸ்ஸாலீ நீரையும் நிலத்தையும், புஷ்பங்களையும், தருக்களையும், வானங்களையும், காற்றின் போக்கையும், ஆண்களையும், பெண்களையும், பிராணிகளையும் வெகு உன்னிப்பாகக் கவனித்திருக்கிறார்கள். தங்கள் சொந்த அனுபவத்தில் தாம் கண்டவற்றை தாங்கள் எழுதிய நூற்களுக்குப் பயன்படுத்திக்கொண்டுள்ளார்கள். அவர்கள் இவற்றைப் பயன்படுத்தும் முறையால் அவர்கள் கூறவரும் கடினமான விஷயமும் இலகுவில் விளங்குவதாய் ஆகிவிடுகிறது; சாதாரண ஜனங்களின் மனத்தில் விஷயத்தைப் பதியவைப்பதாய் இருக்கிறது.

கொசுவைப்பற்றி அவர்கள் கூறுவதைப் பாருங்கள்: யோசனையுடன் சாதுர்யமாய் நடந்து கொள்கிறது. அது சிறிய உருவினதாயினும், அதன் அமைப்பு யானையுடையதைப் போன்று சம்பூரணமானதாகும். பிற பிராணிகளுக்குள்ள சகல வேலைகளும் சக்திகளும் இதற்கும் உண்டு. மனிதன் உடலிலிருந்து இரத்தம் உறிஞ்சும் துவாரங்களை அது கண்டுபிடிக்கிறது. அதன் கண்கள் சிறியவை; ஆனால், இமைகள் இல்லை. எனவே, தூசி கண்களில் விழாது தப்பித்துக்கொள்ள அது தனியானதோர் உணர்ச்சியுளதாய் விளங்குகிறது. இக்கொசு, தன் பார்வைக் குறைவால் விளக்கில் விழுந்துவிடுகிறது. இரவைப் பகல் என்றும்தான் ஓர் இருட்டறையில் இருப்பதாகவும், எண்ணிக்கொள்ளும் கொசு, எரிந்துகொண்டிருக்கும் விளக்கை வெளியில் ஒரு ஜன்னல் என்று நினைத்துக்கொண்டு அந்த விளக்

கில் விழுந்து மடிகிறது. மனிதனும் இச்சை எனும் விளக்கால் ஈர்க்கப்பட்டு, அது தன் அழிவுக்கான அழைப்பு என்பதுணராது, தன் கண்மூடித்தனத்தாலும், அறியாமையாலும் இம்மையில் மட்டுமின்றி, அவியாத நெருப்பிலேயே அகப்பட்டு உழல்கிறான். (இஹ்யா: பாகம் 4, பக். 273.) இமாமவர்கள் ஒரு கொசுவை எத்தனை உன்னிப்பாகக் கவனித்துள்ளார்கள்! அதன் உள்ளுறுப்புக்கள் ஒவ்வொன்றையும், அதன் தலையிலிருக்கும் அறைகளையும் அவர்கள் வருணிக்கும் ஆற்றல் பெரிதும் வியப்பளிப்பதாம்.

விஞ்ஞான அறிவின் வரம்பையும், அதற்கும் அப்பாலுள்ள ஞானத்தின் இன்றியமையாத தன்மையையும் விளக்கவந்த இமாம் கஸ்ஸாலீ, ஓர் எறும்பின் உபமானத்தைக் கூறுகிறார்கள்: "வெறும் விஞ்ஞானி எறும்பைப் போன்றவன். எறும்பு ஒரு தாளின்மீது ஊர்கிறது. அப்போது அந்தத் தாளில் கருப்பு எழுத்துகள் விழுவதைப் பார்க்கிறது. அதை எழுதுவது பேனாத்தான் என்று நினைத்துக் கொள்கிறது. வானசாஸ்திரி இந்த எறும்பைவிடக் கொஞ்சம் தான் விசாலமான அறிவுடையவன். பேனாவைப் பிடித்திருக்கும் விரல்களைப் பார்க்கும் ஒரு பிராணிக்கு இவன் சமமானவன். அதாவது உலகப் பொருள்கள் கிரஹங்களின் செல்வாக்கின்கீழ் உள்ளன என்பது இவனுக்குத் தெரியும். ஆனால், அந்தக் கிரஹங்கள் மலக்குகளின் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவை என்பதை இவன் அறியான். இந்தச் சடதத்துவ உலகுக்கு அப்பால் நோக்கக் கண்கள் இல்லாதவர்களும், கடையான பணியாளை அரசன் என்று எண்ணிக் கொள்ளும் தவற்றைச் செய்பவர்களாவர்" (இஹ்யா: பாகம் 4, பக். 274.)

இமாம் கஸ்ஸாலீ பகுத்தறிவை வேட்டைக் குதிரை மீது செல்பவனுக்கு ஒப்பிடுகிறார்கள். அவன் குதிரையே

பதவி ஆசை. அவன் நாயே இச்சைகள். அவன் நன்கு சவாரி செய்பவனாகவும், அவன் குதிரை நன்கு பழக்கப் பட்டதாகவும், அவன் நாய் சரியான பயிற்சி பெற்ற தாகவும் இருந்தால் அவன் வெற்றிபெற முடியும். ஆனால், அவன் அறிவற்றவனாகவும், அவன் குதிரை மிரண்டு கலைவதாகவும், அவன் நாய் காட்டுமிராண்டியானதாக வும் இருப்பின் குதிரை அவனுக்குக் கீழ்ப்படியாது. நாய் அவன் சைகையைப் பொருட்படுத்தாது. தான் தேடுவதை அவன் அடையவும் இயலாது. (மீஸானுல் அமல்.)

இம்மையை மெத்தென விருக்கும் ஒரு பாம்புக்கு உவமிக்கிறார்கள். தொட்டால் அது மென்மையாய் இருக்கிறது. பார்வைக்கு அழகாய் இருக்கிறது. ஆனால், கொடிய விஷமுள்ளதாய் இருக்கிறது. இதில் தாம் போற்றுபவற்றிடம் மானிடர்கள் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவேண்டும். அதன் கவர்ச்சித் திரை யினுள்ளே மனிதனை மோசஞ்செய்யும் சக்தியுண்டு. (இஹ்யா : 4, பக் 37.)

மானிட அறிவு (பகுத்தறிவு) மட்டுமே போதும், இறைவன் வெளியிட்ட ஞானம் தேவை இல்லை என்று கூறுபவனுக்கு இமாம் கஸ்ஸாலீ கூறும் உபமானத் தைப் பாருங்கள்: அவன் தகப்பனார் ஒரு மலையுச்சியிலே ஒரு மாளிகையைக் கட்டினார். அதில் ஒரு மூலிகைச் செடியை வைத்து உண்டாக்கினார். அச்செடி பரிமளங் கமழ்ந்தது. இந்த மாளிகையில் ஒரு மணி நேரங்கூட இந்தச் செடி இல்லாமல் இருக்கக்கூடாது என்று அவர் தன் புத்திரனிடம் கூறினார். மகன் மாளிகையைச் சுற்றிப் பல்வேறு பரிமளச் செடிகளை நட்டான். சந்தனம், குங்குமம், அரகஜா மரங்களைத் தேடிக்கொணர்ந்து வைத்து வளர்த்தான். இம்மூலிகைகள், தருக்களின் மணத்தால் ஏற்கனவே அவன் தந்தை நட்டு வைத்

திருந்த பிரஸ்தாப மூலிகைச் செடியின் மணம் எடு படாதுபோயிற்று. அதைக் கண்ட அவன் எண்ணி ஞன், "என் தந்தை இம்மூலிகைச் செடியைப் பாது காக்கச் சொன்னது இதன் வாசனைக்காகத்தானே! இப்போதுதான் அதற்காக எத்தனையோ செடிகளும் தருக்களும் உள்ளனவே! இனி இந்த மூலிகைச் செடி அவசியமல்லவே! இது வேறு வீணுய் முக்கியமான இடத்தை அடைத்துக்கொண்டு நிற்பானேன்?" என்று. உடனே அவன் இந்த மூலிகைச் செடியைப் பிடுங்கி எறிந்து விட்டான். பிறகு எங்கோ ஒரு பொந்திலிருந்து ஒரு பாம்பு வெளிப்பட்டது. அஃது அவனைக் கடித்து விட்டது. அவன் மரணத்தருவாயிலாஞன். அப்போது தான், அகாலத்தில், அம்மூலிகை விஷப்பாம்புகள் நெருங் காதபடி பாதுகாப்பதற்காக நடப்பட்டது என்பதையும், தன் தந்தை அதைப் பாதுகாக்கும்படி கூறியது அதன் மணத்துக்காக மட்டுமன்று, விஷப்பாம்புகள் அவ் விடத்தை அணுகாமல் இருக்கச் செய்வதற்குத்தான் என் பதையும் அவன் உணர்ந்தான். இது போலவே மானிட அறிவு (பகுத்தறிவு) மட்டும் போதாது; அல்லா(ஹ்)வின் மர்மங்களை உணர்ந்த நபிமார்களுடைய வழிகாட்டுதலும் மனிதனுக்கு இன்றியமையாததாகும்.

ஈமான் கொள்பவர்களிலுள்ள பல்வேறு வகை யினரை இமாமவர்கள் ஒரு வித்தின் பல்வேறு பகுதி களுக்கு ஒப்பிடுகிருர்கள். இவர்களில் முதல் வகையினர் வித்தின் வெளித்தொலி போன்றவர்கள். இரண்டாம் வகையினர் உள்தொலி போன்றவர்கள். மூன்ரும் வகையினர் அதனுள்ளே இருக்கும் பருப்பைப் போன்றவர்கள். நான்காம் வகையினர் அந்தப் பருப்பி லிருந்து எடுக்கப்பட்ட எண்ணெய் போன்றவர்கள். இந்த வித்தின் வெளித்தோல் கசப்பானது; தின்பதற்கு லாயக்கற்றது. இதை அடுப்பெரிக்க அடுப்பில் போட்

டால் நெருப்பு அணைந்துவிடும்; புகையும். எனவே, இந்தத் தொலி எதற்கும் பயனற்றதாய்த் தூர எறியப்படுகிறது. நாவால் மட்டும் ஈமான் கொண்டதாகக் கூறிக்கொண்டு, மனத்தளவில் அவ்விதம் நடவாமலிருப்பவர்கள் இந்த வெளித்தொலியை ஒத்தவர்கள் தாம். இவர்கள் எதற்கும் பயனற்றவர்களாகிவிடுவார்கள். வித்திலுள் பருப்பைச் சுற்றி இருக்கும் உள்தொலியை அடுப்பெரிக்க உபயோகிக்கலாம். ஆனால், பருப்பைப் போல் அதற்கு மதிப்பு இல்லை. இதுபோலவே நாவால் ஈமான் கொண்டதாகச் சொல்வதுடன் இதயத்திலும் ஈமான் கொள்பவன் முந்திய வகையினனைவிடச் சிறந்தவன்தான். ஆனால், இவன் அல்லா(ஹ்)வின் கருணை ரஹ்மத்தைத் தன் சுய அனுபவம் மூலம் உணரவில்லை; அந்த அளவுக்கு இவன் ஈமான் பலம் பெறவில்லை. பருப்பு, வெளித்தொலியையும், உள்தொலியையும் விடச் சுத்தமானதுதான்; புசிப்பதற்கும் உரியதே. ஆயினும் அதிலிருந்து எடுக்கப் படும் எண்ணெயோடு ஒப்பிடின், அதிலும் ஓரளவு அசுத்தம் இருக்கவே செய்கிறது. இதுபோலவே தன் அந்தரங்க அனுபவத்தில் இறைவன் ஒருவனிடமிருந்தே ஞானம் பெறவேண்டும் என்பதை உணரும் ஈமான் கொண்டவன், உயரிய அந்தஸ்தைப் பெற்றிருப்பினுங் கூட, இறைவனையன்றி வேறு எதையுமே பார்க்காத ஞானியோடு ஒப்பிடும்போது ஓரளவுக்குக் கலப்பான நிர்ணயமுடையனாகவே விளங்குகிறான். (இஹ்யா: 4, பக். 212.)

ஆத்மப் பாதையிலே பிரயாணி சேரும் நிலைகள் அறிவு, உணர்வு, செய்கை ஆகியவை மூன்று என்றும், அவற்றில் அறிவு ஒரு மரமாகவும், உணர்வும் செய்கையும் முறையே கிளைகளாகவும், கனிகளாகவும் இருக்கின்றன என்றும் இமாம் கஸ்ஸாலீ உவமிக்கிறார்கள். (இஹ்யா: பாகம் 4, பக். 55.)

இமாமவர்களின் இன்னேர் உபமானம்: பூமியிலுள்ள புழுதி, காற்றால் கிளப்பப்படும்போது, அது சுழன்றுகொண்டு மேல் நோக்கி எழும்புகிறது. ஒரு மினுரைப்போல் தோற்றந் தந்து சுழல்கிறது. அதை நோக்கும் யாரும் புழுதி தானகவே எழுந்து இவ்விதம் சுழல்வதாகவே நினைப்பார்கள். ஆனால், அதை இவ்விதம் எழுந்து சுழலச் செய்வது காற்றேயன்றோ! காற்றைக் காணமுடியாத மனிதன், இப் புழுதியையும் அதன் சுழற்சியையும் காணமுடிகிறது. புழுதி சக்தியற்றது. காற்றிடமே முழுச்சக்தியும் உள்ளது. ஆனால், அது நமது கண்களுக்குப் புலனாகவில்லை. இதேபோன்ற நிலையில்தான் சிருஷ்டியாளனிடம் சிருஷ்டிப் பொருள்களும் இருக்கின்றன. இந்தச் சிருஷ்டிகள் தாமாக இயங்குவது போலிருப்பினும் இவற்றை ஆட்டிவைப்பது அந்தச் சிருஷ்டியாளனின் திருவுளச்சித்தமாகும். ஆனால், அந்தச் சித்தம் நம் கண்களுக்குப் புலனாவதில்லை. (ஜாமியின் நபஹாதல் உன்ஸ்: பக். 426.)

இன்னேர் உபமானம்: மானிட இதயம் ஒரு கண்ணாடிப் பாத்திரம் போன்றது. தீய குணங்களோ தீயையும் இருளையும் ஒத்தவை. இவை இதயத்துள் புகுந்தால் மகிழ்ச்சி வழி இருளடைகிறது. ஆனால், நற்குணங்களோ வெளிச்சத்தைப் போன்றவை. இவை இதயத்தை ஆட்கொண்டால் இதயம் பாவ இருளிலிருந்தும் பரிசுத்தமடைகிறது. இதயம் ஒன்று இருளடைந்ததாய் இருக்கும், அல்லது ஒளியுள்ளதாய் இருக்கும். பரிசுத்த மனத்தோடு இறைவனை நெருங்க முடிபவனையன்றி வேறு யாரும் கதிமோக்ஷமடைய முடியாது.

மானிடனின் இதயம் ஒரு தாளைப் போன்றது. அதில் அவன் தன் பாலப்பருவம் முதல் கேட்டவை, நம்பியவை யாவும் குறிக்கப்பட்டுள்ளன. சிலர் பாரம்பரியமான நம்பிக்கைகளின்றியே யுக்த வயதையடைந்திருக்க

லாம். இத்தகையவர்கள் உண்மையை இலகுவில் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்கள். ஏனெனில், எந்த நம்பிக்கையும் இவர்கள் இதயத்தில் அழிக்க முடியாதபடி ஆழமாகப் பதிப்பிக்கப்பட்டில்லை. ஆனால், வேறு சிலருடைய இதயங்களிலோ சில நம்பிக்கைகள் ஆழமாகப் பதிந்துள்ளன. அவற்றை அழிக்க இயலாது. அந்தத் தாளையே கிழித்து எறிந்தால்தான் அந்த எழுத்துக்கள் அழிந்தனவாகும். (மீஸானுல் அமல்: பக். 163.) இன்னோர் உபமானம்: எண் சாண் உடம்புக்குச் சிரசே பிரதானமாய் இருப்பது போல ஈமானுக்குச் சகிப்புத் தன்மை இன்றியமையாததாகும். தலையின்றி உடலில்லை; சகிப்புத்தன்மை (ஸபுர்) இல்லாது ஈமானுமில்லை. ஓர் ஒட்டகத்தின் முதுகில் இருமருங்கும் தொங்கும் பாரங்களையும், முதுகின்மீது வைக்கப்பட்டுள்ள சிறு பாரத்தையும்தான் சகிப்புத்தன்மை யுள்ளவரும் சுமக்கிறார். அவரது இரு மருங்குமுள்ள சுமை தொழுகையும் இரக்கச்சித்தமுமாகும். நடுவிலுள்ள சிறு பாரமே வழிகாட்டி. (இஹ்யா: 4, பக். 54.)

இன்னோர் உபமானம்: நம்மிடமிருந்து கருத்து வேற்றுமை கொண்டுள்ளவர்களிடமும் நாம் சகிப்புத் தன்மை காட்டவேண்டும். ஏனெனில், உண்மை யார் வாயிலிருந்து வரினும் உண்மைதான். முற்றுமே தவறுதலானதைச் சொல்பவனிடமும் ஓரளவு உண்மையிருக்கலாம். அஃது அவனுடைய தவறான கூற்றோடு ஒட்டாமல் தனித்து நிற்கலாம். தங்கம் மண்ணோடு கலந்து தான் இருக்கிறது. போலி நாணயங்கள் வைத்திருப்பவனின் பையிலும் ஓரிரு அசல் நாணயங்களும் இருக்கலாம். அதில் நிபுணனானவன் அதைக் கண்டுபிடித்துவிடுவான். ஆனால், ஒன்றுமறியாத சாதாரண மனிதனோ அந்த மனிதனிடமிருந்து எதையும் விரும்பமாட்டான். இது போலவே அனுபவமில்லாதவன் ஆழமான ஆற்றி

லிறங்குவதில்லை. அலைகளோடு போராடும் ஆற்றலுடையவன் தண்ணீரில் இறங்குகிறான். குழந்தைகள் பாம்பைக் கண்டால் அஞ்சுகின்றன. தேர்ச்சியான பாம்பாட்டியோ அதைத் தொட்டுப் பிடித்து விளையாடவும் செய்கிறான். இதுபோலவே உண்மையைத் தேடுபவன், அதில் அனுபவமுள்ளவன், எதையுமே ஆராய்ந்து உண்மை காண்பது நலம். (முன்கித். மினல்முலால்: பக். 13.)

அறிவு விஷயத்தில் நிபுணர்களின் முடிவுகளைத் தமது அனுபவத்தின் மூலம் சோதித்துப் பாராமலே யாவரும் ஏற்றுக் கொள்கின்றனர். எதையும் பகுத்தறியும் சக்தி வாய்ந்த ஒரு மனிதன் இதற்குமுன் நோயாகவே படுக்காதவன், இப்போது நோய் வாய்ப்படுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனுடைய தந்தை ஒரு வைத்தியர். மருந்து வகைகளில் மகா தேர்ச்சியுடையவர். அவருடைய திறமை அவர் மகனுக்குத் தெரியும். அந்தத் தந்தை ஒரு மருந்தைக் கொடுத்து, "இஃது உன் வியாதியைக் குணப்படுத்தும்; இதை நீ உட்கொள்!" என்று சொன்னால், அந்த நோயாளியின் பகுத்தறிவு என்ன கூறும்? மருந்தோ கசப்பானது, வாயில் வைக்க முடியவில்லை. எனினும், அவன் அதை ஏற்பானா ஒதுக்கி விடுவானா? "இந்த மருந்து குணமளிக்கும் என்று தெரிகிறது; ஆனால், நான் அனுபவத்தில் இதைச் சோதித்துப் பார்க்கவில்லையே!" என்று கூறி அம்மருந்தை அவன் நிராகரித்தால் அவனை மூடனென்னாது என்னென்பது? இதுபோலவே நபிமார்கள் மூலம் வந்த ஞானத்தையும் ஏற்றுக் கொள்ளவேண்டும். அதை ஏற்கவேண்டியவன், தன் சொந்த அனுபவத்தால் அதைச் சோதனைசெய்து பார்க்கவில்லையே என்று கூறி அதை நிராகரித்துவிடக் கூடாது. இக்காரணத்துக்காக அதை நிராகரிப்பவன், நல்ல வழி காட்டுதலையும் உதவியையும் உதறித் தள்ளிய ஒரு மூடனேயன்றோ! (முன்கித்: பக். 33.)

இமாமவர்களின் நூற்களும் செல்வாக்கும்

நூற்றுக்கு மேற்பட்ட அரும் பெருங் கிரந்தங்களை எழுதியதாகச் சொல்லப்படும் இமாம் கஸ்ஸாலீயின் நூற்பெருமையை அளக்கும் திறமை நமக்கு இல்லை. அவற்றின் தராதரத்தை மதிப்பிடும் தகுதியுமில்லை. அவர்களின் நூற்களில் தலையானது "இஹ்யா உலூமுத்தீன்'' என்ற பெரிய நூல்தான். இஃது அவர்களின் ஆரம்ப கால நூற்களில் ஒன்றாயினும், துறவு பூண்டு தவமியற்றிய காலையில் திமிஷ்க் நகரில் வைத்து எழுதப்பட்டதாகும். நான்கு பாகங்களையும் 39 அத்தியாயத் தலைப்புக்களையுங் கொண்ட இந்நூல் சமூகத்தையும் மார்க்கத்தையும் புனருத்தாரணஞ் செய்யும் நோக்குடன் அதே தலைப்புடன் எழுதப்பட்டதாதலால் சகல விஷயங்களும் இதில் விவரிக்கப்பட்டுள்ளன. இஃதன்றி அவர்களுடைய ஏனைய சகல நூற்களின் குறிக்கோள் மட்டும் ஒன்றாகவே இருந்தது. இஸ்லாத்தை "உருப்படுத்திப் பரவச் செய்து புகழுடையதாக்க வேண்டும்'' என்பதே அது. இஹ்யாவின் பெருமையை இங்குத் தரப்பட்டுள்ள ஒரு சில மேற்கோள்களிலிருந்தே ஓரளவு புரிந்துகொள்ள முடியும். இதில் சொல்லப்பட்ட கருத்தைச் சுருக்கமாகப் பாரஸீக மொழியில் "கீமியாயெ-ஸஆதத்'' என்ற நூலுருவில் இமாமவர்கள் எழுதி வெளியிட்டார்கள். இதுவும் நான்கு பாகங்களைக் கொண்ட பெரிய நூலாகவே விளங்குகிறது. இதன் ஒரு சிறந்த மொழிபெயர்ப்பு (நெல்லிக்குப்பம், ஜனாப் அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் மொழிபெயர்த்தது) தமிழில் நீண்ட நாட்களாகவே விரும்பிப் படிக்கப்பட்டு வருகிறது.

அக்காலையில் அரபி அறிஞர்களிடை கிரேக்கத்தத்துவங்களைக் கற்ற ஒரு கூட்டத்தினர் அவற்றில் இஸ்லாத்தைவிடச் சிறந்த தத்துவங்கள் இருப்பதாக

எண்ணிக் கொண்டு, அவற்றை ஆதாரமாக வைத்து நூற்கள் எழுதியும் பேசியும் வந்தனர். அவர்களின் போக்கிலுள்ள தவற்றைக் காட்டுவதற்காக இமாம் கஸ்ஸாலீ, 'தஹா பதில் பலாஸிபா' (தத்துவவாதிகளின் சங்காரம்) என்றொரு நூல் எழுதினார்கள். தத்துவவாதிகளிடையேயுள்ள முரண்பாடுகளை விளக்கி அவர்கள் மயக்கத்தைத் தெளியவைக்கத் திரு குர்ஆனும் ஹதீஸும்தாம் உதவ முடியும் எனக் காட்டியுள்ளார்கள்.

அவர்கள் எழுதிய "கஷ்பி வத்தப்யீனி-பி-குரூரில்-கல்கி-அஜ்மயீன்" என்ற நூல்தான் தர்ஜுமாச் செய்யப்பட்டு இங்கே தரப்பட்டுள்ளது. மார்க்கக் கடமைகளில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்களிடம் தெரிந்தோ தெரியாமலோ இருந்து வரும் பற்பல தவறுகளைத் திருத்த இந்நூல் பெரிதும் பயன்படும். இதைப் படிப்பவர்கள் இதன் கருத்துக்களைப் பல நாட்கள் சிந்திக்காமலிருக்க முடியாது.

மற்றும் இமாமவர்களின் 'மின்ஹாஜுல் ஆபிதீன்' 'முன்கித் மினல் ழலால்,' 'கவாஇதுல் அகாயித்,' 'முகாஷபத்துல் குலூப்,' 'கிதாபுல் அர்பாயீன்' 'அல் ஹிக்மத்-பி-மக்லூகத்தல்லாஹ்,' 'கிதாபுத் தஜ்ரீதி-பி-கலிமத்தித் தவ்ஹீதி' ஆகிய ஆரம்பகால நூற்களும் குறிப்பிடத் தக்கவையே. அவர்கள் பிற்காலத்தில் எழுதிய நூற்களில் முற்கால நூற்களிலிருந்தும் கருத்து வேற்றுமைகள் எதுவும் காணப்படவில்லை. ஆனால், பிந்திய நூற்களில் அனுபவ முதிர்ச்சியின் ரேகைகள் காணப்படுகின்றன. அதிகமான அழுத்தம் இருக்கிறது. இத்தகையவற்றில் "ரவ்லத்துத் தாலிபீன்," "அல் மஆரிபுல் அக்லியா," "மிஷ்காத்துல் அன்வார்," "முகாஷபத்துல் குலூப்," "மீஸானுல் அமல்," "ரிஸாலத்துல் லதுனிய்யா" ஆகியவை முக்கியமானவையாகும். அவர்கள் கடைசி

யாக எழுதிய "அல்துர்ரல் பகீராஹ்" என்ற நூலில் மரணத்தைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார்கள்.

இமாமவர்களின் 'இஹ்யா' வெளி வந்ததும் அஃது உலகின் பல்வேறு பாகங்களிலும் ஆர்வத்தோடு படிக்கப் பட்டது. ஆனால், அதில் இஸ்லாமிய சமூகத்தைச் செல்லரிக்கச் செய்ததற்குப் பெரிதும் பொறுப்பாளிகள் தங்கள் கடமைகளை மறந்துவிட்ட உலமாக்களே என்று எழுதப்பட்டிருந்தது. இஃது அக்கால உலமாக்களில் பெரும்பாலாரின் ஆத்திரத்தைத் தூண்டிவிட்டது. இமாம் கஸ்ஸாலீயின் 'இஹ்யா' மார்க்க முரணானது என்ற 'பத்வா' கொடுக்கப்பட்டது. இஸ்லாமிய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இவ்விதம் தீர்ப்பளிக்கப்பட்டதும், ஆங்காங்கே ஆத்திரமடைந்த பக்கீஹ்கள், ஆலிம்கள் முதலியோர் அதை நெருப்பிலிட்டுக் கொளுத்தச் செய்தனர். பக்தாத், திமிஷ்க், பைத்துல் முகத்திஸ், காஹிரா, வட ஆப்ரிக்கா, முஸ்லிம் ஸ்பெயினான அந்தலூஸியா முதலிய இடங்களிலெல்லாம் 'அறிவு சீனாவிலிருப்பினும் தேடு' என்று உத்தரவிடப்பட்டதைச் சிரமேற்கொண்டு ஒழுகிவந்த முஸ்லிம் பெரியார்களின் வழித்தோன்றல்கள் அறிவுக்களஞ்சியமான 'இஹ்யா'வை எரியிட்டனர். (அறிவொளி பரப்பிய அந்தலூஸியா நாட்டில் குர்துபாவின் கண்மூடிக் காலியார் 'இஹ்யா'வை வைத்திருப்பவர்களையுமே நெருப்பிலிட்டுக் கொளுத்தும்படி உத்தரவிட்டுவிட்டார்!) இமாம் கஸ்ஸாலீ இஸ்லாத்தின் விரோதி என்றனர். இஸ்லாத்தில் குழப்பமுண்டாக்கிவிட்டார்கள் என்றனர். அவர்களுடைய வாதங்கள் தவறானவை என்றனர்; ஷரீஅத்துக்கு முரணானவை என்றனர். இவ்விதம் தாக்கி எழுதியவர்களில் குர்துபாவின் தத்துவாசிரியர் இப்னு ருஷ்து முக்கியமானவர். எனினும், பக்தாதைச் சேர்ந்த அபுல் பரஜ் இப்னுல் ஜௌஸி தலையானவராய் விளங்கினார். ஹம்பலி மத்ஹபைச் சேர்ந்தவரும், மிகத் திறமையான

சொல்வன்மையும், எழுத்துவன்மையும் உடையவரும், பிரசாரகரும், முஹத்திஸுமான ஜௌஸி ஸூபிக் கொள்கையைக் கடுமையாக வெறுத்தார். எனவே, இமாம் கஸ்ஸாலீ ஸூபித் தத்துவத்துக்கு இஸ்லாத்தில் இடமளிப்பதை மிகவும் வன்மையாகத் தாக்கினார். ஸூபியாக்களுக்காக எழுதப்பட்ட 'இஹ்யா'வில் ஆதார மற்ற 'பொய்யான' ஹதீஸ்கள் மலிந்துள்ளன என்றார். இமாம் கஸ்ஸாலீக்கு அவை 'தவறானவை' என்பதும் தெரிந்திருக்கவில்லை என்றார். 'இஹ்யா'வில் தான் தவறுகள் என்று கருதியவற்றை யெல்லாம் சேர்த்து ஒரு நூலாக்கினார். அதன் பெயர் "இலாமுல் இஹ்யா ப இக்லாத்துல் இஹ்யா" என்பதாகும். இது போதாதென்று "தல்பிஸ் இப்லீஸ்" என்ற தமது நூல் ஒன்றிலும் இமாம் கஸ்ஸாலீ அவர்களைத் தாக்கி எழுதியிருந்தார். இறைவனிடமிருந்து நேரடி ஞானம் பெறுவதாகக் கூறிக்கொண்டு கல்வி ஞானம் தேடாமலிருப்பது தவறு என்றும், ஏகாந்தமடையும் ஆத்மா அதிகமும் ஷைத்தானியச் சிந்தனைகளுக்கு நிலைக்களனாகிவிடும் என்றும், இவற்றை விரட்டக் கல்வி அவசியமென்றும் ஜௌஸி கூறுகிறார். இமாமவர்கள் கல்வி கற்பதை ஒருக்காலும் இகழ்ந்து பேசவே இல்லை; ஆனால், நாம் தேடும் சாதாரணக் கல்வி ஞானம், இறைவனிடமிருந்து கிடைக்கும் நேரடியான ஞானத்தைவிடத் தாழ்வானது என்றுதான் கூறியுள்ளார்கள். நீண்ட நாட்கள் நோன்பிருப்பது, கண்விழிப்பது, தியானத்திலிருப்பது இவை யெல்லாம் வீண் என்றும், காலத்தை வீணாக்குவன வென்றும், ஷரீஅத்துக்கு முரணானவை என்றும் ஜௌஸி கூறியுள்ளார். இசையைக் கேட்கலாம் என்று இமாமவர்கள் கூறுவதையும் அவர் வன்மையாகக் கண்டிக்கிறார். ஸூபியாக்களை இமாமவர்கள் ஆதரிப்பதற்காகவே பல பக்கங்கள் அவர்களை ஜௌஸி தாக்கி எழுதியுள்ளார்.

"ஷரீஅத்தை எதிர்த்து, அதற்கு மாற்றமானதை அங்கீ கரிப்பதைவிட இழிவான, பேராபத்தான நிலைமை வேறு எது தான் இருக்கமுடியும்?" என்று ஜௌஸி கேட்கிறார். யஸீது பற்றியும் சகிப்புத்தன்மை காட்டும்படி கஸ்ஸாலீ கேட்பதையும் இவர் இகழ்கிறார்.

ஆனால், இத்தகைய உஷ்ணக்காற்று நீடிக்கவில்லை. இமாமவர்கள் தம் எதிரிகளின் தாக்குதலிடையிலும் "ஹுஜ்ஜதுல் இஸ்லாம்" (இஸ்லாத்தின் அத்தாட்சி) ஆகிவிட்டார்கள். லக்ஷக்கணக்கான மக்களை அவர்களின் 'இஹ்யா' மிகவும் கவர்ந்து விட்டது. அவர்கள் சகோதரர் 'இஹ்யா'வைச் சுருக்கி, 'லுபாபுல் இஹ்யா' எழுதியதைத் தொடர்ந்து, மற்றும் பல சுருக்கமான 'இஹ்யாக்'கள் வெளிவந்தனவென்றால் அது பொது ஜனங்களிடை பெற்றிருந்த ஆதரவை ஓரளவு உணர லாம்.

இஹ்யாவைக் குறைகூறிவந்த பலரே பின்னர்த் தமது தவற்றை உணர்ந்து திருந்திக்கொண்டுமிருக்கின்றனர். இமாம் கஸ்ஸாலீக்குப் பின் வாழ்ந்த இத்தகைய ஓர் இமாமைப் பற்றிய விபரம் 'தப்ஸீர் பத்ஹுல் கரீம்' ஆசிரியர் ஆலிமுல் பாஸில் நூஹு இப்னு அப்துல் காதிர் அவர்கள் எழுதிய 'அத்துரர் பீ ஹிகாயாத்தில் குரர்' என்ற நூலில் (பக்கம் 94-ல்) காணப்படுகிறது. அது வருமாறு: "இமாம் ஒருவர் சதாவும் இமாம் கஸ்ஸாலீயின் இஹ்யா உலூமுத்தீனைக் குறை கூறிக் கொண்டே யிருந்தார். ஒரு நாள் அவர் இஹ்யாவின் சில பகுதிகளைக் கையிலெடுத்துக்கொண்டு தாம் பாடம் போதிக்கும் மத்ரஸாவுக்கு வந்தார். தமது மாணவர் களை நோக்கித் தம் கையிலிருப்பது என்ன என்று வின வினார். அவர்கள் அவற்றைப் பார்த்து, "இஹ்யா உலூ முத்தீனிலுள்ளவை" என்றனர். "நடந்த விஷயம் உங்களுக்குத் தெரியுமா?" எனக் கேட்டுவிட்டு அவர்

சொல்லலானார்: "இன்றிரவு நான் தூங்கும்போது, கஸ்ஸாலீ என்னிடம் வந்து என்னை நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் இழுத்துக்கொண்டு போய்விட்டு, 'அல்லா(ஹ்)வின்ரஸூலே, இவர் எனது நூலான இஹ்யா உலூமுத்தீனைக் குறை கூறுகிறார். நான் அதில் நீங்கள் சொல்லாத ஒரு சொல்லையாவது சொல்லியிருக்கிறேனா?' என்று கேட்டார். அதற்கு நாயகம் (ஸல்) அவர்கள், 'இல்லை' என்று கூறிவிட்டு, நான் குறை கூறியதற்காக எனக்கு எழுபது கசையடி கொடுக்கச் சொன்னார்கள்." இவ்விதம் கூறிவிட்டு அந்த இமாம் தன் சட்டையைத் திறந்து காட்டினார். இரவில் பட்ட அடியின் தடிப்பு அவர் உடலில் கிடந்தது!

இமாம் கஸ்ஸாலீ, தாம் தோன்றுதற்குமுன் வரை இஸ்லாத்தில் ஸூபிக் கொள்கைக்குத் தரப்படாத ஒரு பெரு மதிப்பை அதற்கு உண்டாக்கினார்கள். ஸூபிக் கொள்கைகளைச் சிக்கலெடுத்து ஒழுங்குபடுத்தி, அவற்றுக்குத் தெளிவைத் தந்து, அதுவரை ஸூபிக் கொள்கை ஏதோ குழப்பமான ஒன்று என்று எண்ணியவர்களின் மனத்தைக் கவர்ந்தார்கள். அஃது இஸ்லாத்தின் ஒரு முக்கியமான அம்சம்தான் என்று ஏற்றுக் கொள்ளும்படி செய்தார்கள்.

முறைப்படி தரீக்காக்கள் உண்டாகு முன் தோன்றிய இமாமவர்கள் தரீக்காக்களின் ஸ்தாபகர்களான மகான்களுக்கு ஒரு முன்னோடியாய் விளங்கியிருக்கிறார்கள். இமாம் கஸ்ஸாலீ துறவு பூண்ட சமயம் கல்வி கற்கப் பக்தாத் வந்த ஹஜ்ரத் கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகை அவர்கள் பள்ளிப் படிப்புக்குப்பின் துறவு வாழ்க்கையில் புகுந்ததற்கும் இமாமவர்கள் ஒரு முன்னோடியாய் விளங்கியுள்ளார்கள். இமாமவர்களின் நூற்கள் ஹஜ்ரத் முஹ்யித்தீன் ஆண்டகையின் நூற்களுடன் நடையிலும் விஷயப் போக்கிலும்

ஒற்றுமையுடையவையாய் விளங்குகின்றன. ஹஜ்ரத் கௌதுல் அஃலம் அவர்கள் தரிஸனம் பற்றித் தரும் விளக்கங்கள், ஊனக்கண்ணின் பார்வைக்கும் (பஸர்), அகக்கண்ணின் பார்வைக்கும் (பஸீரா) அவர்கள் காட்டும் பாகுபாடுகள், புலப்படும்-புலப்படா உலகுகள், ஒருவகைப் போதை என விவரிக்கும் காதல் விஷயங்களின் மறைவான பொருள் என்று அவர்கள் விளக்கும் ஞானம், தன் ஞானியார்க்குத் தன் அன்பெனும் கிண்ணத்தைத் தருகையிலுண்டாகும் பரவசம், ஆகிய யாவும் இமாம் கஸ்ஸாலீயின் போக்கை ஒட்டியே இருக்கின்றன. இவ்விரு பெரியார்களுடைய நூற்களையும் படிக்கும்போது, பிரஸ்தாப நூற்கள் இவர்களில் யாரால் எழுதப்பட்டன என்ற ஐயமுண்டாகும் அளவுக்கு இருவரிடமும் ஒற்றுமை காணப்படுகிறது. எனினும், காதிரிய்யாத் தரீக்காவின் ஸ்தாபகரும், தீனை நிலைநிறுத்தியவர்களும், இருபத்தைந்து ஆண்டுகள் சரித்திரங் கண்டறியாத தவமியற்றிய மகானுமான முஹ்யித்தீன் ஆண்டகையவர்களைப்பற்றி முஸ்லிம் உலகம் முழுவதிலும் எந்த அபிப்பிராயபேதமும் இல்லை. அவர்கள் தங்கள் காலத்தில் நடந்த அக்கிரமங்களை யெல்லாம் எடுத்து விவரித்தே பொது மேடைகளில் நின்று கண்டித்தார்கள். ஹே பாசாங்குக்காரனே, ஹே அனியாயக்காரனே, ஹே உள்ளொன்று வைத்துப் புறமொன்றுனவனே, என்ற ரீதியில் அவர்கள் உபன்யாசங்களிடை பலதரப்பட்ட பதர்களையும் விளித்து, அவர்கள் மனத்தில் படும்படி அவர்களின் குறைகளை எடுத்துக் காட்டி ஆண்டகை அவர்கள் நிகழ்த்திய உபன்யாசங்களாலும் குறிப்பிடத்தக்க யாரும் கசப்படையவில்லை ; எதிர்ப்புக் காட்டவுமில்லை. இன்றுவரையும் இமாம் கஸ்ஸாலீயின் மீது குறை கூறுவோர் இருந்தே வருகிறார்கள்.

ரிபாயிய்யாத் தரீக்காவை ஸ்தாபித்த ஸுல்தானுல் ஆரிபீன் அஹ்மது கபீர் ரிபாயி (ரஹ்) அவர்களின் "புர்ஹானுல் முஅய்யத்" எனும் நூலிலும், சுஹ்ரவர்திய்யாத் தரீக்காவின் ஸ்தாபகரான ஷிஹாபுத்தீன் சுஹ்ரவர்த்தி எழுதிய "அவாரிபுல் மஆரிப்" எனும் நூலிலும் இமாம் கஸ்ஸாலீயின் இஹ்யாவின் கருத்துக்கள் பல காணப்படுவதுடன், நடையிலும் போக்கிலும் அதிக ஒற்றுமை காணப்படுகிறது. ஷைகுல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அரபி தமது நூற்களை இமாமவர்களின் மஃரிபா போதனையைப் பின்பற்றியே எழுதியுள்ளார்கள். மற்றும் ஷாதிலீயாத் தரீக்காவின் ஸ்தாபகரான (துனீஸியா) அபுல் ஹஸன் ஷாதிலீ (ரஹ்), எமன் நகர ஷாபி இமாம் அபீபுத்தீன் யாபிஇ (ரஹ்), திமிஷ்க் நகரப் பெரியார் தாஜுத்தீன் ஸுல்கி (ரஹ்), (இவர், இமாம் கஸ்ஸாலீயைச் சாந்தியின் நிலையத்தை அடைய உதவும் நேர்ப்பாதை என்று வர்ணித்துள்ளார்), இராக்கைச் சேர்ந்த ஸைனுத்தீன் பின் அல் ஹுஸைன் (ரஹ்), மிஸ்ரைச் சேர்ந்த அப்துல் வஹ்ஹாப் அல் ஷரனீ (ரஹ்) முதலிய ஸூபிப் பெரியார்களெல்லாம் இமாம் கஸ்ஸாலீ வகுத்துத் தந்த பாதையைப் பின்பற்றியவர்களாவர்.

இஸ்லாமிய உலகில் புத்துயிரையும், புதிய ஆர்வத்தையும் உண்டாக்கி, இஸ்லாமிய தரீக்காக்கள் உண்டாவதற்கு முன்னோடியாக விளங்கியதுடன் மட்டும் இமாம் கஸ்ஸாலீ அவர்களின் பெருமை அமைந்துவிடவில்லை. அவர்கள் காலத்திலும் அவர்கள் மறைந்த ஐம்பது ஆண்டுகளுக்குள்ளும் அவர்கள் நூற்கள் முஸ்லிம் ஆத்ம ஞான ஒளிவிளக்காய் விளங்கியது போல், முஸ்லிம் உலகுக்கு அப்பாலும் தம் ஒளியைச் சிந்தின. அவர்களின் நூற்களில் சில பதின்மூன்றாம் நூற்றாண்டின் மத்தியில் லத்தீன் பாஷையில் தர்ஜுமாச் செய்யப்

பட்டன. ரேய்மண்ட் மார்டின் என்பவர் தாம் எழுதிய "புஜியோ பிடிஇ" என்ற நூலில் இமாம் கஸ்ஸாலீயின் "தஹாபதில் பலாஸிபா"வின் பெரும் பகுதியைச் சேர்த்துக்கொண்டார். தத்துவ சாஸ்திரம் பற்றிய நூற்கள் எழுதிய பலர் இமாம் கஸ்ஸாலீயின் நூற்களிலிருந்து மேற்கோள்கள் தரலாயினர். அவர்களுடைய நூற்கள் கிறிஸ்துவ உலகின் பார்வைக்குக் கிட்டியதுமே அவர்களின் மனப் போக்கு, கிறிஸ்துவ ஆசிரியர்கள் பெரிதும் உவப்பதாகிவிட்டது. "ஸும்மம் தியாலாஜியா" என்ற பெயரில் முதன்முதலில் வெளிவந்த கிறிஸ்துவத் தத்துவார்த்த நூலுக்கு அதன் ஆசிரியரான தாமஸ் அக்கியூனஸ் இமாம் கஸ்ஸாலீயின் நூற்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறார். வஹியுடன் தொடர்புள்ள பகுத்தறிவைப் பற்றி இமாமவர்கள் எழுதியுள்ள விவாதரீதியான விவரங்களையும் முடிபுகளையும் இந்த ஆசிரியர் எடுத்துக் கையாண்டிருக்கிறார் என்றும் அறிஞர்கள் கூறுகிறார்கள். மைமோனைட்ஸ் என்ற இன்னொரு தத்துவ நூலாசிரியர், இமாம் கஸ்ஸாலீயின் கருத்துக்களை எடுத்துக் கையாண்டதுடன், அவர்களின் பாணியைப் பின்பற்றியே நூல் எழுதியுள்ளார். இத்தாலிய மொழியில் 'டிவைன் காமெடியா' எழுதிய மகாகவி தாந்தேயும் இமாம் கஸ்ஸாலீ, இப்னு அரபி ஆகியவர்களின் கருத்துக்களால் உணர்ச்சியூட்டப்பட்டவர் என்றே தெரிகிறது.

கிறிஸ்துவ உலகைவிட, யூத உலகம் இமாம் கஸ்ஸாலீயைப் பெரிதும் போற்றிக் கொண்டாடுகிறது. கிறிஸ்துவர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்ட யூதர்கள் முஸ்லிம் சமூகத்தில் கண்ணியமான இடம் பெற்றிருந்தனர். எனவே, அரபி மொழி கற்றிருந்த அவர்களுக்கு முஸ்லிம் நூற்களைப் படிக்கும் வாய்ப்பிருந்தது. இமாம் கஸ்ஸாலீயின் அறநெறிப் போதனையின் பாணி அவர்

களுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவை யூத நீதி போதனை கள் போலவே இருப்பதாக அவர்கள் கூறினர். யூத நூலா சிரியர்கள் இமாமவர்களின் நூற்களைப் படித்துப் பயன் படுத்திக்கொண்டனர். தமது நூற்களுக்கு அவற்றிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக் கொண்டனர். குறிப்பாக இமாமவர்களின் நூலான "மீஸானுல் அமல்" என்பதை யூதர்கள் தங்கள் எபிரேய பாஷையில் மொழிபெயர்த்து, அதில் வரும் திரு குர்ஆன், ஹதீஸ் மேற்கோள்களுக்குப் பதிலாகப் பைபிள், தால்மூது மேற்கோள்களைப் புகுத்திக் கொண்டனர். அது முற்றுமே ஒரு யூத நூல்தான் என்று படிப்பவர்கள் நினைக்கும்படி செய்து கொண்டனர். இமாம் கஸ்ஸாலீயின் நூற்களிடம் யூதர்கள் காட்டிய மரியாதைக்கு "யூத என்ஸைக்ளோபீடியா" என்றகலைக் களஞ்சியத்தில் இமாமவர்களைப் பற்றி எழுதப்பட்டுள்ள கீழ்க்காணும் வாசகத்தை ஆதாரமாகக் காட்டலாம். அஃதாவது: "அரிஸ்டாட்டிலின் கூற்றுப்படி தர்க்கம், தத்துவம், பௌதீகம் ஆகிய சாஸ்திரங்களை இமாம் கஸ் ஸாலீ விளக்கி எழுதியுள்ள, 'மகாஸிதுல் பலாஸிபா' எனும் நூலிலிருந்து எண்ணற்ற யூத மாணவர்கள் முற் றும் சரியான தகவல்களைப் பெற்றனர். எனினும், மத்திய கால யூதச் சிந்தனையாளர்களைக் கவர்ந்தது கஸ்ஸாலீ தத்துவவாதிகளைத் தாக்கி எழுதிய பகுதிகளல்ல; அவர்களுடைய மார்க்க சம்பந்தமான நூற்களிலுள்ள நீதி போதனைகளே இச்சிந்தனையாளர்களைப் பெரிதும் கவர்ந்தன. கஸ்ஸாலீ யூத நீதி போதனையின் பக்கம் முற்றும் சார்ந்துவிட்டார்களோ என்று யூதர்கள் பலர் எண்ணும் அளவுக்கு அவர்களின் நீதி போதனைகள் யூத நீதி போதனைகளோடு இணங்கியவையாய் இருந்தன."

அக்காலையிலேயே இந்த அளவுக்குக் கிறிஸ்துவர்களா லும் யூதர்களாலும் போற்றிப் புகழப்பட்ட ஆசிரியரின் நூற்கள், முஸ்லிம்களால் மிகவும் பயபக்தியுடன் படித்

துச் சிந்திக்கப்படும் நூற்கள் இப்போது ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி கலாச்சார பிரிவால் ஐரோப்பிய மொழிகளில் ஆக்கப்படவிருக்கின்றன என்றால் அதில் வியப்புக்கு இடமில்லையன்றோ !

இமாமவர்களின் நூற்களுக்கு உணர்ச்சி யூட்டியவை

மேல் நாட்டில் இமாம் கஸ்ஸாலீயின் சிந்தனையால் கவரப்பட்ட பலர் அவர்களையும் அவர்களுடைய நூற்களையும்பற்றி நூற்கள் எழுதினர். மிகப் பல நூற்கள் இவ்விதம் வெளிவந்தன. எனினும், இவற்றில் பல இமாம் கஸ்ஸாலீக்குக் கருத்துக்கள் எந்த மூலத்திலிருந்து கிடைத்திருக்கும் என்பது பற்றித் தவறான ஊகங்களைத் தருகின்றன. இமாம் கஸ்ஸாலீ அவர்கள் பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற கிரேக்கச் சிந்தனையாளர்களின் நூற்களால் பெரிதும் பயனடைந்துள்ளனர் என்றும், யூத, கிறிஸ்துவ மூல நூற்களால் பெரிதும் மனங் கவரப்பட்டு அவற்றிலிருந்து பல மேற்கோள்களை எடுத்துக் கையாண்டுள்ளார்கள் என்றும், பைபிளின் பழைய ஏற்பாட்டிலிருந்தும், யூத வேதங்களிலிருந்தும் பல பதங்களையும் உபமானங்களையும் எடுத்துப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்றும் கூறுகின்றனர். இதற்கு ஆதாரமும் இருப்பதாக எதெதையோ காட்ட முயல்கின்றனர்.

இமாம் கஸ்ஸாலீ முழுக்க முழுக்க ஒரு முஸ்லிமாக இருந்தார்கள் என்பதை இவர்கள் மறந்துவிடுகின்றனர். தக்லீதில் (கண்ணை மூடிக்கொண்டு பாரம்பரியமாக வரும் நம்பிக்கைகளை நம்புவதை) ஒப்புக்கொள்ளாத இமாமவர்கள் இஸ்லாத்தின், திரு குர்ஆன், ஹதீஸ் போதனைகளைத் தம் மன அனுபவங்களால் உண்மையெனக் கண்டு ஈமான் கொண்டவர்கள். இந்த இரண்டிலுமே அவர்கள் மூழ்கி, அவர்களின் கருத்துக்களுக்கும் உணர்ச்சிக்

கும் அவற்றிலேயே உதவி தேடுபவர்களாக இருந்தார்கள். பல்வேறு நாடுகளிலும் சுற்றி அலைந்து அனுபவம் பெற்ற இமாமவர்களின் நூற்களில் அவர்களின் சுயானுபவக் கோடுகள்தாம் அதிகமும் காணப்படுகின்றன. அவர்கள் இல்ஹாம் என்ற உதிப்பால் தெய்வ ஞானத்தைப் பெற்றார்கள். எனவே, அவர்களுடைய நூற்கள் அருள் நூற்கள் எனப்படும் அந்தஸ்தைப் பெற்றன. அவர்கள் அடைந்த உதிப்புகளில் பல மார்க்கத்தால் வெளியிட அனுமதிக்கப்படாதவை. எனவேதான் பல விஷயங்களை விளக்குகையில் "இதற்கதிகம் கூற எனக்கு அனுமதியில்லை" என்று அவர்கள் நிறுத்தி விடுகிறார்கள்.

இமாம் கஸ்ஸாலீ மிகப் பல நூற்களைக் கற்றுள்ளார்கள். தத்துவவாதிகளின் முரண்பாடுகளை எடுத்துக் காட்டி விளக்கக் கிரேக்கத் தத்துவ நூற்களையே கற்றுள்ளார்கள். அந்தத் தத்துவவாதிகளால் உணர்ச்சி யூட்டப்பட்டு அரபியில் நூற்கள் எழுதிய அரபி தத்துவவாதிகளான அல்கிந்தி, அல் பராபீ ஆகியோருடையவும் இக்வானுஸ் ஸபா என்ற பஸ்ராவிலிருந்த தத்துவவாதிகள் குழுவின் நூற்களையும் அவர்கள் கற்றுள்ளார்கள். ஆனால், இவற்றால் அவர்கள் கவரப்படவில்லை. நூற்களுக்கு அடிப்படையாக உதவியவையான திரு குர்ஆனுக்கும், ஹதீஸுக்கும் அடுத்தபடியாக, அவர்களின் முதல் நான்கு கலீபாக்களுடையவும், ஸூபியாக்களாகிய நாதாக்களுடையவும் வாழ்க்கையும் போதனைகளும்தாம் அவர்களை மிகவும் கவர்ந்தவையாகும். ஸூபியாக்களான ஹஸன் பஸ்ரீ, ஸூபியானுத் தவ்ரீ, இப்ராஹீம் பின் அத்ஹம், ராபியா அல் அதவிய்யா, அபூ ஸுலைமானுல் தாரானீ, ஹாரிதுல் முஹாஸிபீ, அபூ தாலிபுல் மக்கி, அபூ யஸீது பிஸ்தாமி, ஜுனைத், ஷிப்லி, ஸலாமி, அல் குஷைரி, அல் ஹுஜ்வீரீ ஆகியோரால் அவர்கள் பெரிதும் கவரப்

பட்டிருந்தார்கள். கிறிஸ்துவர்களின் கடவுள் கொள்கையே தவருனது என்று விளக்கிக் காட்டியுள்ள இமாமவர்கள், மனித இயற்கையுடன் தெய்வ இயற்கையை ஒன்ருக்கிவிடலாம் என்று மயக்கமடைந்துள்ள கிறிஸ்துவர்கள் தண்ணீரினுள் பிரதிபிம்பிக்கும் நக்ஷத்திரத்தை எடுக்கக் கை நீட்டுவோர் ஏமாறுவதுபோல, ஏமாந்தவர்கள்தாம் என்று எடுத்துக் காட்டும் இமாமவர்கள், அவர்களின் மூல நூற்களிலிருந்து உணர்ச்சி பெற்றுள்ளார்கள் என்று கூறுவது விந்தைதான்! இது போலவே இமாமவர்களின் நூற்களிலிருந்து கருத்தையெடுத்தும், தமது நூற்கள்போல் அவற்றை உருமாற்றியும் பயன்படுத்திக்கொண்ட யூதர்களின் மூல நூற்களிலிருந்து அவர்கள் உணர்ச்சி பெற்ருர்கள் என்று கூறுவதும் பொருந்தாத பேச்சுத்தான்.

ஹஜ்ரத் முஹ்யித்தீன் ஆண்டகை அவர்கள் "குன்யத்துத் தாலிபீ"னில் நாதாக்களின் வாக்குகளிலிருந்து மேற்கோள்கள் காட்டுவதைவிடவும் அதிகமாக இமாம் கஸ்ஸாலீ அவர்களின் நூற்களில் மேற்கோள்களை எடுத்தாண்டுள்ளார்கள். திரு குர்ஆனுக்கும் ஹதீஸுக்கும் அடுத்தபடியாக இந்த நாதாக்களின் வாலாற்றுச் சம்பவங்களும், வாக்குகளுமே இமாம் கஸ்ஸாலீயின் நூற்களில் இடம் பெற்றுள்ளன. உதாரணமாக மிகமிக முக்கியமான இரு கருத்துக்களை விளக்க நேரும் இடங்களில் அவர்கள் அபூ யஸீது பிஸ்தாமியின் வாக்குகளை ஆதாரமாகக் காட்டியுள்ளதைக் குறிப்பிடலாம். "கற்றவன் எனப்படுபவன் நூற்களிலிருந்து அறிவு பெறுபவனல்லன்; அப்படியாயின் படிக்கத் தெரியாதிருந்த நபி பெருமான் (ஸல்) அவர்கள் ஏதும் அறியாதவர்கள் என்றல்லவா ஆகிவிடும்! கற்றவன் எனப்படுபவன் யார் எனின் படிப்பின்றித் போதனையின்றித் தன் ரப்பிடமிருந்து, அவன் (ரப்பின்) நாட்டப்படி, ஞானம் பெறு

பவன்தான். இவனே மஃரிபாவின் ஞானம் பெற்றவனுவான்'' என்று அபூ யஸீது பிஸ்தாமி கூறியுள்ளதை இமாம் கஸ்ஸாலீ அவர்கள் பயன்படுத்திக்கொண்டு ஸூபியாக்கள் தெய்வ ஞானம் பெறுவதிலேயே கவனங் காட்டுவர், படிப்பால் வரும் ஞானத்திலல்ல (அல் உலூமுல் இல்ஹாமிய்யா) என்று விளக்கியுள்ளார்கள். (இஹ்யா: பாகம் 2. பக். 16.) அபூ யஸீது பிஸ்தாமியின் கீழ்க்காணும் உபதேசத்தை இமாமவர்கள் தமது கால உலமாக்களுக்கு எடுத்துக் கூறுகிறார்கள்: வெளிச் சடங்குகளைக் கற்றவர்களிடமிருந்து, மரணித்தவர்களிடமுள்ள மரணித்து விட்டவற்றைக் கற்றவர்களிடமிருந்து, நீங்கள் உங்கள் ஞானத்தைப் பெற்றுள்ளீர்கள்; ஆனல், நாங்களோ மரணமேயற்ற ஒருவனிடமிருந்து எங்கள் ஞானத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம்.''

இது போலவே தமது ஆரம்ப கால நூற்களில் ஹாரித் பின் அஸாவுல் முஹாஸபி என்ற ஸூபிப் பெரியாரின் ''ரிஆயா-லிஹுகூகில்லாஹ்'' என்ற நூலிலும் பிறவற்றிலுமிருந்து ஏராளமான மேற்கோள்களை இமாமவர்கள் எடுத்தாண்டிருக்கிறார்கள்.

இமாமவர்களின் ஆத்ம ஞான போதம்

இமாம் கஸ்ஸாலீயின் ஆத்ம ஞான போதனை அதன் உயர்ந்த தன்மை காரணமாகவும், தர்க்க ரீதியான போக்குக் காரணமாகவும் கற்றோரை இலகுவில் கவர்ந்து விடுகிறது. அதில் அவர்கள் காட்டும் அந்தரங்க சுத்தியும் பழக்கமான பல விஷயங்களை அவர்கள் உதாரணமாகச் சுட்டிக் காட்டும் முறையும் சாதாரண ஜனங்களின் மனத்தை இலகுவில் தன் பக்கம் ஈர்த்துவிடுகிறது. ஆத்ம ஞான போதம் ஏதோ மர்மமானது என்று எண்ணிவந்த சாதாரண ஜனங்கள் இமாம் கஸ்ஸாலீயின் நூற்களைப் படித்ததும் அவற்றில் தாம் அன்றாடம் பழகும் பொருட்

களுடன் பிணைக்கப்பட்டு ஆத்ம ஞான விஷயங்கள் விளக்கப்படுவதை முதன்முதலாகக் காணும் வாய்ப்பைப் பெற்றனர். ஆத்ம ஞானம் பெறுவதற்கான வழி வகைகளைச் சாதாரண மக்களுக்கு முதன்முதலாக மிகவும் எளிய முறையில் விளக்கி வைத்த பெருமை இமாம் கஸ்ஸாலீயுடையதே.

இமாமவர்கள் ஸூபித் தத்துவத்துக்கு இஸ்லாத்தில் ஓர் ஒப்பற்ற இடத்தைப் பெற்றளித்தார்கள். மார்க்கத்தில் ஆத்ம ஞான அம்சத்துக்கு மிக முக்கியமான ஸ்தானமுண்டு என்பதை அவர்கள் நிலைநாட்டினார்கள். அல்லா(ஹ்)வின் இயல்பையும், தௌஹீத் எனும் ஏகத்துவத்தையும், அண்ட சராசரம் முழுவதிலும் வெளிப்படா நிற்கும் நிரந்தரத் திருச்சித்தத்தையும் இமாமவர்கள் தெளிவாக விளக்கிக் காட்டுகிறார்கள். அல்லாஹ் ஹக் ஆவான், நூர் ஆவான், நன்மையின் சம்பூர்ணமாவான், சம்பூர்ண அழகாவான், அன்புக்குரிய மிக உயர்ந்த லக்ஷியமாவான் என்பதை அவர்கள் தெளிவிக்கிறார்கள். எனினும், அவன் தன் சிருஷ்டிகளுடன் தொடர்பு கொள்ள விழைகிறான், தொழுகையாலும் தியானத்தாலும், ஞானத்தின் உதவியாலும் அவர்கள் தன் தோழமையைப்பெற உதவுகிறான். அவன் தன்னை வெளிப்படுத்திக் காட்டும் அவன் நேயர்கள், அல்லா(ஹ்)வின் மர்மங்களை அறிந்த ஞாதாக்களாவர் என்றெல்லாம் இமாமவர்கள் விளக்குகிறார்கள்.

அல்லா(ஹ்)வின் இயல்பையும், மானிட ஆத்மாவின் தன்மையையும், இவை இரண்டுக்கும் உள்ள தொடர்பையும் பற்றிய தங்கள் அபிப்பிராயத்தின் அடிப்படையில் தான் இமாம் கஸ்ஸாலீ தங்கள் ஆத்ம ஞான போதனையை அமைத்துக் கொண்டுள்ளார்கள்.

இஹ்யாவில் (முதல் பாகம் பக். 76-ல்) அல்லா(ஹ்)வின் இயல்பைப் பற்றி அவர்கள் எழுதியுள்ள புகழ் மிக்க

வசனம் உள்ளது. அது வருமாறு: சகல பொருள்களையும் சிருஷ்டித்து ஜீவனளிக்கும் அல்லா(ஹ்)வுக்கே சகல புகழும். அவன் தான் நாடியதைச் செய்கிறான்; புகழ்மிக்க ஆசனத்தின் ரப்பு அவன்; தன் அருள்பெற்ற நல்லடியார்களைச் சரியான பாதையில் நேரிய வழியில் நடக்குமாறு வழி காட்டுபவன்; தன் ஏகத்துவத்தை உணர்ந்து ஒப்புக்கொள்பவர்களை ஆசீர்வதித்து அவர்களின் ஈமான் ஐயமெனும் இருளில் அகப்படாவண்ணம் காப்பாற்றுபவன்.....; அவன் தன் சாரத்தில் கூட்டாளியற்ற தனித்தவனே என்பதை அவர்களுக்குக் காட்டி அருள்கிறான்; ஒப்பற்ற தன்மையில் அவனுக்கு இணை துணையில்லை; நிரந்தரத் தன்மையில் அவனுக்கு ஒப்பாரில்லை; அவன் ஏகன்; தனக்கு ஆரம்பமும் முடிவும் இல்லாதவன்; எனவே, என்றுமுள்ளவன், என்றும் தொடர்ந்து இருந்து வருபவன்.....; அவன் ஒருக்காலும் தொழில்படாதிருக்கவில்லை; இனியும் இருக்கமாட்டான்; புகழ் மிக்க அடைமொழிகளால் வருணிக்கப்படுபவன் அவன்; அவன் முதலானவன், கடைசியானவன்; யாவையும் மிகைத்தவன்; அவன் ஞானம் யாவையும் பொதிந்துள்ளது.

"அவன் உடலல்ல, சாரமல்ல, தற்செயலானவனுமல்லன். ஜீவித்துள்ள எதனுடனும் அவனை ஒப்பிடமுடியாது; "தன் அடியானின் பின் கழுத்து நரம்பைவிடவும் அவனுக்கு மிக அருகில் உள்ளவன்." சகல வஸ்துக்களையும் அவன் ஊடுருவி நோக்குகிறான். காலத்துக்கும் இடத்துக்கும் அப்பால் வரம்பின்றி அவன் உயர்ந்தவனாய் இருக்கிறான்; காலமும் இடமும் சிருஷ்டிக்கப்படு முன்பே அவன் இருந்து வருபவனன்றோ! அவன் இப்போதுள்ளான்; எப்போதுமிருந்தான்; எப்போதும் இருப்பான். அவன் இருப்பது மானிடனின் அறிவால் உணரப்படுகிறது; அவனைக் காணும்

திறம், அவனுடைய மாட்சி பொருந்திய சந்நிதியால் சம்பூர்ணமான பாக்கியம் பொருந்தியவர்களான நல்லடியார்களுக்கு அவன் அருளும் ஆத்மீகப் பார்வையால் கிட்டுவதாகிறது. அவன் உன்னதமானவன், சர்வ சக்தன், மகா உயரியவன்; அவனுக்குத் தூக்கமோ அயர்வோ கிடையா; மூப்போ, மரணமோ அவனை அண்டமாட்டா; அவனே சர்வசக்தன்; அவனுடையதே ராஜ்யம் முற்றும்; சகல மகத்துவமும் புகழும் அவனுடையவையே; சிருஷ்டிகள் யாவும், அவை சிருஷ்டிக்கப் பட்டதன் நியதியும் அவனுக்கே உரியவை. அவன் மட்டும்தான் ஜீவனளிப்பவன்.

"அவன் ஞானம், பூமியின் அதல பாதாளம் தொட்டு, வானத்தின் கிகரத்தின் சிகரம்வரை யாவையும் கடந்தது. அவனுக்குத் தெரியாத ஒரு சிற்றணு வேனும் பூமியிலோ வானங்களிலோ கிடையாது. இரவின் இருளிலே கருங்கல் பாறையிலே எறும்புகள் ஊர்வதும் அவனுக்குத் தெரியும்; பூமியில் நெளியும் புழுவின் போக்கையும் அவன் அறிவான்; மானிடரின் உள்ளங்களில் உதிக்கும் சகல எண்ணங்களையும், அவர்கள் கற்பனைகளின் வகைகளையும், அவர்கள் இதயங்களிலுள்ள ரகசியங்களையும் அவன் அறிவான்.

"அவனையன்றியுள்ள மற்ற யாவும், மானிடர்கள், ஜின்னுகள், மலக்குகள், ஷைத்தான், வானங்கள், பூமி, பிராணிகள், பூண்டுகள், அசேதனப் பொருட்கள், சாராம்சம், தற்செயலானது, புரியும்படியானது, சாதுர்ய மானது ஆகிய யாவும் அவனுடைய சக்தியால் சிருஷ்டிக் கப்பட்டவைதாம். ஒன்றுமில்லாததிலிருந்து அவற்றை அவன் வெளிப்படுத்தினன். ஏனெனில், அனாதிகாலம் முதல் அவன் மட்டுமே இருந்து வந்தவன்; அவனுடன் யாருமிருக்கவில்லை.

"ஆனால் பிறகு அவன் சகலவற்றையும் சிருஷ்டிக்க நாடினான். முன்பே அவன் திருச்சித்தத்தில் எழுந்ததை நிலைநாட்டுவதற்காக அவன் சக்தி வெளிப்படுத்தப்படுவதற்காக, அவன் நிரந்தர வாக்கின் பூர்த்திக்காக இவ்விதம் நாடினான். இவற்றின் தேவை அவனுக்கு ஏற்பட்டதென்றில்லை; அவனுக்குள்ள குறை எதையும் இவை அகற்றிவிடும் என்பதனாலுமன்று; சிருஷ்டியில் தன் மகத்தான புகழை வெளிக்குக் காட்டவும், தன் சக்தியின் வாக்கால் ஜீவ உற்பத்தியை ஆக்கவும், அவன் பங்கிலுண்டான எந்தக் கடனாலுமன்று; என்றுங் குறையாத அவனது கருணையாலும் பரிவாலும் அவன் சிருஷ்டியிலீடுபட்டான். ஆனால், அவன் சிருஷ்டிகள் அவனுக்குச் சேவை செய்வது கடமையாகி யிருப்பதால் - அவன் தன் நபிமார்களின் நாவு மூலம் அஃது அவசியமானது என்று அறிவித்துள்ளானன்றோ! - அதை அவை தம் அறிவால் புரிந்து கொள்ளட்டும் என்று விட்டு வையாமல், தன் தூதர்களை அனுப்பி அவர்கள் அத்தாட்சியை அற்புதங்களால் நிலைநாட்டவைத்தான். அவர்கள் கூறியுள்ளவற்றை ஏற்பது மானிடர் கடமை என்றாக்கியுள்ளான்."

இவ்வுலகம் அதைப் படைத்தவனுக்கும் அவன் திறத்துக்கும் சாட்சியம் பகர்கிறது. அதிலுள்ள ஒழுங்கும் நியதியும் அதை அறிவித்துக்கொண்டே யிருக்கின்றன. ஜரிகையால் பூவேலை செய்யப்பட்ட அழகிய பட்டாடையொன்றைக் காணும் எவனும் அஃது ஏதோ திறமையற்ற உயிரற்ற பொருளால் உண்டாக்கப்பட்டது என்று எண்ணுவானாயின் அவன் அறிவற்ற மூடனாகத் தானே இருப்பான்! (இஹ்யா: பா. 1, பக். 96.) இவ்வுலகிலும் வானத்திலும் அவன் ஏகத்துவத்தைப் பறைசாற்றாதது, அவன் புகழைப் பேசாதது எதுவுமில்லை. ஆனால், அவற்றின் புகழ் மொழிகளை மானிடர் புரிந்து

கொள்வதில்லை. ஏனெனில், சடதத்துவக் காதுகளால் கேட்பதற்கதிகம், ஆத்மீகக் காதுகளால் கேட்க இயலாதவர்களாய் இருக்கின்றனர். இத்தகைய புகழ் மொழிகளையும், சகல பொருள்களும் அவனைத் துதிப்பதையும் மானிடர் யாவரும் புரிந்துகொள்ள முடிந்திருப்பின் பறவைகளின் பேச்சை ஸுலைமான் அலைஹி மட்டுமோ, இறைவன் குரலை மூஸா அலைஹி மட்டுமோதானா புரிந்து கொண்டிருப்பார்கள்? (இஹ்யா: பாகம் 4. பக். 371, பாகம். 2, பக். 219).

தெய்வ சிருஷ்டிப்பில் அல்லா(ஹ்)வின் சதமான ஞானம் எத்தகைய அற்புத வகைகளிலெல்லாம் வெளியாகியுள்ளது என்று காட்ட "அல் ஹிக்மத் பி-மக்லூகாத்தல்லாஹ்" என்ற நூலையே இமாம் கஸ்ஸாலீ எழுதி விட்டார்கள். அந்நூலின் ஒரு சிறிய பகுதி வருமாறு: "இவ்வுலகைப் பற்றி நீ சிந்திப்பாயானால், தேவையான யாவும் ஆயத்தமாயுள்ள, நன்கு கட்டப்பட்ட ஒரு வீட்டை அஃது ஒத்திருப்பதைக் காண்பாய். அதன் உயரே வானம் கூரையாக அமைக்கப்பட்டுள்ளது. பூமி ஒரு ஜமக்காளம் போல் விரிக்கப்பட்டுள்ளது. விண்மீன்கள் விளக்குகள் போல் வரிசையாக அமைக்கப்பட்டுள்ளன. அதனுள்ளே உணவு வகைகளுக்காக எத்தனையோ பொருள்கள் பரப்பி வைக்கப்பட்டுள்ளன. யாவும் தத்தம் தேவை நிறைவேற்றப்படத் தயாராய் உள்ளன. மானிடன் இவ்வீட்டின் சொந்தக்காரனாய் இருக்கிறான்; அதிலுள்ள சகலமும் அவனுக்குத் தரப்பட்டுள்ளன. அவன் தேவைக்கும், நன்மைக்கும் தக்கபடியே அவை தயாரித்து வைக்கப்பட்டுள்ளன. வானத்தின் நிறம் கண்களின் பார்வையைப் பலப்படுத்துவதாக ஆக்கப்பட்டுள்ளது. வானம் சூரிய கிரணங்களும், வெளிச்சமும் மட்டும் உடையதாய் இருந்திருப்பின், கண்களைக் கெடுத்துக் கொள்ளாமல் அவற்றை மானிடர் பார்க்க இயலாது

போயிருக்கும். இக்காலத்தில் அரசர்கள் தாங்கள் மாளிகையின் முகட்டில் வர்ணந் தீட்டி அலங்காரப் படுத்துகின்றனர். ஆனால், அவற்றையே பார்த்துக் கொண்டிருக்கும் யாரும் சலிப்படைந்து விடுகின்றனர். ஆனால், வானத்தின் நிறமும் அலங்காரமும் அத்தகைய தல்ல. அரசர்களும், மற்றவர்களும் துயரங்களோ தொல்லைகளோ உண்டாயின் வானையும் அதன் அகண்டத்தையும் பற்றிச் சிந்திப்பதில் புகல் தேடுகின்றனர். மிகவும் பிரகாசமான வெளிச்சம் தரும் சூரியனும் அஸ்தமிப்பதும் உதிப்பதுமாகவே இருக்கிறது. ஏனெனில், மானிடரும் மிருகங்களும் தொடர்படியான உஷ்ணத்திலிருந்து ஓய்வு பெறவும், நான்கு பருவங்கள் தொடரவுமே சூரியன் அஸ்தமிப்பதும் உதிப்பதுமாய் இருக்கிறது...... கடலின் உள்ளே, பூமியில் காணப்படுவது போன்ற பல விஷயங்கள் காணப்படுகின்றன; பல ஜீவராசிகள் உள்ளன. அவற்றுக்கும் சிருஷ்டியாளன் ரிஜ்க் அளிக்கவே செய்கிறான். கடலின் அடியிலே சிப்பியுள் நன்முத்துக் கிடக்குமாறும், கடலினுள்ளே பாறையின் ஓரங்களில் பவழங்கள் ஒட்டிக்கொண்டிருக்குமாறும் அவன் அமைத்துள்ளான். பறவைகளைப் படைத்ததில்தான் அவன் எத்தனை பெரிய அற்புதத்தை நிகழ்த்தியுள்ளான்! மீன்களுக்குத் துடுப்புப் போன்று வாலை அமைத்தான். சிறிய ஜந்துக்களுக்கு மேலோடுகளையும், நிறம் மாறும் இயல்பையும் தந்து அவை தம் எதிரிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள உதவியுள்ளான். எறும்பு தேனீ போன்ற பூச்சி புழுக்களுக்குத் தமது உணவைச் சேமித்து வைக்கும், மழை காலத்துக்காகக் கோடையிலேயே உணவு தேடிக்கொள்ளும் முன்னேற்பாட்டுப் புத்தியைக் கொடுத்துள்ளான். சிருஷ்டியாளனின் கைத்திறனும், தன் சிருஷ்டிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அவன் காட்டும் அக்கறையும் அவன் ஞானத்தின் மகத்தான தன்மையையன்றோ சுட்டிக்காட்டு

கின்றன! எனவே, மானிடன் தன்னைச் சுற்றி நோட்ட மிட்டால் போதும், அல்லா(ஹ்)வின் பெருமையையும் அவன் குணப் பெயர்களின் பொருத்தத்தையும் உணர்ந்துவிட முடியும்.''

இமாம் கஸ்ஸாலீ, அல்லா(ஹ்)வின் அழகிய திரு நாமங்களில் சில ஒன்றுடன் ஒன்று முரண்பட்டவை யாய் தோன்றுவதன் – உதாரணமாக அவன் முத லானவன் என்றும் கடைசியானவன் என்றும் கூறப்பட் டுள்ளதன்-ஆத்மீக விளக்கத்தைத் தந்துள்ளார்கள். ஜீவராசிகள் அனைத்தின் தொடர்பு விஷயத்தில் அவன் முழுமுதலாய் இருக்கிறான்; ஏனெனில், யாவுமே அவ னுக்குப் பிறகு ஓர் ஒழுங்கு முறையை அனுசரித்து உண்டானவைதாம். ஆனால், அவன் தன்னை நோக்கிப் பிரயாணஞ்செய்பவர்களுக்குக் கடைசியானவனாய் இருக் கிறான். ஏனெனில், அவர்கள் பல படித்தரங்களைக் கடந்து அவன் சந்நிதியை அடைகின்றனர். அதுவே அவர்களின் பிரயாணத்தின் இறுதியாய் இருக்கிறது. எனவே, தியானம் சம்பந்தப்பட்டவரை அவன் கடைசி யானவனாயும், ஜீவிதம் சம்பந்தப்பட்டவரை முதலான வனாயும் இருக்கிறான் என்று இமாம் கஸ்ஸாலீ விளக்கு கிறார்கள். இது போலவே, தம் புலன்களாலேயே அவனை உணரமுயல்வோர்க்கு, அன்றாட நிகழ்ச்சி யுலகின் ஆசாபாசத்திலுள்ளவர்களுக்கு அவன் மறை வானவன் என்றும், மறைவான உலகையும் ஊடுருவும் அகப்பார்வையின் ஒளியுடன் அவனை நோக்குவோர்க்கு அவன் வெளிப்படையானவன் என்றும் (இஹ்யா: பாகம் 4, பக். 217, 218.) அவர்கள் விவரிக்கிறார்கள்.

இமாம் கஸ்ஸாலீக்கு அல்லா(ஹ்)வே முதல் காரண மாகவும், இறுதி மூலமாகவும், சாஸ்வத ஞானமாகவும், உன்னத அழகாகவும், ஒளிமிக்க வெளிச்சமாகவும், சத்தியமாகவும் விளங்குகிறான்.

ஆத்மாவைப் பற்றிய இமாமவர்களின் கருத்து வருமாறு: ஆத்மாவானது ஒரு பூத உடலுள் பொருத்தப்படு முன்பே ஆலம் அர்வாஹ் என்ற ஆத்ம உலகில் இருந்தது தான். அது சாவற்றது. அஃது ஆத்மா, ஜீவன், இதயம் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. தத்துவவாதிகள் அதை 'நப்ஸுந் நாத்திகா' (மொழியும் ஆத்மா) என்றழைக்கின்றனர். திரு குர்ஆனில் அது 'நப்ஸுல் முத்மஇன்னா' (சாந்தியடைந்த ஆத்மா) என்று கூறப்பட்டுள்ளது. இதன் ஜீவன் ரப்பின் அம்ரில் நின்றும் வந்ததாகும் (அர்ரூஹ் மின் அம்ரி ரப்பீ) என்றும் சொல்லப்பட்டுள்ளது. ஆத்மாவே மானிடனின் சாரம்; (ஹகீகதுல் ஆதமி), அவனை மிருகங்களை விட்டும் பாகுபடுத்திக் காட்டுவது. ('கீமியா'வின் ஆரம்பப் பக்கங்களில் இது விரிவாகப் பேசப்பட்டுள்ளது.)

மானிட ஆத்மா ஐந்து குணங்களை உடையதாய் விளங்குகிறது. அவையாவன: புலன்களால் அனுப்பப்படும் தகவலை ஏற்கும் - உணரும் குணம். இத்தகவலைப் பதிவு செய்யும் கற்பனைக் குணம். புலன்களுக்கும் கற்பனைக்கும் அப்பாலுள்ளது எது என்று உணரும் அறிவு. (அர்ரூஹுல் அக்லீ). சுத்தமான பகுத்தறிவு தரும் விவரங்களைக்கொண்டு, புதிய ஞானத்தைக் கண்டுபிடிக்கும் சிந்திக்கும் சக்தி (அர்ரூஹுல் பிக்ரீ). கடைசியாக மறைவான தன் வெளியீடுகளை ஆத்மா ஏற்க உதவும் தெய்வீக தீர்க்கதரிசன சக்தி. இது நபிமார்களுக்கும் நாதாக்களுக்கும் உரியது. இதன் உதவியால் அல்லா(ஹ்)வின் ஞானத்தையே அடைய முடிகிறது. (மிஷ்காத்துல் அன்வார்: பக் 131, 132.)

"தன் நப்ஸை அறிந்தவன் தன் ரப்பை அறிவான்" என்ற ஹதீஸைக் கூறி, இதிலிருந்து நப்ஸானது தெய்வீக மூலஸ்தானமுடையது என்று இமாம் கஸ்ஸாலீ கூறுகிறார்கள். மானிடனின் 'ஜீவன்' அல்லாஹ்வின்

அம்ரில் நின்றுமாய் இருக்கும்! அம்ரிளன்பதற்கு 'உத்தரவு' என்பதைவிட ஆழமான பொருளுண்டு. அது தெய்வீக ஜீவன்தான். சிருஷ்டி உலகு (ஆலமுல் கல்கு) என்றும், அம்ர் உலகு(ஆலமுல் அம்ர்) என்றும் இரண்டு உலகங்கள் உள்ளன. இரண்டும் இறைவனுடையவையே.

மானிட ஆத்மா தன் பூர்வீகத்தில் தெய்வீகமானது (மினல் உமூரில் இலாஹிய்யா); கீழான சடலங்களைவிடப் பெரும் புகழும் கண்ணியமும் உடையது. "உடலைப் போலவே இதயத்திலும் பார்க்கும் கருவி ஒன்று இருக்கிறது என்றும், புறக் கண்களால் புற விஷயங்களைப் பார்க்க முடிவதுபோல அகக் கண்களால் அக உண்மைகளைக் காணலாம் என்றும் ஸூபியாக்கள் கூறுகிறார்கள். 'ஒவ்வோர் அடியானுக்கும் அவன் இதயத்தில் இரண்டு கண்கள் உண்டு' என்று நம் பெருமான் (ஸல்) அவர்கள் மொழிந்துள்ளார்கள். இவ்விரண்டு கண்களால்தான் தன் அடியான் மறைவானதைக் காண்கிறான். ஓர் அடியானிடம் அல்லா(ஹ்)வின் திருவுளச் சித்தம் கருணை காட்டியதும் அவன் இதயக் கண்கள் திறக்கப்படுகின்றன. அதன் மூலம் தன் புறப் பார்வைக்கு மறைவாய் இருந்தவற்றை அவன் காண முடிகிறது." 'அர்பாபுல் குலூப்' எனும் ஆத்மீக மனம் படைத்த பெரியார்கள் புறக்கண்களைவிட அகக்கண்களால் நன்கு பார்க்கிறார்கள். புறக் கண்கள் கோளாறு காரணமாகப் பார்வை பழுதுபட்டிருக்கலாம்; ஆனால், ஆத்மீகப் பார்வை பழுதுபட்டதாய் இருக்காது. இந்த அகக்கண் ஒவ்வொன்றிலும் ஒரு சூரியனும் ஒளியும் உள்ளன; அவற்றால் அவர்கள் திருஷ்டி சம்பூர்ணமானதாக்கப்படுகிறது. மானிடன் முன் திரைகளாக உள்ள காமக் குரோதாதிகளும், இம்மையின் கவலையும், மறைவான தெய்வீக உலகைக் காணவிடாதபடி அவனைத் தடுக்கின்றன. அல்லா(ஹ்)வின் நல்லடியார்கள் விஷயத்தில் செய்யப்பட்டுள்ளது போல, இந்தத்

திரைகள் அகற்றப்பட்டால், மானிடன் தெய்வீக உலகைக் காணலாம்; அதன் அற்புதங்களைச் சிந்திக்கலாம். (இஹ்யா: பாகம் 4, பக். 431.)

இதுபோலவே அகச் செவியுமுண்டு (அஸ்ஸமாவுல் பாதின்). அதன் உதவியால் ஆத்மீக அர்த்தங்களைக் கேட்டுப் புரிந்துகொள்ளலாம். இந்தக் காது பெறுபவருக்கு சடதத்துவக் காதுகளுக்கு அர்த்தமற்றவையாய்ப் படும் பறவைகளின் தீங்குரல், கடலலைகளின் இரைச்சல், காற்றின் ஏக்கம் முதலியவை பிறருக்குத் தோன்றுவது போல வெறும் சப்தங்களாக இருக்கமாட்டா. அல்லா(ஹ்)வின் ஏகத்துவத்தை உணர்ந்து சாட்சியஞ் சொல்பவையாய், மளமளவெனப் புகழும் நாவால் அவை அவனைப் போற்றித் துதிப்பவையாய் காட்சி தரும். (இஹ்யா: பாகம் 2, பக். 218 - 219.)

"மானிடரின் சடலங்கள் பறவைகளின் கூண்டுகளாகவும், சுமை இழுக்கும் மிருகங்களின் தொழுவங்களாகவும் உள்ளன" என்று ஹதீஸில் கூறப்பட்டுள்ளது. இதை விட்டு விடுபடும் ஆத்மா, மேலே தன் சொந்த இருப்பிடத்தை நோக்கிப் பறந்துவிடுகிறது. "மானிடர்கள் தூக்கத்திலுள்ளனர்; அவர்கள் மரணித்ததும் விழித்துக் கொள்கின்றனர்" என்ற ஹதீஸின்படி, ஆத்மா தன் ரப்பிடம் திரும்பியதும் விழிப்படையச் செய்யப்படுகிறது. முன்னர் எழுதப்பட்டதன் உண்மையை அப்போது கண்டுகொள்கிறது. எனவே, ஆத்மா நித்யமானது. "அல்லா(ஹ்)வுடைய பாதையில் (போராடி) உயிர் துறந்தவர்கள் இறந்துவிட்டார்கள் என்று சொல்லவேண்டாம்; அவர்கள் நிச்சயமாக ஜீவித்திருப்பவர்கள்தாம்" (திரு குர்ஆன் 2: 149). ஆத்மா உண்மையான ஜீவிதமுள்ளதாய், ஆத்மீகமானதாய், தெய்வீக இயல்புடையதாய் இருப்பதால் அது பாதிக்கப்படுவதோ அழிவதோ இல்லை. ஈமானும், ஞானமும்

தங்கவேண்டிய இடமாயுள்ள நப்ஸ்மீது மரணத்துக்குச் சக்தி கிடையாது. "மூமினின் இதயம் மாண்டு விடுவதில்லை; அவன் மரணமுறும் சமயம் அவனிடமிருக்கும் ஞானமும் மறைந்து விடுவதில்லை; அவன் பரிசுத்த நிலை பாதிக்கப்படுவதுமில்லை. இதுவே, 'ஈமானின் உறைவிடத்தைப் புழுதி உண்டு விடுவதில்லை' என்பதன் பொருளாகும். ஆனால், மரணம் அல்லா(ஹ்)வை அடைய வழியுண்டாக்குகிறது." (இஹ்யா: பாகம் 3, பக். 19.) உடலெனும் மேகத்தால் தற்காலீகமாக மறைக்கப்பட்டிருந்த ஆத்மா எனும் சூரியன் தன் சிருஷ்டியாளனிடம் திரும்புகிறது. அப்போது அஃது இருண்டு மங்கியும் வரலாம்; அல்லது பிரகாசமாக ஒளியுடனும் வரலாம். பிரகாசமாக ஒளியுடன் வரும் ஆத்மா தெய்வ சந்நிதானத்திலிருந்து திரையிடப்பட்டதாய் இருக்காது. மங்கியும் இருண்டுமுள்ள ஆத்மாவே அங்கும் திரையிடப்பட்டதாகும். தெய்வ மூலஸ்தானத்திலிருந்து, இந்த மண்ணுலகில் ஒரு பூத உடலில் புக வரும் ஆத்மா மீண்டும் அந்த உயரிய உலகிற்கே செல்லும். "அது தன் மூலஸ்தானத்தை நோக்கும்; அவனிடமே மீளும்."

ஆத்மா தெய்வீக மூலஸ்தானத்திலிருந்து வந்திருப்பதாலும், தெய்வீக உருவிலிருந்து உண்டாக்கப்பட்டிருப்பதாலும், அல்லா(ஹ்)வின் குணங்களில் பங்கு பெறக்கூடியதாய் இருக்கிறது. எனவே, அல்லா(ஹ்)விடமிருந்து நேரடியான ஞானத்தைப் பெறக்கூடிய திறனுடையதாயும், அவனோடு நேரடித் தொடர்பு கொள்ளக்கூடியதாயும் இருக்கிறது. ஆத்மீக உலகின் உண்மைகளைப் புறக்கணித்ததால் ஆத்மாவின் கண்ணாடி அழுக்கடைந்து, இருண்டிருப்பினும், தான் முன்பு தெய்வீகத்தோடு ஒன்றாகவிருந்த நிலைமைக்கு அது மீளமுடியும். ஆத்மாவின் கண்ணாடியில் துரு ஏறி, பாவ அழுக்குப் படிந்திருப்பினும், அதைத் துடைத்து, அதன் குறைகளை

அகற்றினால் ஆத்மீக உலகின் உண்மைகளை அது பிரதி பிம்பிக்கவே செய்யும்; அது தெய்வீகத்தோடு ஒன்றாய் இருந்த நிலைக்குத் திரும்பவும் முடியும்.

அல்லா(ஹ்)வைக் காணத் தடையாய் உள்ள திரைகளிலிருந்து ஆத்மாவை விடுவித்து அவனுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளச் செய்வதே தஸவ்வுப் எனும் ஆத்ம ஞானப் பாதையின்நோக்கமாகும். அதன் ஆரம்பம் பச்சாத்தாபமும் மனம் மாறுதலுமாய் இருக்கும். இந்த ஆரம்பமே ஒரு நெருக்கடியாகத்தான் இருக்கும். இது சிருஷ்டித்தவன் முன் சிருஷ்டிக்கப்பட்டவன் தன் சிருஷ்டித் தன்மையை ஒப்புக்கொள்வதில் வந்து சேரும். இத்தகைய இதயப் பரிசுத்தம்தான் இறைவனை அடைய மூரீதுக்குப் பாதை திறப்பதாகும். இந்தப் பரிசுத்தம் துறவாலும், பற்றுகளை உதறுவதாலும், இவற்றின் மூலம் இம்மையுடன் இதயத்தைக் கட்டிப்போட்டிருக்கும் பந்தங்களைவிட்டு விடுபடுவதாலும், ஆத்மீகச் சிந்தனைகள் மட்டுமே புக இடமளிப்பதாலும் கிட்டுவதாகும். இத்தகைய முதல் படித்தரத்தில் மூரீதானவர் இம்மையின் பல பாசங்களால் தடைப்படுத்தப்பட்டவராய்க் கலகஞ் செய்யும் நப்ஸை எதிர்த்துப் போராடுபவராய் இருக்கிறார். இதை அவர் கடந்ததும் லக்ஷியத்தை நோக்கிப் பாதி வழி பிரயாணஞ் செய்துவிட்ட பிரயாணியாய் அவர் மாறிவிடுகிறார். (ஆத்மஞானப் பாதையில் முதலில் மூரீதாய் (நாட்டமுள்ளவராய்) இருப்பவர், இரண்டாம் படித்தரத்தில் பிரயாணியாய் (ஸாயிர்) ஆகி, மூன்றாம் படித்தரத்தில் ஆத்மஞானி (ஸாலிக்) ஆகி விடுகிறார்.) முதல் படித்தரத்திலுள்ள மூரீதானவர் இம்மை மறுமையில் தமக்கும் அல்லா(ஹ்)வுக்கும் இடையிலுள்ள நிலைபற்றிய ஞானத்தைத் தேடுபவராய் இருக்கிறார். இவ்விதம் அவர் நாட்டங் கொண்டுள்ளதில் அவருக்கு வழிகாட்டத் தகுந்த ஒரு ஷைகு (ஆத்மீக

வழிகாட்டி) அவசியமானவராய் இருக்கிறார். இத்தகைய ஷைகு தெளிந்த மார்க்க ஞானம் உள்ளவராய், வழிகாட்டும் சம்பூரணத்துவமுடையவராய், தன் ஆத்மீக வாழ்க்கையைச் சீர்ப்படுத்திக் கொண்டவராய், அல்லா(ஹ்)வின் அடியார்களின் வாழ்க்கையைச் சீர்செய்யும் ஆற்றலும் ஆர்வமுமுள்ளவராய் இருக்கவேண்டும்; நோய் நிவர்த்திக்குத் தக்க மருந்து தரும் வைத்தியராய் அவர் விளங்க வேண்டும்.

பச்சாத்தாபம் (தௌபா) முரீதுக்கு ஞானப் பாதையின் வழியைத் திறக்கவைப்பதாய் இருக்கிறது. இதன் மூலமே மன மாறுதல் உண்டாக வேண்டுவதாய் இருக்கிறது. முரீதின் ஆனந்தத்துக்கும் பச்சாத்தாபமே திறவுகோலாய் உள்ளது. தெய்வ பயம் உண்டானதும், தன் வாழ்க்கையைச் சீர்செய்யும் அந்தரங்க சுத்தியான ஆர்வமுண்டாகிறது. கடந்த காலப் பாவங்களுக்காக மன்னிப்புத் தேடுவதில் ஈடுபடத் தூண்டுகிறது. நல்லொழுக்க நெருப்பு பாவ மாசுகளை உண்டதும், நற்செயல்களின் ஒளி தீய செயல்களின் இருளை ஒழித்ததும், பச்சாத்தாபம் பரிபூரணமானதாகிறது. பச்சாத்தாபத்தில் அறிவு, உணர்வு, செயல் என்ற மூன்று பிரிவுகளுண்டு. அல்லா(ஹ்)விடமிருந்து தான் திரையிடப்பட்டுள்ளதை முரீதின் உள்ளம் அறிகிறது; தான் அழிவின் எல்லையைத் தொட்டுவிட்டதை அவர் உணர்ந்து, தம் உள்ளத்தில் அன்பு தூண்டப்பட்டவராய், தம் வாழ்க்கையைச் சீர்செய்வதில் முனைகிறார்; இம்மையின் படாடோபங்களை விட்டு ஒதுங்கி அல்லா(ஹ்)வின் பக்கமே முகந் திரும்பியவராய் அவன் தோழமையைத் தேடி நிற்கிறார். இதுவே பச்சாத்தாபத்தின் மூன்றும் பாகமான செயல் ஆகும். அவர் தேடுகையில் அல்லா(ஹ்)வும் அவருக்கு உதவி செய்கிறான். "என் அடியான் என்னை அழைக்கும்போது நான் அவனுக்குப்

பதிலளிக்கிறேன்; என்னிடம் பாவமன்னிப்பைத் தேடு வோனுக்கு அதை நான் இல்லையென மறுப்பதில்லை; ஏனெனில், நான் அருகேயிருந்து அவன் வேண்டுதலுக் குச் செவிசாய்க்கத் தயாராய் உள்ளேன்'' என்று அல்லா(ஹ்)வே கூறியுள்ளான். சுவர்க்கத்துக்கு எட்டு வாயில்களுண்டு; அவற்றில் ஒரு வாயில் தவிர மற்றவை யாவும் சில சமயங்களில் திறப்பதும், சில சமயங்களில் அடைபட்டிருப்பதுமாகவே இருக்கும். அந்த ஒரு வாயில் மட்டும் சதாவும் திறந்தே இருக்கும். அந்த வாயில்தான் பச்சாத்தாபமென்பது என்று ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஸஹாபாக்களில் ஒருவரான இப்னு மஸ் ஊது அவர்கள் கூறியுள்ளார்கள்.

இம்மையின் புலனுணர்வுக்கான சடதத்துவ இன்ப சாதனங்களைத் துறந்துவிடும் ஸுபியானவர், தமக்குக் கிட்டியவைகளைவிடத் தாம் கைவிட்டவை மிக மிக மதிப்புக் குறைவானவை என்பதைக் கண்டுகொள் கிறார். வரவிருக்கும் வாழ்வின் மகிழ்ச்சி மகத்தானது, நிரந்தரமானது என்பதை அவர் அறிகிறார். அதன் முன், இம்மை வாழ்வின் சுகபோகங்கள் வைரக்கற்களின் முன் வைக்கப்பட்ட பனிக்கட்டிகள் தாம். எனவே, பனிக் கட்டிகளைக் கொடுத்துவிட்டு வைரங்களைப் பெறுபவன் நஷ்டவாளியாவது எங்ஙனம்? இம்மையோ சூரிய வெளிச்சத்திலுள்ள பனிக்கட்டி போன்றது; அஃது உரு கிக்கொண்டே வந்து கடைசியில் மறைந்து போகிறது. ஆனால், வரப்போகிற வாழ்க்கையோ வைரக்கல் போன்ற தாகும். ஸுபியானவர் அரசனின் சந்நிதானத்தை அடைய அரண்மனை வாயிலில் உள்ள ஒரு நாயால் தடுக் கப்படுகிறார். இந்த நாய்க்கு அவர் ஒரு ரொட்டித் துண்டைப்போட்டு, அதன் கவனத்தை வேறு பக்கம் திருப்பிவிட்டு, அரண்மனை உள்ளே நுழைந்து, அரசனை நெருங்கவும், தான் விரும்பியதை அவனிடமிருந்து

அடையவும் முடிகிறது. அவ்விதம் அவர் அரசனிட மிருந்து பெறும் நன்கொடைகளைவிட, நாய்க்குப்போடும் ரொட்டித் துண்டு அதிக விலைமதிப்புள்ளது என்று அவர் கருதுவார்? அரசர்க்கரசனின் மாளிகை வாயிலிலே ஷைத்தான் நாயாகக் கிடக்கிறான்; இம்மை வாழ்வு ரொட்டித் துண்டாகும். (இஹ்யா: பாகம் 4, பக். 381.)

எனவே, இந்தப் படித்தரத்திலுள்ள தலையாய தடங் கல்கள் இம்மை, நப்ஸின் ஊசாட்டம், ஷைத்தான் ஆகிய மூன்றுமாகும். இந்த மூன்று தடங்கல்களையும் கடந்த பின் முரீது அடுத்த படித்தரத்தை அடைகிறார். இருளான திரைகள் கிழிபட்டு, விலங்குகளிலிருந்து விடு பட்டு, ஆத்மக் கண்ணாடி நன்கு பளபளப்படையும்படி துடைக்கப்பட்டுவிடுகிறது. இவ்விதம் ஆத்மா அப்பழுக் கற்றதாக ஆனதும் அதில் அல்லா(ஹ்)வின் மகத்துவம் பிரதி பிம்பிக்கவே செய்யும். இதை ஓர் உதாரணத்தால் விளக்கலாம்: ஓர் அரசன் முன்பு கிரேக்கர்கள் சிலரும், சீனர்கள் சிலரும் வந்தனர். கிரேக்கர்களோ சித்திரந் தீட்டுவதிலும் வர்ண வேலை செய்வதிலும் கைதேர்ந்தவர் களாய் இருந்தனர். சீனர்களுடைய திறம் யாது என்று யாரும் அறியார்கள். ஆனால், அவர்களோ தாங்களும் சிறந்த சைத்ரீகர்கள் தாம் என்றும், கிரேக்கர்களுடன் போட்டியிட்டுப் படம் எழுதத் தயார் என்றும் கூறினர். அரசன் இரு மருங்கும் சுவர்களுள்ள ஓர் இடத்தைக் காட்டி, இருவருடைய சித்திரங்களையும் ஒப்பிட்டுப் பார்க்க வசதியாக, இருவரும் எதிரெதிரேயுள்ள சுவர் களில் படம் எழுதவேண்டுமென்று பணித்தான். இரு நாட்டினரும் வேலை செய்வதற்கு நடுவே ஒரு திரையை யும் தொங்கவிடச் செய்தான். ஏனெனில், ஒரு கூட்டத் தினர் எந்தவிதமாகச் சித்திரம் எழுதுகிறார்கள் என்று அடுத்த கூட்டத்தாருக்குத் தெரியக்கூடாதல்லவா! உடனே கிரேக்கர்கள் அற்புதமான வர்ணக் கலவைகளை

யெல்லாம், தூரிகளை யெல்லாம் தயரித்துக்கொண்டு வெகு தீவிரமாகப் படம் எழுதுவதிலீடுபட்டனர். சீனர் களோ ஒன்றையும் தயாரியாமல் தாங்கள் படந்தீட்ட வேண்டிய சுவரில் மெருகு கொடுப்பதும், அதைப் பள பளவென்றாக்குவதுமாய் இருந்தனர். கிரேக்கர்கள் தாங் கள் சித்திரம் எழுதி முடித்துவிட்டதாகக் கூறியதும், சீனர்கள் தாங்களும் படம் எழுதி முடித்துவிட்டதாக அறிவித்தனர். அரசனுக்கோ இது வியப்பாய் இருந்தது. சீனர்கள் வர்ணங்கள் சேகரிக்கவில்லை, எந்தச் சாதனமும் செய்து கொள்ளவில்லை. "எந்தச் சாமானுமின்றி நீங்கள் எப்படிப் படம் எழுதினீர்கள் ?" என்று அரசன் வியப்புடன் சீனர்களிடம் வினவியபோது, "அது பற்றி உங்களுக்குக் கவலைவேண்டாம், திரையை அகற் றுங்கள் !" என்று அவர்கள் கூறினார்கள். உடனே அரசன் இரு சுவர்களுக்கும் நடுவில் தொங்க விடப்பட்டிருந்த திரையை அகற்றினான். கிரேக் கர்கள் எழுதிய வண்ணச் சித்திரமும், அதன் வர்ண ஜாலங்களும் சீனர்கள் பளபளப்பாக்கிய எதிர்ப்பக்கச் சுவரிலே அசல் படத்தைவிட அதிகப் பிரகாசத்துடன் மிளிர்ந்து பார்வையை மயங்கவைத்தன ! ஏனெனில், கிரேக்கர்களின் சித்திரத்தை அந்தச் சுவர் பிரதிபிம்பிக் கும்படி சீனர்கள் அதை வெகு பளபளப்பாக்கி வைத்து விட்டனர் ! இது போலவே தெய்வீகக் கண்ணாடியாய் இருந்து, அல்லா(ஹ்)வின் புகழ் பிரதிபிம்பிக்க வேண்டிய ஆத்மாவை முரீதானவர் பாவ மாசின்றிப் பிரகாசமான தாக்கவேண்டும். (இஹ்யா : பாகம் 3, பக். 19.)

இந்த முதல் படித்தரத்தைக் கடந்து முரீதானவர், பிரயாணியாகிவிட்ட இரண்டாம் படித்தரத்தில் ஆலம் ஜபரூத் என்ற தெய்வீக சக்தியின் உலகில் பிரவேசித்த வராகிறார். முரீது கடந்த முதல் படித்தரத்தில் அவர் ஆலமுல் முல்க் வஷ் ஷஹாதா என்ற சடதத்துவ

உலகில், புறக்கண் கொண்டு பார்க்கும் உலகில் இருந்தார். இரண்டாவது படித்தரத்திலுள்ள ஆலம் ஜபரூத்திலிருந்து அவர் ஞானியாகிச் செல்லவேண்டிய மூன்றாவது படித்தரம் ஆலமுல் மலக்கூத் என்ற மறைவான உலகமாகும். இம்மையின் இந்தச் சடதத்துவ உலகுக்கும், மறைவான அந்த உலகுக்கும் இடையிலுள்ள ஆலம் ஜபரூத்தை அடைந்துவிட்ட பிரயாணி கடலில் செல்லும் ஒரு கப்பலில் இருப்பவராவார். கப்பலில், கடலிலுள்ள ஓயாத அசைவுமில்லை; நிலத்திலுள்ள ஓயாத அசையாத நிலையுமில்லை. ஆலமுல் முல்க் வஷ்ஷஹாதாவான இந்தச் சடதத்துவ உலகில் முரீதானவர் தரையில் நடப்பவராய் இருந்தார். மூன்றாம் படித்தரத்தை எட்டி ஆலம் மலக்கூத்தை அடைந்ததும் கப்பல் பிரயாணத்தையும் விடுத்து அவர் தண்ணீரின் மீது நடந்து செல்பவராகிவிடுகிறார். அப்படி நடப்பதால் தண்ணீருள் அவர் மூழ்குவதில்லை. (இஹ்யா: பாகம் 4, பக். 216.) ஜபரூத்தை அடைந்ததும் பிரயாணத்தின் நடுவிடத்திற்கு வந்தாகிவிட்டது. புலனுணர்வு வாழ்விலிருந்து இங்கே அவர் விடுபட்டுவிடுகிறார். எனினும், இன்னும் பூரணமாக ஆத்மாவின் மிகைப்பு உண்டாகவில்லை. அவருடைய அகக்கண்கள் திறந்திருக்கின்றன; அவர்முன் உள்ள லக்ஷியம் அவருக்குத் தெளிவாகத் தெரிகிறது. அதை நோக்கி அவர் விரைகிறார். அது தொலைவிலேயே தெரிகிறதாயினும், தெய்வ அனுக்கிரஹத்தால் வரும் வெளிச்சத்தில் நடப்பதால் அவருக்கு அதிகமான ஊக்கமுண்டாகிறது. தன்னை அடைய முயன்று கொண்டிருக்கும் அடியாருக்கு உதவும் முறையில் அல்லா(ஹ்)வும் அருகில் வருகிறான். அடியார், "ஜதுபு" எனும் தெய்வீகப் பரவசத்துக்குத் தயாராய் இருக்க வேண்டும். அதற்காக அவர் தன் இதயத்தைக் கீழான கவர்ச்சிகளின் பக்கம் செல்லவிடாதபடி விடுவித்து வைத்துக்கொள்ளவேண்டும். கீழான கவர்ச்சிகள் அவர்

கவனம் தெய்வீகமானவற்றின் பக்கம் திரும்பாதபடி அவரைத் தடுப்பவையாகும். மானிடனைத் தன்னிடம் ஈர்ப்பவன் அல்லா(ஹ்)வே; எனவே, தேடுபவன் உண்மையில் அவனே; தேடுவது தேடப்படுபவனாலேயே நிகழ்த்தப்படுகிறது. அதனால் "ஜதுபு" உண்டாகிறது. நபி பெருமான் (ஸல்) அவர்கள் சொன்னார்கள், "இங்கே நீங்கள் வாழும்போது, உங்கள் ரப்பு உங்களுக்குத் தர நன்கொடைகளை (நபஹாத்: இனிய மணமுள்ள பூங்காற்றை) வைத்துள்ளான்; எனவே, அவன் அருகில் வாருங்கள்" என்று. எனவே, இந்த "ஜதுபு" எனும் பரவச நிலையும் தெய்வ நன்கொடையேயாகும். ஒவ்வோர் இரவிலும் அல்லாஹ் இவ்வுலகின் பக்கம் இறங்கி, "துஆ இறப்பவன் யாராவது இருக்கிறானா? நான் அவன் துஆவைக் கபூல் செய்வேன்" என்று கூறுவான் என்றும் நம் பெருமான் (ஸல்) அவர்கள் மொழிந்துள்ளார்கள். "நேர்மையாளர்கள் நெடுங் காலமாக என்னைக் காணத் தாபமடைந்துள்ளார்கள்; ஆனால், அவர்களைச் சந்திக்க நான் அவர்களைவிடவும் அதிகமான தாபமுடையவனாய் இருக்கிறேன்" என்று ரப்பில் ஆலமீனே கூறியுள்ளான். (இஹ்யா: பாகம் 3, பக். 8.)

தெய்வீகத்தன்மையால் பரிசுத்தப்படுத்தப்பட்ட இத்தகைய நல்லடியாரின் இதயத்தில் தெய்வீகத்தின் மாடக்குழியிலுள்ள விளக்கின் ஒளி பிரகாசிக்கிறது. ("அவன் ஒளி ஒரு மாடத்தில் வைக்கப்பட்ட விளக்கைப் போன்றிருக்கிறது" – திரு குர்ஆன் 24: 35.) ரகசியத்திலும் ரகசியமாய் உள்ளத்துள் போய்ப் புகும் "இருண்ட இரவில் ஊரும் கருப்பு எறும்பையும்"விட ரகசியமான குபுர் எனும் இருள் அவர் இதயத்தில் புக முடியாது போகிறது. ஏனெனில், இவ்வொளியின் முன் எதுவுமே ஒளிக்கப்பட்டதாய் இருக்க முடியாது. இத்தகைய இதயத்தில் கடைத்தேறத் தேவையான நன்றி

யறிதல், பொறுமை, அச்சம், நம்பிக்கை, அடைக்கல மாதல் மற்றும் நற்பண்புகளெல்லாம் குடிபுகுகின்றன. இவ்விதம் அஃது அல்லாஹ் ஏற்கக்கூடியதாகிறது. (இஹ்யா : பாகம் 3, பக். 40.)

மேலே கூறப்பட்டுள்ள நற்பண்புகளில் சில வற்றை இங்கே சற்று விரிவாகப் பார்க்கலாம். முதலாவ தாகப் பொறுமையும் நன்றியறிதலும்: ஈமான் ஒரு பாதி பொறுமையையும், மறு பாதி நன்றியறிதலையும் கொண் டதுதான். அடியாருக்கு இவை இரண்டும் இன்றியமை யாதவையாகும். அதிகமான துயரங்களும் சோதனை களும் ஏற்படுகையில் இவற்றின் உதவியால் அவற்றை வெற்றி காணவேண்டும். இதன் மூலமே ஈமான் அதிகப் பிரகாசமுள்ளதாகும். பொறுமை என்பது இச்சை களைத் துறத்தல், அல்லா(ஹ்)வின் கட்டளைகள் விஷயத் தில் மனப்பொருத்தமடைதல், அல்லாஹ் செய்கிற வற்றில் பிரியங் காட்டுதல் என்று ஒரு பெரியார் கூறியுள் ளார்கள். (இஹ்யா : பாகம் 4, பக். 53.) நன்றியறிதல் சகிப்புத்தன்மைக்குப் பகரமாகக்கூடியது. இரண்டும் ஒன்றுடன் ஒன்று மிகவும் இணக்கமானவை. நோன் பிருந்து, ஸபுருடன் இருப்பவன் இருக்கும் அதே ஸ்தா னத்திலேயே, திருப்தியடையும்வரை உண்டுவிட்டு நன்றி செலுத்துபவனும் இருக்கிறான். அல்லா(ஹ்)வைப் புகழ்வதில் "அல்ஹம்து லில்லாஹ்!" என்று புகழ்வ தளவு வேறு எதுவும் மதிப்புடையதன்று. ஆனால், அதன் மதிப்பு வெறும் நாவை அசைப்பதாலோ, இவ்வார்த் தையை மீண்டும் மீண்டும் கூறுவதாலோ மட்டும் உண் டாகிவிடாது; இதயத்தில் அதன் உண்மையை உணருவ தவசியம். ஸுப்ஹான் ஆகிய இறைவனுக்கே சகல புக ழும் என்று கூறுவது அவன் பரிசுத்தமான புனிதத் தன்மையையும், லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற தௌஹீதையும் இதயத்தில் உணர்வதாய் இருக்க

வேண்டும். "நன்றியறிதல், ஒரு நன்கொடையன்று; கொடுப்பவனின் காட்சியே" என்றார்கள் ஷிப்லி அவர்கள்.

அடுத்தபடியாகப் பயமும் நம்பிக்கையும் பற்றிச் சிறிது பார்க்கலாம்: இவையும் பிரயாணியின் படித்தரங்களின் தன்மையையே குறிக்கின்றன. பயத்தின் அறிகுறி ஓட்டமாகவும், நம்பிக்கையின் அறிகுறி நாட்டமாகவும் இருக்கின்றன. ஹரம் ஷரீபும், மஸ்ஜிதும் அவற்றின் சின்னங்களாய் உள்ளன. ஹரத்தில் புகுபவன் சிருஷ்டிகளிடமிருந்தும் பாதுகாப்புப் பெற்றவனாகிறான்; மஸ்ஜிதில் நுழைபவன் தன் அவயவங்களைப் பாவஞ் செய்யாது பாதுகாத்துக் கொள்பவனாகிறான். (மின்ஹாஜுல் ஆரிபீன்: பக். 100.)

அடியானை அல்லா(ஹ்)விடமிருந்து திரையிட்டு மறைப்பன பாவங்கள்தாம். அவற்றைச் செய்யாதிருப்பதில் அச்சம் வேண்டும். தெய்வீக அச்சம் பாவம் செய்யாது தடுத்துவிடவும் செய்யும். அல்லாஹ் நரகத்தைப் படைத்தது தன் தனிப் பெருங் கருணையால்தான் என்றும், அதன் பயத்தின் மூலம் அவன் தன் சிருஷ்டிகளைச் சுவர்க்கத்தை நோக்கி விரட்டுகிறான் என்றும் ஒரு ஹதீஸில் கூறப்பட்டுள்ளது. எனினும், உயர்தரமான பயம் என்பது, தண்டனைக்குப் பயப்படுவதோ பாவத்துக்குப் பயப்படுவதோ அல்ல; அல்லா(ஹ்)வின் நிரந்தரமான அழகைத் தான் தியானிப்பதிலிருந்தும் தான் தடுக்கப்பட்டுவிடக்கூடாதே என்று பயப்படுவதுதான். முன்னேறும் அடியார் இவ்விரு படித்தரங்களையும் கடந்து இவற்றைவிட உயரிய நிலையை அடைகிறார். இவை இரண்டுமே ஆத்மாவைப் பூரண சுயேச்சையுடன் நடக்கவிடாமல் தடுப்பவையாய்த்தான் இருக்கின்றன. ஆத்மா உண்மையிலேயே சுயேச்சையடைந்ததாகிவிடின் அதில் பயத்துக்கோ நம்பிக்கைக்கோ இடமே இல்லை. (இஹ்யா: பாகம் 4, பக். 130, 135.)

பிரயாணஞ் செய்பவரின் உயர்ந்த படித்தரங்களில் தவக்குல் (அடைக்கலந் தேடுதல்), தௌஹீத் (ஏகத்துவம்) ஆகிய இரண்டும் வருகின்றன. தௌஹீத் என்பது ஒரு சாதாரண விசுவாசிக்கு இறைவன் ஒருவனே என்று வலியுறுத்துவதாகும். ஒரு ஸூபிக்கோ தன் சித்தத்தையே இறைவனின் என்றுமுள திருச்சித்தத்தில் மூழ்கிப் போகும்படி செய்வதாகும். "அல்லா(ஹ்)வே நமக்குப் போதுமானவன்; நாம் தவக்குல் வைத்துள்ள அவன் எத்தனை அற்புதமானவன்!" தௌஹீத் என்றால் யாவுமே அல்லா(ஹ்)விடமிருந்து வருபவையே, மற்றக் காரணங்களும், சாதனங்களும் ஒன்றுமேயில்லை என்று அர்த்தமாகும். அதன் ஓர் எதிரொலி தவக்குல் ஆகும்; மற்றோர் எதிரொலி தௌஹீதை அகத்தில் கொண்டவன் சிருஷ்டிகளைப்பற்றிக் குறைகூறவோ, அவற்றிடம் கோபங் கொள்ளவோ மாட்டான்; அல்லா(ஹ்)வின் சித்தத்தில் திருப்தியடைந்தவனாய் இருப்பான். தௌஹீத் இரு தோலிகளால் மூடப்பட்ட ஓர் அபூர்வமான பருப்புக்கு ஒப்பாகும். இத்தோலிகளில் ஒன்று மற்றொன்றைவிட, உள்ளேயுள்ள பொருளிலிருந்து அப்பாலுள்ளதாகும். "அல்லா(ஹ்)வைத் தவிர வேறு இறைவனில்லை" என்று நாவால் கூறுவது இந்த மேல் தோலியாகும்; இதைச் சொல்வது, ஒரு முனாபிக் உள்பட யாவருக்கும் சாத்தியமானதே. இதயத்தில் ஈமானின்றியே இதைக் கூறிவிடமுடியும். தான் சொல்வதன் உண்மையை மனப்பூர்வமாக உணர்ந்தவர்கள் இதைக் கூறுவது உள்ளேயுள்ள தோலியை ஒக்கும். இதுவே சாதாரண ஜனங்களினதும், மார்க்க உபதேசிகளினதும் தௌஹீத் ஆகும். மார்க்க உபதேசிகள் இந்தத் தோலி பாதிக்கப்படாமல் பாதுகாப்பதில் அக்கறை காட்டுகின்றனர். உள்ளேயுள்ள விலைமதிப்பற்ற பருப்புதான் உண்மையான தௌஹீத் ஆகும். இதில் தான் சகலமுமே அல்லா(ஹ்)விடமிருந்து வருவதாகக்

காணும். அவன் தரிசனம் அவனுக்கும் ஆத்மாவுக்கும் இடையில் வரும் யாவையும் இல்லாது துடைத்துவிடும். அவனையே தொழுவதான, வேறு எதைப் பற்றிய சிந்தனையுமற்ற தௌஹீத் இது. இந்தத் தௌஹீதே உண்மையான ஸாதிகீன்களிடங் குடிகொண்டதாகும். உண்மையான தௌஹீதுடையவர் அந்த ஒருவனையே காண்பவராய், எந்தப் பூமியின் கிப்லாவின் பக்கமும் திரும்பாதவராய், அவன் பக்கமே முற்றும் திரும்பியவராய் இருப்பார். (இஹ்யா: பாகம் 1, பக். 30.) இத்தகைய தௌஹீதில் அடியார் பூரணமான தவக்குலுடன் தன்னை அல்லா(ஹ்)விடம் ஒப்படைத்துவிட்டுத் தன் சித்தத்தை இறைவனின் சித்தத்தில் மூழ்கடித்துவிடுவார். தவக்குலிலும் தௌஹீதிலும் உள்ள தன்னை அர்ப்பணித்தலின் நோக்கம் அடியாரின் ஆத்மா அதனுள் உள்ள ஒளியால் கட்டுப்படுத்தப்பட்டு வழிகாட்டப்படவேண்டும் என்பதேயாகும். இதற்கு இதயம் தியானத்திலும் நினைவுகூர்தலிலும் சதா ஈடுபட்டிருக்கவேண்டும்.

அல்லா(ஹ்)வை நோக்கி ஆத்மா செல்லும் முன்னேற்றப் பாதையில் ஏகாந்தத்தைப் பயன்படுத்தத் தியானமும் (முராகபாவும்) நினைவுகூர்தலும் (திக்றும்) உதவுகின்றன. தியானம் என்பதன் உண்மைப் பொருள் அல்லா(ஹ்)வின் பிரஸன்னத்தை - எங்கும் வியாபித்த தன்மையை (அர்-ராகிப்) உணர்வதாகும். சகல கவனமும் அவன் பக்கந் திருப்பப்பட்டு, இதயம் அவன் குரலைச் செவிமடுப்பதாய், அவனிடமே ஈடுபட்டதாய், சதாவும் அவன் பிரஸன்னத்தை உணர்ந்ததாய் இருந்துவரும். அவன் மானிட இதயத்தின் பரம இரகசியத்தையும் அறிந்தவன், யாவும் அவன் முன் திரைகளற்றவை என்ற உணர்வால் இந்நிலை உண்டாகிறது. இஃது அவன் பக்கல் ஈர்க்கப்பட்டவர்களான முகர்ரபீன்களுடையதாகும்.

முராகபா மூலம் இதயம் அல்லா(ஹ்)வின் சந்நிதியை அடைந்த பேரின்பப் பரவசத்தை உணர்வதாகிறது; தன் சிந்தனைகளை யெல்லாம், ஆர்வத்தையும் இச்சையையுமெல்லாம் அவன் பக்கம் திருப்பிக்கொண்டதாகிறது. இந்தப் பேரின்பப் பரவசத்தை அறிந்தபின், அது திக்ருல் அல்லா(ஹ்)வின் சந்நிதானத்தைச் சதாவும் நாடுவதாக ஆகிவிடுகிறது. இதுவே சகல வேலைகளிலும் அருமையானதாய் இருக்கிறது. ஏனெனில், இதனால் இதயம் ஒளிபெற்றதாகிறது; அல்லா(ஹ்)வின் தரிசனத்தைப் பற்றிச் சிந்திக்க முடிவதாய் இருக்கிறது. திக்றுக்குத் தெய்வீகம் வாயிலாகும்; இல்ஹாமுக்கு-அதாவது அல்லா(ஹ்)வைச் சந்திக்கும் தலத்துக்குத் திக்று வாயிலாய் உள்ளது. (இஹ்யா: பாகம் 3, பக் 11.)

முராகபாவாலும், திக்ருலும் ஆத்மாவானது முஷாஹதா எனும் யோக நிலைக்குக் கொண்டுசெல்லப்படுகிறது. அப்போது ஆத்மாவுக்கும் அல்லா(ஹ்)வுக்கும் இடையிலுள்ள திரை உயர்த்தப்படுகிறது. ஆபிதானவர் இப்போது ஹரம் ஷரீபுள் புகுந்துவிட்டார். பிரார்த்தனைக்கு இனித் தேவையில்லை. முஷாஹதா மூன்று வகைப்படும். அவை முராகபா பில் ஹக், முராகபா லில் ஹக், தீதாருல்லாஹ் என்பனவாம். முதலாம் வகையில் அல்லா(ஹ்)வின் ஏகத்துவத்தைப் பறைசாற்றும் பொருள்களைக் காண்பதாம்; இரண்டாம் வகையில் பொருள்களில் அவன் தோற்றத்தையே காண்பதாம்; மூன்றும் வகையில் ஹக்கின் நேரடியான தரிசனமே கிட்டிவிடுகிறது. இது நிச்சயம்; இதில் ஐயப்பாட்டுக்கே இடமில்லை. (இஹ்யா : முதல் பாகம், பக் 258.)

ஹக்குத் தஆலாவைப் பற்றிய இந்த முஷாஹதா சில சமயங்களில் தொடர்படியானதாயும், சில சமயங்களில் திடீரென ஒளிவெள்ளஞ் சிந்தும் ஒளி விளக்குப்

போல் எதிர்பாராத விதமாயும் உண்டாகிறது. முந்திய வகையான முஷாஹதா அபூர்வமானது; பிந்திய வகையான முஷாஹதாதான் சாதாரணமாக ஏற்படுவதாய் இருக்கிறது. (இஹ்யா: பாகம் 4, பக். 213.)

மஃரிபாவின் கடைசி மகாம் ஆகிய ஸ்தானம் இஷ்க் எனும் காதலுடையதாகும். இதுவே அதன் லக்ஷியமாயும் உள்ளது. இக்காதலை அடையப்பெற்றவர் (அல்-வாஸில்) அல்-ஆரிப் ஆவார். இந்தக் காதலனுக்குத் தீதார் எனும் அழகிய தரிசனம் தரப்பட்டுக் காதலியுடன் இணையும் பேறும் அருளப்படுகிறது. இந்த இஷ்கில் தாப (ஷௌக்)மும் அடங்கும். காதலன் காதலியுடன் ஒன்றத் தாபமடைவது இயற்கைதானே! தான் காதலிப்பவளுடன் அவன் தோழமை (உன்ஸ்) பூணுவதும், மனப்பொருத்தமடைவதும் (ரிலா) இயற்கைதானே! இப்போது காதலர் ஸாதிகீன்களின் வரிசையில் புகுகிறார்; அவர் மனம் மாசுமறுவற்றதாகிறது; ஏனெனில், அவர் இஷ்கில் சுயநலமென்பது ஒரணுவேனும் இல்லை. இந்த நிலை இதற்கு முன்பிருந்த, அவர் அனுபவித்த சகல நிலைகளினதும் சம்பூர்ணத் தன்மையைத் தன்னகத்தே கொண்டதாய் இருக்கிறது. ஆனால், அவை யாவையும் இது மிஞ்சியதாகும். ஏனெனில், இப்போது அவருக்கு மகாம்களும் ஹால்களும் தேவையற்றவையாகின்றன. பிரயாணத்தின் இந்த லக்ஷியத்தை அடைந்துவிடுபவர் சதாவும் தெய்வீகக் குரலைச் செவிமடுக்க முடிகிறது. அவர் சகல நிலைகளையும் கடந்து அசைவோ ஆட்டமோ அற்றவராகி 'தம்கின்' என்ற நிலையை அடைந்துவிட்டார். பயமோ நிலைகளோ அவரைப் பாதிப்பதில்லை. தாம் துயரப்பட்டாலும் சுகப்பட்டாலும் யாவும் அவருக்கு ஒன்றுதான். நப்ஸின் இச்சைகள் (அல்-ஹாஸாஸ்) மறைந்து, ரூஹ் சம்பந்தப்பட்டவை (அல்-ஹகூக்) மட்டுமே மிஞ்சுகின்றன. அவர் புறம்

சிருஷ்டிகளுடன் இருப்பினும், அவர் அகம் அல் - ஹக்குடன்தான் இருக்கிறது. அவருள்ள இடம் 'அல் - மகான்' எனும் சாதனை பூர்த்தியின் ஸ்தலமாகும். இப்போது அவர் ஆத்மா 'நப்ஸ் முத்மஇன்னு' எனும் சாந்தியடைந்த ஆத்மாவாக, ஒய்வு பெற்றதாக, தான் திருப்தியுற்றதாயும், தன் இறைவனுக்குத் திருப்தி தருவதாகவும் அவனிடம் மீளுகிறது. இந்நிலை ஆலம் மலக்கூத் என்றும் ஆலம்-அம்ர் என்றும் அழைக்கப் படும் நிலையோடு இணைந்ததாகும். இந்த ஆலம் மலக்கூத் எனும் உலகிலுள்ள அற்புதங்களைக் கண்ணுற்றால் இம்மண்ணுலகம் ஒரு தூசியைப்போல் தோற்ற மளிக்கும். இந்த உலகுக்கு உயர்ந்து வராதவன் அறிவற்ற வெறும் மிருகமே; ஏன், அவன் அந்த மிருகத்தையும்விடக் கடையனுவான். அவ்வுலகிற்குப் பறந்து போவதற்கான இறக்கைகள் மிருகங்களுக்கு இல்லை; இவனுக்கு உண்டல்லவா! இச்சடதத்துவ உலகை அந்த மறைவான உலகுடன் ஒப்பிடுவதாயின் பருப்பும் உமியும் போலும், ஜீவனும் உடலும் போலும், ஒளியும் இருளும் போலும், மகத்தானதும் இழிவானதும் போலுமே இருக்கும். எனவேதான் அந்த மறைவான உலகம் ஒளி உலகம், ஆத்மீக உலகம், தெய்வீக உலகம் என்றெல்லாம் அழைக்கப்பெறுகிறது..... இந்த மேல் உலகை எய்துபவன் அல்லா(ஹ்)வுடன் இருப்பவனுகிறுன்; மறைவானதன் திறவுகோல் அவனிடமிருக்கிறது." (மிஷ்காதுல் அன்வார்: பக். 108, 109.) இதுவே சம்பூர்ணமான நிலை; காதலனின் நிலை.

காதல் இச்சை ஐந்து காரணங்களால் உண்டாகலாம். முதலாவதாகச் சுயநலக் காதல். அதாவது, ஒருவன் சொத்தையும், மனைவி மக்களையும், நண்பர்களையும் தன் பாதுகாவலுக்காகக் காதலிப்பது. இரண்டாவது, ஒருவரிடமிருந்து தனக்குக் கிடைக்கும் ஆதாயத்துக்காக அவரிடம் அன்பு செலுத்துவது. இதுவும் சுயநல

மானதுதான். அவர் மூலம்வரும் ஆதாயம் நின்றதும் அவர்மீதுள்ள அன்பும் மறைந்துவிடும். மூன்றாவதாக, ஒரு வஸ்துவை அதிலிருந்து கிடைக்கும் பயனுக் காகவோ இன்பத்திற்காகவோ அன்றி, அவ்வஸ்துவுக் காகவே காதலிப்பது. அழகையும் நற்பண்பையும் நேசிப்பது இதற்கு உதாரணமாகும். கண்ணுக்குக் குளிர்ச்சி தரும் பசுங்காட்சிகளும், நீரோடைகளும், உண்பதற்கோ, குடிப்பதற்கோ தேவையற்றவையாய் இருப்பினும் அவற்றின் தோற்றத்தைப் பார்ப்பதில் பற்றுதல் உண்டாவது இத்தகைய காதலாகும். நான்கா வதாக, அழகாலும் நற்பண்பாலும் உணர்ச்சி யூட்டப் பட்டு ஒழுக்கத்தைப் பண்படுத்தும் காதல். கடைசி யாகக் காதலிப்பவனுக்கும் காதலிக்கப்படுவதற்கும் இடையிலுள்ள இரகசியமான தொந்தம் (முனாஸபா) காரணமாக உண்டாகும் காதல். இருவரிடையே இத்தகைய காதல் ஏற்படுவதற்கு அழகோ இன்பமோ இன்றி, அவர்கள் ஆத்மாக்கள் ஒரே வகையினவாய் இருப்பது காரணமாகும். காதலுக்கான இக்காரணங்கள் யாவுமே ஒன்றாய் ஒருவனிடம் சேர்ந்திருந்து, காதலின் கல்யாணகுணங்கள் அவனிடம் உன்னதமான சம்பூர்ணத் துவமடையுமாயின் அதன் பயனாய் உண்டாகும் காதலும் உன்னதமானதாகத்தானே இருக்கவேண்டும்! அல்லா(ஹ்) விடமே-அவனிடம் மட்டுமே இவை யாவும் ஒருங்கே யுள்ளன; அவனிடமே நேசிக்கப்படவேண்டிய சகலமும் பரிபூரணத்துவத்தின் உச்சத்தை எய்தியுள்ளன.

இத்தகைய காதல் பலமானதாயும் அடியானையே ஆட்கொள்வதாயும் வளர்ந்த பிறகுதான் 'இஷ்க்' என்று பெயர் பெறுகிறது. இதற்கு யூஸுஃப் (அலை) அவர்க ளிடம் ஸுலைஹா கொண்ட காதல் ஓர் உதாரணமாகும். அவர்களுக்காக ஸுலைஹா யாவையும் அள்ளிக் கொடுத்தார். தன்னிடம் யூஸுஃபின் பெயரைக் கூறிய

வர்களுக்குக்கூடத் தன் நகைகளையெல்லாம் எடுத்துக் கொடுத்தார். ஆனால், அவர் யூஸுபை மணந்து கொண்ட பின் நிலைமை மாறிவிட்டது. யூஸுபு (அலை) அவர்களோடு இன்பமனுவிக்க இணங்க மறுத்துவிட்டார். "நான் அவனை அறியு முன்புதான் உங்களைக் காதலித்தேன்; ஆனால், அவனை நான் அறிந்ததும், அவன்மீது நான் கொண்ட காதல், வேறு யாருக்கும் என்னகத்தில் இடம் விட்டு வைக்கவில்லை. அவன் இடத்தை நான் வேறு யாருக்கும் கொடுக்கமுடியாது'' என்று அவர் கூறி விட்டார். இத்தகைய காதல் வெறிக்கு மன்ஸூர் ஹல்லாஜ நல்ல உதாரணமாவார்கள். இதற்காக அவர்கள் தம் உயிரையே அர்ப்பணித்தார்கள். அல்லா(ஹ்)வைத் தவிர மற்ற யாவும் ஒன்றுமேயில்லை, அவன் மட்டுமே ஹக்கானவன் என்பதை அவர்கள் அறிந்ததும், தன் பெயரையே மறந்துவிட்டார்கள். அந்நிலையில் "நீர் யார்?'' என வினவப்பட்டபோது, "நானே ஹக்'' (அனல் ஹக்) என்று கூறிவிட்டார்கள். (முகாஷபதுல் குலூப்: பக் 23, 24.) சகல நன்மைகளினதும் உற்பத்தி ஸ்தானமான அந்த ஒருவனிடம் இத்தகைய காதல் வெறி காட்டுவது நியாயமானதுதான். ஆனால், காதலன் இக்காதலின் அறிகுறிகளைக் காட்டவேண்டும். இக் காதல் ஒரு நன்மரமாகும். அதன் வேர்கள் ஆழமாகப் புதைந்துள்ளன; அதன் கிளைகள் வான்வரை உயர்ந்து படர்ந்துள்ளன; அதன் கனிகள் நாவாலும் மற்றும் அவயவங்களாலும் உள்ளத்தில் பழுப்பதாய் உள்ளன. இத்தகைய காதலுள்ளவன் சாவுக்கு அஞ்சுவதில்லை. இவனுக்குத் தன் பூமியிலிருந்து தன் காதலியின் வீட்டுக்குப் பிரயாணஞ் செய்வதில் கஷ்டமொன்றுமில்லை. மரணம் இவனுக்கு வழி திறப்பதாகவே இருக்கிறது. இத்தகைய உண்மையான காதலன் காட்டக்கூடிய் காதலின் அறிகுறிகளில் சில வருமாறு: தன் அந்தரங்க சுத்தியின் அறிகுறியாக இவன் தன் ரப்புக்காகத் தன்

உயிரையே கொடுக்கவும் தயங்கமாட்டான். தன் அன்பின் சித்தத்திற்காகத் தன் சித்தத்தைத் தியாகஞ் செய்துவிடுவான். அன்பின் நினைவு சதாவும் இவன் இதயத்தில் குடிகொண்டே யிருக்கும். யாவருமே அல்லா(ஹ்)வின் அடியார்களானதால் இவன் மற்ற மானிடர்களிடம் அன்பு செலுத்துவான். இவன் தனிமையிலமர்ந்து, தன் அன்புடன் வசனிக்க விரும்புவான். கடைசியாகத் தான் தன் அன்புக்காகச் செய்யும் யாவும் தனக்கு இலகுவானவையாகவே இருக்கக் காண்பான். சேவையில் இவன் ஆத்மா ஆனந்தங்கொள்ளும். இந்தக் காதலில் தாபமும் அடங்கும். அல்லாஹ் தாவூது நபியவர்களிடம் சொன்னான்: "நான் என்னை நேசிப்பவனின் அன்பனுவேன்; திக்றின் மூலம் என் தோழமையைத் தேடுபவனின் நண்பனுவேன்; என் நேயனின் நேயனுக்கும் நேயனுவேன்; என்னைத் தேர்ந்தெடுத்துக்கொண்டவனை நானும் தேர்ந்தெடுக்கிறேன்......உண்மையில் என்னை நாடியவன் என்னைக் கண்டுகொள்வான்; மற்ற எதையும் நாடியவன் என்னைக் காணமாட்டான். என்னோடு வாரும்; என்னோடு உரையாடுதல் புரியும்; நான் உம் அன்புக்குத் திருப்தியளிக்கிறேன். ஏனெனில், என் அன்பர்களை, என் நேயரான இப்ராஹீமுடையவும், என் அந்தரங்கத்துக்குரியவரான மூஸாவுடையவும், நான் தேர்ந்தெடுத்துக்கொண்டவரான முஹம்மதுடையவும் இயல்புடையவர்களாகவே நான் சிருஷ்டித்துள்ளேன். என்னை அடையத் தாபப்படுபவர்களின் இதயங்களை நான் என் ஒளியினின்றே படைத்துள்ளேன்; என் மகத்துவத்தால் அவர்களையும் மகத்துவமுள்ளவர்களாக்கியுள்ளேன்." (இஹ்யா: பாகம் 4, பக். 278.)

இத்தகைய இஷ்க், 'உன்ஸ்' என்னும் தோழமையாய்ப் பரிணமிக்கிறது. 'உன்ஸ்' என்பது இஷ்கின் மகத்தான கனிகளில் ஒன்றாகும். அன்பின் அருகிலேயுள்

ளோம் என்ற ஞானம் உண்டாவதால் ஏற்படும் பேரானந்தமே அதன் உண்மையான தாத்பரியமாகும். தாபத்தின் பின் உண்டாகும் தோழமை, தேடுவோர்க்கு அவர்கள் தேடுவது கண்டுபிடிக்கப்படுவது போன்றிருக்கிறது.

காதலின் மற்றொரு கனி 'ரிலா' எனும் மனப் பொருத்தமாகும். இதனால் அடியான் பரிபூரணமாய் தெய்வச் சித்தத்தில் தன் சித்தத்தை மூழ்கவிட்டவனாய்-தனக்கு ஏற்படும் துன்பங்கள் துயரங்களிலும் மனப் பொருத்தம் காட்டுபவனாய் இருப்பான்.

காதல் வெறிகொண்டவன் வேதனைகளைக்கூடப் பொருட்படுத்தமாட்டான். பிஷ்ர் என்ற பெரிய ஞானியொருவர் பக்தாதில் ஒருவன் ஆயிரம் கசையடிகள் பெறுவதைக் கண்டார். அடிபடுபவன் ஒரு சிறிய சப்தம் கூடச் செய்யவோ, அழவோ இல்லை. அவன் மீண்டும் சிறைக்குக் கொண்டுசெல்லப்படுகையில் பிஷ்ர் அவனைத் தொடர்ந்து சென்றார். அவனையணுகி, அத்தனை கசையடிகள் பட்டும் நீ ஏன் கூச்சல் போடவில்லை என்று வினவினார். "என் காதலி எதிரில் உட்கார்ந்து என்னைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அப்படியிருக்க நான் வேதனையைக் காட்டிக்கொள்ளலாமா?" என்று கேட்டான் அடிபட்ட அந்நபர். "நீ உன் காதலியிடம் காட்டும் இந்த மகத்தான காதல் வெறியைக் காதலுக்குரிய மகா பெரிய பரம்பொருளின்மீது மட்டும் காட்டியிருந்தால், எவ்வளவு அருமையாய் இருந்திருக்கும்!" என்றார் பிஷ்ர். இதைக் கேட்ட அந்நபர் ஒரு கூச்சலிட்டு உயிர் பிரிந்தவனாய்க் கீழே சாய்ந்தான். (இஹ்யா: பாகம் 4, பக். 298.)

அன்பனின் மனப்பொருத்தத்தைக் காட்டவும் ஒரு கதையுண்டு. பாலைவனத்தில் வீடமைத்து ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனிடம் ஒரு

சேவலும், நாயும், கழுதையும் இருந்தன. சேவல் காலையில் அவனைக் கூவி எழுப்பும்; நாய் அவன் வீட்டைக் காவல் காக்கும்; கழுதை தூரத்திலிருந்து அவனுக்குத் தண்ணீர் சுமந்து வந்து தரும். ஒரு நாள் ஒரு நரி அவன் சேவலை அடித்துச் சென்று விட்டது. அவன் மிகுந்த பக்திமான். எனவே, சேவல் போனது பற்றி அவன் வருந்தவில்லை. "எல்லாம் நன்மைக்காவே இருக்கும்" என்று கூறிவிட்டான். மறு நாள். ஓர் ஓநாய் வந்து அவன் கழுதையைக் கொன்று போட்டிருந்தது. அவன் வீட்டிலிருந்தவர்களெல்லாம் இதற்காக வருந்தினர். ஆனால், அவனோ "எல்லாம் நன்மைக்காகவே இருக்கும்" என்று மனப்பொருத்தங் கொண்டான். மறுநாள் அவன் நாய் காணமல் போய் விட்டது. அப்போதும் அவன், "எல்லாம் நன்மைக்காகவே இருக்கும்" என்றே கூறிவிட்டான். அதே தினத்தன்று சில கொள்ளையர்கள் அப்பகுதிக்கு வந்து, அங்கே அவனைப் போல் வீடு கட்டி வாழ்ந்துவந்தவர்களின் உடைமைகளைக் கைப்பற்றியதுடன் அவர்களையும் கைது செய்து சென்றனர். ஆனால், அவனும் அவன் வீட்டினரும் பாதுகாப்பில் விடப்பட்டனர். அவனுடைய சேவல் முதலியவை கொல்லப்பட்டுப்போனது அவனுடைய நன்மைக்காகவே என்பது அப்போது நிதர்சனமாயிற்று. எனவே, தன் ரப்பிடம் அன்புகொண்ட அன்பன் தன் ரப்பிடம் மனப் பொருத்தமடைந்தவனாய் இருப்பான். (இஹ்யா: பாகம் 4, பக். 298.)

இப்போது அல்லா(ஹ்)வின் அன்பரானவர் மஃரிபா என்னும் ஆத்ம ஞானத்தை அடையப்பெற்றவராகிறார். அஃது அல்லாஹ் தரும் நன்கொடை; இதயத்தில் அவன் புகுத்தும் வெளிச்சம். மறைவானதன் விளக்கிலிருந்து முத்மஇன்னு எனும் சாந்தியடைந்த ஆத்மாவின் இதயத்துள்ளே புகுத்தப்படும் ஒரு கிரணமே

மஃரிபா ஆகும். இந்த ஞானத்திலிருந்து அடியான் தரிசனத்துக்குப் போகிறான். இந்தத் தரிசனத்தில் அவன் தன்னைவிட்டு விலகி, ஏகனானவனில் சேர்கிறான்; நாட்டத்தின் முடிவான ஐக்கிய நிலையை அடைகிறான். இதை ஸூபியாக்கள் "பனா - பில் - தௌஹீத்" என்றழைக்கின்றனர். ஏனெனில், அவன் அந்த ஒருவனையே காண்கிறான்; தன்னைப் பார்க்காத நிலையடைகிறான். தௌஹீதில் இணைந்து தன்னிடமிருந்து அந்த ஒருவனுடன் போய்ச் சேர்ந்தவனாகிறான். இந்த நிலையை வெறும் 'பனா' என்று மட்டும் கூறுவதுடன் நில்லாது 'பனாவுல் பனா' என்றே கூறுவர். தன்னைவிட்டு அவன் அகன்றுவிட்டதையும் அவன் இந்நிலையில் உணர்வதில்லையன்றோ! இந்நிலைக்குப் பின்னாலுள்ள மர்மங்களை வெளியிட அனுமதியில்லை. (மிஷ்காதுல் அன்வார்: பக். 114, 115.) ஆனால், இந்நூலின் கடைசியில், அடியான் தெய்வீகத் திருச்சமூகத்தின் மகத்துவத்துவ நெருப்புக்கு ஆகுதியானவனாகிறான். தன் தனித்தன்மை ஒரே ஹக்கில் ஈர்க்கப்பட்டவனாய், 'அவன் திருச்சமூகமன்றி யாவுமே அழிந்து விட்டன' என்பதை எண்பிப்பவனாய் இருக்கிறான் என்று - பக்கம் 145-ல் விளக்கப்பட்டுள்ளது.) இந்த ஐக்கியம், தான் விட்டு வந்த சமுத்திரத்தில் நீர்த்துளி மீண்டும் ஐக்கியமாவது போலும், நெருப்பிடம் மீண்டும் வந்து கலக்கும் தீப்பொறி போன்றும், முழுமையுடன் மீண்டும் கலந்துபோன அதன் பகுதிபோலும் இருக்கிறது. ஜீவனை விட்டுவிட்டு உடலை மட்டும் கவனிக்கும், வெளி அனுஷ்டானங்களில் மட்டும் கவனஞ் செலுத்தும் மார்க்க அறிஞர்கள் இந்த விளக்கம் அர்த்தமற்றது, வெறும் மூடத்தனமான பிதற்றல் என்று கூறலாம். ஆனால், உண்மை அப்படியல்ல. "பட்டம் பதவியிலும், மானிடக் காதலிலும் உங்களுக்குள்ள உறவு எப்படி உண்மையானதோ, அப்படியே ஆரிபீன்கள் அவனிடம் கொள்ளும் உறவும் உண்மையானதுதான். உங்கள்

காதலிலோ செல்வத்திலோ உங்களுக்கு ஓர் எதிரி யுண்டானால் அந்தக் கோபத்தில் உங்களை மறந்து விடுகிறீர்கள். அல்லது உங்கள் காதலியிடம் நீங்கள் கொண்டுள்ள ஈடுபாட்டில் இவ்வுலகையே மறந்து விடுகிறீர்கள். யாரும் உங்களிடம் பேசினால், நீங்கள் செவிடாய் இல்லாத நிலையிலும் அஃது உங்கள் செவியில் படாமலும், உங்கள் முன் வரும் யாரையும், உங்கள் கண்பார்வை கோளாறுபடாத நிலையிலும், பாராதவர்களாயும் நீங்கள் இருந்து விடுகிறீர்கள். ஏனெனில், உங்கள் பற்றோ காதலோ மற்ற யாவையும் உணரவிடாது செய்துவிடுகிறது. எனவே, தம் இறைவனிடம் காதல் கொண்டு அவன் சந்நிதியை நாடும் நல்லடியானின் நிலையை நீங்கள் ஊகித்துணர்ந்து கொள்ளலாம்...பனா என்பது உங்களுக்கு இந்த அளவுக்கு விளக்கப்பட்ட பின்னராவது ஐயத்தை உதறி, நீங்கள் உணர்ந்து கொள்ளும் அளவுக்கு அறிவு எட்டாத எதையும் மறுத்துவிடும் குணத்தைக் கைவிட வேண்டும்.'' (கிதாபுல் அர்பாயீன்: பக்கம் 52, 53.)

இவ்வுலகிலிருந்து இந்த உயர் பதவிக்கு உயர்ந்த நாதாக்கள் யாவரும் அந்த ஒருவனைத் தவிர வேறு எதையுமே காணவில்லை என்று ஏகோபித்துக் கூறுகின்றனர். இவர்களில் சிலர் ஞானத்தின் மூலம் இந்நிலையை அடைந்துள்ளனர்; மற்றும் சிலர் நேரடியான அனுபவத்தின் மூலம் இந்நிலையை அடைந்துள்ளனர். இந்நிலையில் அவர்கள் தன்னறிவற்று, பரிபூரணத் தௌஹீதில் மூழ்கி இழைந்துவிட்டவர்களாய் பிரமிப்படைந்து கிடக்கின்றனர். அவர்கள் அல்லா(ஹ்)வையன்றி எதையும் நினைவுகூர முடியவில்லை. தம்மை மறந்த அவர்களோடு அல்லாஹ் மட்டுமே தங்கியவனாய் இருக்கிறான். இந்தப் பிரமிப்படைந்த நிலையில்தான் அவர்களுள் ஒருவர்

'அனல் ஹக்' என்றார்; இன்னொருவர் "என் புகழ் எத்தனை மகத்தானது! சகல புகழும் எனக்கே!" என்று கூறினார்; இன்னொருவர், "இந்த உடையினுள் அல்லா(ஹ்)வைத் தவிர வேறில்லை" என்றார். ஆனால், பரவச நிலையில் காதல் வெறி கொண்டவர்களால் கூறப்பட்ட இவ்வார்த்தைகள் வெளியிட்டுப் பேசக்கூடியவையல்ல; இவற்றைப் பேசக்கூடாது; மனத்தகத்துள் தான் வைத்துக் கொள்ளவேண்டும். இந்நிலை பரிபாஷையில் 'இத்திஹாத்' (இணங்காணுதல்) எனவும், மஃரிபாவின் பாஷையில் 'தௌஹீத்' எனவும் கூறப்படுகிறது.

தஸவ்வுபின் எல்லையைக் கடந்துவிட்ட ஞானி, உன்னதத்திலும் உன்னதமானதற்கு உரியவராகவும், தான் நாடியதை எய்திவிட்டவராகவும், தன் பிரயாணத்தின் முடிவுக்கு வந்துவிட்டவராகவும் இருக்கிறார். இவர் வாஸிலாத்தடைந்தவர்-ஸித்திபெற்றவர் ஆவார். தௌஹீத் வாழ்க்கையில் நுழைபவர்கள் அக புறக் கண்களால் காணவோ உணரவோ முடியாத ஒரு ஜீவன் பெற்றவர்களாகின்றனர். பனுவடைந்த அவர்கள் பகா என்ற மரணமற்ற நிலையை எய்துகின்றனர். அவர்கள் 'அவ்லியா அல்லாஹ்' என்ற ஞானிகளாய் இருக்கின்றனர். "தன் நாதாக்களின் இதயங்களை இம்மையின் படாடோபங்களின், கவர்ச்சிகளின் பக்கம் சாயாது விடுவித்துத் தன் மகத்துவத்தையன்றி வேறு எதையும் சிந்தியாதபடி அவர்கள் இதயங்களைப் பரிசுத்தப் படுத்திய அல்லா(ஹ்)வுக்கே சகல புகழும்! அவர்களே அவன் தனக்கெனத் தேர்ந்தெடுத்துக்கொண்டவர்களாவர். அவன் புகழைப் பறையறைவதிலேயே அவர்கள் ஈடுபடுமாறு அவன் செய்துள்ளான்; அவர்களுக்குத் தன் திருநாமங்களையும் ஸிபாத்துகளையும் அவன் வெளியாக்கியுள்ளான். தன்னைப்பற்றிய அவர்களின் பிரகாசம் பொருந்திய ஞானத்தால் அவர்கள்

ஒளியுள்ளவர்களாகும்படி செய்துள்ளான். தன் காதல் நெருப்பால் அவர்கள் ஆகுதியாகும்வரை தன் சந்நிதியின் ஜாஜ்வல்யத்தை மறைக்கும் திரையை அகற்றியருளியுள்ளான்.'' (இஹ்யா: பாகம் 4, பக். 252.)

நாதாக்களின் இதயம் சதாவும் திக்றிலும், நாவு அல்லா(ஹ்)வின் புகழைப் பேசுவதிலும், அவயவங்கள் அவன் சேவையிலும் ஈடுபட்டிருக்கும். அவனுடைய தோழமையைப் பெறுவதிலேயே அவர்களுக்கு ஆனந்தமுண்டாகிறது. அவன் அன்பைவிட்டு அவர்கள் ஒருக்காலும் பிரிந்து அப்பாலாவதில்லை. அவன் தம்மிடம் அக்கறை காட்டுவது போல, அவர்களும் அவனிடம் அக்கறை காட்டுகின்றனர்; அவன் தம்மிடம் அன்பு காட்டுவது போல அவர்களும் அவனிடம் அன்பு காட்டுகின்றனர். அவனிடம் அவர்கள் மனப்பொருத்தங் கொண்டுள்ளது போல, அவர்களிடம் அவனும் மனப்பொருத்தங் கொண்டுள்ளான். அவர்கள் வறுமையுடன் அவசியமான தற்கதிகம் எதையும் தேடாது வாழ்வார்கள். அல்லா(ஹ்)வுக்காகச் சாட்சியம் பகரும் வெளிச்சத்தைத் தரும் விளக்குகள் அவர்கள்; அவன் ஞானப் பொக்கிஷத்துக்குத் திறவுகோல் அவர்கள்; அடிவானத்திலிருந்து உதித்தெழும் சந்திரனுடையதைப் போன்ற ஒளி அவர்களின் பாதையைத் தெளிவானதாக்குகிறது. வேர்கள் தௌஹீதாகவும், கிளைகள் தெய்வீகமாகவும் உள்ள பாக்யம் பொருந்திய விருக்ஷத்தின் கனிகள் அவர்கள். (மின்ஹாஜில் ஆரிபீன்: பக்கம் 102.) அவர்களகத்தேயுள்ள தெய்வீக ஜீவன் காரணமாக நாதாக்கள் 'ரூஹானியூன்' எனப் பெயர் பெற்றுள்ளனர்.

ஒரு நாதாவின் வாழ்க்கை இறைவனுடன் தோழமை பூணும் ஆனந்தத்துடன் மட்டும் நின்றுவிடுவதில்லை. தெய்வ ஒளியிலிருந்து அவர் பெறும் வெளிச்சம் அவர் பிறருக்கு ஒளி தரும் ஒளிவிளக்காயும்

மிளிர்கிறது. தான் அடைந்துள்ள உருமாற்ற நிலையின் உச்சத்திலிருந்து இவ்வுலகின் தரத்துக்கு இறங்கிவந்து, தமது தோழமையை நாடும் பலஹீனமானோர்க்குத் தம் ஒளியின் வெளிச்சத்தால் மன இருளை நீக்கி அங்கு விளக்கேற்றி வைக்கவேண்டும். வௌவால்கள் சூரியனின் ஒளியை நேரடியாகப் பெற இயலாவிட்டாலும் இரவில் சந்திரன் மூலமும் விண்மீன்களின் மூலமும் பெறுவதுடன் திருப்தியடைகின்றனவல்லவா! இதுபோலாவது சாதாரண ஜனங்களுக்கு இந்த நாதாக்கள் தெய்வீக ஒளியால் தமது இதயத்தில் ஏற்பட்டுள்ள விளக்கிலிருந்து தீபமளித்து ஒளியுண்டாக்கவேண்டும்.

இத்தகைய நாதாக்களான ஆரிபீன்களின், அவ்லியாக்களின் நிலையை அடைய முடியாவிட்டாலும், குறைந்த பக்ஷம் அவர்களின் நேசர்களாகவாவது இருக்க முயலவேண்டும். அவர்களிடம் நம்பிக்கை வைக்கவேண்டும். இவ்விதஞ் செய்பவன் ஒருக்கால் கியாம நாளில் தான் நேசித்தவர்களுடன் தன்னை நிற்கக் காண்பானல்லவா! ஆரிபு எனும் அந்தஸ்தை அடைய முயல்பவன் 'தன்னை' இல்லாதாக்குவதன் மூலமும், பணிவின் மூலமும் அதற்கான தகுதியை அடைவதும் சாத்தியந்தான். (இஹ்யா: பாகம் 4, பக். 306.)

வலிமார்களுக்குத் தெய்வீக வாழ்வளித்த ரப்பில் ஆலமீனுக்கே சகல புகழும்! "தன் அன்பெனும் நெருப்பிலே தன் ஞானியரின் இதயங்களை ஆகுதியாகச் செய்த அல்லா(ஹ்)வுக்கே சகல புகழும்! இவர்கள் இச்சைகளை இவர்களை விட்டகற்றியவன் அவனேயன்றோ! இவர்கள் ஆத்மாக்கள் அவனைச் சந்திக்கவேண்டும் என்று தாபங் கொள்ளச் செய்தவன் அவனேயன்றோ! அவனையே நோக்கவும், அதிலேயே பார்வை ஸ்திரப்பட்டிருக்கவும் செய்தவன் அவன்தான். இவர்களின் அகப்பார்வை அவன் சந்நிதானத்தைக் கண்டு, ஐக்கிய உணர்ச்சியை

உள்ளிழுக்க, இவர்களின் கவனம் அவன் மகத்துவத்தின் மகோன்னதத்தைச் சிந்திப்பதிலேயே லயித்ததாகி இம்மையிலும் வரவிருக்கும் உலகிலும் அவனையன்றி வேறு எதையுங் காணுதவர்களாய், பூமியிலும் சுவர்க்கத்திலும் அவனையன்றி வேறு யாரையும் நினையாதவர்களாய் இவர்களை ஆக்கிய அந்த அல்லாஹுஸுப்ஹானஹுவத்தஆலாவுக்கே சகல புகழும்! இவர்கள் சடதத்துவப் பார்வையில் ஏதாவது ஓர் உருவம் படுமாயின், இவர்கள் அகப்பார்வை அதையும் கடந்து, அந்த உருவை உண்டாக்கியவனிடம் சென்று விடுகிறது. இனிய கீதம் இவர்கள் காதுகளில் விழுந்தால், இவர்கள் அகத்தின் ஆழத்திலுள்ள எண்ணங்கள் அன்புடையாளனிடம் சென்றுவிடுகின்றன. இவர்களைத் தொந்தரவு செய்யும், கலக்கும், பாதிக்கும், மகிழ்ச்சியூட்டும், துயரூட்டும், தாபமூட்டும் அல்லது பரபரப்பூட்டும் எந்த ஒரு சப்தமும் இவர்கள் காதுகளில் பட்டால், அவனுக்காகவே இவர்கள் பாதிக்கப்படவோ அல்லது மகிழ்ச்சியடையவோ செய்கிறார்கள்; இவர்கள் துயரம் அவனிடமே; அவன் சந்நிதியில் கிடைக்கக்கூடியதற்காகவே இவர்கள் தாபமடைகிறார்கள்; இவர்கள் விழிப்படைவது அவனுக்காகவே; இவர்கள் இங்குமங்கும் போவது அவனைச் சுற்றி மட்டுமே. அவன் தான் ஏற்கனவே இவர்களை அவனையன்றி மற்ற யாவின் விஷயத்திலும் கண் மூடியவர்களாகவும், அவனுடையவையன்றி மற்றச் சகல பேச்சுக்களுக்கும் காது கேளாத செவிடர்களாகவும் ஆக்கியுள்ளானன்றோ! இவர்களே அல்லா(ஹ்)வினுல் தன் வலிமார்கள் என்று கூறப்படுபவர்கள்; அவன் தேர்ந்தெடுத்த, பொறுக்கப்பட்டவர்களுள் உள்ள இவர்களையே அவன் தனக்கென வைத்துக் கொண்டுள்ளான்.'' (இஹ்யா: பாகம் 2, பக். 236, 237.)

ஆத்மாவுக்கும் அல்லா(ஹ்)வுக்குமுள்ள தெய்வீகத் தொடர்பையும், அல்லா(ஹ்)வின் இயல்பையும், ஆத்மா கடக்கவேண்டிய படித்தரங்களையும், அவன் சந்நிதியை அடைய அது பின்பற்றவேண்டிய பாதையையும் இமாம் கஸ்ஸாலீ பல நூற்களில் பல ஆயிரம் பக்கங்களில் விளக்கியுள்ளார்கள். அதன் ஒரு கோடியை இங்கே தொட்டுப் பார்க்க முயன்றுள்ளோம். ஆனபடியால் அவர்களுடைய ஆத்ம ஞான போதனை எப்படிப் பட்டது என்பதை அறிய இவ்விஷயத்தைப் பன்முறை படிப்பதுடன் விஷயமறிந்தவர்களிடம் விளக்கங் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஆயினும் ஒரு விஷயத்தை நாம் இங்கே வலியுறுத்துவது மிக மிக இன்றியமையாததாகும். தஸவ்வுபு எனும் ஆத்ம ஞானம் நூற்களைப் படிப்பதால் ஏற்படாது, இதயத்திலிருந்தே சொந்த அனுபவமாக உண்டாகவேண்டும் என்று இமாம் கஸ்ஸாலீ கூறியுள்ளார்கள். இதே கருத்தை நமது ஆண்டகை முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்களும் வற்புறுத்தியுள்ளார்கள். எனவே, இவற்றைப் படிக்கும் அன்பர்கள் ஏட்டுப் படிப்பால் விவரங்களை விளங்கிக்கொண்டு அனுஷ்டானத்தில் ஈடுபடவேண்டும். தொழுகை முதலிய மார்க்கக் கடமைகளில் ஒழுங்காக நடந்து வரவேண்டும். அப்படி நடந்துகொண்டு, தமக்கு ஆத்ம ஞான உதிப்புப் பிறக்க வழிகாட்டும் ஒரு ஷைகைக் காட்டியருளுமாறு அல்லா(ஹ்)விடமே மன்றாடலாம். யாவும் தக்தீரிலுள்ள படி, அதனதன் கிரமப்படி நடந்தேறும். ஆனால், அடிப்படையான மார்க்க அனுஷ்டானங்களை (பர்லான அதை அடுத்து ஸுன்னத்தான அனுஷ்டானங்களை)க் கைவிட்டுவிட்டு, ஆத்ம ஞானப் பாதையில் காலெடுத்து வைத்துவிடலாம் என்று மட்டும் யாரும் கனவு காண வேண்டாம்!

இமாம் கஸ்ஸாலீயின் பெருமையை மிகவும் அழகாக எடுத்துக் காட்ட இமாம் அபுல் ஹஸன் ஷாதுலீ (ரஹ்) அவர்கள் கண்ட ஓர் அருமையான கனவை இங்குக் குறிப்பிடலாம். இமாம் ஷாதுலீ (ரஹ்) தெரிவித்துள்ளதாவது :

பைத்துல் முகத்தஸ் பள்ளியில் நான் தூங்கிக் கொண்டிருந்தபோது இந்தக் கனவைக் கண்டேன்: பள்ளிவாசல் வெளியே ஹரத்தின் நடுவில் சிம்மாசனமொன்று போடப்பட்டிருந்தது. ஜனங்கள் கூட்டம், கூட்டமாக அங்கு வந்து கூடிக்கொண்டிருந்தனர். இவர்களெல்லாம் யார், என்ன விசேஷம் என்று கேட்டேன். ஹுஸைனுல் ஹல்லாஜ் புரிந்த ஒழுக்கக் குறைவான காரியத்துக்காக நம் பெருமான் முஹம்மது (ஸல்) அவர்களிடம் சிபாரிஷ் செய்து மன்னிப்புத் தேடிக் கொடுக்கும் நோக்கத்துடன் நபிமார்களும், ரஸூல்மார்களும் அங்கு வந்து குழுமியுள்ளனர் எனக் கூறப்பட்டது. அப்போது சிம்மாசனத்தை நோட்டமிட்டேன். நமது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அதில் வீற்றிருந்தார்கள். இப்ராஹீம், மூஸா, ஈஸா, நூஹ் முதலிய நபிமார்கள் எல்லோரும் தரையில் அமர்ந்திருந்தனர். அவர்கள் பேசுவதை நான் கவனித்துக் கேட்டேன்.

“உங்கள் உம்மத்திலுள்ள உலமாக்கள் பனீ இஸ்ராயீல்களின் நபிமார்களைப் போன்றவர்கள் என்று நீங்கள் கூறி இருக்கிறீர்களல்லவா? அத்தகைய உலமாக்களிலொருவரைக் காண்பியுங்கள் பார்ப்போம்!” என்று நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி நபி மூஸா (அலை) வினவினார்கள்.

உடனே நாயகம் (ஸல்) அவர்கள் “இதோ!” என்று இமாம் கஸ்ஸாலீயைச் சுட்டிக் காண்பித்தார்கள். இமாம் கஸ்ஸாலீ தமது இடத்தில் எழுந்து

பணிவுடன் நின்றார்கள். அப்போது நபி மூஸா (அலை) இமாம் கஸ்ஸாலீயிடம் ஒரு வினா விடுத்தார்கள். உடனே இமாம் அவர்கள் அதற்குப் பத்து விடைகளளித்தார்கள்.

“வினாவிற்கேற்றபடியன்றோ விடையளிக்கவேண்டும்! கேள்வியோ ஒன்று; ஆனால், பதிலோ பத்தாக இருக்கிறதே!” என்று மூஸா (அலை) குறைகூறினார்கள்.

இமாம் கஸ்ஸாலீ சொன்னார்கள்: “இதே குறையை நீங்களும் செய்துள்ளீர்களே! ‘மூஸாவே, உமது வலக் கரத்தில் இருப்பது என்ன?’ என்ற ஒரு கேள்வியைத் தானே இறைவன் உங்களிடம் கேட்டான். அதற்கு ‘என் கைத்தடி’ என்ற ஒரே பதிலைச் சொல்லி இருக்கலாமே! ஆனால் நீங்களோ, “இது என் கைத்தடி. இதன்மீது நான் சாய்ந்துகொள்வேன். இதைக் கொண்டு என்னுடைய ஆடுகளுக்கு இலை, தழைகளைப் பறிப்பேன். இன்னும் இதில் எனக்கு வேறு பல உபயோகங்களும் இருக்கின்றன” (திரு குர்ஆன் 20: 17, 18.) என்று வகை வகையாகப் பல விடைகளளித்தீர்களே! அஃது என்ன!”

பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்களுடைய மகத்துவத்தையும், தனிப்பெரும் மாண்பையும், கலீலுல்லா(ஹ்)வும், கலீமுல்லா(ஹ்)வும், ரூஹுல்லா(ஹ்)வும் (நபிமார்களான இப்ராஹீமும், மூஸாவும், ஈஸாவும்) கீழே தரையில் அமர்ந்திருக்க எம் பெருமானார் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் அற்புதக் காட்சியையும் நான் நினைத்துப் பரவசமடைந்திருக்கையில் நான் திடுக்கமடைந்து விழிக்கும்படியாக ஒரு மனிதர் என்னை மிதித்துவிட்டார். திடுக்கிட்டு விழித்தேன். யாரோ ஓர் ஆள் நின்றாற்போலிருந்தது. பின்பு அவர் மறைந்து விட்டார். அந்த மனிதரை இதுவரை நான் காணவே இல்லை. (தப்ஸீர் ரூஹுல் பயான்-முதல் பாகம்-பக்கம் 230-ல் உள்ள விவரம் இது.)

இத்தகைய பெருமைக்கு உரிய இமாம் கஸ்ஸாலீ அவர்களுக்கு அளித்த ஆத்ம விகாசத்தில். ஒரு சிறிதேனும் ஏழையர்களான நமக்கும் எல்லாம் வல்ல ஹக்கு ஸுப்ஹானஹுவத் தஆலா தந்தருள்வானாக!

நவ்விர் இலாஹஸ்ஸமா
கல்பல் கரீபிகமா
நவ்வர்த்த கல்ப இமா
மின்னஸி கஸ்ஸாலீ!

யாரப்பி அஃதிலனா
இல்மன் வ பஹ்மன் கமா
வ அஃதைத்த யாரப்பனா,
லிஷ்ஷைகு கஸ்ஸாலீ!

எங்கள் இறைவனே,
இமாம் கஸ்ஸாலீயின் இதயத்தைத்
தெளிவாக்கித் தந்ததுபோல்
ஏழைகளாம் எங்கள்
இதயங்களையும் தெளிவாக்கியருள்!

சங்கை பொருந்திய ஷைகான
இமாம் கஸ்ஸாலீக்குத் தந்தது போல்
எங்களுக்கும் ஆத்ம விகாசிதமும்
அறிவும் தந்து கிருபை செய்!

(ஆமீன்)

R. P. M. கனி எழுதிய 'இமாம் கஸ்ஸாலீ' முற்றிற்று.

கஷ்புல் கஸ்ஸாலீ

இஃது இமாம் கஸ்ஸாலீ எழுதிய "கிதாபுல் கஷ்பி வத்தப்யீனி பீ குரூரில் கல்கி அஜ்மயீன்" (சகல சிருஷ்டிகளினதும் மதி மயக்கத்தைத் தெளிவாக்கி வெளிப்படுத்தும் நூல்)என்பதன் தர்ஜுமாவாகும். தர்ஜுமாச் செய்தவர் மௌலவி மூ. முஹம்மது ஹஸன் காதிரி அவர்கள்.

மொழிபெயர்ப்புரை

எனதன்பிற்குரிய பெரியார் கனம் அல்ஹாஜ் அ. வு. நூஹுத் தம்பி லெப்பை ஆலீம் அவர்களின் அருமைக் குமாரரும், எனது ஆரம்பக் கல்வி ஆசிரியர் கனம் அல்ஹாஜ் அப்துல் ஹைற ஆலீம் அவர்களின் சகோதரருமான அன்புநிறை சகோதரர் **அல்ஹாஜ் முஹம்மது மக்கி ஆலீம்** அவர்கள், ஐந்தாண்டுகளுக்கு முன்பு, இமாம் கஸ்ஸாலீயின் **'கிதாபுல் கஷ்பி வத்தப்யீனி பீ குரூரில் கல்கி அஜ்மயீன்'** என்ற அரபி நூலைப் பார்வை யிடும்படி தந்தார்கள். அந்த அருமையான நூலை ஆர்வத்தோடு பன்முறை படித்தேன். அஃது உயர்ந்த தத்துவ போதனைகள் நிறைந்த இதய சஞ்சீவியான நன்னூலாய் இருக்கக்கண்டேன்.

நெடுநாள் பிரயாசையோடு அதைத் தமிழில் மொழி பெயர்த்து **'கஷ்புல் கஸ்ஸாலீ'** என்ற பெயரில் உங்கள் சமூகம் அளிக்கிறேன். நமது அலட்சிய மனோபாவங் களை அப்படியே படம் பிடித்தாற்போலவும், உள்ளக் கிடக்கைகளையும், இதய நோய்களையும் நுண் கருவி களைக் கொண்டு சோதித்தாற் போலவும் இமாம் அவர்கள் நிதர்சனப்படுத்துகிறார்கள். நம்மை ஆலிம்கள், வணக்கஸ்தர்கள், சீமான்கள், ஞானிகள் என்று நான்கு வகையினராகப் பிரித்துக்கொண்டு, மதிமயக்கம், மறதி, மருட்சி, அகங்காரம், பொறுப்பின்மை முதலிய பொல் லாப் பிணிகள் நம்மை எவ்வாறு பீடித்துள்ளன என் பதைத் தெளிவுபடுத்துகிறார்கள். நாம் ஒவ்வொருவரை யுந்தான் நேரடியாகத் தாக்கிப் பேசுகிறார்களோ என்று நாம் கருதும் வண்ணம் நமக்கு உணர்ச்சியடி தருகிறார் கள். அவர்களின் கருத்து மாறு வண்ணம் கூடியவரையில் கவனித்து மொழிபெயர்த்துள்ளேன். குற்றங்குறை நீக்கி அன்பர்கள் வாசித்துப் பயனுற வேண்டுகிறேன்.

இந்நூலின் உரிமை பெற்று இதைப் பிரசுரிக்கும் அருமை சகோதரர் ஆர். பி. எம். கனி அவர்களுக்கும், மூல நூல் தந்துதவிய அல்ஹாஜ் முஹம்மது மக்கி ஆலிம் அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைச் செலுத்திக்கொள்கிறேன்.

தமியேனுக்குத் தனியன்புடன் அரபிக் கலாஞானம் போதித்த — போற்றுதலுக்குரிய உத்தம உஸ்தாது அல்ஆலி முல் பாஸில் முஹ்யித்தீன் தம்பி ஆலிமுல் முப்தி (ஸத்ரு முதர்ரிஸ் – மத்ரஸதுல் காதிரிய்யா – மஹ்ளரா) அவர்களுக்கு என் அன்புக் காணிக்கையாக இந்நூலைச் சமர்ப்பிக்கிறேன்.

இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) அவர்கள் பொருட்டால் இறைவன் நமது இதயங்களைத் தூய்மை பெறச் செய்து அவனுடைய சொந்த நல்லடியார்களின் கூட்டத்தில் நம்மைச் சேர்த்தருள்வானாக! ஆமீன்.

காயல்பட்டினம்,
21—7—'54.

முஹம்மது ஹஸன்
(இபுனு முஹம்மது மூஸா ஸாஹிபு)

மானிடர் தம் மயக்கம்

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனு மாகிய அல்லா(ஹ்)வின் அனுக்கிரகம் முன்னிற்க. எங்கள் அதிபர், இறையருள் தூதர், சிருஷ்டிகளில் சிரேஷ்டர், முஹம்மது முஸ்தபா (ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம்) அவர்கள்பாலும், அவர்களின் உற்றார், உறவினர், உயர் சகாக்கள்பாலும் ஸலவாத் என்னுங் கருணையும் ஸலாம் என்னும் ஈடேற்றமும் என்றென்றும் நிலவுக!

சிருஷ்டி, சேதனம் அசேதனம் என இரு வகைப் படும். சேதனம் விதிவிலக்குக்கு உட்பட்டுப் பகுத்தறிவு பெற்ற பிராணிகள், விதிவிலக்குக்கு உட்படாத பகுத்தறி வற்றவை என இரு வகைப்படும்.

இறைவன், தன்னை வழிபட்டு வணங்குவதற்குரிய அழைப்பை விதிவிலக்குக்கு உட்பட்ட பகுத்தறிவு பெற்ற இனத்தை நோக்கியே விடுத்தான். அவ்வண்ணம் தன் ஆக்ஞைக்குச் செவ்வனே கட்டுப்பட்டு வழிபட் டோருக்குத் தவாப் என்னும் நற்கூலி தருவதாக வாக்களித் தான்; அதற்கு மாறாக நடக்கக் கூடாது எனக் கூறி அவ் வாறு மாறு செய்தோருக்கு அதாப் என்னும் கடுந்தண் டனை உண்டு என்று எச்சரித்தான். விதிவிலக்கில்லாத இரண்டாவது இனத்தை நோக்கி இவ்வாறு அவன் இயம்பவில்லை.

விதிவிலக்குக்கு உரித்தான, முந்திய வகையினரான பகுத்தறிவு பெற்ற இனத்தார் விசுவாசி (மூமின்)கள், அவிசுவாசி(காபிர்)கள் என்று இரு வகைப்படுவர்.

விசுவாசி எனும் பிரிவார் வழிபட்டோர், மாறு செய்தோர் என இரு வகைப்படுவர். இவ்விரு வகை யினரும் அறிந்தார் (ஆலிம்), அறியாதார் (ஜாஹில்) என மேலும் இரு வகைப்படுவர்.

இறைவன் நாடிக் காத்துக் கொண்ட ஒரு சிலரைத் தவிர, மேற் கூறிய விசுவாசி, அவிசுவாசி ஆகிய அனைவரையும் **மதிமயக்கம்** எனும் வியாதி பீடித்தேயுள்ளது. இன்ஷா அல்லாஹ், அவர்கள் ஒவ்வொருவருடையவும் மதி மயக்கத்தின் இயல்பைத் தெளிவாக விளக்கிக் காட்டுகிறோம். தக்க சான்றுகளுடனும், நியாயப் பிரமாணங்களுடனும் சுருங்கக் கூறி விளங்கவைப்பதோடு, மனத்திற் படும்படியான சயிக்கினைகளுடன் தெளிவாக விளக்கஞ் செய்வோம். அல்லா(ஹ)வின் புறமிருந்தே யொழிய நல்லுதவிக் கட்டளை கிடையாது. எல்லாம் வல்ல அவன் எமக்கு நல்லுதவி புரிவானாக!

அவிசுவாசிகளை விலக்கிவிட்டால், மதிமயங்கிய விசுவாசிகளை **நான்கு** வகையினராகப் பிரிக்கலாம். அவர்கள் முறையே, **1. கற்றறிந்தோர் (ஆலிம்)கள் 2. வணக்கஸ்தர் (ஆபிது)கள் 3. பணக்காரர்கள் 4. ஞானி (ஸூபி)கள்** எனப்படுவர்.

காபிர்களின் மயக்கமும் சிகிச்சையும்

விசுவாசி(மூமின்)களான இவர்களை நோட்டமிடு முன், அவிசுவாசி(காபிர்)களின் மதிமயக்கத்தைச் சிறிது ஆராய்வோம்.

மதிமயங்கிய காபிர்கள் பூலோக வாழ்க்கைப் பற்றால் மதிமயங்கினோர், மதியை மயக்கிக் கலக்கும் ஷைத்தானைக் கொண்டு இறைவன் விஷயத்தில் மதிமயங்கினோர் என இரு வகைப்படுவர்.

"நாளைக்குக் கிடைப்பதாகக் கூறி எதிர்பார்க்கப் படும் பொருளைவிட, இன்று கைமேலுள்ள பொருள் சிலாக்கியமானது ; எனவே, இதோ கையும் மெய்யுமாய் ஆனந்தத்துடன் நாம் அனுபவிக்கும் இவ்வுலக இன்ப வாழ்வுதான், நாளைக்கோ வேறு எப்போதோ உண்டாகப்

போவதாகக் கூறிக்கொண்டிருக்கும் மறுமையின் வாழ்வைவிடச் சாலவும் சிறந்தது. ஏனெனில், பூலோக இன்பங்களை இதோ பிரத்தியட்சமாக அனுபவிக்கிறோம்; ஆனால், மறு லோக வாழ்வோ உண்டாகும் காலத்தில் தான் நிஜம்; ஆகவே, அது சந்தேகப் பொருள்தான். சந்தேகப் பொருளைவிடச் சந்தேகமற்ற பொருளல்லவா மேன்மையானது!'' என்று பூலோக வாழ்வில் பற்றுக் கொண்டு மதி கலங்கிய முதற் கூட்டத்தினர் கூறுவர்.

இவர்களின் இம்முடிவு முழு மோசமானது. இஃது இப்லீஸின் தவறான போக்கைப் பின்பற்றியதாயிருக்கிறது.

வானவர்(மலக்கு)கள் யாவரும் ஆதிபிதா ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்குச் சிரஞ்சாய்த்துக் கண்ணியமளித்த காலையில் இப்லீஸ் என்ன சொன்னான்?

"அவரைவிட நானே விசேஷமானவன். (அனைகைரும் மின்ஹு) நீயே என்னை நெருப்பினின்றும் படைத்தாய்; அவரையோ களிமண்ணினின்றும் படைத்தாய்'' (திரு குர்ஆன் 38: 76.) என்று அவன் கூறிக் கெட்டான். நெருப்பானது ஜோதி மயமான பொருளாயும் களிமண்ணானது இருள் மயமான பொருளாயும் இருப்பதால், தானே விசேஷமானவன் என்று வெளிப்பொருளை மட்டும் நோக்கி அவன் மதி கலங்கினான். அல்லா(ஹ)வின் ஏற்பாடுகளிலுள்ள தீர்க்கமான மிகச்சிறந்த அந்தரங்க அம்சங்களை அவன் உணரவில்லை. மதி மயங்கிய இவர்களின் போக்கும் இத்தகையதாகவே இருக்கிறது.

இத்தகைய மதிமோசத்துக்கு இரண்டு சாதனங்களைக் கொண்டு சிகிச்சை புரியலாம். அவை, ஈமானுடைய திட நம்பிக்கையும் ஆராய்ச்சிப் பூர்வமாய்க் காணும் உண்மையுமாம்.

முதல் வகையான "**ஈமானுடைய திட நம்பிக்கை**" விவரமாவது: அல்லா(ஹ்)வும், ரஸூலும் அருளியவை யனைத்தும் நூற்றுக்கு நூறு உண்மையென முற்றாய் நம்பி நிர்ணயங்கொண்டு, இம்மை மறுமை பற்றி அல்லாஹ் திரு குர்ஆனில் கூறியுள்ளவற்றை இதயப் பூர்வமாக ஒப்புகொண்டு விசுவாசிக்க வேண்டும். அதற்கு உதவக்கூடிய திரு குர்ஆன் வசனங்கள் சில வற்றின் கருத்து வருமாறு:

"உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பவை களெல்லாம் இவ்வுலக வாழ்க்கையிலுள்ள அற்ப சுகமும், அதனுடைய அலங்காரமும்தாம். (ஆனால்) அல்லா(ஹ்)விடத்திலிருப்பவை (தவாபு என்னும் நற்கூலி, சுவர்க்கானந்தம், இறைதரி சனம் முதலியவை)களோ மிக்க சிரேஷ்டமான வையும், நிரந்தரமானவையும் ஆகும். இதை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டாமா?" (28: 60)

"எனினும், நீங்களோ (மறுமையை விட்டுவிட்டு) இவ்வுலக வாழ்க்கையையே விரும்புகிறீர்கள். மறுமையின் வாழ்க்கைதான் மிகமிகச் சிரேஷ்ட மானதும் சாஸ்வதமானதுமாகும். நிச்சயமாக இது முன்னுள்ள வேதங்களிலும், இப்ராஹீம் மூஸா உடைய வேதங்களிலும் (கூறப்பட்டு) இருக்கிறது." (87: 16, 17, 18, 19.)

"நீங்கள் அறிபவர்களாயிருந்தால், அல்லா(ஹ்) வினிடத்தில் இருப்பதுதான் உங்களுக்கு மிகச் சிரேஷ்டமானதாகும் என்பதைக் கண்டுகொள்வீர் கள். உங்களிடமுள்ள (இம்மைப் பொருட்கள்) யாவும் செலவழிந்து போய்விடும்; அல்லா(ஹ்) விடத்திலுள்ளவை (மறுமைப் பொருட்)களோ சாஸ்வதமாக நிலைபெற்றிருக்கும்." (16: 95, 96.)

"பூலோக வாழ்வென்பது மருட்சியுண்டாக்கும் சுகமே தவிர வேறில்லை." (3: 185.)

"நிச்சயமாக (மறுமைபற்றிய) அல்லா(ஹ்)வுடைய வாக்குறுதி உண்மையானதாகும். ஆகவே, இவ்வுலக வாழ்க்கை உங்களை மயக்கிவிட வேண்டாம். (இப்லீஸாகிய) மாயக்காரனும் அல்லா(ஹ்)வைப்பற்றி உங்களை மயக்கிவிடவேண்டாம்." (31:33.)

இவ்வசனங்களையும், பெருமானார் நாயகம் (ஸல்) அவர்களின் திருவாக்கியங்களையும் ஏற்று, விசுவாசித்து இம்மை வாழ்க்கையில் பற்றினால் உண்டான மதிமயக்கத்துக்கு அவர்கள் சிகிச்சை புரியவேண்டும்.

இரண்டாவது வகைச் சாதனமான, **ஆராய்ச்சிப் பூர்வமாய்க் காணும் உண்மையின்** விவரமாவது: "உலக வாழ்க்கை கைமேல் ரொக்கமாகவும், மறுமை வாழ்க்கை பிற்பட்ட தவணையாகவும் உள்ளது" என்று அவர்கள் கூறுகிறார்கள். அஃது உண்மையேயாயினும், "தவணையாக உள்ள மறுமையைவிட, ரொக்கமாக உள்ள உலக வாழ்க்கைதான் சாலவும் சிறந்தது" என்று அவர்கள் கூறுவதுதான் அபத்தமானதும் வழி பிசகிய கூற்றுமாகும்.

ரொக்கத்துக்குக் கிடைக்கும் பொருள், அளவாலோ, ஆதாயத்தாலோ தவணைக்குக் கிடைக்கும் பொருளுக்குச் சமமானதாகவோ, அல்லது அதைவிட உயர்வானதாகவோ, விசேஷமானதாகவோ இருந்தால் அவர்கள் கூறுவது சரிதான். ஆனால், ரொக்கத்துக்குக் கிடைக்கும் பொருள் தவணைக்குக் கிடைப்பதைவிட மிகமிகக் கடையான, அற்பமானதாகவல்லவா இருக்கிறது! அவற்றிடையே காணப்படும் தாரதம்மியம் மலைக்கும் மடுவுக்குமிடையேயுள்ளதாகவல்லவா இருக்கிறது! ரொக்கத்துக்குக் கிடைப்பதைவிடத் தவணைக்குக் கிடைக்கும் பொருள் பல கோடி மடங்கு மதிப்பும், உயர்வும்,

லாபமும், நிரந்தரமும் பெற்றதாகவல்லவா உள்ளது! ஆகவே, அவர்களின் அக்கூற்று எப்படிப் பொருந்தும்?

ரொக்கப் பொருளான இவ்வுலக வாழ்வு அழியக் கூடியது; ஆனால், தவணைப் பொருளான மறுமை வாழ்வோ அழிவில்லாதது. ஆகவே, அற்ப சுகந்தரும் இப்பூவுலக வாழ்வைவிட, நிரந்தர சுகந்தரும் பேரின்ப வீடான மறுமையே சாலவும் சிறந்தது என்ற உண்மையை இவர்கள் உணரவேண்டும்.

"உலக இன்பத்தைப் பிரத்தியக்ஷமாக அனுபவிக்கிறோம். மறுமை இன்பமோ வந்தால்தான் நிஜம். சந்தேகமுள்ள அம்மறுமை இன்பத்தைவிடக் கைக்கெட்டியிருக்கும் உலக இன்பமே போதும்" என்று அவர்கள் கூறுவதும் அபத்தமானதே. ஏனெனில், இறைவன்மீது நம்பிக்கை பூண்டுள்ள விசுவாசிக்கு மறுமைபற்றிக் கொஞ்சமும் சந்தேகங் கிடையாது. அசைவற்ற உறுதியுடன் மறுமையில் அவன் நம்பிக்கை கொண்டிருப்பான். இந்த நம்பிக்கை கீழ்க்காணும் இரு துறைகளில் உண்டாகும்: 1. நபிமார்களையும், ஆலிம்களையும் பின்தொடர்ந்து பூண்டுள்ள விசுவாச நம்பிக்கை (தக்லீதுடைய ஈமான்). இது நம்பிக்கைக்குரிய நாணயமான ஒரு சரியான வைத்தியரின் சொல், முறைகளை ஏற்று, அவர் கூறியபடி மருந்து சாப்பிடுவதற்கும், சிகிச்சை பெறுவதற்கும் ஒப்பாகும். 2. நபிமார்களுக்கு வஹீ மூலமும், அவ்லியாக்களுக்கு இல்ஹாம் மூலமும் உண்டான பிரத்தியக்ஷ ஞானத்தைப் படித்தறிந்து பூணும் நம்பிக்கை.

எம்பெருமானார் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் இம்மை, மறுமை சம்பந்தமான காரியாதிகளில், ஜிப்ராயீல் (அலை) என்ன சொன்னாரோ அதை அப்படியே நம்பும் நம்பிக்கை கொண்டார்கள் என்று எண்ணிவிட வேண்டாம். அவர்கள் நம்பிக்கை அவ்வாறானதன்று; பிறரைத் தொடர்ந்து அறியும் அறிவு அவர்களுக்கு

உகந்ததல்ல. அத்தகைய (மஃரிபத்துத் தக்லீத்) பின் தொடர்ந்தறியுந் தன்மையிற்பெறும் அறிவை விட்டும் அவர்களை அல்லாஹ்ற பாதுகாத்துக் கொண்டான். நிதரிசனமாகக் காணுத அத்தாட்சி சரியாகாது. புறக் கண்ணுல் சடப்பொருட்களைத் தெளிவாகக் காண்பது போல, அகக்கண்ணுல் சர்வ இரகசியங்களையும், எல்லா மறைவான பொருட்களையும் நாயகம் (ஸல்) கண்கண்ட காட்சியாய்த் தரிசித்தார்கள். எல்லாம் அவர்களுக்கு வெளியாயின; யாவற்றையும் அவர்கள் செவ்வனே ஸ்பஷ்டமாக அறிந்தார்கள்.

அல்லா(ஹ்ற)வையும், ரஸூலேயும், மறுமை வாழ்வை யும் மறந்து அல்லா(ஹ்ற)வின் ஏவல்களுக்கு மாற்றம் புரிந்து, உலக இச்சை என்னும் சாக்கடையில் புரண்டுழன்று, வெறும் வேஷத்தளவிலும், பெயரள விலும் விசுவாசிகளாயுள்ள மூமின்களும் இத்துறையில் அவிசுவாசிகளோடு சேர்த்தெண்ணப்படுகிருர்கள். பூலோக வாழ்வின் இச்சையானது விசுவாசிகளையும் அவிசுவாசிகளையும் பிணைத்து இவ்வண்ணம் மதிமயக்கி மறுமையை மறக்கச் செய்துவிட்டது!

இதுகாறும் நாம் கூறிவந்தது மதிமயங்கிய அவிசு வாசிகளில் முதல் வகையினரைப்பற்றி. அவர்களிலுள்ள இரண்டாம் வகையினரோ ஷைத்தானின் மாய வலையில் சிக்கி அல்லா(ஹ்ற)வின் விஷயத்தில் மதி மருட்சியடைந் துள்ளனர். மறுமையில் நம்பிக்கை பூண்ட அவர்கள், "அப்படியே மறுமை என்று ஒன்று வந்து அல்லாஹ்ற எழுப்புவதாலுல் தாராளமாக எழுப்பட்டுமே! மற்றவர் களைவிடப் பிரதானமாக எங்களையே இறைவன் எழுப் பட்டுமே" என்று கூறுகிருர்கள்.

இத்தகைய மருட்சியுடைய ஒருவனின் போக்கு எப்படிப்பட்டதென்று திரு குர்ஆன் 'அல் கஹ்பு' அத்தி யாயத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. சொத்து, சுகம்

ஏராளமாகப் பெற்று, சுபிட்சமுடன் உலகில் வாழ்ந்த அவன், அதன்மூலம் மதிமயங்கிக் கர்வங்கொண்டு, தன் நண்பனைநோக்கி,

> "(நான் அனுபவித்து வரும் இந்த ஆஸ்தி, பூஸ்த்தி ஆகிய) இவை ஒரு காலத்திலும் அழிந்து விடுமென நான் நினைக்கவில்லை. மறுமை ஏற்படும் என்றும் நான் நம்பவேயில்லை. அப்படியே ஒருக் கால் (தப்பித் தவறி ஏற்பட்டு) என்னிறைவனிடம் நான் கொண்டு போகப்பட்டாலும், இங்கிருப்பதை விட அங்கு நான் மேலானவனாக இருப்பதையே காண்பேன்" என்று கூறினான். (18 : 35, 36).

கெட்ட இப்லீஸின் கோணலான யோசனைகளாலும், பித்தலாட்டத்தாலும்தான் இத்தகையவர்கள் இவ்வாறு முழு மோசம் போயினர்.

மேலும், அவர்கள் உலகத்தில் தாங்கள் உல்லாசமாக அனுபவித்துவரும் இன்ப வாழ்வை நோட்டமிட்டுப்பெருமிதங்கொள்கிறார்கள். தாங்கள் ஆண்டவனுக்குகந்த நல்லடியார்களாய் இருப்பதனால்தான் குறைவில்லாச் செல்வத்தையும் சம்பத்தையும் அவன் தங்களுக்குத் தந்தருளியிருக்கிறான் என்றும், எனவே, அத் தன்மையிலேயே மறுமையிலும் அவன் தங்களுக்கு அனுகூலம் புரிவான் என்றும் அவர்கள் மனப்பால் குடிக்கிறார்கள்.

மேலும், அவர்கள் தங்களின் அந்தஸ்துபற்றித் தாங்களே தீர்மானித்துக்கொள்கிறார்கள். பூலோகத்தில் தாங்கள் அக்கிரமக்காரர்களாகவும் இறைவனுக்கு மாறுசெய்வோராகவும் இருக்கும் நிலைமையில் தங்களுக்கு எவ்விதத் தண்டனையையும் இறைவன் அளிக்கவில்லை யாகையால், மறுமையிலும் தங்களுக்கு எத்தகைய வேதனையையோ தண்டனையையோ அவன் தரமாட்டான் என்று எண்ணிக்கொண்டு, "நாங்கள் கூறுகிற (இறை

வனுக்கு மாற்றமான இத்தகைய) மொழிகளைக் கொண்டு அல்லாஹ் எங்களைத் தண்டிக்கட்டுமே (பார்ப்போம்)!" (58 : 8) என்று நெஞ்சழுத்தத்தோடு பேசுகிறார்கள்.

மேலும் இவர்கள் தங்கள் அந்தஸ்துடன் விசுவாசிகளான மூமின்களின் அந்தஸ்தை ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். தாங்கள் சௌபாக்கிய செல்வத்தில் மூழ்கித் திளைப்பதையும் மூமின்கள் கஷ்டத்திலும் வறுமையிலும் வாடி வதங்குவதையும் காண்கிறார்கள். எனவே, அவர்கள் மூமின்களைப் பரிகசித்து, "ஓஹோ, அல்லாஹ் (தனது அன்பிற்குகந்த நல்லடியார்களென்று) நமது மத்தியில் (சிறப்பாக்கி வைத்து) உதவிய மாந்தர்கள் இவர்கள்தாமோ ?" (6 : 53) என்று கேட்கிறார்கள். "மேலும், அவிசுவாசிகள் மூமின்களை நோக்கி, (இவர்களின் மார்க்கம்) உண்மையானதாய் இருந்தால் நாங்கள் அதை அடைவதற்கு முன் இவர்கள் முந்திக்கொண்டு அதை அடைந்திருக்க மாட்டார்கள் என்றும் கூறுகிறார்கள்." (46 : 11.)

"அந்த மூமின்களே தம்மை நல்லடியார்களாய்க் கருதிக் கொள்கிறார்கள். தாங்கள் ஆண்டவனின் அன்புக்கு உரித்தானவர்கள் என்றும் எண்ணிக் கொள்கிறார்கள். ஆனால், உலகில் சர்வ சௌபாக்கியங்களும் எங்களுக்கல்லவா கிட்டுகின்றன ! அவர்களுக்கு அவ்வாறு யாதும் இல்லையே ! உலக போகபோக்கியங்களனைத்தையும் அல்லாஹ் எங்களுக்கே அள்ளித் தருகிறான். காரணம் என்ன தெரியுமா ? நாங்கள் அவன் அன்புக்குப் பாத்திரமானவர்களாயிருக்கிறோம் ; ஆகவேதான், அவ்வாறு தருகிறான். அன்பளிப்புக் கொடுப்பது அன்பன்தான். எங்கள்மீது அவனுக்கு அன்பு இருக்கிறது; எனவே, இவ்வுலக இன்பங்களையெல்லாம் எங்களுக்கு ஈந்து பேருதவி புரிகிறான்" என்று இம்மருட்சியாளர்கள் சூளுரைக்கிறார்கள். ஆனால், உண்மை அஃதன்று.

இறைவன் அவர்களுக்குச் சொத்து, சுகம், மனை, மக்கள், ஆஸ்தி முதலிய உலக சுகானுபவங்களனைத்தையும்கொடுத்திருப்பதென்னவோ உண்மைதான். அவற்றை அவன் கொடுத்திருப்பது அவர்கள் எண்ணியதுபோல் அன்பளிப்பாகவன்று; தன்னுடைய பலப் பரீட்சையைக் காட்டுவதற்காகவேதான் எதை அன்பளிப்பு என்று அவர்கள் இறுமாந்திருக்கிறார்களோ அதுவே அவர்களின் நாசத்துக்குக் காரணமாகிவிடும்.

இதையுணராது இறைவனின் விஷயத்தில் அவர்கள் மதிமருண்டு போயினர்.

இதனால்தான், "நீங்கள் எவ்வாறு வியாதியஸ்தரை ஆகாரம், பானம் வகைகளில் பத்தியம் பேணிப் பாதுகாத்துத் தடுக்கிறீர்களோ அவ்வாறே, அல்லா(ஹ்)வும் தன் உண்மை விசுவாசியான நல்லடியானை உலக ஆசாபாசங்களிருந்தும் பாதுகாத்துத் தடுத்துக் கொள்கிறான்" என்று நபி நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள்.

இக்காரணம் பற்றியே, அகப்பார்வை பெற்ற பெரியார்கள் தம்மிடம் இம்மையின் செல்வம் வந்தடைந்த காலை கவலையுற்றனர்; ஏழ்மையான வாழ்வு வந்தபோது பெருமகிழ்வடைந்து, "இதுவே நல்லடியாருக்குரியது! இந்நற்பரிசு கொண்டு சோபனம், சோபனம்!" என்று வாழ்த்தினர்.

இவ்வுண்மையை விளக்கும் திரு குர்ஆன் ஆயத்துகளின் கருத்து வருமாறு:

> "ஆகவே, இறைவன் மனிதனைச் சோதித்து (பெரும் ஐஸ்வரியங்கள், சொத்து, சுகங்களை யீந்து உலக வாழ்வில்) அவனுக்கருள்புரிந்து, அவனைக் கண்ணியப்படுத்தினால், என்னுடைய இறைவன் என்னைக் கண்ணியப்படுத்தியுள்ளான் என்று (பெருமையாகக்) கூறுகிறான்."

"ஆயினும், (இறைவன்) அவனைச் சோதித்து (அவனுக்கு ஏழ்மையான வாழ்வையளித்து) அவனுடைய பொருளைக் குறைத்துவிட்டால் எனதிறைவன் என்னை இழிவுபடுத்திவிட்டான் என்று (குறை) கூறுகிறான்." (திரு குர்ஆன். 89 : 15, 16.)

"(நபியே) நீர் அவர்களைச் சிலகாலம் வரையில் அவர்களுடைய மயக்கத்தில் ஆழ்ந்து கிடக்க விட்டு விடும். நாம் அவர்களுக்குச் சந்ததிகளையும், பொருட்களையும் கொடுத்துவருவதைப் பற்றி அவர்கள் என்ன நினைத்துக்கொண்டனர்? இதனால் நிச்சயமாக நாம் அவர்களுக்கு நன்மை செய்வதில் தீவிரமாய் இருக்கிறோம் என்று நினைக்கின்றனரா? அவ்வாறன்று! (அஃது எதற்காக என்பதை) அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை." (23: 54, 55, 56.)

"ஆகவே, எம்மையும், இவ்வசனங்களைப் பொய்யாக்கும் அவர்களையும் விட்டுவிடும்! அவர்கள் அறியாத விதத்தில் அதிசீக்கிரத்தில் அவர்களைக்கஷ்டத்தில் சிக்கவைப்போம். (ஆடுகின்ற ஆட்டமெல்லாம் ஆடட்டும் என்று சில காலம்) அவர்களை விட்டுவைப்போம். நிச்சயமாக நம்முடைய சூழ்ச்சி மிக்க பலமானது (அவர்கள் தப்பவே முடியாது)." (68: 44, 45.)

"ஆகவே, தங்களுக்கு உபதேசிக்கப்பட்டதை அவர்கள் மறந்த காலையில் (உலக வாழ்வின்பத்தின்) சகல வஸ்துவினுடைய வாயில்களையும் நாம் திறந்தருளினோம். அவ்வாறு அருளப்பட்டதைக்கொண்டு சந்தோஷமடைந்து கொண்டிருப்பார்கள்; அப்போது திடீரென்று நாம் அவர்களை (அவர்களின் நிலைமையை அடியோடு மாற்றி, வேதனை கொண்டு) பிடிப்போம். அப்போது, அவர்கள் கைசேதப் பட்டவர்களாயிருப்பார்கள்." (6: 44.)

இத்தகையஎச்சரிக்கைகளை விடுக்கும் திரு குர்ஆன் வசனங்கள் ஏராளமாயுள்ளன. இறைவனுடைய சோதனைகளைப் பற்றி மதிமயங்கி நிர்ப்பயமாயிருப்பவர்கள் அவனைக் கொண்டு விசுவாசம் பூண்டவர்களாயிருக்க முடியாது.

இவ்வாறான படுமோச மதிமயக்கத்துக்கு மூல காரணம் அல்லா(ஹ்)வைப் பற்றியும் அவனுடைய தன்மைகளைப் பற்றியும் சரிவர அறியாதிருப்பதுவேயாகும். அல்லா(ஹ்)வை உண்மையில் உணர்ந்தவன் அவனுடைய உபாயமான சோதனைகளைப் பற்றி அச்சமற்றிருக்க மாட்டான்; பிர்அவுன், ஹாமான், நம்ரூது முதலியவர்களுக்குத் திரவியம், சொத்து, அரசாட்சி முதலியவைகளை அல்லாஹ் ஏராளமாக அளித்து இறுதியில் அவர்களை எப்பாடு படுத்தினான் என்பதையும் அவன் மறந்திருக்க மாட்டான். தன்னுடைய உபாயம் (மக்ரு) பற்றிச் சர்வ ஜாக்கிரதையோடிருந்துகொள்ளும்படி இறைவன் எச்சரித்துள்ளான்.

அல்லாஹ் திரு குர்ஆனில் அருளியுள்ளான்:

"நகரவாசிகள்-அவர்கள் நித்திரை செய்தவர்களாயிருக்கிற நிலைமையில், அவர்களுக்கு நம்முடைய வேதனை இரவில் வருவதைப் பற்றி அச்சந் தீர்ந்து விட்டர்களா? நகரவாசிகள்-அவர்கள் விளையாடுபவர்களாயிருக்கிற நிலைமையில் நமது வேதனை பட்டப்பகலில் அவர்களிடம் வருவதைப் பற்றி அச்சந்தீர்ந்து விட்டார்களா? அல்லா(ஹ்)வின் திட்டத்தைப் பற்றி அவர்கள் அச்சந்தீர்ந்து விட்டார்களா? ஆகவே, நஷ்டவாளர்களான கூட்டத்தாரைத் தவிர ஏனையோர் அல்லா(ஹ்)வின் திட்டத்தைப்பற்றி அச்சந்தீரமாட்டார்கள்." (7: 97, 98, 99.)

"இன்னும் (அவிசுவாசிகளாகிய) அவர்கள் திட்டமிட்டார்கள் ; அல்லா(ஹ்)வும் திட்டமிட்டான். மேலும், அல்லாஹ் திட்டமிடுபவர்களில் சிறந்தவன்." (3: 53).

"(நபியே!) நிச்சயமாக (உமக்கு விரோதமாக) அவர்கள் ஒரு திட்டமிடுகிறார்கள். நானும் (அவர்களுக்கு விரோதமாக) ஒரு திட்டமிடுவேன். ஆகவே, இந்நிராகரிப்போருக்கு (அது வரையில்) நீர் அவகாசமளியும் ; சொற்ப அவகாசம் அளியும்." (86: 15 – 17.)

எனவே, அல்லா(ஹ்)வின் புறத்தால் எவருக்காயினும் சுகபோகங்கள் வந்திடுமாயின் அவற்றைக்கொண்டு மதி மருளலாகாது ; ஏனெனில், அச்சுகபோகங்களே பழி தீர்க்கும் தண்டனையாயுமாகிவிடலாம். ஆகவே, அவை பற்றி எச்சரிக்கையுடனிருக்கக் கடவோமாக!

மூமின்களின் மதிமயக்கம்

இனி, விசுவாசிகளின் (மூமின்களின்) மதிமயக்கம் பற்றி ஆராய்வோம். அவர்களில் பாவிகளான கூட்டத்தினர், "அல்லாஹ் பாவங்களை மன்னிப்பவன் (கபூர்) ஆகவும், நிகரில்லாத அன்புடையோன் (ரஹீம்) ஆகவுமிருக்கிறான். ஆகவே, அவனுடைய அன்பு நிறைந்த பாவமன்னிப்பு எங்களுக்கு உண்டென ஆதரவுவைக்கிறோம்" என்று வாய்மொழிகள் கூறி, அதையே ஊன்றிப் பிடித்துக்கொண்டு எத்தகைய புண்ணிய அமல்களும் செய்யாமல் வீண் காலங் கழிக்கிறார்கள்.

அல்லா(ஹ்)வின் அன்பையும், அருளையும் அவர்கள் எதிர்பார்ப்பது போற்றத் தக்கதே! அல்லா(ஹ்)வின் கருணை கங்குகரை யில்லாதது; அவன் அருள் விசாலமானது; அவனுடைய கிருபா சமுத்திரம் எங்கும் வியாபித்துள்ளது; அவனுடைய கொடை நிகரில்லாதது. உண்மைதான். ஆனால், ஈமானுடைய அம்சத்திற்கொப்ப ஒழுகி, நற்கருமங்கள் புரிந்து, தான தருமங்கள், பரோபகாரங்கள் செய்து புண்ணியந் தேடியல்லவா அல்லா(ஹ்)வின் அருளையும் அன்பையும் நாடி எதிர் பார்க்கவேண்டும்! அவ்வாறின்றி, நற்கருமமேதும் புரியாது நடத்தையெல்லாம் மாற்றமானதாகவும், பாவமானதாகவும் இருக்க, அல்லா(ஹ்)வின் கருணையை எதிர்பார்ப்பதாக வாயளவில் கூறுவதால் என்ன பயன்? அல்லா(ஹ்)வை ஓர்மைப்படுத்தி வணங்கும் மூமின்களாகிய நாம் இயன்ற அளவு நற்கருமங்கள் புரிந்து அல்லா(ஹ்)வின் அருளையும் அன்பையும் தேடவேண்டாமா?

இத்தகைய மதிமயக்கமுடையோர் இவ்வாறுவதற்கு மூல காரணம், "எங்கள் தாய், தந்தை, மற்றும்

மூதாதையர் அல்லா(ஹ்)வுக்கு உவந்த நல்லடியார்களா யிருந்தனர்; ஆகவே, அவர்களின் சந்ததியினரான நாங்களும் அல்லா(ஹ்)வின் அன்பிற்கும், அருளுக்கும் உரித்தானவர்கள்தாம்" என்று இவர்கள் கூறிக்கொள் வதுதான். இவர்களின் அந்தத் தாய் தந்தையர்களும், மூதாதையர்களும் நற்கிரியைகளாலும், இறைபக்தி யாலும், வணக்கத்தாலும், ஒழுக்கத்தாலும் அல்லா(ஹ்) வின் அருளுக்குப் பாத்திரராயினர். ஆனால், இவர்களோ அவர்களின் நன்னடத்தைக்கும் ஒழுக்கத்துக்கும் நேர் மாற்றமாகவல்லவோ நடந்து வருகிறார்கள்!

"தன்னுடைய நேசன்மீது அன்பு கொண்டுள்ள ஒருவன், அவனை நேசிப்பது போலவே அவனுடைய மக்க ளையும் நேசிப்பான். இது சர்வ சாதாரணமான விஷயம். இவ்வாறே, உங்கள் மூதாதையர்களை, பெற்றோர்களை நேசித்தது போலவே, அல்லாஹ் உங்களையும் அன்பு கொண்டு நேசிப்பான். ஆகவே, நீங்கள் புண்ணிய கருமங்கள் புரியவேண்டுமென்ற அவசியமில்லை" என்ற கோணலான அபிப்பிராயத்தை ஷைத்தான் அவர்களுக்கு மினுக்கிக் காட்டுகிறான். இதில் அவர் கள் சிக்கி மதிமயங்கிவிட்டனர்; இதன்மூலம் அல்லா(ஹ்)வின் விஷயத்தில் மதிமருண்டுவிட்டனர்.

ஒரு நபியின் மைந்தரின் கதி என்னவாயிற்றென் பதை இவர்கள் உற்றுணர்ந்து பார்க்கவேண்டாமா? நூஹு நபி (அலைஹி) அவர்கள், தமது புத்திரரைப் பிரளயத்தினின்றும் காப்பாற்றிக்கொள்வதற்காகக் கப் பலில் தன்னோடு ஒன்றாகக் கூட்டிச் செல்ல ஆசித்த போது, அப்புத்திரன் காபிராய் இருந்தமையால், அல்லாஹ் அதற்கு அனுமதிக்காமல், அவர்களின் சமூ கத்தாருக்குக் கொடுத்ததைவிட அதிகச் சங்கடத்தை அப்புத்திரருக்கு அளித்துப் பிரளயத்தில் மூழ்கி மாளச் செய்தானன்றோ!

மேலும், நமது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் தங்கள் அருமை மாதாவின் புனித சமாதியைத் தரிசனம் (ஸியாரத்)செய்யவும், அவர்களுக்காகப் பாவ மன்னிப்புக் கோரிக்கை (இஸ்திக்பார்) செய்யவும் இறைவனிடம் அனுமதி கோரியபோது, தரிசனம் (ஸியாரத்) செய்ய மட்டுமே அனுமதி கிடைத்தது; பாவமன்னிப்புக் கோரிக்கைக்கு அனுமதி கிடைக்கவில்லையே!

மதிமயக்கங்கொண்ட இக்குழுவினர் கீழ்க்காணும் திரு குர்ஆன் வசனங்களையும் மறந்தே விட்டார்கள்:

"மேலும், ஒவ்வோர் ஆத்மாவும் தன்னுடைய பாவத்தைத் தானாகவேயன்றிச் (வேறு யாராலும்) சம்பாதிக்காது. ஓர் ஆத்மாவினுடைய பாவச் சுமையை மற்றோர் ஆத்மா சுமக்காது." (6: 165.)

"மனிதனுக்கு அவன் செய்த வினையேயன்றி வேறொன்றும் கிடைக்காது." (53: 39.)

தமது தாய், தந்தை, மூதாதையரின் தெய்வ பக்தியின் பொருட்டால் தானும் ஈடேற்றம் பெறலாம் எனக் கருதுவது, தமது தந்தை ஆகாரம் புசித்ததால் தமது பசியடங்கிவிடும், தமது தந்தை தண்ணீர் அருந்தியதால் தம்முடைய தாகம் தீர்ந்துவிடும் என்று எண்ணுவது போன்றதுதான். இறைபக்தி (தக்வா) என்பது ஒவ்வொருவரையும் தனித்தனியே பற்றிப்பிடித்துள்ள தவிர்க்க முடியாத கடமை (பருலு ஐன்) ஆகும். எனவே, தந்தையின் பக்தியில் தனயனுக்கும் பங்கு உண்டென்று நினைத்து வாளாவிருப்பதெப்படி?

தெய்வபக்திக்கும், மற்றும் நற்கிரியைகளுக்கும், நற்கூலியளிக்கும் தீர்ப்பு நாளன்று இவர்கள் எங்கோ, இவர்களின் தாய், தந்தை, மூதாதையர்கள் எங்கோ?

"அந்நாளில் மனிதன் தன் சகோதரனை விட்டும், தன் தாயை விட்டும், தன் தகப்பனை விட்டும், தன்

மனைவியை விட்டும் தன் மக்களை விட்டும் வெருண் டோடுவான். அந்நாளில், அவர்களில் ஒவ்வொரு வருக்கும் மற்றவர்களைக் கவனிக்க முடியாதவாறு சொந்தக் கவலை ஏற்பட்டுவிடும்.'' (80: 36, 37.)

ஷபாஅத்து என்னும் பரிந்துபேசலின் வாய்ப்பு அல்லாஹ் நாடிய ஒரு சிலருக்கேயுண்டு. அதுவும் அல்லா(ஹ்)வின் விருப்பப்படியேதான் நடக்கும்.

"தன் ஆத்மாவைத் தனக்கு வசப்படுத்தி அதைப் பணியச் செய்து, மரணத்துக்குப் பின் மறுமையில் தனக்கு உதவும்படியான நற்கிரியை அமல்கள் புரிந் தவனே விவேகம் படைத்த வலியவன். தன் ஆத்மா வுக்குத் தான் அடிமையாகி அதன் கெட்ட இச்சைக்கு வசப்பட்டு, (அமல் ஏதும் புரியாமல்) அல்லா(ஹ்)வின் அருளைப் பெறலாம் என்று வெறுமனே மேலெண்ணம் வைப்பவன் அவிவேகியான அசக்தன்'' என்று நாயகம் (ஸல்) நவின்றுள்ளதையும், கீழ்க் காணும் திரு குர்ஆன் வசனங்களையும் இம்மருட்சியாளர்கள் மறந்தேவிட்டனர்:

> "ஈமான் கொண்டோரும், சுய பதி துறந்து ஹிஜ்ரத்துச் செய்து அல்லா(ஹ்)வின் பாதையில் மார்க்க யுத்தம் (ஜிஹாது) புரிந்தோரும் ஆகிய இவர்கள்தாம் அல்லா(ஹ்)வின் கிருபையை ஆதரவு வைக்கிறார்கள். அல்லாஹ் (இவர்களுக்கு இவர்கள் ஆதரவு கொண்டதற்கொப்ப) பிழைபொறுப்பவன், கிருபை செய்பவன்.'' (2: 218.)

> "அவர்கள் செய்த நற்காரியங்களுக்குத் தக்க சம்மானம்'' (32: 17.)

எனவே, நற்காரியங்கள் முற்படுத்தப்பட்டிருந் தாலன்றி ஆதரவுவைக்க இடமில்லை. அவ்வாறான நற்

காரியங்கள் எதுமில்லாமல் வெறுமனே ஆதரவு மட்டும் கொள்வது பேதமையும் மதிமயக்கமுமன்றோ! இதிலே ஆட்சேபமில்லை.

நற்கிரியைகள் புரிந்துள்ள நல்லடியார்களின் இதயத்தில் (நாம் அல்லா(ஹ்)வின் திருப்திக்குகந்த வண்ணம் நற்கிரியைகள் புரிந்தோமோ இல்லையோ என்று) கிளம்பும் அச்சம் என்ற அக்கினியையும், (நாம் புரிந்த கருமங்கள் பயனுடையவையோ அல்லவோ என்றுண்டாகும்) சந்தேகம் என்ற நெருப்பையும் தணிக்கும் ஒரு குளிர்ச்சிச் சாதனமாகவே நல்லாதரவு (ரஜாஉ) தரப்பட்டுள்ளது. நற்கிரியைகளை ஆர்வத்தோடு மேன்மேலும் செய்துவரவேண்டும் என்பதற்காகவே உற்சாகமூட்டும் வண்ணம் 'நல்லாதரவு' பற்றித் திரு குர்ஆனில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதேயன்றி, இறுமாப்பிலும் சோம்பலான மதிமயக்கத்திலும் ஆழ்ந்து அமல் செய்யாது கைகட்டி வாளாவிருப்பதற்காகவன்று.

இவர்களைப் போன்றே இன்னொரு கூட்டத்தினரும் மதிமயங்கியுள்ளனர். நன்மையும், தீமையும் அவர்களிடம் கலந்திருக்கும்; ஆனால், நன்மையைவிடத் தீமைதான் மிகைத்திருக்கும். இந்நிலையிலும் தங்களுக்குப் பாவ மன்னிப்புக் கிடைக்கவே செய்யும் என்று அவர்கள் எண்ணியிருப்பார்கள். அப்பப்ப, என்னே அவர்களின் அறியாமை!

அக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவன் ஹலாலும், ஹராமும் சேர்ந்த சில காசுகளைத் தருமம் செய்கிறான். ஆனால், இவன் ஊராரிடம் அபகரித்த பணமும் ஹலாலற்ற வழிகளில் சம்பாதித்ததும் அவற்றைவிடப் பல மடங்கு அதிகமானவை. எனினும் அந்தச் சொற்பக் காசுகள் தர்மம் கொடுத்ததே போதும் என்று எண்ணியிருக்கும் இவன் போக்கு, தராசின் ஒரு தட்டில் பத்துக் காசுகளையும், மற்றொரு தட்டில் ஆயிரம் காசுகளையும் வைத்து

நிறுக்கும்போது பத்துக் காசுகள் வைக்கப்பட்ட தட்டுத் தான் அதிக எடை காட்டும் என்று வாதாடுபவ னின் மனப்போக்காகவே இருக்கிறது. இது முழு மூடத்தனமல்லாது வேறென்ன!

இக்கூட்டத்தில் இன்னொரு பிரிவினர் தமது பாவக் கிருத்தியங்களைவிடத் தமது நற்செயல்களே அதிகம் என்ற நினைவில் மதிமயங்கிக் கிடக்கின்றனர். இவர்கள் தாம் எத்தகைய பாவச் செயல்கள் புரிந்தாலும் அதைப் பற்றி மனத்தில் சீர்தூக்கிப் பார்க்காமல் தமது நன்மை களை மாத்திரமே நோக்கிப் பெருமிதமடைகிறார்கள்.

உதாரணமாக, இவர்களுள் ஒருவன் இரவிலும் பகலிலும் அல்லா(ஹ்)விடம் தினமும் பாவமன்னிப்புக் கோரி, நூறு அல்லது ஆயிரம் தடவை இஸ்திக்பாரோ அல்லது இறைவனின் தூய நாமத்தைப் போற்றித் தஸ்பீஹோ செய்து கொண்டே இருப்பான். மற்ற நேரத்திலோ, சகோதர முஸ்லிம்களைப் பற்றி அவதூறும், பொல்லாங்கும், புறமும் பேசுவான்; அல்லா(ஹ்)வின் பொருத்தத்துக்கு மாற்றமான வீண் விஷயங்களைக் கூறித் திரிவான். இவன் தான் ஓதிவரும் இஸ்திக்பாருக்கும், தஸ் பீஹுக்கும் எவ்வளவு கூலி கிடைக்கும் என்று அதைக் கணக்கிடுவானேயன்றி, அல்லா(ஹ்)வின் வெறுப்புக்குப் பாத்திரமான பொய்யர்கள், பொல்லாங்குக்காரர்கள், கோளர்கள், வேஷதாரி (முனாபிகு)கள் ஆகியவர்க்குரிய தண்டனை எவ்வளவு கடுமையானது என்பதைச் சிறிதே னும் நினைத்துப் பார்ப்பதே இல்லை. இவன் போக்கு அந்தகாரத்தின் மூலபீடமாகும். அல்லா(ஹ்) வைத் தஸ்பீஹு செய்துகொண்டிருப்பதைவிடப் பாவ கரமான பேச்சை விட்டும் இவன் தன் நாவைப் பேணிப் பாதுகாப்பது நலமாகும்.

இத்தகைய மதிமயக்கத்தை விட்டு விலகும் உணர் வைத் தந்து, நம்மை நல்வழியில் திருப்பி உதவும் அல்லா(ஹ்)வை நாம் நன்றியுடன் போற்றுவோமாக!

ஆலிம்களின் மதிமயக்கம்

காபிர்களைத் தவிர, மூமின்களை நான்கு வகையின ராகப் பிரித்தோம். மூமின்களின் மதிமயக்கத்தைப் பற்றிப் பொதுவாகச் சில சொன்னோம். இனி அவர் களில் ஒவ்வொருவருடைய மதிமயக்கத்தையும் முறையே பார்க்கலாம். முதலாவதாக ஆலிம்கள் (கற்றறிந்தோர்கள்) பற்றி விவரிப்போம். இவர்களில் பலதரப்பட்டவர்கள் உண்டு.

ஒரு வகையினர் வருமாறு: மார்க்க சம்பந்தமான கேள்விகளிலும், சுருதி யுக்தி ஞானங்களிலும் நன்கு பயிற்சி பெற்றுத் தேர்ந்திருப்பார்கள். சதாவும் அவற் றின் விவாதத்திலும், விசாரணையிலும், சிந்தனையிலுமே ஆழ்ந்திருப்பார்கள். ஆனால், தங்கள் நடவடிக்கைகளில் குற்றமுள்ளோராயும், கண், காது, நாவு, கை, கால், மர்மஸ்தானம் முதலிய உறுப்புக்களைப் பாவங்களி லிருந்து பேணிக் காப்பாற்றாதோராயும் இருப்பார்கள். பேணுதலுடன் நற்கருமங்கள் செய்து அகத்தூய்மை பெறவேண்டும் என்று கொஞ்சமும் அவர்கள் கவலை கொள்வதில்லை.

"நாம் கல்வி, கலைகளில் முதிர்ந்து அறிவாளியாய் விளங்குகிறோம்; அல்லா(ஹ்)விடம் நமக்கு அலாதி யான பதவியுண்டு; கற்றறிந்த ஆலிமான நம்மை அவன் தண்டிக்கவோ, நமது நடவடிக்கைகளில் குற்றங் காணவோ மாட்டான்; ஆலிமான நமது சிபாரிஷ் கொண்டு மற்ற ஜனங்களுடைய பாவங்களையும் அல்லாஹ் மன்னிப்பான்" என்று கூறித் தம்மைத் தாமே மதித்து மதிமயங்கி யிருப்பார்கள்.

இவர்களின் மருட்சி பரிதாபத்துக் குரியது! உண்மை யான அறிவு பூண்டு, அகக்கண் கொண்டு இவர்கள் நோக்கினால் பின்வரும் யதார்த்தத்தைத் தெரிந்து கொள்வார்கள்:

அறிவு (இல்மு), நடவடிக்கை சம்பந்தப்பட்ட அறிவு, (இல்முல் முஆமலா), இறையருள் ஞான அறிவு (இல்முல் முகாஷபா) என இரு வகைப்படும். அல்லா(ஹ்)வையும் அவனுடைய வருணிப்பு (ஸிபத்து)களையும் அறியும் இரண்டாம் வகை அறிவு மஃரிபா என்றும் சொல்லப்படும்.

ஹலால் இன்னது, ஹராம் இன்னது, சற்குண ஆத்மாவின் அடையாளம் இன்னது, துற்குண ஆத்மாவின் அடையாளம் இன்னது என்பன போன்றவற்றைப் போதிப்பது இல்முல் முஆமலா ஆகும். இவ்வறிவைப் பெற்றுணர்ந்து அதற்கொப்ப நல்லமல்களைப் புரிந்து, தீமையிலிருந்து விலகி அகத்தூய்மை பெற்றுப் பூரணமான இறையருள் ஞான (ஹிக்ம)த்தை அடைவது தான் இல்முல் முஆமலாவின் நோக்கம்.

அந்நோக்கத்துக்கு முரணுகச் செயலாற்றும் மேற்கண்ட மருட்சியாளருக்கு ஒரு வைத்தியனை உபமானமாகக் குறிப்பிடலாம். அவ்வைத்தியனே வைத்திய சாஸ்திரத்தில் கைதேர்ந்தவன். ஆனால், அவனே நசலால் பீடிக்கப்பட்டவனுக இருக்கிறுன். வியாதிகளின் தன்மை என்ன, அவற்றுக்குரிய மருந்து எது என்பதெல்லாம் அவனுக்குத் தெரிந்திருந்தும் தன் நசலுக்கு ஔடதம் தயாரித்துச் சிகிச்சை செய்யாமலே இருக்கிறுன். பிறருக்கு வைத்தியம் செய்து மருந்துகள் கொடுத்துக் கொண்டு அதே சமயத்தில் தன் வியாதியை முற்ற வைத்துக்கொண்டிருக்கும் இவன், தன் நசலுக்கு மருந்து செய்து அதை உட்கொண்டு பிரயோகப்படுத்திப் பத்தியமும் பேணினுல்தானே அது நீங்கி இவன் சொஸ்தமடைய இயலும்! அவ்வாறின்றி ஔடதங்களின் விவரங்களை இவன் அதிகமும் அறிந்திருப்பதாலும், இவன் பெற்ற வைத்திய சாஸ்திர ஞானம் மூலம் மருந்துகளின் பெயர்களை நாவால் உச்சரித்து வானளாவ வர்ணித்துக்கொண்டிருப்பதாலும் இவன் வியாதி நீங்கிவிடுமா? இவ்வாறே

இதய வியாதி பெற்ற இம்மருட்சியாளர்களும் அவ்விதய வியாதியை நீக்கும் பரிகாரத்தைச் செயலளவில் மேற்கொண்டு அகத் தூய்மை பெற்றாலல்லாது இவர்களின் இதய வியாதி நீங்காது. இதுபற்றியே அல்லாஹ் திரு குர்ஆனில்,

> "எவன் (பாவங்களை விட்டும்) ஆத்மாவைப் பரிசுத்தமாக்கிக் கொண்டானோ அவன் நிச்சயமாகச் சித்தியடைந்துவிட்டான். எவன் அதனைப் (பாவத்தில்) புதைத்துவிட்டானோ அவன் நிச்சயமாக நஷ்டமடைந்து விட்டான்." (91: 8, 9.) என்றுரைத்துள்ளான்.

"எவன் ஆத்மாவைப் பரிசுத்தமாக்கிக் கொண்டானோ" என்று இறைவன் குறிப்பிட்டுள்ளானேயன்றிப் "பரிசுத்தப்படுத்தும் தன்மையைப் பற்றிப் பேசியும், எழுதியும் ஜனங்களுக்குப் போதித்தவன்" என்று குறிப்பிடவில்லை என்பதை இவர்கள் நன்றாக உணரவேண்டும்.

"கல்வி அதிகம் பெற்ற ஒருவன், (தான் பெற்ற கல்விக்குத் தக்க) ஒழுக்கத்துடன் நடந்து அதிகமான ஆத்ம விகாசம் அடையவில்லையெனின், அல்லா(ஹ்)வின் சமூகத்திலிருந்து அப்பால் விலகி அதிகத் தூரம் போகிறான் என்றே அர்த்தம் என்றும், "இறுதித் தீர்ப்பு (கியாம) நாளில் ஜனங்களிலெல்லாம் அதிகமான கடுந் தண்டனைக்கு உரியவன் தன்னிடம் ஏராளமான அறிவு குடிகொண்டிருந்தும் அதற்கொப்ப ஒழுகாத ஆலிம் (அறிஞன்) தான். இத்தகைய ஆலிமுக்குக் கொடிய தண்டனையுண்டு" என்றும் பெருமானார் (ஸல்) இயம்பியுள்ளார்கள். இவற்றையும் மேற்கண்ட மருட்சியாளர்கள் மதியாதிருக்கிறார்கள்.

இம்மையின் இச்சையும், ஆத்மாவின் துராசையும், உலகிலே சுகபோகந் துய்க்கவேண்டுமென்ற பாசமுந்தான்

இவர்கள் சீர்கேட்டுக்குக் காரணமாகும். நற்கிரியைகள் இன்றியே, மறுமையில் தங்கள் அறிவு தங்களை ஈடேற்றும் என்று இவர்கள் மனப் பந்தல் போடுகின்றனர். சந்தேக மின்றி, இவர்கள் மதிமயக்கத்தில் உறைந்துவிட்டனர். இவர்களைப் போன்ற நிலை நமக்கு ஏற்படாமல் ஆண்டவ னிடம் பாதுகாப்புத் தேடுவோமாக!

பிறிதொரு வகையினர் கல்வியில் தேர்ச்சியும், அமலில் ஈடுபாடும் உள்ளவர்கள். ஆனால், வெளிப்படையான (ளாஹிரிய்யத்தான) அமல்களைப் புரிவார்கள்; அதே போல வெளிரங்கமான பாவங்களை விட்டுப் பேணியு மிருப்பார்கள். எனினும், அந்தரங்கமான பேணுதலால் தங்கள் ஆத்மாவைச் சுத்தப்படுத்தவேண்டுமே என்ற கடமையை மறந்திருப்பார்கள். மேலும் அல்லா(ஹ்) விடம் வெறுக்கப்பட்ட மமதை, முகஸ்துதி, பொறாமை, தலைமைத்தன விருப்பம், பொருளாசை, சகபாடி, அண்டை அயலாருக்குக் கேடு நினைத்தல், பல தேசங் களிலும் தன் புகழ் பரவ வேண்டுமென்ற புகழ்ப் பிரியம் முதலிய துற்குணங்களை அவர்கள் தங்களின் இதயத்தி லிருந்து அகற்றமாட்டார்கள்.

"முகஸ்துதி (ரியாஉ) சிறிய ஷிர்க்கு ஆகும்", "விறகை நெருப்புத் தின்றுவிடுவதேபோல நன்மைகளைப் பொறாமை தின்றுவிடுகிறது", "கீரையை (மளமள வென்று) தண்ணீர் வளரச் செய்வது போலப் பொரு ளாசையும் புகழாசையும் இதயத்திலே, நயவஞ்சகத் தன்மையை வளரச் செய்கின்றன" என்பன போன்ற நாயகம் (ஸல்) அவர்களின் மணிமொழிகளை இவர்கள் மறந்திருப்பதே இவர்களின் மதிமயக்கத்துக்குக் காரண மாகும்.

"இறுதித் தீர்ப்பு நாளில் பொருளும் மக்களும் யாதொரு பயனுமளிக்கா. ஆயினும், **பரிசுத்த இத யத்துடன்** அல்லா(ஹ்)விடம் வருபவன்தான்

(ஈடேற்றமடைபவன்.)" (26 : 88, 89.) என்ற திரு குர்ஆன் வசனத்தையும் இவர்கள் மறந்தனர்.

இவர்கள் தங்கள் ஆத்ம சுத்திபற்றி அக்கறை கொள்ளாமல் வெளிரங்கங்களில் மட்டும் பராக்காயினர். இதயம் பரிசுத்தமடையாதவர்களின் வழிபாடு செவ்வை யானதாகாது.

இத்தகையோரைச் சொறி, சிரங்கால் பீடிக்கப் பட்ட வியாதியஸ்தனுக்கு ஒப்பிடலாம். அவனது பிணி தீருவதற்காக வைத்தியர், உள்ளே குடிப்ப தற்கு ஒரு மருந்தும், வெளியே பூசுவதற்குக் களிம்பும் கொடுத்தார். அவன் அக்களிம்பை மட்டும் வெளிப் பக்கம் நன்றாய்ப் பூசிக்கொண்டான், ஆனால், உள் மருந் தைச் சாப்பிடவில்லை. வெளிரங்க சொஸ்தத்தை மட்டும் அவன் விரும்பினனேயன்றி உள்ரங்க சொஸ் தத்தை அவன் ஆசிக்கவில்லை. அவன் வெளிரங்க வியாதியான சொறி, சிரங்குக்கு மூலகாரணம் அவன் உள்ரங்க வியாதிதான். தன் குடலில் வியாதி யுண்டாகி; இரத்தங் கெட்டுப்போய் இருக்கிறது என்ற உண்மையை அவன் கிரகிக்கவில்லை. இதை யுணராது வெளிப்பூச்சு மருந்தை மட்டும் பூசியதால் அவன் வியாதி நீங்கவில்லை; நாளுக்கு நாள் அதிகமாகி மேலும் மேலும் உபத்திரவத் தைத்தான் கொடுத்தது. ஆனால், உள் மருந்தையும் சாப்பிட்டு அதன் மூலம் உள் பிணி அகன்றிருப்பின், அதன் விளைவாலுண்டான வெளிரங்கப் பிணியும் அத் துடன் தீர்ந்திருக்கும். இதுபோன்றே, இதயத்தில் அரு வறுப்பான தீய குணங்கள் மறைந்தொளிந்து கிடந்தால் அவற்றின் விளைவுகள் வெளி உறுப்புக்களையும் பாதிக்கும்.

வேறொரு வகையினர் மார்க்கத்தில் உள்ரங்கத் துற் குணம் அருவறுக்கத்தக்கது என்பதை யுணர்ந்தேயிருப் பார்கள். ஆனால், தங்களைப் போன்ற பெரிய மனிதர் களுக்கெல்லாம் அத்தகைய துற்குணமெதுவும் உண்டா

காது, தாங்களெல்லாம் அதை விட்டும் நிவாரணம் பெற்றவர்கள் என்ற இறுமாப்பிலிருப்பார்கள். தங்களுக்கு அல்லா(ஹ்) விடம் உயர்ந்த தனியந்தஸ்து உண்டென்றும், எனவே, இம்மாதிரித் துற்குணங் கொண்டு அவன் தங்களைச் சோதிக்கமாட்டான் என்றும், ஆனால், இல்மு இல்லாத மற்றச் சாமான்ய ஜனங்களையே அவற்றால் சோதிப்பான் என்றும் தீர்மானங் கொண்டிருப்பார்கள். யதார்த்தத்தில், இத்துறையில் மற்றவர்களைவிட அல்லாஹ் இவர்களையே மிகவும் சோதிப்பான்.

அகங்காரம், மமதை, தலைமைத்தன வேட்கை, மேன்மையானவன் என்று காட்டிக்கொள்வதில் விருப்பம், பாரோர் போற்றச் சிறப்புடனிருக்க வேண்டுமென்ற பாசம் முதலிய ஆசாபாச குணங்கள் இவர்களிடம் மிகைத்திருக்கும். "இம்மாதிரி பெருமை, கர்வம், சிறப்பு எல்லாம் கூடாது என்று எங்கள் விஷயத்தில் சொல்ல முடியாது. ஏனெனில், இந்தப் பெருமை, கர்வம், சிறப்பு எல்லாம் எங்களுக்காகவா எங்களிடம் உள்ளன? இம்மாதிரிப் பெருமை கொள்வதால் மார்க்கத்துக்குச் சிறப்புண்டாகிறது; கர்வம் பூணுவதால் கல்விக்கு மேம்பாடுண்டாகிறது; சிறப்புக் கொள்வதால் உலமாக்களுக்குச் சிறப்புண்டாகிறது" என்று கற்பனைக் காரணங் கூறும் இவர்களைக் கண்டு கை கொட்டிச் சிரிக்கிறான் இப்லீஸ். இதை யுணராமல் இவர்கள் தற்பெருமை பாராட்டுகிறார்கள்.

மேலும், தங்கள் பெருமையாலும் டம்பத்தாலும் சன்மார்க்கத்துக்கு அபிவிருத்தித் தொண்டு செய்வதாகக் கூறும் இவர்கள் எம்பெருமானார் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களும், அவர்களின் அருமை ஸஹாபாக்களும் எத்தகைய எளிய முறையில் தீனுல் இஸ்லாத்தைப் பரவச் செய்தார்கள், எவ்வாறான பணிவுகொண்டு சன்மார்க்கச் சுடரொளி பரப்பினார்கள்,

எம்மாதிரியான குணதிசயங்களைக் கொண்டு மார்க்க சேவை புரிந்தார்கள் என்பதையெல்லாம் சிறிதுகூடச் சிந்திப்பதேயில்லை. அவர்களின் பணிவு எங்கே! இவர்களின் பகட்டு எங்கே! அவர்களின் ஏழ்மை எங்கே! இவர்களின் டாம்பீகம் எங்கே! அவர்களின் தன்னலங் கருதாத் தன்மை எங்கே! இவர்களின் சுயநலம் கருதும் சுபாவமெங்கே!

"இஸ்லாத்தைக்கொண்டு அல்லாஹ் எங்களைச் சிறப்பாக்கியிருக்கிறான். அச்சிறப்புள்ள சமுதாயம் நாங்கள். அவனல்லாத வேறு யாரிடமும், வேறெச் சிறப்பும் வேண்டோம்" என்று உமர் (ரலி) அவர்கள் பெருமிதத்துடன் ஷாம் தேசத்தை முன்னோக்கிக் கூறியபோது, அலங்கார உடை அணிந்திருந்ததுகூடக் கண்டிக்கப்பட்டதென்றால் அருமை நாயகம் (ஸல்) அவர்களுடையவும், அருமை ஸஹாபாக்களுடையவும் அடக்கவொடுக்கமான ஒழுக்கத்தின் நேர்மைதானென்னே!

இவர்களோ டாம்பீகத்தால்தான் இஸ்லாத்துக்குச் சிறப்பு என்று எண்ணிக் கொண்டு இஸ்லாத்துக்குக் கௌரவம் என்ற பெயரில் தங்களுக்குக் கௌரவம் தேடும் நோக்குடன் பகட்டான ஆடைகளை அணிகின்றனர். ஆனால், இம்மாதிரி வெளியலங்காரம் புரிவதால் தான் மார்க்கத்துக்குச் சிறப்பும், இல்முக்கு இணையிலா மகத்துவமும், சன்மார்க்கத்துக்குச் சக்தியும் உண்டாகின்றன என்று கூறிவிடுகிறார்கள்.

மேலும், இவர்கள் தங்களைப் போன்ற அந்தஸ்திலுள்ளவர்களோடும் அல்லது தங்கள் அபிப்பிராயத்துக்கு மாற்றமாக ஏதாவது சொன்னவர்களோடும் மனப்புழுக்கமும், பொறுமையுங் கொண்டு சினந்து வார்த்தையாடுகிறார்கள். தாங்கள் இவ்வாறு அவர்களைக் கடிந்து பேசுவது பொறுமையால்தான் என்பதை இவர்கள் உணராதிருப்பதோடு, "இம்மாதிரி நாங்கள் கொள்ளும்

கோபம் அல்லா(ஹ்)வுக்காகக் கொள்ளும் கோபம். இம்மாதிரிக் கோபங்கொண்டுதான் வழிபிசகினோரைத் திருத்த முடியும். அபத்தக்காரனின் முரணையும் அநீதத்தையும் இதைக் கொண்டே அடக்க முடியும்'' என்று அர்த்தமுங் கற்பிக்கின்றனர். நிச்சயமாக இவர்கள் மிக மோசமான மதிமயக்க முற்றோராவர்.

தங்களை அவமதித்து அவமரியாதையாகப் பேசுபவர்களை வன்மையாகக் கண்டிக்கும் இவர்கள், தம் போன்ற ஏனைய ஆலிம்கள்மீது அவமரியாதையாக வீண் அபவாதங்கள் கூறப்படும்போது, அல்லா(ஹ்)வுக்காக என்று அவ்விஷயத்தில் கோபமோ, வெறுப்போ அடைகிறார்களில்லை. மாறாகப் பரவசமடைகிறார்கள். மற்ற ஆலிம்களைப்பற்றிப் பொதுஜனங்கள் அதிருப்தி கொண்டு குறைகூற முற்படும்போது அளவில்லாத சந்தோஷமடைகிறார்கள்.

சில சந்தர்ப்பங்களில், இவர்கள் தங்கள் திறமையையும், அறிவுப் பிரதாபத்தையும் பற்றி மக்களிடையிலே பகட்டாக எடுத்துக் காட்டுகிறார்கள். "இப்படி அவற்றை நாங்கள் எடுத்துக் காட்டுவதெல்லாம் பொது மக்களுக்கு உணர்ச்சியை யூட்டி அவர்களை நல்வழியில் திருப்புவதற்கே'' என்றும் காரணங் கூறிக்கொள்கிறார்கள். ஆனால், இது வெறும் வாய்ப்பேச்சுத்தான். தற்பெருமை இவர்களைப் பூரணமாக ஆட்கொண்டுள்ளது. உண்மையில், ஜனங்களின் நற்பயனை நாடுவதே இவர்களின் குறிக்கோள் என்றிருந்தால் தங்களைத் தவிர ஏனையவர்களிடமிருந்து அவர்கள் தங்களுக்குச் சமமானவர்களாகவோ, அல்லது தங்களைவிட மேம்பட்டவர்களாகவோ அல்லது கீழானவர்களாகவோ எப்படியிருந்தாலும் அவர்களிட மிருந்து ஜனங்கள் நன்மை பெறுவதையும் இவர்கள் உவந்து ஆதரிக்க வேண்டுமே! மற்றவர்கள் தங்களின் திறமையையும்,

அறிவுப் பிரதாபத்தையும் காட்டும்போது இவர்கள் அரூயையும் வெறுப்பும் கொள்வது ஏன்?

மேலும், இவர்கள் ஆட்சியாளர்களோடு அளவளாவி, அவர்களின் தயவையும் திரவியத்தையும் எதிர்பார்த்த வண்ணம் அவர்களுக்கு ஒத்துப் பாடி அவர்களைப் புகழ்ந்த வண்ணமிருப்பார்கள். அதுபற்றி வினவப்பட்டால், "எங்களின் சுயநலத்திற்கா நாங்கள் ஆட்சியாளர்களை அண்டுகிறோம்? முஸ்லிம்கள் யாவரின் நன்மைக்காகவுமல்லவா பாடுபடுகிறோம்! ஆட்சியாளர்களால் முஸ்லிம்களுக்குத் துன்பம் வராமல் தடுப்பதற்கும், முஸ்லிம்களைப்பற்றி அவர்களிடம் சிபாரிஷ் செய்யவுமல்லவா நாங்கள் அவர்களை அண்டிப் பழகுகிறோம்" என்று கூறிக்கொள்வார்கள். பெரிய மதி மயக்கம் இது! யதார்த்தத்தில் இவர்கள் நோக்கம் அதுவானல், இவர்கள், தாங்கள் ஆட்சியாளர்களிடம் போய் வருவது போல மற்றவர்கள் போய்வருவதைக் காணும் போது அதற்காகச் சந்தோஷமும் திருப்தியும்தானே கொள்ளவேண்டும்! தங்களல்லாத ஏனைய ஆலிம்கள் யாரேனும் அவர்களிடம் உயர்ந்த மதிப்பும், நல்லந்தஸ்தும் அடைந்து, சிபாரிஷ் செய்யும் செலவாக்குப் பெற்றிருப்பதைக் காணும்போது இவர்கள் மனப்புழுக்கமும், வேதனையும் அடைவதேன்?

இன்னுஞ் சில வேளைகளில் இவர்கள் ஆட்சியாளர்களிடமிருந்து பணங்காசையும் பெறுகிறார்கள். அக்கிரமமாகவும் அநீதமாகவும் சேகரிக்கப்பட்ட அப் பணங்காசுகள் ஹறாமானவையாயிற்றே என்ற ஊசாட்டம் ஏற்படும்போது, "இவை ஹறாமானவையல்ல; இவை உடையவனில்லாத பொருட் செல்வம். இவை முஸ்லிம்களின் பொது நன்மைக்காக உள்ளவை. நீ தானே இப்போது முஸ்லிம்களின் பிரதம (தலைவர்) இமாமாகவும், அவர்களின் தலைசிறந்த (அறிவாளி)

ஆலிம் ஆகவும் இருக்கிறாய். ஆகவே, உன்னைக்கொண்டு தான் சன்மார்க்கக் காரியங்கள் நடைபெறவேண்டியிருக்கின்றன" என்று ஷைத்தான் காரணங் காட்டி யோசனை கூறி "ஆட்சியாளர் தரும் அருமையான செல்வங்களை விட்டுவிடாதே" என்பான்.

இவ்வண்ணம் ஷைத்தான், (1) உடையவனில்லாத பொருட் செல்வம் என்றும், (2) முஸ்லிம்களின் பொது நன்மைக்காக உள்ளவை என்றும் (3) நீயே முஸ்லிம்களுக்கு இமாம் என்றும் கூறி மூன்று விஷயங்களில் இவர்களை வழிபிசகச் செய்கிறான்.

இமாம் என்றால் யார்? மேன்மை மிக்க நபிமார்களைப் போன்றும், அருமை ஸஹாபாக்களைப் போன்றும், இந்தச் சமுதாயத்திலுள்ள அகத்தூய்மை பெற்ற உண்மையான ஆலிம்களைப் போன்றும் உலக ஆசாபாசங்களுக்குக் கட்டுப்படாது அவற்றை யகற்றி வாழ்பவர் அல்லவா உண்மை இமாம் ஆவார்!

"மடைவாயின் முகப்பில் அடைத்துக்கொண்டிருக்கும் பாராங்கல் தானும் தண்ணீரை அருந்தாது; வயல்களுக்கும் நீரை ஓட விடாது. கெட்ட ஆலிமுக்கு இதுவே உவமானமாகும்" என்று நபி ஈஸா (அலை) உதாரணங் கூறியிருக்கிறார்கள்.

கல்வி ஞானமுள்ள இம்மாதிரி ஆலிம்களின் மதிமயக்க வகைகள் பலப்பல. அன்னவர்களால் ஏற்படும் நன்மையைவிடக் குழப்பமும், வழிபிசகலும், பித்தலாட்டமும்தாம் மிக அதிகம்.

இன்னொரு வகையினர்: கல்வி, கேள்விகளிற் சிறந்து விளங்கும் இவர்கள் வெளிரங்கத்தில் அவயவங்களை நற்கருமங்களால் சுத்தமாக்கி, வழிபாடு, வணக்கங்களால் அவற்றை அலங்கரித்துள்ளார்கள். வெளிரங்கமான பாவங்களை விட்டும் நீங்கியுள்ளார்கள். ஆத்மாவின் நல்

லியல்புகள் பற்றியும் முகஸ்துதி, பொறாமை, அகங்காரம், மனப்புழுக்கம், கௌரவம் முதலிய துற்குணங்களை விட்டு இதயத்தைச் சுத்தமாக்குவது பற்றியும் கவன மெடுத்து அவ்வகையில் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார் கள். தங்கள் ஆத்மாவைத் துற்குணங்களை விட்டும் களைந்து சுத்தப்படுத்த வேண்டும் என்பதற்காகத் துற்குணங்கள் என்ற செடிகளை இதயம் என்ற பூமியி லிருந்து அகற்றிவிடுகிறார்கள். ஆனால், மேலெழுந்த வாரியாகக் கவனித்துப் பகிரங்கமாகத் தெரிந்த சில துற் குணச் செடிகளை மட்டும் அகற்றினார்களேயன்றி, நன்றாக ஆராய்ந்து மறைந்திருக்கும் மற்றத் துற்குணச் செடிகளைக் களைய முற்படவில்லை. இதன் மூலம் இவர் கள் மதிமயங்கிவிட்டனர்.

இவர்கள் அவ்வாறு களைந்து பிடுங்கி வீசியவை வெளிரங்கமாகத் தெரிந்த சில முளைச் செடிகளே. ஷைத்தானுடைய சூழ்ச்சிகள் - துராத்மாவின் மோசடி கள் என்னும் நுண்ணிய, அபூர்வக் களைகள் - விஷச் செடிகள் அவர்களின் இதயம் என்ற பூமியின் கோணங் களில் பிடுங்கப்படாமலுள்ளன. அவற்றைப் பற்றி அவர்கள் கவனிக்கவுமில்லை; கவலைப்படவுமில்லை. அவை சின்னஞ்சிறு பூண்டுகள்தாமே என்று அலட்சியமாக அவற்றை வளர விட்டுவிட்டுள்ளனர். வயலில் களைகளைப் பிடுங்க நாடினவன் வளர்ந்து நிற்கும் களைகளை மட்டும் மேலெழுந்தவாரியாகப் பிடுங்கிவிட்டு, “களைகளே அவ்வளவுதான், வேறில்லை” என்று எண்ணி மீத முள்ள சிறு களைகளை முளைக்க விட்டுவிட்டால் என்னவாகும்? பிடுங்காது விடப்பட்ட சிறு களை கள் நாளாரம்பத்தில் பெரிதாக வளர்ந்து வயலையே நாசமாக்கிவிடுமல்லவா! இதுபோலவே இவர்கள் இத யங்களில் கவனக் குறைவால் ‘அற்பமானவைதாமே’ என்று இலேசாகக் கருதி ‘விடப்பட்ட துற்குணங்கள்

நாளாரம்பத்தில் பெருகி வலுவடைந்து இதயத்தைப் பாழாக்கிவிடக்கூடும். நுணுக்கமான களைகளையும் இவர்கள் நன்காராய்ந்து நீக்கினுல் இவர்களின் இதயப் பூமி பசுமையும் பரிசுத்தமும் அடையும். ஆனால், இவர்கள் அதைக் கவனிப்பதேயில்லை.

மேலும், இவர்கள் தங்களைத் தனி அந்தஸ்தும், உயர் பதவியும், சீலமும் பெற்றுள்ளவர்கள் என்று கருதிக் கொண்டு, மற்றச் சாமானியர்களோடு பழகினுல் தங்கள் அந்தஸ்துக்கு ஹானி ஏற்படும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறுர்கள். பிறரோடு கூடிப் பழகுவதேயில்லை. அப்படியே பழகினுலும் அவர்களை மிகக் கேவலமாயும், அற்பமாயும் கருதியே பேசுவார்கள். தங்களைக் கண்டோர் யாவரும் தங்களுக்கு மரியாதை செலுத்தவேண்டுமென்பதற்காக இவர்கள் தங்கள் தோற்றத்தைக் கம்பீரமானதாக்குவதிலும் ஆடையலங்காரஞ் செய்வதிலும் கவனஞ் செலுத்துகின்றனர்.

இன்னெரு வகையினர் ஞானப் பாதையில் முன்னேறுவதற்கான அனுஷ்டானங்களை அடியோடு விட்டுவிட்டு, மக்கள் மத்தியிலே உலக வாழ்க்கையை நடாத்திச் செல்ல அனுசரணையாக இருக்கப் பயன்படும் உலக சம்பந்தமான தீர்ப்புகளைப் பற்றிய கல்வியிலும், தர்க்க சாஸ்திரத்திலும் மட்டும் முற்றும் கவனஞ் செலுத்துகிறுர்கள். இதனுல், இவர்கள் பிக்ஹூ உடைய ஆலிம்கள் என்று அழைக்கப்படுகிறுர்கள். இவர்கள் கற்ற கல்விக்குப் பிக்ஹூ உடைய இல்மு அல்லது மதுஹபு உடைய இல்மு என்று பெயர். பிக்ஹூ உடைய இல்மு அவசியமே. ஆனுல், அஃதொன்றிலேயே மூழ்கி வாழ்நாள் முழுவதையும் தர்க்க வாதங்களிலும், தாவாக்களிலுந் தானு கழிக்கவேண்டும்? மேலும், இவர்கள் வெளிரங்க அமல்களையும், உள்ரங்க அமல்களையும் செய்யாமல் வெறுமனே கல்வியைக்கொண்டு மட்டுமே மருட்சி

யடைந்து அமல்களைப் பாழாக்கிவிட்டனர்; தங்கள் அவயவங்களைச் சரிவரக் கவனித்துப் பேணுவதுமில்லை.

ஏனென்றால், இவர்கள் தங்கள் நாவைப் புறம் பேசலினின்றும் பாதுகாக்கவில்லை; வயிற்றை ஹறாமான உணவுகளை விட்டும் பேணவில்லை; அரசினர் அவையில் பரிசையும், பவிசையும் நாடி நடப்பதை விட்டும் பாதங்களைப் பாதுகாக்கவில்லை. இவ்வண்ணமே, இதர உறுப்பினங்களையும் தீங்குகளை விட்டுப் பேணவுமில்லை. அத்துறையில் கவனஞ் செலுத்தவுமில்லை. மேலும் சர்வ உறுப்புக்களுக்கும் அரசனான இதயத்தையும் அகங்காரம், முகஸ்துதி, பொறாமை, இன்னும் இவை போன்ற நாசகரத் தீய குணங்களிலிருந்தும் தடுத்துப் பாதுகாக்கவில்லை. இதற்குரிய சிகிச்சை பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் இஹ்யா உலூமுத்தீனில் நாம் கூறியுள்ளோம்.

இத்தகையோர் இரு வகைகளில் மருட்சியடைந்துள்ளனர். முதலாவதாக, அமல் (செய்கை) மூலம் ஏற்பட்டுள்ள மருட்சி. இவர்களுக்கு ஒரு நசலாளியை உவமிக்கலாம். அவனோ, கைதேர்ந்த வைத்திய நிபுணர்களிடமிருந்து வைத்திய சாஸ்திரத்தைக் கற்றிருக்கிறான். ஆனால், அதைக் கையாண்டு தன் நசலுக்கு மருந்து செய்யாமலும், மற்றவர்களுக்கு அதை அறிவித்துக் கொடாமலுமிருக்கிறான். அவன் படிப்பு ஏட்டுச் சுரைக்காயாகவே இருக்கிறது; நசலும் நசலாகவே இருக்கிறது.

இன்னவர்கள் நாசத்தின் பக்கலிலே செல்பவர்களாவர். தங்கள் ஆத்மாவைப் பரிசுத்தப்படுத்துவதையும், துற்குணங்களை யகற்றி நிஷ்களங்கமானதாக்குவதையும் ஒரு பக்கத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு மாதத்தீட்டு (ஹைறு) ஏற்படுவதிலுண்டான நுண்ணிய கருமங்கள் யாவை, பழிக்குப் பழி வாங்குவதன் அபூர்வ ஆராய்ச்சிகள் என்ன, சத்தியப் பிரமாணம் செய்வதன் வகை யாது, தலாக்குச் சொல்லுதல், புருஷன் மனைவி

விலகி இருத்தல் முதலிய இத்தியாதி உலக விவகாரங் களின் விவரங்கள் யாவை என்று இம்மாதிரிக் கருமங் களையே சதாவும் துருவித் துருவி ஆராய்ந்து இவை பற்றிய விவாதத்திலும் பேச்சிலும் தாம் மூழ்கியிருப்பர். இவர்கள் தங்கள் வாணுள் முழுவதையும் இந்நிலையி லேயே வீண் விரயஞ்செய்வர். இவர்கள் உள்ளக்கிடக் கையெல்லாம் மற்றவர்கள் தங்களுக்கு மரியாதை காட்ட வேண்டும், ஜனங்கள் மத்தியிலே தங்களுக்குத் தனி கௌரவமிருக்க வேண்டும் என்பதே. காலீ (நீதவான்) ஆகவும், முப்தீ (பத்வா கொடுப்பவர்) ஆகவும் தாங்கள் பெயர் பெற்றிலங்க வேண்டுமென்பதே இவர்களின் வேட்கையாகும். 'அவர் செய்த அந்தத் தீர்ப்பு சரியில்லை. இவர் கொடுத்த இந்தப் பத்வா பொருத்த மில்லை' என்று பரஸ்பரம் குற்றஞ்சாட்டுவதிலும், 'நான் சொல்வதே சரி, மற்றவருக்கு என்ன தெரியும்?' என்று குறைகூறுவதிலும் ஒருவருக்கொருவர் சளைக்கமாட்டார் கள். ஆனால், இவர்கள் பரஸ்பரம் நேருக்கு நேர் சந்திக் கும்போதோ தேனொழுகப் பேசுவார்கள். இது வெறும் மாய்மாலம்தான்.

இரண்டாவதாக, இவர்கள் இல்மு (கல்வி) மூலம் மருட்சியடைந்துள்ளனர். அதாவது, தாங்கள் பெற் றிருக்கும் பத்வா சம்பந்தமான இல்முதான் இல்மு என்றும், அது தவிர மற்ற எதுவும் இல்மு இல்லை என்றும், அஃதே அல்லா(ஹ்)வின் சமூகங் கொண்டு சேர்ப்பிக்கக்கூடியது, ஈடேற்றம் பெறச் செய்யக்கூடியது என்றும் இவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

உண்மையை ஆராய்வோம்: அல்லா(ஹ்)வின் சமூகங் கொண்டு சேர்ப்பிப்பதும், ஈடேற்றந் தருவதும் நிச்சய மாக அல்லா(ஹ்)வின்மீதுள்ள நேசம் (ஹுப்புல்லாஹி) தான். அல்லா(ஹ்)வை அறியக்கூடிய (மஃரிபா) ஞானம் இருந்தாலன்றி அல்லா(ஹ்)வின் நேசம் என்பது உண்

டாக முடியாது. அஃதின்றி இறைவனுடைய அன்பைப் பெறுவது எங்ஙனம்?

மஃரிபா என்னும் ஞான அறிவு அவனுடைய (தாத்து) தன்மை பற்றியது; அவனுடைய (ஸிபத்து) வருணனைகள் பற்றியது; அவனுடைய (பிஃலு) செயல்களைப் பற்றியது.

ஹஜ்ஜுக்குப் போகிறேனென்று கூறிக் கட்டுச்சாதம் மட்டும் கட்டிக்கொண்டு, ஹஜ்ஜு செய்யப் போகாமல் வழியிலே நின்றுகொண்டிருப்பவனைப் போன்ற நிலையில் தான் இந்த மதிமயக்கக்காரர்களும் இருக்கின்றனர். பிக்ஹு என்ற பதத்தின் கருத்து அறிந்து தெரிவது என்பதாகும். அதன் நோக்கம் அல்லா(ஹ)வை அறிவது தான். ஆகவே, நரகத்தைக் கொண்டும், கடுமையான மறுமைத் தண்டனைகளைக் கொண்டும், அச்சமுறுத்தும் அவன் (ஸிபத்து) குணங்களையும், தீயவைகளைக் கண்டித்து விலக்கும் அவன் (அப்ஆலு) செயல்களையும் மனத்தால் பயந்துணர்வது கொண்டும் இறைவனிடங் கொள்ளவேண்டிய பயபத்தி (தக்வா) செம்மையுடனிருக்க வேண்டும். இவற்றை இவர்கள் உணர்வதேயில்லை.

திரு குர்ஆனில் அல்லாஹ் அருளியுள்ளான்:

"ஆகவே, அவர்களில் (மூமின்களில்) உள்ள ஒவ்வொரு கோஷ்டியாரிலுமிருந்து ஒரு கூட்டத்தார் சன்மார்க்க ஞானத்தைக் கற்றுக்கொள்வதற்காகப் புறப்பட வேண்டாமா? தங்கள் சமூகத்தாரிடம் தாங்கள் திரும்பி வந்ததும் அவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யவும், அதன் மூலம் அவர்கள் பாவங்களைத் தவிர்த்துக்கொள்ளவும் இயலுமல்லவா!" (9: 122.)

மற்றொரு வகையினர் அபிப்பிராயபேதமான விஷயங்களை மட்டும் நன்றாக நோட்டமிட்டு மனனஞ் செய்து

கொண்டுள்ளார்கள். மற்றவர்களுக்குத் தெரியாத நுண்ணிய விஷயங்களெல்லாம் தங்களுக்கே தெரியும் என்று கூறி அவற்றைப்பற்றி ஏனையோருடன் குதர்க்க வாதம் செய்துகொண்டிருப்பார்கள். தம்மோடு விவாதிப்பவரை அடக்கி வாய் மூடச் செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு பிடிவாதமாகத் தாம் சொல்வதே சரி யென்று விதண்டாவாதம் செய்வார்கள். தாம் செய்யும் தாவா உண்மைக்கு மாற்றமானதாய் இருந்தாலுங்கூடத் தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்றே சொல்லிக் கொண்டிருப்பார்கள். இன்னார் சொன்ன மார்க்கத் தீர்ப்பைத் தட்டிப்பேச யாருங் கிடையாது என்று தம்மைப் பற்றி ஜனங்களிடையில் பிரபல்யமாக வேண்டுமென்ற ஒரே ஆசைதான் இவர்களுக்கு.

மதுஹபுடைய இமாம்களுக்குள்ளே இருக்கக்கூடிய அபிப்பிராயபேதங்களுக்காக இமாம்களையும், அவர்கள் எடுத்திருக்கும் ஆதாரங்களையும் பற்றிக்கூடக் குறை கூறத் துணிந்துவிடுவார்கள். மற்ற ஆலிம்களுடைய பேச்சில் அல்லது பத்வாவில் அல்லது நூலில் என்னென்ன குற்றங்குறைகள் உள்ளன என்று குற்றங் காணும் கண்கொண்டே நோக்குவார்கள். இவ்வாறாக மற்றவர்களைக் குறைகூறுவதிலும், அலட்சியப்படுத்திப் பேசுவதிலுமே இரவும் பகலும் இவர்கள் தங்கள் ஆராய்ச்சியைச் ஈடுபடுத்துவார்கள். ஆராய்வதன் மூலம் நல்லம்சங்களான உண்மைகளைக் கிரகிக்கவேண்டும் என்ற ஆர்வமிருப்பின் எவ்வளவோ புண்ணியமாகுமே! ஆனால், இவர்களின் லட்சியம் அஃதன்றே! வீண் தர்க்கங்கள் பண்ணுவதும், விவாதங்கள் செய்வதும், பிறரைத் தாக்குவதும், வரட்டு ஜம்பங்கள் புரிவதுமல்லவா இவர்களின் குறிக்கோளாயுள்ளது! தாங்கள் பெற்றுள்ள கல்வி ஞானங் கொண்டு இம்மையிலும், மறுமையிலும் பயனடைவதை விடுத்து இவ்வுலகில் மட்டும்பேரும் புகழும்

பெற்று, மறுமையில் நஷ்டத்தையல்லவா தேடிக்கொள்கிறார்கள்! அவ்வாறு பேரும் புகழும் தேடித் திரிவதை விடுத்துத் தங்கள் இதயங்களைப் பரிசுத்தம் செய்து பக்குவப்படுத்துவதில் முனைந்தால் அவர்களுக்கு எவ்வளவோ நலமாயிருக்கும்! அதனால் இம்மையிலும், மறுமையிலும் நற்பாக்கியம் பெற்ற நன்மாந்தராகி விடுவார்களே! தானே பெரியவன் என்று இவ்வுலகில் அவர்கள் பூண்டிருந்த அகந்தையானது மறுவுலகில் அவர்களைத் தாக்கி வேதனைப்படுத்தக்கூடிய ஜ்வாலை விட்டெரியும் அக்கினியாகவல்லவா இருக்கும்!

மாண்புமிக்க மதுஹபுடைய இமாம்களைப் பற்றியும் இவர்கள் குறை காணத் துணிந்துவிட்டனரே! மதுஹபுடைய இமாம்கள் வெறுமனே பொறுப்பற்ற தன்மையில் தங்கள் சுய இச்சைப்படியா மதுஹபுகளை நிர்ணயித்துள்ளார்கள்? இல்லையே! மதுஹபுடைய சட்டதிட்ட அத்தாட்சி மூலங்கள், அடிப்படைத் திட்டங்கள் யாவும் அல்லா(ஹ்)வின் வேதமான திரு குர்ஆனையும், அவன் அருமைத் தூதர் நாயகம் (ஸல்) அவர்களது மேலான ஸுன்னத்து சொல், செயலையும் ஆதாரமாகக்கொண்டல்லவா நிர்ணயிக்கப்பட்டுள்ளன! இவற்றையுணராது வெறுக்கத்தக்க முறையில் மருட்சி கொண்டு மயங்கிய இவர்கள் போக்கு வருந்தத்தக்கது.

வேறொரு வகையினர் தர்க்க சாஸ்திரத்திலும் விவாதக்கலையிலும் மூழ்கியுள்ளார்கள். தங்களை எதிர்த்து மறுத்துப் பேசுவோரை வாயடங்கச் செய்வதும், எதிரியின் வாதத்தில் எங்கே பிடி இருக்கிறது என்று பார்த்து அவர்களை மடக்குவதுமே இவர்கள் தொழிலாகும். இவ்வாறான தர்க்க சாஸ்திரத்தை இவர்கள் பிறருக்கும் படித்துக் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். இத்தன்மையான இவர்கள் இரு வகைப்படுவர். முதல் வகையினர்: தாமும் வழி பிசகி ஏனையவரையும்

வழி பிசகச் செய்பவர்கள். (ளால்லுன், முளில்லுன்) இவர்கள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸுன்னத்துக்கு மாற்றமாக நடப்பார்கள். தாங்கள் வழிபிசகியிருப்பதை மறந்திருப்பதோடு, தங்களின் போக்கே ஈடேற்றந்தரக் கூடியது என்றும் எண்ணிக்கொண்டிருப்பார்கள். இவர்களில் இவ்வாருக இன்னும் பலர் உண்டு. தங்களுள் ஒருவரையொருவர் ஏசிப்பேசி இவர்கள் குபுர் பத்வா கொடுத்துக்கொண்டிருப்பார்கள். தலீல் அத்தாட்சிகளைக் கண்டுபிடிக்கும் துறையில் இவர்கள் வழி பிசகி விட்டார்கள். சரியான தலீல் சான்றுகள் எவை என்று ஆதாரங்களையும் அடிப்படைகளையும் நிர்ணயிப்பதில் இவர்கள் தவறிவிட்டார்கள். உண்மையைச் சரியாக உணராத இவர்கள் உறுதியான சான்றுகளைச் சந்தேகமானவையாகவும், சந்தேகமானவற்றைப் பக்காவானவையாகவும் நேர்மாற்றமாக்கிக்கொண்டார்கள்.

இரண்டாம் வகையினர்: இவர்கள் கொள்கையில் மோசமானவர்களல்லர்; பெருமானுர் (ஸல்) அவர்களுடைய ஸுன்னத்துக்குக் கட்டுப்பட்டவர்கள். ஆனால், ஒரு காரியத்தில் இவர்கள் மதிமருட்சியுள்ளவர்கள். சர்வ காரியங்களிலும் பிரதான்யமுடையது தர்க்க சாஸ்திரம் தான்; அதுவே சன்மார்க்கத்தில் அல்லா(ஹ்)வுக்கு மிகச் சமீபமான முடுகுதலைத் தரக்கூடியது; தர்க்கம், விவாதம் இல்லாமல் யாரும் சன்மார்க்க சம்பூரணத்துவமடைய முடியாது; தர்க்க சாஸ்திரம் கற்காமலும் விவாதங்கள் புரியாமலும் இறைவனைக்கொண்டு விசுவாசம் பூண்டவன் உண்மை விசுவாசி யாகமாட்டான்; அவன் சம்பூரணமானவனுமல்லன்; இறைவன் பக்கம் முடுகுதலானவனுமல்லன் என்றெல்லாம் நம்புவதே இவர்களுடைய மதிமருட்சியாகும். இவர்களுடைய இவ்வெண்ணமும் அபிப்பிராயமும் தவருனவை. இவர்கள் குறிப்பிடும் தர்க்க, விவாத சாஸ்திரங்களோடு பெருமானுர் (ஸல்) அவர்களுக்கும் அவர்களின் அருமை

ஸஹாபாக்களுக்கும் சம்பந்தம் இருந்ததா என்ற விஷயத்தில் இவர்கள் கண்ணேட்டஞ் செலுத்தவில்லை. "எனக்கடுத்தபடியாகப் படைப்புக்களில் சிரேஷ்டமுடையோர் எனது ஸஹாபாக்கள்" என்று நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களைப் பற்றிச் சாட்சி பகர்ந்துள்ளார்கள். அத்தகைய உத்தமர்களின் காலத்திலெல்லாம் இவர்கள் குறிப்பிடும் தர்க்கமும், விவாதமும் இருந்ததில்லையே! அது பற்றிய உண்மைகளை ஆராயுந் துறையில் இவர்கள் பார்வை செல்லவே யில்லை.

"எந்தச் சமூகமும் அவர்களுக்குள்ளே தர்க்கமும் விவாதமும் தலைதூக்கி யல்லாது வழிகெடுவதில்லை" என்று நபி நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதாக அபூ உமாமதுல் பாஹிலீ (ரலி) கூறியுள்ளார்கள். இவற்றையெல்லாம் உணராது இம்மருட்சியாளர்கள் தர்க்க சாஸ்திரத்தை விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டு மதிமயக்கமடைந்துள்ளார்கள்.

வேறொரு வகையினர் வஃளு உபதேசங்களில் பராக்காயிருக்கிறார்கள். மனத் தூய்மை, நற்குண ஒழுக்கம், அச்சம், ஆதரவு, சாந்தம், நன்றி, இறைவன்மீது (தவக்குல்) பொறுப்பு, நம்பிக்கை, உலகப்பற்றின்மை, உண்மை (யகீன்) உறுதி, கலப்பற்ற (இக்லாஸ்) தன்மை, சத்தியத் தன்மை ஆகியவைகளைப் பற்றி யெல்லாம் விளக்கமாகவும், உருக்கமாகவும் அழகான சொல்லடுக்குடன் உபதேசிப்பார்கள்; மேலும், சித்தசுத்தியுடனிருப்பவர்களுடைய பதவியின் மேன்மை எத்தகையது என்பது பற்றியும், உள்ளத்தைச் சுத்தமாக்கிப் பக்குவப்படுத்தி நற்குணங்களின் உறைவிடமாக்க வேண்டுவதன் அவசியம் பற்றியும் உள்ளத்தைக் கவரத் தக்க முறையில் மதுரமாக ஹிதோபதேசம் புரிவார்கள்; ஆனால், கல்வி அறிவே இல்லாத சாதாரண ஜனங்களிடமிருக்கக்கூடிய நற்பண்புகளை கூட இவர்களிடம் காணமுடியாது.

பிறருக்கு உபதேசம் புரிந்து அல்லா(ஹ்)வின் நேசத்தை அவர்களுக்கு ஊட்டிவரும் தாங்கள், மார்க்க ஞானங் கற்றுப் பட்டம் பெற்றுள்ள தாங்கள், அக் காரணங்களால் அல்லா(ஹ்)விடம் ஈடேற்றம் பெற்றுள் ளவர்கள், தாங்கள் பற்றற்றிருத்தல் (ஸூஹ்து) பற்றிக் கூறுபவர்களாக இருப்பதனுல் அந்தப் பிரகாரம் அமல் செய்யாவிடினுங்கூடத் தாங்கள் அல்லா(ஹ்)விடம் பிழை பொறுக்கப்பட்டுள்ளவர்கள் என்றெல்லாம் அவர்கள் மனத்தில் எண்ணிக் கொண்டிருக்கிறுர்கள். முந்திய ஏனைய வகையினரைவிட இவர்கள் மிகவும் பொல்லாத மருட்சியிலாழ்ந்திருக்கிறுர்கள்.

அல்லா(ஹ்)வையும், அவன் ரஸூலையும் தாங்களே மிகவும் நேசிப்பவர்கள் என்று இவர்கள் நினைத்துள்ளார் கள். கலப்பற்ற (இக்லாஸ்) தன்மை பற்றிய மகாநுண் ணிய விஷயங்களையெல்லாம் தெளிவாக விளக்கிவைக்கும் தாங்கள், உண்மையில் கலப்பற்ற சித்தசுத்தி பெற்றவர் களாய் இருக்கப்போய்த்தான் அவ்வாறுன விஷயங்களை யெல்லாம் தெரிய, பேச முடிகிறதென்றும், நப்ஸின் அணுப்போன்ற குற்றங் குறைகளையும் படம் பிடித்தாற் போலக் காட்டி விளக்கும் தாங்கள் அத்தகைய சக்தி யைப் பெற்றது உண்மையில் அக்குற்றங் குறைகளையெல் லாம் தங்களின் ஆத்மாவிலிருந்து அகற்றியிருப்பதனுல் தான் என்றும் இவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறுர்கள். இவ்வாறே, ஏனைய கருமங்களிலும் இவர்கள் தாங்கள் பரிசுத்தமுள்ளவர்கள் என்று சுயமே கருதிக்கொண் டிருக்கிறுர்கள். யதார்த்தத்தில், சர்வ ஜனங்களையும்விட இவர்களே இதய மாசுடையவர்களாயும், பூலோக இச்சை மிகுந்தவர்களாயும் இருக்கிறுர்கள். மண்ணுலகின்மீது மட்டில்லா மோகங்கொண்ட இவர்கள், மற்றவர்களின் மனத்தைத் தங்கள்பால் வசீகரிப்பதற்காக உலக மாயை, பற்றற்றிருத்தல் பற்றி வார்த்தைகளை அள்ளிக் கொட்டு

வார்கள். ஆனால், இவர்கள் உள்ளமோ பூலோக இன்பங்களைத் துய்க்கும் வேட்கையில் துள்ளிக் குதித்துக்கொண்டிருக்கும். தாங்கள் சித்தசுத்தியற்றவர்களாய் இருந்துகொண்டு ஏனையோர் சித்தசுத்தி பெறவேண்டுமெனப் போதனை செய்வார்கள். அல்லா(ஹ்) அளவில் மனமுருகி இறைஞ்சிக் கெஞ்சும் பாவனையில் வெளிப் பாசாங்காக அழுதும், கண்ணீர் வடித்தும் பிரலாபித்துத் துஆக் கேட்பார்கள். ஆனால், யதார்த்தத்தில் அல்லா(ஹ்)வுடைய பொருத்தத்தை விட்டு அப்பால் ஓடும் இயல்புடையவர்களாயிருப்பார்கள். அல்லா(ஹ்)வைக் கொண்டும், ரஸூலைக் கொண்டும் எச்சரிக்கை செய்து ஏனையோருக்குப் பயமுறுத்தி அச்சமூட்டுவார்கள். ஆனால், தாங்களோ அல்லா(ஹ்)வைக் கொண்டும், ரஸூலைக் கொண்டும் சற்றுங்கூட அச்சமுறாமல், நிர்ப்பயமாயும் அலட்சியமாயுமிருப்பார்கள். அல்லா(ஹ்)வின் தியானத்தில் (திக்ரில்) எப்போதும் நிலைத்திருக்குமாறு ஏனையோருக்கு இயம்புவார்கள். ஆனால், தாங்களோ அடியோடு அல்லா(ஹ்)வை மறந்திருப்பார்கள். மற்றவர்களை அல்லா(ஹ்)வின் பக்கம் முடுகப் பண்ணுவதாகக் கூறிக் கொள்வார்கள். ஆனால், அவர்களோ அவனது திருச் சமூகத்தை விட்டும் மிக மிகத் தொலைவில் இருப்பார்கள். தீய குணங்களை வெறுத்துப் பேசுவார்கள். ஆனால், அத்தனை தீய குணங்களும் அவர்களிடந்தான் குடிகொண்டிருக்கும். சிருஷ்டிப் பொருட்களிடம் ஆதரவு வைத்துப் பற்றுதல் கொள்ளாமல் சிருஷ்டி கர்த்தாவாகிய அல்லா(ஹ்)விடமே ஆதரவு வைத்து, அவன்மீதே நம்பிக்கை வைத்து அவனிடமே சரண்புகுங்கள் என்று மற்றவர்களுக்குக் கூறுவார்கள். ஆனால், தாங்களோ சிருஷ்டிப் பொருட்களையே முழுதும் நம்பி அவற்றிடமே அதிக வேட்கையும் பக்ஷமும் கொண்டிருப்பார்கள்.

மேலும், மக்களைச் சீர்திருத்துவதே தங்கள் நோக்க மெனச் சொல்லிக் கொள்ளும் இவர்கள், புகழையும் செல்வாக்கையுமே நோக்கமாகக் கொண்டு உபன்யாசங்கள் நிகழ்த்துகிறார்கள். ஜனங்களிடையில் தங்களின் அலங்காரப் பிரசங்கங்களை நிகழ்த்தி அவற்றின் மூலம் வருவாய்க்கு வழிசெய்துகொள்கிறார்கள். இத்தகைய பிரசங்கங்களுக்குத் தடையேற்பட்டுவிட்டால் இவர்களின் ஜீவனத்துக்கு நெருக்கடியாகிவிடும். அது தவிர இவர்களுக்கு வேறு வழியில்லை. ஆனால், இவர்கள் வாயால் என்னவோ 'சுயநலமே எங்களிடமில்லை. ஜனங்களை நேர் வழியில் செலுத்துவது தான் எங்கள் நோக்கம்' என்று சொல்லிக் கொள்கிறார்கள். இப்படிக் கூறிக்கொள்ளும் இவர்களின் வஃளு மஜ்லிசுக்கு வழக்கமாக வரக்கூடிய ஜனங்கள், இவர்கள் போன்ற வேறு உபதேசிகள் யாரிடமாவது போய் உபதேசம் பெறுகிறார்கள் என்று கேள்விப்பட்டால் உடனே பொறாமையும் மனப் புழுக்கமுங் கொண்டு, அதன் கடுமையாலே மரணித்துப் போகுமளவுக்கு எரிச்சலடைகிறார்கள். அவ்வாறு மற்றவர்களிடம் உபதேசத்தைக் கேட்டு வந்தவர்கள் இன்னாருடைய உபதேசம் நல்ல அருமையானது, விசேஷமானது என்று அதனைப் புகழ்ந்து அதன் மகிமையை எடுத்துக் கூறுவதைத் தங்கள் காதால் கேட்டுவிட்டாலோ அல்லா(ஹ்)வின் படைப்புகளில் யாரும் கொள்ளாத ஆத்திரமும், எரிச்சலும் கொண்டு தங்களின் மனப் புழுக்கத்தை வெளிக் கொட்டுவார்கள்; அவர்கள் மீது காய்ந்து விழுவார்கள். அந்தோ, இன்னவர் மதி மருட்சியில் முற்றும் அழுந்திப் போனவர்களாவர். இவர்கள் மனத்தை மாற்றிச் சன்மார்க்க நெறியின் பக்கம் இவர்களை மீட்டுதல் மிகக் கஷ்டமானகாரியம்.

உபதேசிகளில் மற்றொரு குழாத்தினர் ஜனங்களுக்கு அத்தியாவசியமாகச் சொல்லிக் காட்டப்படவேண்டிய

விஷயங்களைப் பற்றிக் கொஞ்சமுங் கவலை கொள்ளா திருக்கிறார்கள். இத்தகையவர்கள்தாம் இக்காலத்தியப் பேச்சாளர்களில் மிகுதமாய் உள்ளனர். ஆண்டவனது கார்மானத்தைப் பெற்ற ஒரு சிலரைத் தவிர அநேக மாக ஏனையவர்களெல்லாம் இக்குழாத்தினரையே சேருவர்.

இவர்கள் பேச்செல்லாம் எதுகை, மோனை அலங் காரத்துடனும், மிடுக்கான அடுக்கு மொழிகளுடனும், எல்லோராலும் தெரிந்துகொள்ள முடியாத சிக்கலான, மார்க்க வரம்புக்குப் புறம்பான கருத்துக்களுடனும், பயனில்லாத வீண் புலம்பலாகவேயிருக்கும். இவர் களின் முழுச் சிந்தையும், கவனமும், முயற்சியும் சொற்களைக் கவர்ச்சிகரமாக அமைத்து, அழகிய அடுக்கு மொழிகளாக்கிப் பேசுவதிலேயே சென்றுகொண்டி ருக்கும். கவிதைகளைப் போன்று தங்களின் வாய்ப்பேச்சு இனிமையுடனிருத்தல் வேண்டுமென்பது இவர்கள் அவாவாகும். ஜனங்கள், சங்கீதம் (ஸமா) கேட்கும் இன்பத்தில் எப்படித் தம்மை மறந்து பரவசமாகிச் சுய உணர்விழந்து அழுது புறண்டு கூச்சலிடுகிறார்களோ அஃதேபோன்று தங்களின் வசனங்களைக் கேட்டும் பரவச உணர்ச்சி பெற்று லயித்துச் சுய உணர்விழந்து விட வேண்டும் என்ற ஆசையால் இவர்கள் தங்கள் முழு முயற்சியையும் அதில் காட்டுவார்கள். உண்மையில் ஹக்குடைய நேசப்பற்று மிகைத்த (மஹப்பத்) பேரின்பக் காதல் பூண்டு தவாஜுது - ஷவுகு - ஜதுபு என்ற பர வசம் உண்டாகித் தன்னை மறந்த நிலைகள் (ஹால்கள்) மிகைப்பது போற்றத்தக்கதே. ஆனால், இவர்களோ வீணான, மோசமான வெளிரங்க எண்ணங்களைக்கொண்டு, வெளிப் பகட்டிற்காகவே இத்துறையில் முனைந்திருக் கிறார்கள். இவ்வாறாக, உலகத்தாரின் பாராட்டையும் புகழையும் எதிர்பார்த்து உபதேசிக்கும் இத்தகையோர்

மனிதரிலுள்ள ஷைத்தான்களாவர்; தாமுங் கெட்டு மற்றவர்களையும் சீரழித்தவர்களாவர். ஏனெனில், முன்குறிப்பிட்ட அந்தச் சிலராவது தங்களைச் சீர்திருத்தாவிடினும் மற்றவர்களையாவது சீர்திருத்த முனைகின்றனர். ஜனங்களுக்கு நல்லுபதேசங்களை யளிப்பதிலேயாவது ஈடுபட்டிருக்கின்றனர். இவர்களோ அல்லா(ஹ்)வின் நற்பாதையை விட்டும் ஜனங்களைத் தடுத்து, அல்லா(ஹ்)வை மறந்து உலக இச்சை எனும் குப்பையால் அவர்கள் இதயங்களை நிறப்பும் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

"ஜீவனத்துக்காகச் செய்யப்படுங் கருமம் எத்தகையதாயினும் அது குற்றமாகாது" என இவர்கள் சொல்லிக்கொண்டு, துன்யாவின் குப்பைகளில் (இச்சைகளில்) பெரிதும் ஆசை பூண்டு மற்ற ஜனங்களையும் அல்லா(ஹ்)வின் விஷயத்தில் மருட்சி பெறப் பண்ணி வழிகெடுத்து விடுகிறார்கள். முக்கியமாக இவர்கள் அலங்கார, ஆடம்பர உடுப்புக்களை யணிந்து, கர்வம் பிடித்தவர்களும், முகஸ்துதிப் பிரியர்களும் புடைசூழ வஃளு மஜ்லிஸ்களைக் கூட்டி, அல்லா(ஹ்)வின் அருளைவிட்டும் பேறு கெட்டுப் போகும்படியான, மோசமான பிரசங்கங்களையே நிகழ்த்துகிறார்கள். அவற்றின் மூலம் ஜனங்களை மோசமான கொள்கைகளிலும், பாவமான கருமங்களிலும் ஈடுபடுத்தி விடுகிறார்கள். இவர்களைவிட்டும் அல்லாஹ் நம்மைக் காப்பாற்றுவானாக!

உபதேசிகளில் மற்றொரு கூட்டத்தினர் உலகப்பற்றற்று இருத்தல் சம்பந்தமான வாக்கியங்களையும், அவை சம்பந்தமான ஹதீஸ்களையுமே பேசிக்கொண்டிருப்பார்கள். இவர்களில் சிலர் மற்றவர்களிடம் ஏதோ தாங்கள் கேட்டுப் படித்ததையும், கேள்விப்பட்டதையும் நுனிப்புல் மேய்ந்தாற்போல் மனப்பாடம் பண்ணிக்கொண்டு, ஆனால், அவற்றின் கருத்தைச் சரிவர உணராது, சபை

கூட்டி, பிரசங்க மேடைமீதேறிச் சொற்பொழிவாற்று கிறார்கள். மற்றும் சிலர் ஜனங்கள் கூடும் கடைவீதிகளில் அமர்ந்து இத்தகைய வாக்கியங்களை எடுத்துப் பிரசங் கிக்கிறார்கள். உலக மாயையில் மோசம்போகாத பெரி யார்களின் சரிதைகளையும், அவர்களின் நல்வாக்கி யங்களையும் தாங்கள் நன்றாகத் தெரிந்திருப்பதாலும், அவை பற்றிப் பேசிக்கொண்டிருப்பதாலும் அல்லா(ஹ்) விடம் தாங்கள் நல்லந்தஸ்து பெற்றவர்கள் - பாவ மன் னிப்புப் பெற்றவர்கள் என்று இவர்கள் மனப்பால் குடித் துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், எந்தப் பெரியோர் களைப் பற்றி இவர்கள் அறிந்தும், தெரிந்தும், அவர்களின் வாக்கியங்களைக் கூறிக்கொண்டுமிருக்கிறார்களோ அந்தப் பெரியோர்களைப் போன்று இவர்களும் அமல்செய்ய முயலாமலிருப்பதுடன், அவர்களின் போக்குக்கு நேர் முரணாக நடப்பதுடன் சதாவும் உலகப் பற்றிலே மூழ் கிக் கிடக்கிறார்கள். இன்னவர்கள், முந்திய யாவரையும் விட ஆழ்ந்த மதிமயக்கமுற்றவர்களாவர்.

ஆலிம்களில் பிறிதொரு கூட்டத்தினர் முழு நேரத்தை யும் ஹதீஸுடைய இல்மில் செலவிடும் முஹத்திஸீன்க ளாய் இருக்கின்றனர். அத்துறையில் நாயக வாக்கியங் களைத் திரட்டுவதிலும், ரிவாயத்துகளைச் சேகரிப்பதிலும் இவர்கள் ஆழ்ந்துள்ளனர். ஆனால், மற்றவர்களைவிடத் தாமே அதிகமான ஹதீஸ்களை அறிந்தவர், அதிகப் பிரயாசையும் சிரமமும் பட்டுப் பல நுண்ணிய ஹதீஸ் களைச் சேகரித்தவர், பல்வேறு கிராமங்களிலும் போயலைந்து பெரியார்கள் பலரைக் கண்டு அதிகமான ஹதீஸ்களைச் சேகரித்தவர் ஆகவேண்டுமென்ற எண் ணமே இவர்களில் ஒவ்வொருவரையும் ஆட்கொண்டுள் ளது: "நாம் இன்ன ஸ்தலங்களுக்கெல்லாம் சென்றோம்; மேதாவிகளான இன்னாரையெல்லாம் சந்தித்தோம்; மற்றவர்கள் தேடிக் கொணராத பல அபூர்வ ஹதீஸ்களை

யெல்லாம் ஆதாரப்பூர்வமாகப் பெயர் வரிசை (இஸ்னது) களுடன் சேகரித்து ரிவாயத்துச் செய்துள்ளோம்'' என்று பெருமையோடு இவர்கள் கூறிக்கொள்வார்கள்.

பல காரணங்களால் இத்தகையோர் மதிமயக்க முற்றிருக்கிறார்கள். அவற்றுள் ஒரு காரணத்தால், வேத நூற்களைச் சுமக்கும் கழுதைக்கு இவர்கள் ஒப்பாகிறார்கள். ஏனெனில், தாங்கள் சேகரித்துள்ள ஹதீஸ்களின் தாத்பரியத்தைத் தாங்கள் உணரவேண்டும், அவற்றின் கருத்துக்களை நன்கு சிந்தித்துத் தாங்கள் அனுஷ்டானம் புரியவேண்டும் என்ற எண்ணமே இவர்களுக்கு உண்டாவதில்லை. இன்னாரிடமிருந்து இன்ன ஹதீஸைக் கேட்டுள்ளோம் என்று மற்றவர்களுக்கு அதைச் சொல்வதுடன் மட்டும் இவர்கள் நிறுத்தி, அதுவே போதும் எனக் கருதினரே தவிர ஹதீஸ்களின் கருத்தைத் தாங்கள் கிரகிக்கவோ, அவற்றின் தத்துவத்தைத் தாங்கள் உணரவோ முனைவதேயில்லை. இவர்கள் போக்கு நன்மைக்கு வெகு தூரமானதாம்.

ஹதீஸ் கொண்டு நாடப்பட்டுள்ளது யாது? அதை உணர்வதும், அதன் கருத்தை ஆராய்ந்து சிந்தையில் கொள்வதுமன்றோ! அதாவது முதலில் ஹதீஸைக் கேட்கவேண்டும்; பின்பு அதைப் பேணி மனனம் செய்யவேண்டும்; பின்பு அதன் தத்துவத்தை கிரகிக்க வேண்டும்; பின்பு அதற்கேற்ப அனுஷ்டானம் புரிந்து ஒழுகி அமல் செய்யவேண்டும். இவற்றையெல்லாம் செவ்வனே செய்து, அப்பால்தான் மற்றவர்களுக்கு ஹதீஸை எடுத்தியம்பவேண்டும். ஆனால், இக்கூட்டத்தினரோ தாங்கள் கேள்வியுற்றதோடு மட்டும் நிறுத்திக் கொண்டனர். அதனால் இவர்களுக்கு ஒரு பயனுமுண்டாகவில்லை.

இக்காலத்தில் சிறுவர்கள் பலர் ஹதீஸ்களை ஓதுகிறார்கள்; ஆனால், அவர்கள் மறதியில் முதன்மையாகத்

திகழ்கிறார்கள். அவர்களுக்கு அவற்றை ஓதிக் கொடுக்கும் பெரியார்களும் சில சந்தர்ப்பங்களில் மறதியுடனிருக்கக்கூடும். அவர்கள் முன்பாகப் பிள்ளைகள் ஹதீஸை ஓதிக்கொண்டிருக்கும்போது அதை அப்பெரியார்கள் கவனியாமலிருக்கலாம்; அல்லது தூங்கிக் கொண்டுமிருக்கலாம். அச்சந்தர்ப்பத்தில் ஹதீஸ்களை ரிவாயத்துச் செய்யச் செல்பவர்கள் அந்த 'ஹதீஸை' அவர்கள் கூறியதாகத் தமது தொகுப்பில் சேர்த்துக் கொண்டிருக்கலாம்.

ஹதீஸ் கேட்பதற்கும், ரிவாயத்துச் செய்வதற்கும் அடிப்படை மூலம், நபி நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து நேரில் கவனித்துக் காது தாழ்த்திக் கேட்பது தான். அவ் வண்ணம் கேட்டதை ஓரெழுத்தும் விடாது மனனஞ்செய்து பேணிப் பின்பு, அதற்கொப்ப வழுவின்றிப் பிறருக்கு எடுத்துரைத்தல் வேண்டும். ரிவாயத்து என்னும் அறிவிப்பானது பேணி மனனஞ் செய்வதன் மூலமும், மனனஞ் செய்தல் என்பது காது தாழ்த்திக் கவனித்துக் கேட்பதன் மூலமுமே உண்டாகும்.

அருமை நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் சமூகத்திலிருந்து ஹதீஸைக் கேட்க முடியாவிடின், அவர்களின் அருமை ஸஹாபாக்களிடமிருந்து அல்லது அவர்களை உண்மையோடு பின்பற்றிய தாபியீன்களிடமிருந்து கேட்கலாம். அவர்களிடமிருந்து கேள்விப்படும் ஹதீஸ்கள் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களிடமிருந்து கேட்டதற் கொப்பாகும். ஏனெனில், அவர்கள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் அல்லும் பகலுமாய் இருந்து ஹதீஸ்களைக் காது தாழ்த்திக் கேட்டு மனத்தில் பதியவைத்து அவற்றிற்கேற்ப ஒழுகி வந்துள்ளார்கள். அவர்களைப் பின்பற்றி இவர்களும் ஹதீஸ்களை அதபுடனும், கவனத்துடனும் கேட்டு மனதில் பதிய வைக்கவேண்டும். தாம் கேள்வியுற்றுள்ள ஹதீஸில் ஓர்

அட்சரமேனும் சந்தேகத்திற்கிடமில்லாத தன்மையில் ரிவாயத்துச் செய்யவேண்டும். அதில் ஏதும் சந்தேகமோ அல்லது ஞாபகப் பிசகோ ஏற்படின் அதை ரிவாயத்துச் செய்ய முற்படலாகாது. ஏனெனில், அதன் மூலம் தவறுகள் விளையக்கூடும்.

ஹதீஸ்களைப் பாடமிட்டுப் பேணுவது இருவகையில் சாத்தியமாகும்: (1) சரிபாடான ஞாபகத்துடன் அவற்றை மனதில் நிலைபெறச் செய்தல். (2) கேள்வியுற்றவற்றை எழுதிப் பதிந்துக்கொள்ளல். இவ்வண்ணம் எழுதிப் பதிந்ததை தன்னல்லாத மற்றவர் யாரும் கூடுதல், குறைவுசெய்து மாற்றிவிடா வண்ணம் பாதுகாத்தல் வேண்டும். ஏனையோர் வந்து, ஸஹீஹான அந்த ஹதீஸை மாற்றிக் குழப்பிவிடாமல் தன் பொறுப்பில் வைத்துப் பாதுகாத்துவரவேண்டும். இவ்வண்ணம் கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் பேணிவரவேண்டிய ஹதீஸ்களைச் சிறுவர்களிடமிருந்தோ, மறதியாளர்களிடமிருந்தோ, தூங்குமூஞ்சிகளிடமிருந்தோ கேட்டு ரிவாயத்துச் செய்யலாகாது. அவ்வாறு செய்தலாகுமென்றால் தூளியில் தூங்கும் பாலர்களிடமுங்கூடக் கேட்டு ரிவாயத்துச் செய்யலாம் என்றாகிவிடும். இதுபோன்று, ஹதீஸ்களை ரிவாயத்துச் செய்யும் முஹத்திஸீன்களின் விஷயத்தில் எத்தனையோ பொறுப்புகளும், ஷறுத்துக்களும் உள்ளன.

பொதுப்படையாகக் கூறும்போது. ஹதீஸ்கொண்டு நாட்டப்படும் கருமம் அதன் பிரகாரம் அமல் செய்வதே. அதற்கனுசரணையாக, ஹதீஸின் கருத்துக்களையும், அந்தரங்க அம்சங்களையும் உணர முற்படவேண்டும். திரு குர்ஆனிலிருப்பது போன்றே ஹதீஸிலும் பல அபூர்வக் கருத்துக்கள் செறிந்திருக்கின்றன.

அபூ ஸுப்யான் இப்னு அபில் கைரில் மன்ஹீ (ரலி) பற்றி அறிவிக்கப்படுகிறதாவது: அவர்கள், ஸாஹிர் இப்னு அஹ்மதுஸ் ஸர்கஸீ(ரலி) யின் சபைக்கு விஜயஞ்

செய்தார்கள். "அனுவசியமானவை (வீண் வார்த்தை) களை விட்டு நீங்கியிருத்தல் ஒரு மனிதனுடைய இஸ்லாமின் சிறந்த அம்சமாகும்" என்ற நாயக வாக்கியந்தான் அங்கு ரிவாயத்துச் செய்யப்பட்ட ஹதீஸில் முதலாவதாயிருந்தது. "எனக்கு இது போதும், இதைப் பற்றி நான் சரிவர அறிந்து கொண்டபின் ஏனைய ஹதீஸ்களை கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறி, கேள்வியுற்ற அந்த ஹதீஸின் சிந்தனையில் ஆழ்ந்தவர்களாய் அன்னார் கிளம்பிவிட்டார்கள். அவர்களை போன்ற மகான்கள் ஹதீஸ் கேட்கு இயல்பு இத்தகையதாய் இருந்தது.

ஆலிம்களில் மற்றுமொரு வகையினர் இலக்கண, இலக்கியப் (நஹ்வு, லுகாத்) பாடங்களிலும், மொழி, பாடல், கவிதை ஆராய்ச்சித் துறைகளிலும் ஆழ்ந்து ஈடுபட்டுள்ளனர். அந்த ஈடுபாட்டிலே, இவர்கள் மதி மருட்சியடைந்துள்ளனர்.

சமூகத்தின் மத்தியில் அத்தகைய துறைகளில் தாங்களே தலைசிறந்த அறிஞர்களென்றும், அதனால் தாங்களே பாவமன்னிப்பைப் பெற்ற புண்ணிய ஆத்மாக்களென்றும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இலக்கண, இலக்கியப் பாடங்கள், பாஷா ஞானம் இவற்றாலேயே சத்திய தீனுல் இஸ்லாம் மார்க்கத்தையும், நாயகம் (ஸல்) அவர்களின் மேலான ஸுன்னத்தையும் காப்பாற்ற முடியுமென்று எண்ணிக்கொண்டு அத்துறையில் தம் வாழ்நாள் முழுவதையுமே விரயமாக்குகின்றனர். அப்பப்ப, இது மலைபோன்ற மதிமயக்கம்!

அறிவுகொண்டு இவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நன்றாக ஆராய்ந்து நோக்குவார்களாயின் துருக்கி பாஷை போன்று அரபியும் ஒரு பாஷைதான் என்பதை உணர்வார்கள். துருக்கியப் பாஷையிலோ அல்லது இந்தியப் பாஷையிலோ அல்லது வேறெந்தப்

பாஷையிலோ உள்ள இலக்கண, இலகியங்களை ஆராய் வதிலேயே ஒருவன் தன் வாழ்நாள் முழுவதையும் செல விடுவது எவ்வாறு வீண் காரியமோ அவ்வாறேதான் அரபிப் பாஷையிலும் தேவைக்கு மிஞ்சி இலக்கண, இலக்கிய ஆராய்ச்சியில் வாணுள் முழுவதையும் ஈடு படுத்துவதும் வீண் காரியமாகும். ஆனல், மற்ற மொழி களைவிட அரபி மொழிக்கு உள்ள சிறப்பு சன்மார்க்க ஷரீஅத் அரபிமொழியில் அருளப்பட்டுள்ள ஒரேயொரு விஷயந்தான்.

திரு குர்ஆனையும், ஹதீஸ் ஷரீபையும் சரிவரப் படித்துத் தெரிந்துக்கொள்ளும் அளவுக்கு அர பிப் பாஷையின் இலக்கண, இலக்கியங்களைக் கற்ருல் போதும். அதன் மூலமே தேவையான அளவு இலக்கண, இலக்கிய அனுபவம் பெற்று விடலாமே! தேவைக்கு மிஞ்சி அத்துறையில் மூழ்கிக் காலத்தை வீணுக்கல் அவசியமன்று. அவ்வண்ணம் நடப்பவன் மதிமயங்கிய பேதையேயாவான்.

ஆபிதுகளின் மதிமயக்கம்

தொழுகையாளர்கள் பல வகையான இபாதத்துக்களிலும், புண்ணிய வணக்கங்களிலும், நல்லமல்களிலும் ஈடுபட்டுள்ளனர். எனினும், அவற்றிடையிலும் மருட்சியடைந்த வகையினர் பலர் இவர்களிலுண்டு. தொழுகையில் மருட்சியடைந்தோர் சிலர்; திருகுர்ஆனை ஓதுவதில் மதிமயங்கினோர் சிலர்; ஹஜ்ஜு கருமத்தில் மதிமயங்கினோர் சிலர்; ஜிஹாதில் (சன்மார்க்கச் சமரில்) மதிமருட்சியடைந்தோர் சிலர்; பற்றற்றிருத்தலில் (ஸுஹ்தில்) மதிமயங்கினோர் சிலர்.

தொழுகையில் மருட்சியடைந்தோர்: இவர்களில் சிலர் பறுளுகளைத் தவறவிட்டுவிட்டு, மேல் மிச்சமான நபில்களில் பராக்காய் இருக்கிறார்கள். சில சமயம் அத்துமீறி வரம்பு கடந்துங்கூட இவர்கள் மேல் மிச்சமான காரியங்களில் ஈடுபட்டுவிடுகிறார்கள். இதனால் அளவு கடந்த ஊசாட்டத்துக்கு இலக்காகிவிடுகிறார்கள். ஒலுச் செய்யும்போது தண்ணீரைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள். ஒலுச் செய்வதற்கு ஆகும் என்று ஷரீஅத்தில் அனுமதிக்கப்பட்ட தண்ணீரில் கூட இவர்கள் மிகவும் அதிகமான சுத்தத்தை எதிர்பார்க்கிறார்கள். இதனால் தொழுகையின் வேளைகள் கூடப் பிற்பட்டுத் தப்பிப்போய்விடுகின்றன.

ஒலுச் செய்யும் தண்ணீரில் அசுத்தம் ஏதும் விழுந்திருக்கலாமோ என்று கவனித்து அற்பசொற்பத்தையும், இல்லாதவற்றையும் மலைபோல பிரமாதப்படுத்தும் இவர்கள், தங்களுடைய வயிற்றுக்கு அளிக்கும் உணவின் விஷயத்தில் அது ஹலாலா, ஹராமா என்ற பிரதான கவனிப்பில் அந்த அளவோ அல்லது அற்பமாகவோ கூடக் கவனஞ் செலுத்துவதில்லை. மேலும்

சில சந்தர்ப்பங்களில் நூற்றுக்கு நூறு ஹராமானவைகளையும் நன்றாகத் தின்றுவிடுகிறார்கள். ஒலுவின் தண்ணீரில் செலுத்தும் ஜாக்கிரதையையும், கவனத்தையும் ஹலால், ஹராமைப் பேணும் விஷயத்தில் இவர்கள் கைக்கொள்வார்களாயின் மிகவும் சிரேஷ்டமாகும்; ஸஹாபாக்களின் பொன்னான குணத்தையும் பின்பற்றியவர்களாவார்கள்.

ஏனெனில், ஒரு முறை ஹஜ்ரத் உமர் (ரலி) ஒரு கிறிஸ்தவப் பெண்ணின் பாத்திரத்தில், (அப்பாத்திரம் அப்பெண்மணியால் நஜீஸில் பழங்கப்பட்டிருக்கக் கூடும் என்ற சந்தேகம் கொள்ள இடமிருந்துங்கூட அதில்) ஒலுச் செய்தார்கள். ஆனால், அவர்கள், ஹராமில் சிக்கிவிட நேரலாம் என்ற அச்சத்தால் எத்தனையோ ஹலால்களையும் ஒதுக்கிவந்துள்ளார்கள். "ஹராமில் விழுவேன் என்ற பயத்தால் எழுபது ஹலாலானவைகளையுங்கூட நான் விட்டுவிடுகிறேன்" என்று அவர்கள் சொல்லியுள்ளார்கள்.

தொழுகையாளர்களில் வேறொரு பிரிவினர்: தொழுகையுடைய நிய்யத்து விஷயத்தில் மட்டிடமுடியாத ஊசாட்டம் இவர்களை ஆட்கொண்டுள்ளது. நிய்யத்துச் சரியாகவில்லை என்ற காரணத்தை முன்னிறுத்தி ஷைத்தான் இவர்களை ஊசாட்டங் கொண்டுக் கலைக்கிறான். நமது நிய்யத்துச் சரியாகவில்லையே, சரியாகவில்லையே என்று இவர்கள் குழம்பிக்கொண்டே உரத்த சப்தத்துடன் நிய்யத்தைத் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். பின்பு தக்பீரை விட்டுக் கையை உதறுகிறார்கள். இப்படியே மாறிமாறிச் செய்து ஜமாஅத்தையும் தவறவிட்டுவிடுகிறார்கள். அத்துடனா? சில சந்தர்ப்பங்களில் இவர்களுக்குத் தொழுகையில் வேளை கூடத் தப்பிப்போகிறது. எப்படியோ, ஒரு வகையாகத் தொழுகைக்குத் தக்பீர் கட்டிவிடுகிறார்கள். ஆனால்,

நிய்யத்துச் சரிதானு என்ற சந்தேகம் உள்ளத்தைக் குழப்பிக்கொண்டேயிருக்கிறது. அப்படியே ஒருவகையாக நிய்யத்துப் பற்றி ஒரு முடிவுக்கு வந்துவிட்டாலும், தக்பீரைச் செவ்வையாக மொழிந்தோமோ இல்லையோ என்ற ஐயமுண்டாகிவிடுகிறது. உடனே அதில் குழப்பமுற்று பல தடவை திருப்பித் திருப்பி தக்பீரை உரத்துக் கூறி தக்பீருடைய வகையை (வசிபத்தை)யே பேதகப்படுத்தி விடுகிறார்கள். காது தாழ்த்திக் கேட்பதன் வரிசையையும் இழந்துவிடுகிறார்கள்.

ஊசாட்டத்துடன் கூடிய இவர்களின் இத்தகைய நுணுக்கமான பேணுதலெல்லாம், கவனமெல்லாம் முதலாவது ரக்அத்தில் மட்டுமேதான். மற்ற ரக்அத்துகளிலோ அவற்றிலேதும் இராது. இவர்கள் தொழுகையில் மனத்தைச் செலுத்தி பயபக்தியுடன் தொழமாட்டார்கள். இதுவே இவர்களுடைய மதிமயக்கமாகும். தொழுகையில் மனத்தைச் செலுத்தி பயபக்தியுடன் தொழுவது மிகப் பிரதான கடமை என்பதை இவர்கள் உணர்வதே இல்லை.

"இவ்வண்ணம் நீங்கள் மிக நுணுக்கமாகக் கவனித்து ஊசாட்டமடைவது மிகவும் நல்ல காரியம். சாதாரண (அவாம்) ஜனங்களைவிட நீங்கள் சிறந்தவர்கள் என்பதை இதுவே பிரித்தறிவிக்கிறது. ஆகவே, உங்கள் நாயனிடத்திலே நீங்கள் தான் நல்லவர்கள்" என்று ஷைத்தான் இவர்களிடம் உரைத்து, இவர்களின் மோசமான ஊசாட்டங்களை அலங்காரமாகக் காட்டி இவர்களை மதிமயங்கச் செய்துவிடுகிறான்.

தொழுகையாளர்களில் மற்றொரு கூட்டத்தினர்: இவர்கள் தொழுகையில் ஸூரத்து பாத்திஹாவின் ஒவ்வொரு அட்சரத்தையும் உச்சரிக்கும் விஷயத்தில் அளவில்லாத ஊசாட்டத்துக்கு ஆளாகியுள்ளார்கள். ஓதக்கூடிய மற்ற

விஷயங்களிலும் அவ்வாறே செய்கிறார்கள். ஷத்து, மத்துகளைச் சரியாக உச்சரிக்கவேண்டுமென்பதிலும், ழாதுக்கும், ழேக்கும் வித்தியாசப்படுத்தி தெள்ளத் தெளிய ஓதவேண்டுமென்பதிலும்தான் இவர்கள் முழுச் சிந்தையையும் செலுத்திக் கொண்டிருக்கிறார்களே தவிர வேறு எதிலும் கவனஞ் செலுத்துவதில்லை. இத்தனை சிரமத்துடன் இவ்வாறு ஓதும் இவர்கள் பாத்திஹாவின் அகமியம் யாது, அதன் தாத்பரியம் என்ன என்பதை யெல்லாம் சிந்திப்பதேயில்லை. பாத்திஹாவின் கருத்தை உணர்ந்தோதுவதிலல்லவா கவனஞ் செலுத்தவேண்டும்! தொழுகையல்லாத நேரத்தில் எவ்வளவு ஓதுகிறார்களோ அவ்வளவே தொழுகையில் ஓதினாலும் போதுமானது. அதற்காக அடியார்கள் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கவேண்டும் என்பதில்லை. கருத்தைச் சற்றுங் கவனியாது எழுத்தை மட்டும் பெரிதாக நோட்டமிடும் இவர்களின் மதிமயக்கம் கடுமையானது.

ஒரு கோரிக்கையுடன் அரச சபைக்குச் செல்லும் ஒரு மனிதன், தன் கோரிக்கையை அரசன் முன் நேரடியாகச் சொல்லும்படி உத்தரவிடப்பட்டுள்ள நிலையில், தன் கோரிக்கையை முறையே எடுத்துக் கூற முற்படாமல், ஒவ்வொரு அட்சரத்தையும் அழுத்தத்துடன் நிறுத்தி, நிறுத்தி, மீட்டி, மீட்டி, அ...ர...சே...ஆ...ரா...சே... அ...ர...சே என்று இப்படியே பல தடவைகள் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டும், தான் நாடி வந்ததை யெடுத்துரைக்க முடியாமல் அரச அவையை அவமதித்துக்கொண்டுமிருந்தால், அதற்காக அவனுக்குச் சட்டப்படி தண்டனையளிக்கப்பட்டு, அரச சபையில் உளறின புத்திசுவாதீனமற்றவன் என்று பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கும் அனுப்பப்படுவானல்லவா! இவர்களின் போக்கும் இம்மனிதனுடைய நிலையாகவே உள்ளது.

திரு குர்ஆன் ஓதுவதால் மதிமயங்கினோர்: இவர்கள் திரு குர்ஆனை மளமளவென்று ஓதி முடிக்கிறார்கள். "இரவும், பகலும் தொடர்ச்சியாக நாங்கள் இத்தனை ஜுஸ்வு ஓதிவிட்டோம், முப்பது ஜுஸ்வுகளையும் பூர்த்திசெய்து கத்முச் செய்துவிட்டோம்" என்று பெருமையுடன் மற்றவர்களைவிட அதிகமாக ஓதியிருப்பதாகக் கூறவேண்டும் என்ற நோக்கத்தோடு மழமழவென்று ஓதுகிறார்கள். இவர்கள் வாய் திரு குர்ஆனைக் கொண்டு முணுமுணுத்துக் கொண்டிருந்தாலும், இவர்கள் இதயம் பலவகைகளான மேலெண்ணங்களிலும், வேறு சிந்தனைகளிலும், உலக ஆசாபாசங்களிலும் வட்டமிட்டுத் திரிந்துகொண்டிருக்கும். திரு குர்ஆன் அல்லா(ஹ)வுடைய திரு வசனம், அதன் ஒவ்வொரு ஆயத்தும் அடியார்களுக்கு உணர்ச்சியூட்டக்கூடியது என்பதை இவர்கள் அடியுடன் மறந்து திரு குர்ஆனை ஓதும்போது அதன் ஆயத்துக்களின் கருத்துக்களை சற்றும் கிரகிப்பதேயில்லை. மறுமையின் தண்டனை, நரக வேதனை பற்றிய ஆயத்துக்கள் வரும்போது இவர்களின் உள்ளம் அச்சமுறுவதில்லை; உணர்ச்சிவசமாக்கும் உபதேச உரைகள் வரும்போது இவர்கள் உணர்ச்சிவசமாவதுமில்லை; ஏவல், விலக்கல்பற்றிய கட்டளைகளைக் கொண்ட வசனங்கள் வரும்போது இவர்கள் கவனம் அதில் செல்வதில்லை; அற்புதத் திருமறையின் அருமை இன்ப நயத்தை பருகி ரசிப்பதில்லை. இவ்வாறான நிலைமைகளெல்லாம் அர்த்தத்தை யுணர்ந்து ஓதினாலன்றோ உண்டாகும்! இவர்களின் குறிக்கோள் ஓதி முடிப்பதன் எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டுமென்பதாகவல்லவா உள்ளது!

அல்லாஹ்வின் திருமறையை இரவும், பகலுமாய் தொடர்ச்சியாக ஓதி வந்தாலும் அதிலுள்ள அம்ரு, நஹ்யு (ஏவல், விலக்கல்) களைப் பேணி ஒழுகி நடவாம

லிருந்தால் அவ்வாறு ஓதும் அடியான் தண்டனைக்கும், வேதனைக்குமே ஆளாகிறான்.

இவர்களில் சிலருக்கு இனிமையான குரல் வாய்த்திருக்கும். அதனால் தமது இனிய தொனியால் இவர்கள் மயங்கிக் கிடக்கிறார்கள். ஆனால், தமது தொனிமீது பரவசமடைந்து மயங்கவில்லை என்றும், அல்லாஹ்வுடன் (முனாஜாத்) வசனம் புரிய ஏற்படும் வாய்ப்பின் பொருட்டாலும், அவன் வசனங்களைக் கேட்கும் இன்பத்தாலும்தான் பரவசமடைவதாகவும் இவர்கள் கூறிக்கொள்கிறார்கள். இவர்களின் வாய்மொழிக்கும், வாய்மைக்கும் வெகு தொலைவு! உண்மையில், இவர்கள் பரவசமுற்றது தங்கள் இனிமையான குரலில் மயங்கித்தான். யதார்த்தத்தில் அல்லாஹ்வின் வசன இன்பத்தில் திளைத்து லயித்திருப்பின் தொனியின் தன்மை பற்றி நோட்டமிடமாட்டார்கள். அதுபற்றிய ஊசாட்டங்கூட இவர்களுக்கு ஏற்பட்டிராது. இறைவசன இன்ப ரசம் பொங்குவதென்றால் அது தொனியின் இனிமை கொண்டல்ல, திரு குர்ஆனின் கருத்து விளக்கத் தன்மையாலேயேதான். இத்தகையோரும் மிகப் பெரிய மதிமயக்கத்திலாழ்ந்துள்ளனர்.

ஆபிதுகளில் வேறொரு வகையினர்: இவர்கள் நோன்பு விஷயத்தில் மதிமயக்கமடைந்துள்ளார்கள். இவர்களில் சிலர் வருடம் முழுவதும் நோன்பு நோற்கிறார்கள். சிலர் சங்கையான நாட்களில் நோன்பு வைக்கிறார்கள். இவ்வாறாக நோன்பை யனுஷ்டித்து வாயையும், வயிற்றையும் ஆகாரம், பானங்களிலிருந்து தடுத்துக்கொள்ளும் இவர்கள் தங்கள் நாவைப் புறம்பேசுதல் முதலிய பொல்லாங்குகளிலிருந்து தடுத்துக்கொள்வதில்லை; தங்கள் உள்ளங்களை முகஸ்துதியை விட்டும் பாதுகாப்பதில்லை; நோன்பைத் திறந்து ஆகாரமருந்தும் வேளையில் ஹராமானவைகளை விட்டும் தங்கள் வாயை

யும், வயிற்றையும் பேணுவதில்லை; அனுவசியப் பேச்சுக் களை விட்டுத் தங்கள் நாவைப் பேணுவதில்லை.

நபிலான நோன்புகளை யனுஷ்டிக்கும் இவர்கள் பிரதான அத்தியாவசிய வாஜிபான கடமைகளை மறந்து விடுகிறார்கள். எனினும் தாங்கள் ஈடேற்றம் பெற்றவர்கள் என்று நினைத்துக்கொள்கிறார்கள். அந் நினைப்பு உண்மைக்கு மாற்றமானது. கோள், புறம், ஹறாமான புசிப்பு முதலியவைகளை விட்டும் ஈடேற்றம் பெற்ற பரிசுத்த இதயமுடையவர்தான் அல்லாஹ்வின் சமூகத்தில் ஈடேற்றம் பெற்றவராவர். இதையுணராது இவர்கள் மதிமயங்கியுள்ளனர்.

ஆபிதுகளில் வேறொரு கூட்டத்தினர்: இவர்கள் ஹஜ்ஜுடைய காரியத்தில் மருண்டு கிடக்கின்றனர். இவர்கள் எல்லோருமறிய ஹஜ்ஜு செய்கிறார்கள். ஆனால், தாங்கள் அநீதமாகத் தேடிய பொருள்களை உடைமைக்காரர்களிடம் சேர்ப்பிப்பதில்லை; அவர்களின் மன்னிப்பைத் தேடுவதுமில்லை. தம்மீதிருக்கும் கடன்களை அடைப்பதுமில்லை; தாய், தந்தையரின் மனங் குளிரச் செய்வதுமில்லை; ஹலாலான வழியில் திரவியந் தேடி ஹலாலான கட்டுச்சாதம் கட்டுவதுமில்லை. ஹஜ்ஜுக்குச் செல்லும் பாதையிலேயே பர்லான தொழுகை களைப் பேணித் தொழுதுவராமல் பாழ்படுத்திக்கொள் கிறார்கள். உடல், உடுப்பு இவற்றைச் சுத்தமாக வைக்கும் வெளிரங்கப் பேணுதல்களிலும் இவர்கள் சரியாக நடப்ப தில்லை. ஹஜ்ஜுக்குப் போகும் வழியிலே புணர்ச்சி, வம்பு, வழக்கு இவற்றிலிருந்து விலகாது மோசம்போய் விடுகிறார்கள்.

ஹஜ்ஜுக்குச் செல்லும் இவர்கள் (காபிலாவோடு) பிரயாணக் கூட்டத்தோடு சேர்ந்து செல்கிறார்கள். தாங்கள் சேகரித்துள்ள ஹறாமான பொருளை ஒன்று திரட்டி வைத்துக்கொண்டு அதிலிருந்து வழியில்

தங்கள் காபிலாவிலுள்ள சகாக்களுக்குச் செலவு செய்கிறார்கள். இவ்வாறு செலவுசெய்வதன் மூலம் பிரக்யாதியையும், முகஸ்துதியையும் எதிர்ப்பார்க்கிறார்கள். முதலாவதாக ஹராமான பொருளைக் கையாண்ட குற்றத்துக்கும், இரண்டாவதாக முகஸ்துதியை நாடிய குற்றத்துக்கும் இவர்கள் ஆளாகிறார்கள். இவ்வாறெல்லாம் செய்து மக்கமா நகர்போய்ச் சேர்ந்து புனித கஃபதுல்லாஹ்வை அடுக்கிறார்கள். அற்ப குணங்களாலும், கெட்ட சுபாவத்தாலும் அசுத்தமாக்கப்பட்டுள்ள இதயத்துடன் இவர்கள் அல்லாஹ்வின் இல்லத்தை முன்னோக்குகிறார்கள். இத்தன்மையிலுள்ள இவர்கள் அல்லாஹ்வின் சமூகத்தில் தங்களுக்கு மிகச் சிறந்த பதவியுண்டென்றும் கருதிக்கொள்கிறார்கள். அந்தோ, என்னே இவர்கள் மதிமயக்கம்!

ஆபிதுகளில் இன்னொரு வகையினர்: அம்ரு, நஹ்யு (ஏவல், விலக்கல்) விஷயத்தில் இவர்கள் மதிமயங்கியுள்ளனர். நன்மைகளைக் கொண்டு ஏவி, தீயவைகளை விலக்கி மற்றவர்களுக்குப் போதனை செய்கிறார்கள். ஆனால், தங்கள் ஆத்மாபற்றிக் கவலை கொள்ளாமலிருக்கிறார்கள்; மற்றவர்களிடம் அம்ரு, நஹ்யு செய்யும் விஷயத்தில் சில சமயம் மிகக் கண்டிப்பாகவும் நடந்துக் கொள்கிறார்கள். ஆனால் அதன் மூலம் தமக்குத் தனிக்கியாதியையும், மகத்துவத்தையும் எதிர்ப்பார்க்கிறார்கள். மேலும், அன்னியர் யாராவது இவர்களிடம் குற்றங்குறை, பிசகுகளைக் கண்ணுற்று இவர்களுக்கு அம்ரு, நஹ்யு செய்ய நேர்ந்தால், "நீயா எங்களுக்குச் சொல்லவேண்டும்! உண்மையை நாடி நன்மையின்பால் அழைப்பவர்கள் நாங்களல்லவா! எங்கள் விஷயத்தில் நீ தலையிடவேண்டாம்!" என்று சீற்றத்துடன் பிதற்றுகிறார்கள்.

இன்னவர்கள், சில சந்தர்ப்பங்களில் பள்ளிவாசல் போன்ற ஸ்தலங்களில் ஜனங்களைக் கூட்டி ஏவல், விலக்கல் உபதேசம் செய்கிறார்கள். அக்கூட்டத்துக்கு யாராவது வரத் தவறிவிட்டால் அல்லது பிந்திவிட்டால் அவர்கள்மீது கடுமையான வார்த்தைகளைப் பிரயோகிக்கிறார்கள். மேலும், இவர்களுக்கு முகஸ்துதிப் பிரீதியும், தலைமைத்தன ஆசையும் மிகவும் அதிகம். அதனால் பள்ளிவாசல் நிர்வாக காரியாதிகளில் தாங்களே தலைமை தாங்கவேண்டும், தங்களுக்கே கியாதியும், அதிகாரமும் கிட்டவேண்டும் என்று பேராவல் கொண்டிருக்கிறார்கள். தங்களுக்குப் போட்டியாக வேறு யாராவது தலையெடுத்தால் அவர்கள்மீது கடுமையான பொறாமை கொண்டு பாய்ந்து விழுகிறார்கள்.

ஆபிதுகளில் வேறு சிலர் பள்ளிவாசல்களில் பாங்கு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு தாங்கள் பாங்கு சொல்வது அல்லா(ஹ்)வுடைய முகத்தை நாடியேதான் என்று கூறிக்கொள்கிறார்கள். அவர்கள் இல்லாத சமயத்தில் வேறு யாராவது அவர்களுக்குப் பதிலாகப் பாங்கு சொல்லிவிட்டால் கியாம நாள் ஏற்பட்டுவிட்டதோ என்று கருதும் படியாகக் கூச்சலிடுகிறார்கள். "எமக்கு ஏகபோகமாய் இருந்துவரும் தனி உரிமையைப் பறித்துவிட்டாரே" என்று சத்தமிடுகிறார்கள். உண்மையில் அல்லா(ஹ்)வின் முகத்தை நாடி நடப்பதாயிருந்தால் இவர்கள் இவ்வாறு கூச்சலிடத் தேவையில்லை. இவர்களின் மதிமயக்கம் இத்தகையதாய் இருக்கிறது.

ஆபிதுகளில் வேறு சிலர் பள்ளிவாசல்களில் இமாம்களாய் இருக்கிறார்கள். தாங்கள் தனிப்பெரும் செல்வாக்குடன் திகழவேண்டும் என்ற எண்ணம் இவர்களை மிகைத்துள்ளது. தாங்களே மற்றெல்லோரையும் விட மேம்பட்டோர் என்று கருதிக்கொண்டிருக்கும்

இவர்களின் குறிக்கோள், இன்னார் இன்ன பள்ளியின் பேஷ் இமாம், அவரது பள்ளியில் அவரைத் தவிர வேறு யாரும் இமாமத் செய்வதில்லை என்று தங்களைப்பற்றிப் புகழ்ந்து பேசப்பட வேண்டுமென்பதே. இவர்களைவிடத் தக்வாவும், பேணுதலும் மிக்க வேறு யாராவது அந்த இமாமத் பொறுப்பை ஏற்க நேர்ந்தால் இவர்களுக்கு உண்டாகும் மனப்புழுக்கத்துக்கும், சங்கடத்துக்கும் எல்லையிருக்காது.

ஆபிதுகளில் மற்றொரு கூட்டத்தினர் புனித மக்கமா நகரையும், திரு மதீனமா நகரையும் அண்டி யடுத்துப் பல காலம் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அது கொண்டு இவர்கள் மதிமயங்கிப்போகிறார்கள். இவர்கள் தங்கள் ஆத்மாவைப்பற்றிச் சிந்திப்பதில்லை. தங்கள் அந்தரங்க சுத்தி பற்றியோ, வெளிரங்க சுத்தி பற்றியோ அக்கரை கொள்வதில்லை. ஏனெனில், இவர்களின் சடலந்தான் மக்கா, மதீனாவை யடுத்திருக்குமேயன்றி, இவர்களின் உள்ளமோ சொந்த ஊரையும், வீட்டையும் பற்றித்தான் சிந்தனை செய்து கொண்டிருக்கும். மேலும், இவர்கள் மற்ற ஜனங்களிடம், "நாம் இத்தனை யித்தனை ஆண்டு காலமாக நமது சுயதேசமெல்லாம் விட்டு மக்கா, மதீனாவிலேயே காலங் கழித்தோம்" என்று பெருமையுடன் சொல்லிக் கொள்வார்கள். இவர்களின் இப்போக்கு மதிமயக்கமுடையதாகும்.

மக்கமா நகரை அண்டிச் சுயபதியின் தியானத்திலே இதயத்தைச் செலுத்தி ஆழ்ந்திருப்பதைவிட, சுயபதியிலேயே அமர்ந்து திரு மக்கமா நகரின் தியானத்திலே இதயத்தைச் செலுத்தி லயித்திருப்பது எவ்வளவோ விசேஷமானதாகுமே!

மக்கமா பதியையே அண்டி வாழவேண்டும் என்ற எண்ணத்துடன் எப்போது கிளம்பியாயிற்றோ அப்

போது முதல் அதன் பாத்தியதைப் பொறுப்பு (ஹக்கு) களைச் சரிவரப் பேணவேண்டும். மக்கமா நகரையடுத் திருக்கும்போது அல்லா(ஹ்)வுக்குரிய ஹக்குகளையும், சங்கைகளையும், மதீனமா நகரையடுத்திருக்கும்போது ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்குரிய ஹக்குகளையும், அதபு ஒழுக்கங்களையும் முறைபோலப் பேணி அனுஷ் டிக்க வேண்டும். இத்துறையில் அல்லாஹ் நல்லுதவி புரிந்த ஒரு சிலரைத் தவிர வேறு யாரே அக்கடமைகளை யும், ஹக்குகளையும், அதபுகளையும் சரிவர நிறைவேற்றச் சக்தி பெறுவர்!

இவர்கள் வெளிரங்க(ளாஹிரியத்து)க் காரியங் களிலேயே கவனஞ் செலுத்துகின்றனர். புண்ணிய ஸ்தலங்களின் கட்டிடச் சுவர்களைக் கண்ணால் கண்டால் மட்டும் போதும், அதன்மூலமே ஈடேற்ற மடைந்து விடலாம் எனக் கருதிக்கொண்டிருக்கும் இவர் களுடைய மதிமயக்கந்தானென்னே! இவர்களின் எண்ணத்துக்கும், வெற்றிக்கும் வெகு தூரம்.

படைத்த ஆண்டவனைப் பரம பக்தியுடன் வழி பட்டுப் புண்ணிந் தேடியதாகக் கருதிக்கொள்ளும் இவர் கள் பசியால் வாடிப் பரிதவிக்கும் ஏழை, எளியார்களான ஆண்டவனுடைய அடியார்களின் பசி தீர்க்க ஒரு கவளமாகிலும் ஈயவேண்டுமே என்று எண்ணுவதுண்டா? சிருஷ்டிகளுக்கு ஆற்றவேண்டிய கடமை (ஹக்கு)களைச் செவ்வனே நிறைவேற்ருதோர் சிருஷ்டி கர்த்தாவுக்குரிய ஹக்குகளை எவ்வாறு நிறைவேற்றப் போகிருர்கள்! தமது ஆத்மாக்களையும், உறுப்புக்களையும் பேணி நன்னெறியில் பண்படுத்தி, சிருஷ்டிகளின் கடமைகளையும் நிறைவேற்றி, அப்பால் புனித ஸ்தலங்களைத் தரிசித்து அவற்றை சத்திய வாஞ்சையுடன் அண்டி வாழும் நல்லடியரு டைய வெற்றியே வெற்றி!

ஆபிதுகளில் மற்றொரு குழாத்தினர் : துறவி (ஸாஹிது) களாய் இருக்கின்றனர். இவர்கள் செல்வம், சுகங்களை வேண்டாமென வெறுத்துச் சாதாரண உணவையே, அதிலும் சொற்பத்தையே போதுமாக்கிக் கொள்கிறனர். மலிவான ஆடைகளை யணிந்து, பள்ளிவாசலையே சொந்த வீடாக ஆக்கிக்கொள்கிறனர். தாங்கள் பற்றற்ற துறவிகளின் பதவியைச் சம்பூர்ணமாகப் பெற்றுவிட்டதாக இவர்கள் கருதிக் கொள்கின்றனர். ஆனால், 'பற்றற்ற' இவர்கள், கீர்த்தியும் தலைமைத்தனமும் அடையவேண்டும் என்று பெரும் பற்றுக் கொண்டுள்ளனர்.

தலைமைப் பதவி பின்வரும் மூன்றிலொன்றால் உண்டாகும்: (1) கல்வி, (2) பிரசங்கம், (3) சம்பூரணமான பற்றற்ற தன்மை. முந்திய இரு விஷயங்களிலும் இவர்கள் ஈடுபடவில்லை. அவ்விரண்டிலும் தலைமை தாங்குவதால் ஏற்படும் விபரீதங்களைவிட, மூன்றாவதான விஷயத்திற்குத் தலைமை தாங்குவதால்தான் அதிக விபரீதம் சம்பவிக்கும். மானிடனை நாசப்படுத்தும் கருமங்களில் மிகவும் பயங்கரமானது இம்மூன்றாவது விஷயமாகும். அதைத்தான் இவர்கள் எடுத்துக்கொண்டனர். பொருளாசையைவிடப் பொல்லாதது தலைமைத்தன ஆசையாகும். பொருள் வேண்டாம் எனவெறுத்துப் பொல்லாத தலைமைத்தன ஆசையில் சிக்கி மோசம்போவதைவிடத் தலைமைத்தனம் வேண்டாம் என விட்டொதுங்கிப் பொருளைப் பெறுவது இவர்கள் விஷயத்தில் எவ்வளவோ நல்லதாய் இருக்கும்.

மேலும், இவர்கள் ஆழ்ந்த மதிமயக்கத்தில் உழல்கின்றனர். தாங்கள் இம்மாய உலகில் மயங்காதவர்கள் என்று கருதிக்கொண்டிருக்கும் இவர்கள் உலகம் (துன்யா) என்பது யாது, அதை வெறுத்திருத்தல் எப்படி என்ற விஷயங்களையெல்லாம் யதார்த்தபூர்வமாக அறிந்திருக்கமாட்டார்கள். பூலோக

இச்சை பொருளாசை எல்லாம் வேண்டாம் என வெறுத்திருக்கும் இவர்கள் சில சமயம் செல்வப் பிரபுக்களைத் தேடிப் போவார்கள். அதிலும், ஏழைகளைத் தள்ளி முந்தியடித்துக்கொண்டு பணக்காரர்களின் இல்லம் புகுவார்கள். இப்போக்கு பொருளாசை நாடியல்லாமல் வேறெதற்கு?

இவர்களில் இன்னும் பல தரத்தினர் இருக்கிறார்கள். அரும்பெரும் ஞானக் கல்விக் களஞ்சியங்களைத் தமது இதயத்திலே கொண்டிருப்பதாய் நினைத்துத் தாமே ஞான மேதை என்று தம்மைப் பெரிதாகக் கருதிக்கொண்டிருப்பவர் சிலர். ஜனங்களைவிட்டு நீங்கித் தனித்தொதுங்கியிருப்பவர் சிலர். ஆனால், அவ்வாறு கல்வத்தில் தனித்திருப்பதற்குரிய விதிமுறை(ஷறுத்து)களை இவர்கள் அனுஷ்டிப்பதில்லை. இவர்களுக்கு யாராவது பணங்காசுகள் கொடுத்தால் வேண்டாமென்று சொல்லிக்கொள்வார்கள். அவ்வாறு வேண்டாமென்று இவர்கள் மறுப்பது, பாழும்பணத்தின்மீது ஆசையில்லை என்பதனாலன்று; மனமென்னவோ ஒப்புக்கொள்ளத்தான் சொல்கிறது. ஆனால், அவ்வாறு பணத்தைத் தாங்கள் பெற்றுக்கொண்டால், “இவர்களுடைய துறவு (ஸுஹ்து) லக்ஷணம் இதுதான் போலும்!” என்று ஜனங்கள் தங்களை இழிவாக நினைப்பார்களே, தங்கள் மதிப்பு மங்கிவிடுமே என்பதற்காகத்தான் இவர்கள் வேண்டாமென்று மறுக்கிறார்கள். உண்மையில் இவர்களின் இதயம் பணத்தாசையால் நிறம்பிக் குமுறும். மனிதர்களின் தயவை இவர்கள் எதிர்பார்க்கக் காரணமே பணத்தாசைதான். மனிதர்கள் மத்தியிலே ஏற்படுகிற புகழை எதிர்நோக்கியும், அவர்கள் மத்தியிலே தமக்கு இழிவுண்டாகிவிடக்கூடாதென்பதை அஞ்சியும் நடக்கிறார்கள்.

ஆபிதுகளில் இன்னொரு வகையினர்: இவர்கள் தமது உறுப்பினங்களால் பெரும் இபாதத்துகள் செய்

கிறார்கள். இரவும், பகலுமாகத் தினந்தோறும் ஆயிரம் ரக்அத்துகள்வரை தொழுது வணங்கித் திரு குர்ஆனின் முப்பது ஜுஸ்உகளையும் அவற்றில் ஓதி முடிக் கிறார்கள். ஆனால், இவ்வளவு இபாதத்துச் செய்யும் இவர்கள் தங்கள் அகத் தூய்மைபற்றியோ, கல்பின் கரளைப் போக்குவதுபற்றியோ, முகஸ்துதிப் பிரியம், தான் என்ற மமதை, கர்வம் முதலிய நாசகர சுபாவங் களிலிருந்து மீளவேண்டும் என்பதுபற்றியோ சிறிதும் சிந்தனை செய்வதில்லை. அதிகமான வெளிரங்க வணக்கம் புரியும் இவர்கள் அந்தரங்க சுத்தியை அலட்சியமாய் விட்டுவிட்டு, அவ்வெளிரங்கக் கிரியைகளே தங்கள் மீஸானிலுள்ள நன்மைத் தட்டைக் கனமுடையதாக்கி விடும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த எண்ணம் வெறும் கானல்நீர்தான்! வெளிரங்க உறுப்புக்களால் செய்யப்படும் மலை போன்ற கிரியைகளைவிட, அந்தரங்க சுத்தியுடைய பக்திமானின் தக்வாவிலுள்ள ஓர் அணுவும், சற்குண விவேகி யின் நற்குணங்களிலுள்ள ஒரு குணமும் பன்மடங்கு மேலானவையாகும்.

“பாரதூரமான இபாதத்துகள் புரியும் நீர் இவ்வுல கம் நிலைத்திருக்கக் காரணமாயுள்ள அக்தாபுகள், அவ்தாதுகளில் ஒருவராய்த் திகழ்கிறீர்; அல்லா(ஹ்) வின் அவ்லியாக்களுள் ஒருவராயிருக்கிறீர்; அவ்லி யாக்களின் அன்பரான நல்லடியாராயிருக்கிறீர்” என் பன போன்ற புகழ்மாலைகொண்டு ஜனங்கள் இவர்களை விளிக்கும்போது இவர்களின் மதிமயக்கம் மேலும் பெருகுகிறது. இப்புகழுரைகளால் பெரிதும் பூரிப் படைந்து, தங்களிடம் விசேஷமான மகத்துவம் இருக்கப் போய்த்தான் - தங்கள் இதயம் பக்குவமடைந்திருக்கப் போய்த்தான், தங்களை நோக்கி ஜனங்கள் இவ்வாறுகக் கூறுகிறார்கள் என்று கருதி, தாங்கள் ஏதோ தனியம்சம்

பெற்ற மகான்கள் என்று வெளிக்குக் காட்டிக்கொள் கிறார்கள். எப்போதாவது ஒரு சந்தர்ப்பத்தில் இரண் டொருமுறை யாராயினும் இவர்களை நோக்கிப் புகழுக்கு மாற்றமாக உதாசீனமாகப் பேசிவிட்டால் இவர்கள் நிலைமையே மாறிவிடுகிறது. அவ்வாறு பேசியவர்களுக்கு உடனே 'காபிர்' என்று பட்டங்கொடுத்து அவரோடு யுத்தஞ்செய்ய முனைந்து விடுவர். "என்னை ஏசிய உன்னை அல்லாஹ் ஒருபோதும் பிழை பொறுக்கமாட்டான்" என்றும் அவரை நோக்கிச் சாபமிடுவர்.

ஆபிதுகளில் இன்னொரு வகையினர் : இவர்கள் மேல் மிச்சமான நபில் வணக்கங்களில் முழுக் கவனமும், விசேஷ அக்கறையும் காட்டுகிறார்கள். ஆனால், பறுலான வணக்கங்களில் அதே கவனமும், அக்கறையும் காட்டுவ தில்லை. இவர்கள் ளுஹாத் தொழுகை, இரவிலுள்ள நபி லான தொழுகை முதலியவற்றையெல்லாம் பெரு மகிழ் வுடன் தொழுவார்கள்; ஆனால், அவற்றில் காட்டும் ஆர் வத்தைக் கடமையான பறுலுத் தொழுகைகளில் காட்ட மாட்டார்கள்.

அல்லா(ஹ்)வின் அருளன்பும் அவனது நன்மைக் கொடைகளும் பறுலுத் தொழுகைகளில் அமோகமாயுள் ளன என்பதை இவர்கள் உணர்வதில்லை. எனவே, பறுலுத் தொழுகைகளை அவற்றின் குறிப்பிட்ட ஆரம்ப வேளை (அவ்வல் வக்து)களிலேயே செவ்வனே நிறை வேற்றவேண்டுமென்ற வேட்கை இவர்களுக்கு உண்டாவதில்லை.

அல்லா(ஹ்)வின் சமூகம் அதிசமீபமாய் நெருங்கி யுள்ள முடுகுதலுடையோர் (முதகர்ரிபூன்கள்) புரிந்த புண்ணிய அமல்களில், பறுலான அமல்களைப் போல் வேறு எதுவும் விசேஷமானவையாய் இருக்கவில்லை.

நன்மையான கிரியைகளில் முன்னால் செய்யவேண் டியதை முன்னால் செய்தும், அடுத்துச் செய்யவேண்டி

யதை அடுத்துச் செய்தும் கிரமப்படி (தர்த்தீபு) நடப்பதே முறையாகும். அவ்விதமின்றி மன இச்சைப் படி நடக்க முற்படுவது சிலாக்கியமானதன்று; தீய செயலாகும். சில சந்தர்ப்பங்களில், தவறிப்போகக் கூடிய பறுலு, தவறிப்போகாத பறுலு என வெவ் வேறான இரு பறுலுகள் குறுக்கிடக்கூடும். இச்சந்தர்ப் பத்தில் இரண்டாவதைவிட முந்தியதையே முற்கூட்டிக் கவனிக்கவேண்டும். இதுபோன்றே கபுறுகளிலும் குறுகிய சந்தர்ப்பமுள்ளவை, விசாலமான சந்தர்ப்ப முள்ளவை என்று இருவிதங்களுண்டு. இவற்றிலும் முற் கூட்டிச் செய்யவேண்டியதை முற்கூட்டியும், மற்றதை அப்பாலும் கிரமமாகச் செய்யவேண்டும். அவ்வாறின்றி ஒழுங்கு முறைக்கு மாற்றமாக நடப்பவர் மதிமயக்க முடையவரே.

இன்னும் இவைபோன்ற விஷயங்கள் எத்தனையோ உள்ளன. நன்மையும் நன்றாகத் தெரிகிறது; தீமையும் தெளிவாகத் தெரிகிறது. ஆனால், ஒரு சில நன்மைகளை விடவேறு சில நன்மைகளை முற்படுத்தவேண்டும் என்ற விஷயந்தான் மறைந்து கிடக்கிறது. அதன் விவரமாவது:

மேலதிகமான நபில்களைக் காட்டிலும் பறுலுகளை முற்படுத்தல்.

சிலரை மட்டும் பற்றிப்பிடிக்கும் பறுலு கிபாயாக் களைவிட ஒவ்வொருவரையும் பற்றிப்பிடிக்கும் பறுலு ஐன்களை முற்படுத்தல்.

தவறிப்போகாத பறுலுகளைக் காட்டிலும் தவறிப் போகக்கூடிய பறுலுகளை முற்படுத்தல்.

தந்தைக்குரிய கடமையைவிடத் தாய்க்குரிய கட மையை முற்படுத்தல்.

ஹஜ்ஜுக்குச் செல்வதற்கு முன்பதாகத் தாய் தந்தையர்க்குரிய படிச் செலவை அளித்தல்.

ஜும்ஆவுடைய வக்து வந்ததற்கப்பால் பெருநாள் தொழுகையைவிட ஜும்ஆத் தொழுகையை முற்படுத்தல்.

பொருள் விஷயத்தில் கடன் அடைப்பதையே மற்றவைகளுக்கு முற்படுத்தல். இவ்வாறான விஷயங்களில் ஒழுங்கு நியதியைப் பேணவேண்டும்.

மானிடன் இத்தியாதி விஷயங்களை அறிந்து உணர்ச்சி பெறவேண்டும். இக்கருமங்களிலுண்டாகும் மதிமருட்சி மிக நுணுக்கமாக மறைந்திருக்கும். அதை ஆராய்ந்து கண்டுபிடித்து அகற்றி நிவர்த்தி பெறுவது சாமானியமன்று. அறிவிற் சிறந்த மகா ஞான மேதைகளான உண்மை உலமாக்களே அவற்றை நீக்கிப் பாதுகாப்புப் பெற்றவராவார்கள்.

பணக்காரர்களின் மதிமயக்கம்

பணக்காரரில் ஒரு சாரார்: பணக்காரரில் பல வகையினர் உண்டு. ஒரு சாரார் பள்ளிவாசல்கள், பாடசாலைகள், சத்திரஞ் சாவடிகள், பாலங்கள் முதலியவற்றைக் கட்டுகிறார்கள். ஆனால், தாங்கள் புரியும் இத்தகைய தருமச் செயல்களை ஜனங்களுக்குப் பகிரங்கப்படுத்திப் புகழ் பெறவேண்டுமென்ற நோக்கமே இவர்களிடம் அதிகமாயுள்ளது. எனவே, தாங்கள் கட்டிய அத்தகைய கட்டிடங்கள்மீது தங்கள் பெயர்களைக் கருங்கற்களிலும், சங்குமறைக்கற்களிலும் செதுக்கிவிடுகிறார்கள். தம் மரணத்திற்கப்பாலும் தமது பெயர் பிரபலத்துடன் விளங்க வேண்டுமென்ற ஆசையால்தான் இவ்வாறு செய்கிறார்கள். அத்துடன், இம்மாதிரியாகத் தாங்கள் புரிந்தவற்றால் தங்களுக்கு ஆண்டவனுடைய பாவமன்னிப்புக் கிட்டிவிட்டது என்றும் கருதிக் கொள்கிறார்கள்.

இவர்கள் இரு வகைகளில் மனமருட்சியடைந்துள்ளார்கள்: முதலாவதாகப் பொதுக் காரியங்களில் இவர்கள் பயன்படுத்திய பணத்தை அநீதமாகவும், லஞ்சம், கைக்கூலி முதலிய வகைகளாலும், ஹராம் கலந்த மோசமான வழிகளாலும் இவர்கள் சம்பாதித்திருப்பார்கள். இத்தகைய பாவகரமான முறைகளில் பணந் திரட்டுவோர் அல்லா(ஹ்)வின் கோபப் பார்வைக்கே ஆளாகின்றனர். எனவே, இவர்கள்மீது விதியான அவசரக் கடமை யாதெனில் அல்லா(ஹ்)விடம் பாவமீட்சி (தௌபா) தேடுதலும், அநீதமாகவும், அக்கிரமமாகவும் தேடிய செல்வங்களை அவற்றின் உரிமையாளர்களிடம் திருப்பிக் கொடுத்தலுமேதாம். அச்செல்வங்களுக்கு உரிய உடைமைக்காரர்கள் உயிருடனிருந்தால் அவர்களிடமும், அல்லது அவர்கள் இறந்துபோயிருப்பின் அவர்களின் வாரிசுதாரர்களிடமும் ஒப்

படைக்கவேண்டும். வாரிசுதாரரும் கிடையாதென்ற பட்சத்தில் அதிமுக்கியமான பொதுப் பணிகளில் அவற்றைப் பயன்படுத்தல் இவர்களின் (வாஜிபு) கடமையாகும். தங்கள் அண்டை அயலாரில் எத்தனையோ ஏழைகள், பசி பட்டினியால் வாடி வதங்குகிறார்கள். அவர்கள் பசியைத் தீர்க்க இவர்கள் வழிவகை செய்யலாம். ஆனால், அவ்வாறான நற்பணி புரிந்தால் இவர்கள் பெயர் பிரஸித்தமடையாதல்லவா! எனவே, அத்தியாவசியத் தேவையில்லாதிருப்பினுங்கூட மேலே குறிப்பிட்ட வகைக் கட்டிடங்களில், தமது காலத்திற்குப் பின்பும் தமது பெயரும், பிரஸ்தாபமும் ஜனங்கள் மத்தியில் புகழுடன் நிலைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் தமது பெயரைப் பதிப்பிக்கிறார்கள். இவர்களை முகஸ்துதிப் பிரியம், பெயர் துலங்கவேண்டுமென்ற ஆசை முதலியன ஆட்கொண்டுவிட்டன.

இரண்டாவதாக, இக்லாஸான கலப்பற்ற எண்ணத்துடன் நன்மையை நாடியே பெருந் தொகை செலவிட்டு அத்தகைய கட்டிடங்களைக் கட்டுவதாகத் தமது மனத்தில் நினைத்துக்கொள்கிறார்கள். பொது நன்மையில் பரந்த நோக்கத்துடனிருப்பதாகக் கருதும் இவர்களிடம் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் ஒரு பரம ஏழைக்காக ஒரு ரூபாயாவது தாருங்கள் எனக் கேட்கப்பட்டால் கூட அதற்கு இவர்கள் மனமிசைவதில்லை. ஏனெனில், அவ்வாறாகச் சகாயஞ் செய்வதன் மூலம் இவர்களுக்கு என்ன புகழ் கிடைத்துவிடப்போகிறது! அத்தகைய உபகாரங்கள் பற்றிக் கருங்கற்களிலும் சங்குமறைக் கற்களிலும் செதுக்கப்படவாபோகிறது! இவர்களின் இதயங்களில் புகழாசையும் கீர்த்தி இச்சையும் குடிகொண்டுள்ளன.

பணக்காரரில் மற்றொரு சாரார்: இவர்கள் ஹலாலான வழியிலேயே திரவியந் தேடி அவற்றைப் பள்ளிவாசல்

கள் கட்டுவதில் செலவு செய்கிறார்கள். ஆனால், இவர்கள் செய்த காரியத்திலுள்ள கீழ்க்காணும் இரண்டு விஷயங்களால் இவர்களும் மதிமருட்சி யடைந்திருக்கின்றனர்:

(1) முகஸ்துதிப் பிரீதியும், தமது பேரையும் பெருமையையும் உலகறியச் செய்யவேண்டுமென்ற வேட்கையும் இவர்களை மயக்கியுள்ளன. இவர்களின் பக்கத்து வீட்டுக்காரர்கள் அல்லது அவ்வூர்வாசிகள் பலர் பரம ஏழைகளாயிருக்கக்கூடும். அத்தகையோருக்குப் பொருள் சகாயஞ் செய்து அவர்களைக் கைத்தூக்கிவிடவேண்டியது இச்சீமான்கள்மீதுள்ள முக்கியக் கடமையாகும். அத்தகைய ஏழைகளும், பக்கீர்களும் பலர் இவர்களின் உதவியை வேண்டி நிற்கும்போது அவர்களைக் கவனித்து ஆவன செய்யவேண்டியது இவர்கள்மீது பிரதான பொறுப்பல்லவா!

பள்ளிவாசல் கட்டப்படுவது கூடிச்சேர்ந்து தொழுவதற்காகவேதான். போதுமான அளவு பள்ளிவாசல்களிருக்க, மேலதிகமாகத் தெருவுக்கொரு பள்ளிவாசல், வீதிக்கொரு பள்ளிவாசல் என்று கட்டவேண்டியது கட்டாயமில்லை. இவர்கள் பள்ளிவாசலைக் கட்டுவதன் மூல நோக்கம் யாதெனில், அப்பள்ளியின் முகப்பில் 'இன்னார் மகன் இன்னார் கட்டியது' என்று தமது பெயர் பொறிக்கப்பட்டுள்ளதை ஜனங்கள் கண்டு தம்மைப் பாராட்டிப் புகழ்வார்கள் என்பதே. அத்தகைய ஆசையே இவர்களைப் பள்ளிவாசல் கட்டத் தூண்டுகிறது. இவ்வாறாக ஜனங்களின் துதியையும், பாராட்டையும் கேட்டு உள்ளம் பூரிப்படைந்துகொண்டிருக்கும் இவர்கள் அல்லா(ஹ்)வின் திருவுளப் பொருத்தத்தை நாடியே அத்தகைய பணிபுரிந்திருப்பதாகத் தமது மனத்தில் நினைத்துக்கொள்கிறார்கள். ஆனால், யதார்த்தத்தில் இவர்கள் அவ்வாறு அல்லா(ஹ்)வின் திருவுளப் பொருத்தத்தை நாடிச் செய்யவில்லை. வாய் அவ்

வாறு கூறினாலும் அவர்களின் அந்தரங்க ஆசை ஜனங்களின் புகழையும் பாராட்டையுமே நாடி எதிர் பார்க்கிறது. அல்லா(ஹ்)வுக்கு இது தெரியும். இவ்வாறு திருப்பணி புரிவோருக்கு அல்லா(ஹ்)வின் வெறுப்பே கிடைக்கும்.

(2) பள்ளிவாசல்களை அளவுக்கு அதிகம் அலங் கரிப்பதிலும், சித்திர வேலைப்பாடுகளுடன்கூடிய ஜோடனை செய்வதிலும் பணத்தை வாரி யிறைக்கிறார்கள். இவர்கள் செய்யும் அலங்காரங்கள் சமயத்தில் தொழுபவர்களின் கவனத்தைக் கலைத்துத் தொழுகையைக் குழப்பிவிடு கின்றன. எனவே, அவை விலக்கப்பட்டவையாகிவிடு கின்றன. ஏனென்றால், தொழுபவர்கள் அவ்வலங்கார ஜோடனைகளைப் பார்க்க நேரிடும்போது அவர்களின் மனம் அவற்றின் கவர்ச்சியில் லயித்துப்போய்விடுகிறது. சிந்தை அவற்றில் லயிப்பதால், தொழுகையை உள்ளச் சத்தோடும், ஏகாக்ர சித்தத்தோடும் நிறைவேற்ற வேண்டுமென்பதைக் கவனிப்பதில்லை. தொழுகையைக் கொண்டு நாடப்படுவதே உள்ளச்சமும், மனமொருமித்த பக்தி லயிப்பும்தாமே!

இவர்கள் கட்டிய பள்ளிவாசல்களில் தொழுகை யுள்ள சந்தர்ப்பங்களிலும், தொழுகையில்லாத சந்தர்ப் பங்களிலும் சம்பவிக்கும் நிகழ்ச்சிகளுக்குரிய பலாபலன் கள் அவற்றைக் கட்டிய இவர்களுடைய மீஸான் தராசில் வந்து சேரவே செய்யும். பள்ளிவாசலைப் பகட்டான அலங்காரம் புரிந்தமையால் அங்குத் தொழுதோரின் தொழுகைக்குப் பங்கம் விளைந்ததெனில் அது சாமான்ய மான அபச்சாரமா? அதற்குரிய பலாபலன் இவர்களின் மீஸான் தராசில் வந்தடையாதிருக்குமா?

"நபி நாயகம் (ஸல்) தங்களின் (மஸ்ஜிதுந் நபவீ) பள்ளிவாசலை மதீனமா நகரில் கட்ட விரும்பிய சமயம்

வானவர் ஜிபுரீல் (அலை) வந்து, "பள்ளியை ஏழு முழம் உயரமுடையதாகக் கட்டுங்கள், நகாசு வேலைகளோ, கண்கவரும் அலங்காரங்களோ செய்யவேண்டாம்" எனக் கூறினர்" என்று ஹுஸைன் (ரலி) இயம்பியுள்ளார்கள்.

அனுவசியமான அலங்காரம், தேவையற்ற நகாசு, சித்திர வர்ண வேலைப்பாடுகள் முதலியவற்றை நாயகம் (ஸல்) அவர்களும், மற்றும் அவர்களைத் தொடர்ந்த நாதாக்களும் வெறுத்து நிறுத்தியுள்ளார்கள். ஆனல், மதிமயக்கங்கொண்ட இப்பணக்காரர்களோ அவர்கள் வெறுத்தவற்றை உவந்து கைக்கொண்டுள்ளார்கள். இதனல் இவர்கள் மதிமயங்கியவர்களாகிருர்கள்.

பணக்காரரில் இன்னெரு சாரார்: இவர்கள் ஏழை எளியோருக்கு ஸதகா, தருமங்கள் கொடுக்கிருர்கள்; ஆனல், பெருங் கூட்டங் கூட்டி எல்லோரும் காணக் கொடுக்கவேண்டுமென ஆசை வைக்கிருர்கள். அதனல், தம்மிடம் தருமம் பெற்றுச் செல்லும் ஏழை, எளியார் பலரிடையில் தமக்கு நன்றி கூறிச் செல்லவேண்டுமென்பதையும், தமது தரும தயாளம்பற்றிப் பிரஸ்தாபமாக வேண்டுமென்பதையும் இவர்கள் எதிர் பார்க்கிருர்கள். ஜனங்கள் காணுவண்ணம் இரகசியமாகக் கொடை கொடுப்பதை இவர்கள் விரும்புவதில்லை. தம்மிடம் தருமம் வாங்கிச் செல்பவர்கள் தம்மை வாயாரப் பகிரங்கமாக வாழ்த்தாவிடில் அவர்களை நன்றிகெட்டவர்கள் என இவர்கள் நிந்திக்கிருர்கள். வெளிக்குத் தெரியாமல் இரகசியமாகத் தருமங் கொடுப்பதைப் பெரும் பாவம் போலக் கருதுகிருர்கள். வந்தார், வரத்தாருக்கெல்லாம் ஏனையோர் புகழட்டும் என அள்ளிக் கொடுக்கும் இவர்களின் அண்டை, அயலார் பட்டினியால் வாடி வதங்கிக் கண்ணீர் உகுத்துக் கொண்டிருப்பார்கள். அவர்களைப் பற்றி இவர்கள் கவலைப்பட

மாட்டார்கள் ; அவர்கள்பால் மனமிரங்கவுமாட்டார்கள். அவர்களைப் பற்றிக் கடுகளவும் சிந்திக்கவுமாட்டார்கள்.

இத்தகைய பணக்காரர்கள் ஹஜ்ஜுயாத்திரை செல்வதுபற்றி இப்னு அப்பாஸ் (ரலி) கூறியுள்ளதைப் பாருங்கள்:

“பிந்திய காலத்தில், பெயரளவிலுள்ள ஹாஜிகள் அதிகரிப்பார்கள்; அவர்களிடம் பணங்காசுகள் வந்து குவியும். இதனால், ஊர் சுற்றிப்பார்க்கும் ஆசையுடன்– அந்நோக்கத்துடனேயே ஹஜ்ஜுப் பிரயாணம் செய்வார்கள். எந்நோக்கங்கொண்டு ஹஜ்ஜுக்குப் போனார்களோ அதே நோக்கத்தைக் கொண்டே மீளுவார்கள். அவர்களின் பாவமோ, குற்றமோ எதுவுங் குறைந்திருக்காது; புதிதாக நன்மைகள் எதும் தேடாது திரும்புவார்கள். கடல் கடந்து வனாந்தரங்களிலெல்லாம் ஹஜ்ஜுப் பிரயாணத்துக்காக ஒட்டகத்தை ஓட்டிச் சென்ற அவர்களுக்கு, அவர்களின் வெகு சமீபத்தில் பசி, பட்டினி, வறுமையால் வாடிவதங்கிக் கண்ணீர்விடும் அண்டை அயலார்களின் கஷ்டத்தைக் கடைக்கண் கொண்டாகிலும் நோக்கி உதவி புரியவோ, ஒத்தாசை செய்யவோ மனமிருக்காது. இத்தகையோரின் இம்மாதிரியான ஹஜ்ஜை என்னென்பது!”

பணக்காரரில் வேறொரு பிரிவினர்: இவர்கள் பெருஞ் செல்வத்தைத் திரட்டிப் பத்திரமாக வைத்துக் காத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால், அவற்றை எவ்விதமான நற் கைங்கரியத்துக்கும் செலவுசெய்யாமல் கருமித்தனங் காட்டி அணைத்துப் பிடித்துக் கொண்டிருப்பார்கள்.

காசு செலவு இல்லாத இபாதத்துக்கள் என்னென்ன உண்டோ அவற்றையெல்லாம் பெருமகிழ்வுடன் இவர்கள் நிறைவேற்றுவார்கள். பகலெல்லாம்

நோன்பு பிடித்தல், இரவெல்லாம் நின்று வணங்கல், தினந்தோறும் திரு குர்ஆன் முழுவதையும் பூர்த்தியாக (கத்மு) ஓதி முடித்தல் முதலிய உறுப்பு சம்பந்தமான வணக்கங்களையெல்லாம் பூர்த்தி செய்வதில் முன்னிற்பார்கள். இத்தகைய வணக்கங்களில் தமக்குக் காசு, பணம் செலவு செய்யவேண்டியதில்லை என்ற காரணத்தாலேயே அவற்றில் முழுக் கவனஞ் செலுத்துவார்கள்.

மகா பெரும் மருட்சியுடையவர்கள் இவர்கள். இதயத்தை நாசப்படுத்தும் கருமித்தனம் என்ற கெட்ட வியாதி இவர்கள் இதயத்தின் மூலஸ்தானத்தைப் பற்றிப் பிடித்திருக்கிறது. அந்தக் கெட்ட வியாதியை நீக்கவேண்டுமானால் தாராளச் செலவு என்ற சிகிச்சையைக் கையாள வேண்டும். ஆனால், இவர்களோ வியாதிக்குக் கொஞ்சமும் சம்பந்தமில்லாத, அனாவசியமான வேறு சிகிச்சைகளையே கையாள்கிறார்கள். அவற்றால் யாது பயனுண்டாகப்போகிறது ?

இவர்களின் போக்கு தன் உடையுள் ஒரு பாம்பு புகுந்துகொண்டுள்ள ஒருவனுடைய நிலையை ஒத்திருக்கிறது. பொல்லாத நச்சுப் பாம்பு அது; அது தீண்டினதும் அவன் இறந்துபோக வேண்டியதுதான். இத்தன்மையில் அபாயம் எத்தகையது என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை. இவ்வபாயக் கட்டத்தில் அம்மனிதனுடைய கடமையான முதல் காரியம் அப்பாம்பை எப்படியாவது உடுமானத்தை விட்டு வெளியாக்கவேண்டியதே. அபாயகரமான இந்நேரத்திலே அம்மனிதன் பாம்புடைய பிரச்னையை விட்டுவிட்டுத் தன் உடலில் ரத்தம் கெட்டுப்போயிருப்பதை மாற்ற இரத்த சுத்தி செய்யக் கூடிய நல்ல இரத்த விருத்தி டானிக் ஏதாவது சாப்பிடலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறான் ! பாம்பின் விஷத்திலிருந்து தப்பிய பின்பல்லவா இவன் இரத்தசுத்தி பற்றிக் கவலைப்படவேண்டும் ! சுவர் இருந்

தால்தானே சித்திரம் தீட்டலாம்! பாம்பு தீண்டி இவன் மடிந்தபின் டானிக் சாப்பிடுவதெப்படி ?

அகத்தினுள்ளே கஞ்சத்தனம் என்ற கருநாகம் புக இடமளித்துவிட்டு அதை வெளியாக்கவேண்டிய முயற்சியெதுவும் செய்யாமல், அவசியமில்லாத வேறு பராக்குகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் இம்மருட்சியாளர்கள் நாம் மேலே குறிப்பிட்ட மனிதனுடைய நிலையில்தானே இருக்கின்றனர் !

" இன்ன மனிதன் பகல் முழுவதும் நோன்பு நோற்கிறான் ; இரவெல்லாம் நின்று வணங்குகிறான் " என்று ஒரு நபரைப் பற்றி பிஷ்ருல் ஹாபீ (ரவி)யிடம் புகழ்ந்து கூறப்பட்டது. " அப்பேதை மனிதன் தனக்குத் தேவையான முக்கிய விஷயத்தைக் கைவிட்டுத் தேவையில்லாத விஷயத்தில் தலையிட்டுள்ளான். பசித்தோருக்கு உணவளித்தலும், ஏழை எளியோருக்குத் தனசகாயஞ் செய்தலும் அவன் செய்யவேண்டிய முக்கிய காரியங்கள். துனியாவைக் கட்டியணைத்து, ஏழை எளியோருக்குப் பணங்காசு செலவு செய்யாமல் கட்டிக் காத்துக் கொண்டு வெறுமனே பட்டினிக் கிடந்து நோன்பு நோற்பதையும், நின்று வணங்குவதையும்விடப் பணத்தைத் தான தருமம் செய்தலன்றோ அவன் முதலில் செய்ய வேண்டிய சத்கருமமாகும் ?" என்று பிஷ்ருல் ஹாபீ(ரவி) விளக்கங் கூறினார்கள்.

பணக்காரரில் மற்றொரு வகையினர்: இவர்கள் கடமையாக்கப்பட்ட ஜகாத்தை மட்டும் சரியாகக் கணக்குப் பார்த்துக் கொடுத்துவிடுவார்கள். ஆனால், இவர்களிடம் மனத் தாராளமோ பரோபகாரச் சிந்தையோ இருக்க மாட்டா. இவர்கள் ஜகாத்தைக் கொடுக்கும்போதும் தம்மிடமுள்ள பொருள்களில் கழிவுபட்ட மோசமானவற்றையே கொடுப்பார்கள். ஆனால், அத்தகைய பொருட்களைத் தமக்கே வைத்துக்கொள்ள மட்டும்

சற்றும் சம்மதிக்கமாட்டார்கள். மற்றவர்களுக்கோ அவற்றைத்தான் ஈகிறார்கள். இவர்கள் ஜகாத்து கொடுக்கும் தன்மை இப்படி!

மேலும், இவர்கள் ஜகாத்துக் கொடுக்கிறபோது தம்மிடம் வேலை பார்ப்பவர்களாக, தமக்கு அடிபணிந்து எடுபிடி வேலைசெய்பவர்களாக, தாம் கொடுப்பதற்கு நன்றி செலுத்தும் முறையில் தமது ஏவல்களுக்குக் கட்டுப்படுபவர்களாக உள்ள நபர்களைப் பார்த்து, பிரதிபலனை எதிர்நோக்கி ஜகாத்து கொடுக்கிறார்கள். அல்லா(ஹ்)வை உவந்து அவன் திருப்தியை நாடி ஜகாத் கொடுக்கவேண்டுமென்பதை மறந்து, தாம் ஜகாத்து கொடுக்கும் நபர்களிடமிருந்து இவர்கள் பிரதிபலனை எதிர்பார்க்கிறார்கள்.

"இன்ன மனிதர் அல்லா(ஹ்)வுக்குப் பயந்து ஜகாத்தை முறைப்படி கொடுத்துவருகிறார்" என்று தம்மைப்பற்றி விளம்பரப்படுத்தக்கூடிய உயர்ந்த அந்தஸ்துடைய பெரிய புள்ளிகளிடம் தம் ஜகாத்தைக் கொடுக்கும் பொறுப்பை இவர்கள் ஒப்படைக்கிறார்கள். அதன் மூலம் அந்தப் பெரிய புள்ளிகளின் தயவைச் சம்பாதித்துக்கொண்டு உலகக் காரியாதிகளில் தமக்குச் சாதகமாக அவர்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

ஜகாத்து கொடுப்பதில் இவர்களின் அந்தரங்க நிய்யத்து இவ்வாறு உலகப் பயன்களை எதிர்பார்ப்பதாயுள்ளது. இதனால் இவர்களின் நல்ல நிய்யத்துக்கும் பங்கமுண்டாகிறது; செய்யும் புண்ணியத்திற்கும் பயனில்லாது போகிறது.

இத்தகையவர்கள் நிச்சயமாக மதிமயக்கங்கொண்டவர்களே. படுமோசமான தன்மையிலிருந்துகொண்டு, தாங்கள் அல்லா(ஹ்)வுக்குச் சம்பூர்ணமாக வழிபடுபவர்கள் என்று எண்ணிக்கொள்கிறார்கள். இவர்கள் தாம் கொடுக்கும் ஜகாத்துக்காக அல்லா(ஹ்)வின் அரு

ளன்பையும், தவாபையும், திருவுளப் பொருத்தத்தையும் எதிர்பாராமல் அதற்குப் பதில் மனிதர்களின் புகழுரைகளேயும் பொருத்தத்தையுமே நாடுகிறார்கள்.

பணக்காரரில் வேறொரு வகையினர்: இவர்கள் திக்று, வஃளு மஜ்லிஸுகளுக்குச் சமூகந்தருவதன்மூலம் மருட்சியடைந்துள்ளனர். இவ்வகையில் ஏழைகளுக்கும், சாதாரண ஜனங்களுக்குங் கூட்டாகிறார்கள். இவர்கள் திக்று, ஹதீஸ், வஃளு மஜ்லிஸ்களுக்குத் தவறாமல் சமூகந் தருகிறார்கள்; அங்குப் போய்வருவதை வழக்கமாகவும் ஆக்கிக் கொள்கிறார்கள். ஆனால், வஃளு கேட்பதற்கொப்பத் தங்கள் நடைமுறைகளேச் சீர்திருத்தம் செய்யாவிட்டாலும், ஹதீதுப் பிரகாரம் ஒழுகாவிட்டாலும்கூட அந்தப் புண்ணிய மஜ்லிஸுக்குப் போய் வந்தாலே பெரிதும் நன்மைகளுடாகும் என்ற மனப்பான்மையிலேயே இருந்துவருகிறார்கள். நேர்மையில் கொஞ்சங்கூட மனந் திரும்பாதிருக்கும் இவர்கள் பெரிய மருட்சியாளர்களாவார்கள்.

ஹதீஸ், வஃளு மஜ்லிஸுகளுக்குச் செல்வதன் நோக்கமே அங்குக் கூறப்படும் உபதேசங்கள், போதனைகளேக் கேட்டு அவற்றிற்கேற்ப நன்மையான கருமங்கள் புரியவேண்டுமென்ற ஆர்வமுண்டாகவேண்டுமென்பது தானே! தினந் தினம் அங்குப் போயும் அவ்விதம் ஒரு நல்லபிலாஷை உணர்ச்சி இவர்களுக்கு உண்டாகவில்லேயென்றால், இவர்கள் அங்குப் போய்வருவதில் பயன் இல்லேயென்றுதானே அர்த்தம்! அவ்வாறாகச் செயலளவில் நற்கருமங்கள், நன்மைகள் புரியவேண்டுமென்ற ஆவல் உண்டாவது மிகவும் சிலாகிக்கத்தக்க நல்லதோர் அம்சமாகும். அந்த ஆவல் பல நன்மைகளேச் செய்யத் தூண்டும். அவ்வாறு தூண்டவில்லேயெனில், அம் மஜ்லிஸுகளுக்குப் போய்வருவதால் பயனில்லே என்று தான் ஏற்படும்.

இவர்கள் ஹதீஸ், வஃளு கேட்கக்கூடிய விதத்தி லும் எத்தனையோ மருட்சிகள் உள்ளன. ஏதாவது உருக்கமான மொழிகளைக் கேட்டால் பெண்களைப்போலத் தேம்பித் தேம்பி அழுது சஞ்சலிப்பார்கள். ஏதா வது பயங்கரமான அச்சமூட்டும் எச்சரிக்கைகளைக் கேட்டால் நடுநடுங்கி, நிறம் பேதலித்து "யா அல்லாஹ், ஸலாம்! எங்களை ஸலாமத்தாக்கு! கடைத்தேற்று! நவூதுபில்லாஹ்! (அல்லாஹ்வைக் கொண்டு பாது காவல் தேடுகிறேன்). ஹஸ்பியல்லாஹ்! (எனக்கு அல்லாஹ் போதும்). லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்! (அல்லா(ஹ்)வைக் கொண்டல்லாது எவ்வித உசும்புதலும், சக்தியும் கிடையாது)" என்ற வாக்கியங் களைச் சப்தமிட்டு உரைப்பார்கள். ஆனால், அவ்வாறெல் லாம் இவர்கள் அழுவதாகக் காண்பிப்பது, பயங்கரத் தால் நடுநடுங்கி நிறம் பேதலிப்பதாகக் காட்டிச் சப்தமிடு வது யாவும் மற்ற ஜனங்கள் தம்மைப் பெரிய பக்திமானா கக் கருதவேண்டும் என்ற நோக்கத்தோடுதான். இத் தகையோர், தாங்கள் நன்மைகள் நிறைந்த பாக் கியவான்களாய் இருக்கப்போய்த்தான் தங்களுக்கு இம் மாதிரி நிலைகள் ஏற்படுகின்றன என்று தங்கள் மனத்தில் நினைத்துக் கொள்கிறார்கள்.

இவர்களுக்கு ஒரு வியாதியஸ்தனை உவமானங் கூறலாம். அவன் தினந்தோறும் வைத்தியர்கள் பிரசங் கம் நிகழ்த்துமிடத்திற்குச் சென்று, அவர்கள் சொல்லும் வார்த்தைகளையும், ஔடதங்கள், மருந்துகள்பற்றிய விபரங்களையும் கவனமாகக் கேட்டுக்கொண்டே இருக் கிறான். ஆனால், அவர்கள் சொல்லும் சுகாதார ரீதியில் நடப்பதோ அல்லது அவர்கள் குறிப்பிட்ட ஔடதம், மருந்துகளைத் தயாரிப்பதோ கிடையாது; அதுபற்றிக் கவலைப்படுவதுமில்லை. என்றாலுங்கூட, "மகா நிபுணர் களான பிரபல வைத்தியர்கள் கூடுமிடத்தில் தினமும்

நாம் வந்து அமர்ந்து அவர்களின் மொழிகளையும், பிரசங்கங்களையும், மருந்துகள்பற்றிய விளக்கங்களையும் கேட்டுக்கொண்டே இருக்கிறோம்; இதனாலேயே நமது வியாதி முற்றும் நீங்கிவிடுமே!" என்று அவ்வியாதியஸ்தன் தீர்மானித்துக் கொள்கிறான்.

கவனியுங்கள்! ஜாக்கிரதையுடனிருந்து கொள்ளுங்கள்! நீங்கள் கேட்கும் ஹதீஸ் உபதேசங்கள் மூலம் உணர்ச்சி பெறுங்கள்! உங்களிடம் குடிகொண்டுள்ள ஆசாபாசங்களை அகற்ற முற்படுங்கள். கேட்கும் உபதேசங்கள் உங்கள் மனத்திலே அதிர்ச்சியுண்டாக்க வேண்டும். அவற்றின் மூலம் உங்கள் நடைமுறைகளில் நல்லொழுக்கம் ஏற்படவேண்டும். அவ்வாறாயின், இம்மண்ணுலகைவிட்டு நீங்கள் பிரிக்கப்பட்டு அல்லாஹ் அளவில் செல்லும்போது, நீங்கள் கேட்டு வந்த ஹதீஸ், வஃளுகள் உங்களுடன் துணைவரும்; ஆண்டவன் சமூகத்தில் வரவேற்கப்படக்கூடியவர்களாயிருப்பீர்கள்; கவலையும் அச்சமுமற்றிருப்பீர்கள். அவ்வண்ணம் உங்களைச் சீர்திருத்தம் செய்து நல்வழியில் செயலாற்ற முனையாமல், வாளாயிருந்து கொண்டு நாம் கேட்டுவந்துள்ள ஹதீஸ்களும், வஃளுகளும் நமக்கு உறுதுணை (வஸீலா) ஆக இருக்கும் என்று வீணே மனப்பால் குடித்தால், நீங்கள் கேட்டுவந்த் ஹதீஸ், வஃளுகளே உங்களுக்கு எதிர்த்தரப்பிலுள்ள குற்றச்சாட்டுகளுக்கு அத்தாட்சியாய் அமையும். நீங்கள் பெரும் ஏமாற்றமடைந்த மதிமயக்கமுடையவர்களாக ஆகிவிடுவீர்கள். அவ்வாறாக மதிமயக்கமுறாமல், கேட்கும் உபதேசங்களையும், ஹதீஸ்களையும் மனப்பூர்வமாக ஏற்று நடைமுறையில் அவற்றை அனுஷ்டித்து விமோசனம் பெறுவீர்களாக!

ஸூபிய்யாக்களின் மதிமயக்கம்

அல்லாஹ் காப்பாற்றிப் பாதுகாத்துக்கொண்ட ஒரு சிலரைத் தவிர இக்காலத்திய ஸூபிய்யாக்களில் பெரும்பாலாரை ஆச்சரியப்படத்தக்க பெரும் மருட்சி பிடித்துள்ளது. இவர்களில் பல வகையினர் உண்டு.

ஒரு வகையினர் : இவர்கள் ஸூபிய்யாக்களைப் போன்று நடை, உடை, பாவனை செய்து வெளி வேடந் தரித்துக்கொள்கிறார்கள். பெரும் ஞான (தஸவ்வுப்)ப் பேச்சுக்களைப் பேசிக்கொண்டும், அத்தகைய பரிபாஷைகளைப் பழக்கிக்கொண்டுமிருக்கிறார்கள். உண்மை ஸூபிய்யாக்களைப் போல வெளிக்குத் தெரியும்படி பல காரியங்கள் புரிகிறார்கள். இறைவனது நாம தியானத்தைக் கேட்ட மாத்திரத்தில் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள்-சதாவும் ஒலுவுடன் இருந்து கொண்டு, தொழுது கொண்டே இருக்கிறார்கள்-முஷாஹதா, முராகபா நிஷ்டையிலிப்பதுபோலத் தலையைத் தாழ்த்தித் தொங்க விட்டுக் கொண்டு முஸல்லா விரிப்பில் லயித்துத் தரிபடுகிறார்கள்-பெரிய யோகிகளைப்போன்று சதா சிந்தனையில் ஆழ்ந்து, சுவாசத்தை அடக்கி யோகாப்பியாசம் புரிகிறார்கள்-பெருமூச்சு விடுகிறார்கள்-ஏதோ பெருங் கவலையிலாழ்ந்திருப்பது போல முகத்தை வைத்துக் கொள்கிறார்கள். ஆக இம்மாதிரிக் காரியங்களில் பெருங் கவனத்தோடு, வெளிக்குத் தெரியும்படி அவற்றைச் செய்வதில் விசேஷப் பிரீதியுடனிருக்கிறார்கள். ஜனங்கள் மத்தியிலே ஹதீஸ் உபதேசஞ் சொல்ல முற்பட்டால் மிகமிகத் தாழ்ந்த தொனியிலே, பல நாள் பட்டினி கிடந்தாரைப் போன்று பேசுகிறார்கள்; ஆனால், மற்ற வேளைகளிலோ கத்துகிறார்கள்.

இவர்கள் தங்களுடைய இத்தகைய நிலைமையாலேயே தாங்கள் கடைத்தேறிவிட முடியும் என்று கருதிக்

காலம் போக்குகிறார்களேயன்றி உண்மை ஸூபிய்யாக்களின் அம்சங்களான முஜாஹதா (ஆத்ம சுத்திக்காக கஷ்டங்களை மேற்கொள்ளல்), ரியாழத்து (ஆத்மாவை நல்ல பண்பில் அப்பியாசப்படுத்தல்), முராகபா (தன்னை நோட்டமிடுதல்), அந்தரங்க வெளிரங்க பாவங்கள் அனைத்தையும்விட்டுத் தமதகத்தைச் சுத்தப்படுத்திப் பக்குவப்படுத்தல் முதலியவற்றில் சற்றும் அக்கறை கொள்வதில்லை.

மேலும், ஹலால் என்று தோன்றாத ஷுப்ஹத்தான (சந்தேகமான) பொருள்களையும், ஹராமான வஸ்துக்களையும், ஆட்சியாளர்களிடமுள்ள அநீதமான பொருள்களையும் பெரும் வேட்கையுடன் நாய்போலத் தின்கிறார்கள். சின்னஞ்சிறு ரொட்டித் துண்டுக்கும், செம்புக் காசுக்கும், அற்பமானதொரு தானியத்துக்குங்கூட விழுந்தடித்துக்கொண்டு ஓடி முந்துகிறார்கள். ஈத்தங்கொட்டைச் சருகுக்காகவும், ஒரு முழ நிலத்துக்காகவும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். தங்களின் சுயநலம் சம்பந்தமாக ஏதாவது தகராறு ஏற்பட்டுவிட்டால், "உன்னுடைய வண்டவாளம் இவ்வளவுதானே, தெரியாதாக்கும்" என்று பரஸ்பரம் மானபங்கப்படுத்திக் கேவலமாகப் பேசி குஸ்திக்கும் இறங்கிவிடுகிறார்கள். இவ்வளவெல்லாம் செய்துகொண்டு தாங்கள் மகாஞானிகள், ஸூபிய்யாக்கள் என்று கூறிக் கொள்கிறார்கள். என்னே இவர்களின் மதி மயக்கம்!

இவர்களின் போக்குக்கு ஒரு தொண்டுக் கிழவியின் நிலைமையை உவமையாகக் காட்டலாம். சுத்தவீரர்கள், பட்டாளத்தினர், பராக்கிரமசாலிகள் முதலியோர் யுத்தத்துக்குச் செல்வதற்காகப் படையில் சேர்க்கப்படுவதாகவும் அரசனால் அவர்களின் பெயர் ஜாபிதா தயாரிக்கப்படுவதாகவும் அக்கிழவி கேள்விப்படுகிறாள். உடனே

அவள் வீரர்கள், பட்டாளத்தினர் அணிந்துள்ளவை போன்ற ஆடைகளையும், உடுப்புக்களையும் அணிந்து, ஆயுதங்களையும் தரித்துக்கொண்டு அரசனுடைய சமூகஞ் செல்கிருள். அங்குப் போய்த் தன்னையும் பட்டாளத்தில் ஒருபோர் வீரனுகச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென் கிருள். பரிசோதனை செய்து பொறுக்கி எடுக்கும் இலாக்காவுக்கு அவள் அனுப்பப்படுகிருள். அங்கு அவள் வேஷம் கலைந்து உண்மை வெளியாகிறது. சரியாக நிற்கக் கூட இயலாத பழுத்த தொண்டுக் கிழவியான அவள் மரணப் பயணத்தை வெகு அண்மையில் வைத்துக் கொண்டு பட்டாளத்தில் சேர்ந்து சூரத்தனம் செய்யப் போவதாகக் கூறுவதிலும், வீரர்களின் உடையை அணிவதிலும் அர்த்தமோ பொருத்தமோ உண்டா? அவ்வாருக அரசன் முன் அவள் சென்றது அரசனைப் பரிகசிப்பதாகவன்ருே ஆகிவிடுகிறது!

"ஏ, அறிவு கெட்ட கிழவியே, உன் அந்திய காலத்தில் இத்தகைய காரியஞ் செய்ய வெட்கமில்லையா? அரசனை ஏளனம் செய்யவா துணிந்தனை!'' என்று, பொறுக்கி எடுக்கும் இலாக்காவினர் அவளைக் கடுமையாகக் கண்டித்து அரசனை அவமதித்த குற்றத்துக்காக அவளை யானைக் காலில் இட்டுக் கொல்லும்படி கட்டளையிட்டனர். அவ்வாறே அவளும் தண்டனைக்குள்ளாளுள். அந்தோ, யானையால் சவட்டி மிதிக்கப்பட்டு உயிர் துறந்தாள் அவள்!

இக்கிழவியின் வீரவேஷம் போன்றே, நாம் மேலே குறிப்பிட்ட போலி ஸூபிய்யாக்களும் துறவு வேஷமிடுகிருர்கள்.

ஸூபிய்யாக்களில் இன்னெரு வகையினர்: முந்தியவர்களைவிட இவர்கள் அதிகமான மதிமயக்கங் கொண்டுள்ளனர். எளிய ஆடை அணிதலும், சாதாரண உணவருந்தலும், எளிய இடத்தின் சம்பந்தமும், சிறிய

இல்லிட வாழ்க்கையும் இவர்களுக்கு அதிகமும் சங்கட மானவையாயிருக்கின்றன.

தாங்கள் ஸூபிய்யாக்களென்று வெளியில் கூறிக் கொண்டு திரிவார்கள். ஆனால், ஸூபிய்யாக்களின் வெளி ரங்கமான நடை, உடை, பாவனையைக்கூட இவர்களிடம் காணமுடியாது. பட்டுப் பீதாம்பரங்களை அணியா விட்டாலும், விலையுயர்ந்த பகட்டு ஆடைகளையும், டாம்பீகமான ஜுப்பா, கோட்டு முதலிய உடுமானங்களை யும் அணிந்து கொள்கிறார்கள். வேண்டுமென்றே தமது புதிய ஆடைகளைக் கிழித்துத் தமது ஸூபித்தன வேஷத்தை வெளிக்குக் காண்பித்துக் கொள்வதற்காக, ஒட்டுத் தையல்களைப் போட்டுக் கொள்கிறார்கள். இவை பட்டாடைகளைவிடப் பன்மடங்கு அதிக விலையுள்ளவை யாயிருக்கும். இவர்களிடம் உள்ள தொழுகை முஸல்லா விரிப்புங்கூடப் பல வர்ணச் சித்திர வேலைப்பாடுக ளமைந்த விலையுயர்ந்த ரகத்தைச் சேர்ந்ததாயிருக்கும்.

வெளிரங்கமான பேணுதல்கள்பற்றியே அசட்டை யாய் இருக்கும் இவர்கள் உள்ரங்கப் பேணுதல்களை எவ் வாறு காப்பாற்றுவார்கள்! இவர்களின் அந்தரங்க நோக் கமே உலகில் சுகமாக வாழவேண்டுமென்பதும், ஆட்சி யாளரின் நிதிகளிலிருந்து தின்னவேண்டுமென்பதும் தானே!

எனினுங்கூட, இவர்கள் தாங்கள்தான் மிகவும் சிரேஷ்டமானவர்கள் என்று நினைத்துக் கொண்டிருக் கிறார்கள். முஸ்லிம்களுக்குத் திருடர்களால் உண்டாகும் அபாயத்தைவிட இவர்களால்தான் அதிக அபாயம் உண்டாகிறது. திருடர்களாவது பொருட்களைத்தான் திருடுகிறார்கள். இவர்களோ தங்கள் பகட்டான வேஷத் தால் இதயங்களையல்லவா கொள்ளையடிக்கிறார்கள்! இவர்களின் வெளிக் கோலத்தைக் கண்டு மயங்கியவர்கள் இவர்களிடம் தங்கள் மனத்தைப் பறிகொடுத்து இவர்

களைப் பின்பற்றுகின்றனர். இவர்கள் தாங்களும் மோசம் போவதோடு தங்களைத் தொடரும் பிறரையும் நாசத்துக் காளாக்கிவிடுகிறார்கள். இவர்களின் இந்த இழிநிலைபற்றி எடுத்துக் கூறப்பட்டால் ஸூபிய்யாக்களின் தன்மை இப்படித்தானிருக்கும் என்பார்கள். இவர்களின் இப்போக்கால் நேர்மையாளர்களான ஸூபிய்யாக்களைப்பற்றியுங் கூட ஜனங்கள் தப்பெண்ணங் கொள்ள இடமுண்டாகிறது. ஸூபித் தத்துவத்தின் பரிசுத்தத் தன்மையை இவர்கள் களங்கப்படுத்துகிறார்கள்.

ஸூபிய்யாக்களில் மற்றொரு வகையினர்: இவர்கள் ஞானப் பாட்டையிலுள்ள முகாஷபா (அகக்கண் திறப்பு), ஹக்கின் லிகாஃ (இறை தரிசனம்), பல மகாம்களையும் கடந்த வஸ்லு (ஐக்கிய நிலை), சதாவும் இறை காட்சி கண்டுகளிக்கும் ஷுஹூது, இறை சந்நிதானத்தை அடுத்திருக்கும் குர்பு முதலிய உயர்ந்த அனுபவங்களெல்லாம் தமக்குக் கிட்டியிருப்பதாகத் தாவாச் செய்வார்கள். ஆனால், அவற்றின் பெயர்களையும் அவைபற்றிய வார்த்தைகளையும் வாயளவில் சொல்வதைத் தவிர அவைபற்றிய எவ்வகை ஞானமும் அனுபவமும் இவர்களுக்கு இரா.

ஏதோ சில மொழிகளையோ, கலிமாக்களையோ, இஸ்முகளையோ யாரிடமாவது கேட்டுத் தெரிந்துகொண்டு அவற்றைத் திரும்பத் திரும்ப ஓதிக்கொண்டே இருப்பார்கள். தாங்கள் ஓதுபவைதாம் அகிலத்திலே ஆதி முதல் அந்தம்வரையுள்ள ஞான அறிவுகளிலெல்லாம் மகா விசேஷமானவை என்று நினைத்துக் கொண்டுமிருப்பார்கள். இந்நினைப்புடன் இவர்கள் பிக்ஹுடைய ஆலிம் (பகீஹு) களையும், ஹதீஸுடைய ஆலிம் (முஹத்திஸு) களையும், திரு குர்ஆனைப் போதிப்பவர்களையும் தங்களைவிடக் கீழ்த்தரமானவர்கள் என்று அலட்சிய மனோபாவத்துடன் நோக்குவார்கள். உலமாக்களையே இவ்

வாறு அலட்சியப்படுத்தும் இவர்கள் ஏனைய சாமான்ய ஜனங்களை எவ்வளவு மோசமாகக் கருதுவார்கள்! ஆயினும், சாதாரண ஜனங்களில் பலர் — உழவர்கள், நெசவாளிகள், தொழிலாளிகள் பலர் — இந்த ஞான மந்திரம், கலிமா தெரிந்ததாகக் கூறுபவர்களையே தொடர்ந்து நாட்கணக்காய் அவர்கள் பின்னாலேயே அலைகிறார்கள். கடைசியில் இவர்களும் அவற்றைக் கற்றுக்கொண்டு அவற்றைத் திருப்பித் திருப்பி ஓதுவதற்கு உட்கார்ந்துவிடுகிறார்கள். ஏதோ இறை சமூகத்திலிருந்து தங்களுக்கு வந்த வஹீ போலவும், எவருக்கும் அருளப்படாத பரம இரகசியம் தமக்கு அளிக்கப்பட்டது போலவும் நினைத்துக்கொண்டு ஆலிம்களையும் ஆபிதுகளையும் இவர்கள் அற்பமாக நோக்குகிறார்கள்.

'சங்கடமதில் சிக்கி உழைக்கும் கூலிக்காரர்கள்' என்று ஆபிதுகளையும், 'ஹதீஸ்களைக்கொண்டு திரை போடப்பட்டுள்ளவர்கள்' என்று ஆலிம்களையும் இவர்கள் குறிக்கிறார்கள்.

ஹக்கிடம் நெருக்கமானவர்கள், இறை சமூகம் ஐக்கியமான வஸ்லுடையவர்கள் தாங்களே தான் என்று வருணித்துக் கொள்கிறார்கள். ஆனால் உண்மையில் மமதை பிடித்த இவர்கள் அல்லா(ஹ்)விடம் மிகக் கெட்ட நயவஞ்சக முனாபிக்குகளாக விளங்குகிறார்கள். அகக்கண் திறந்த உண்மை ஞானிகளான ஸூபியாக்கள் இவர்களை அறிவேதுமில்லாத முழு முட்டாள்களாயும், செல்லாக் காசுகளாயும் மதிக்கிறார்கள். இப்பேதையறிவிலிகள் தங்களிதயத்தில் உறைந்துகிடக்கும் ஆசாபாசங்களையும், துற்குணங்களையும் அகற்ற முற்படவில்லை; உண்மையான ஞான அறிவைத் தேடிப் பெற்றுத் தங்கள் மர்த்தபா (பதவி)க்களை உயர்த்த முனையவில்லை; தங்கள் ஆத்ம சுத்திபற்றிச் சற்றேனும் கவலைப்படவில்லை. யாரோ, ஏதோ சொன்னதைப் பற்றிப்பிடித்துக்கொண்டு

குருட்டு நம்பிக்கையுடன் அதைத் திரும்பத் திரும்ப ஓதிக் காலங் கடத்தித் தங்கள் மன இச்சைக்கு வழிப்பட்டார்களே தவிர வேறில்லை. அதை விடுத்து உண்மையிலேயே தங்களுக்குச் சித்தியையும் பயனையும் தரக் கூடிய சத்முயற்சிகளில் ஈடுபட்டால் எவ்வளவோ நன்மையாகுமே!

ஸூபிய்யாக்களில் வேறொரு சாரார்: இவர்கள் முன்னவர்களை யெல்லாம் மிஞ்சிவிட்டார்கள். இவர்கள் நல்ல அமல்களைச் செய்கிறார்கள்; ஹலாலானவற்றை அனுபவிக்கிறார்கள்; இதய சம்பந்தமான கண்காணிப்பு ஆராய்ச்சி செய்பவர்களாயிருக்கிறார்கள். எனினும், தங்களுக்கு ஸுஹ்து (பற்றற்ற தன்மை), தவக்குல் (இறைவன்மீது பொறுப்புச் சாட்டல்), ரிலா (இறை திருப்தி), ஹுப்பு (பேரின்பக் காதல்) முதலியவைகளில் பெரிய மகாம் (அந்தஸ்து)கள் கிடைத்திருப்பதாக வாதாடுகிறார்கள். ஆனால், யதார்த்தத்தில் அப்பதவிகளிலும் இவர்கள் செம்மை பெற்றிருக்க மாட்டார்கள். அவற்றிற்குரிய ஷறுத்துக்கள், முறைகள், தன்மை விவரங்கள், அவற்றிலுள்ள சங்கட நிலைகள் ஆகியவை என்னென்ன என்று எந்த விவரமும் இவர்களுக்குத் தெரியவே தெரியாது.

இவர்களில் சிலர் இறையன்பிலேயே தாங்கள் சொக்கிப்போயிருப்பதால் தங்களுக்கு அன்பு முற்றி வஜ்து என்னும் பரவசானந்த மயக்கம் ஏற்படுவதாகக் கூறிக்கொண்டு இறைவனது இஷ்கில் வையாளி போடுகிறார்கள். மேலும், இறைவனைக் கொண்டு தங்கள் மனம் போனபடி ஆகாத சில பிதுஅத்தான அல்லது குப்ரான தோற்றங்களையும், அபிப்பிராயங்களையும் சொல்லி பொல்லாத வாதம் செய்கிறார்கள். அல்லா(ஹ்)வை அறியும் மஃரிபாத் துறையில் சரிவர எதுவும் அறிந்து தெளியு முன்பே தமக்கு அல்லா(ஹ்)வின் ஹுப்பு கிட்டிவிட்ட

தாகக் கூறுகிறார்கள். இவர்கள் சொல்வது பொருத்த மற்றது; வெறும் அபத்தமானது. ஏனெனில், அல்லாஹ் ஆகாது என விலக்கியவற்றை வெறுத்து விட்டுவிடாமல் அவற்றை இறுகப் பற்றிப்பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ் கூறிய ஏவல்களை எடுத்து நடவாமல் தங்கள் மன இச்சைக்கு அடிமையாகி அதன் போக்குப்படி நடக்கிறார்கள். அல்லா(ஹ்)வின் ஏவல்களைவிடத் தங்கள் மன இச்சையின் ஏவல்களுக்கே வழிபடுகிறார்கள். ஜனங்கள் அவமானமாக ஏதும் சொல்லக்கூடுமே என்று ஜனங்களுக்குப் பயந்து சில காரியாதிகளை விட்டுவிடுகிறார்கள். ஆனால், அதே காரியாதிகளை ஜனங்களை விட்டும் தனித்திருக்கும் நேரத்தில் விடுகிறார்களில்லை. தாங்கள் புரியும் இத்தகைய மாற்றமான செயல்களெல்லாம் அல்லா(ஹ்)வின் பேரின்ப அன்புக் கனலை அணைத்துவிடுமே என்று இவர்கள் கவலைப்படுவதேயில்லை.

இவர்களில் சிலர் கிடைத்தமட்டும் போதும் என்ற திருப்தியான கனாஅத்தோடும் தவக்குலோடுமிருக்கிறார்கள். தவக்குல் என்று சொல்லிக்கொண்டு பக்கத்தூருக்குப் போகையிலும் கட்டுச்சாதம் ஏதும் கொண்டு செல்லாமல் போகிறார்கள். இவ்வாறு செய்வதே தவக்குலின் உயர்ந்த பண்பு என்று நிர்ணயங் கொண்டிருக்கிறார்கள். இவர்களைவிடத் தவக்குலில் பன்மடங்கு சிறந்து விளங்கிய அந்த உம்மத்தின் முன்னோர்களான மேதைகளும், அருமை ஸஹாபாக்களும் இவர்களைப் போன்று செய்ததாக ஆதாரமில்லை. தவக்குல் என்ற பேரால் இவர்கள் செய்யும் காரியம் பிதுஅத்தானதாகும். எவ்விதமான தவக்குலினால் ஆத்மாவுக்கு நன்மையும், வேறு எந்தவிதமான தவக்குலினால் அதற்கு அபாயமும், சங்கடமும் சம்பவிக்கின்றன என்று இவர்களை விட, மேதைகளான அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். கட்டுச்சாதமின்றிப் பிரயாணஞ் செய்வது

ஆத்மாவைச் சங்கடப்படுத்துவதாகிறது என்பதை யுணர்ந்த அவர்கள் கட்டுச்சாதத்தை எடுத்தே சென்றார்கள். அவர்கள் தவக்குலோடுதான் இருந்தார்கள். ஆனால், அவர்களின் தவக்குல் அல்லாஹ் மீதிருந்ததே தவிர, கொண்டுசென்ற கட்டுச்சாதத்தின்மீதிருக்கவில்லை.

கட்டுச்சாதம் எடுத்துச்செல்லாமல் தவக்குலுடன் போவதாகச் சொல்லும் இவர்கள், தாங்கள் போகுமிடத்தில் யாராவது உணவு கொணர்ந்து தரமாட்டார்களா, வேறு எவ்வகையிலாவது ஆகாரம் கிடைக்காதா என்று இச்சை கொண்டு எதிர்பார்த்த வண்ணமிருக்கிறார்கள். அதை நம்பியேதான் இவர்கள் கட்டுச்சாதம் கொண்டு செல்லவில்லை.

பொதுவாகக் கடைத்தேற்றும் நற்பதவி மகாம்களிலே எதிலும் மருட்சி யில்லாமலிருப்பதில்லை. அவ்வாறாக மதிமருட்சியில் மயங்கியவர்கள் மிகப் பலர். இவற்றின் முழு விபரங்களை நமது 'இஹ்யா உலூமுத்தீன்' எனும் கிதாபில் 'ருப்உல் முன்ஜியாத்' என்ற பகுதியிலே எடுத்துரைத்துள்ளோம். அவற்றைப் பார்வையிடுக.

ஸூபிய்யாக்களில் மற்றொரு வகையினர் : இவர்கள் கலப்பற்ற ஹலாலான உணவைத் தேடுவதில் மட்டுமே தங்கள் முழுப் பிரயாசையையும் செலுத்தித் தங்கள் ஆத்மாவை அதிகமும் கஷ்டப்படுத்துகிறார்கள். இந்த ஒரு வேலையிலேயே மூழ்கிக்கிடக்கிறார்களேயன்றித் தங்கள் இதயசுத்தி சம்பந்தமாகவோ, அங்க அவயவப் பேணுதல்கள் சம்பந்தமாகவோ சற்றுங்கூடக் கவனஞ் செலுத்தாமல் அவற்றில் மோசம்போய் விடுகிறார்கள்.

இவர்களில் வேறு சிலர் உணவு, உடை, உறைவிடம் இவற்றின் ஹலாலைப் பேணுவதிலேயே ஆழ்ந்துள்

ளார்கள். இவர்களும் மற்ற அமல்களைப்பற்றிக் கொஞ்ச மும் அக்கறை கொள்வதில்லை. அல்லாஹ், தன் அடியார்களில் எவரெவர் சம்பூர்ணத் தன்மையும், சர்வத்திலும் தனக்கு வழிபட்டு வணங்கும் தன்மை யும் பெற்றிருக்கிறார்களோ அவர்களையே அங்கீகரித்து ஏற்றுக்கொள்வான் என்பதையும் இவர்கள் அறிய மாட்டார்கள். ஒரு சில வழிபாடுகளை அனுஷ்டித்தும் மற்றும் சிலவற்றை அனுஷ்டியாது விடுத்தும் அலட்சிய நோக்குடனிருப்பதும் மதிமயக்கமே.

ஸூபிய்யாக்களில் மற்றொரு வகையினர்: சற்குணமும், தாழ்மையும், பணிவும், கருணையும் தங்களிடம் குடி கொண்டிருப்பதாக இவர்கள் தாவாச் செய்கிறார்கள். ஸூபிய்யாக்களுக்குப் பணிவிடை செய்வதையே இவர்கள் பிரதானமாக உவக்கிறார்கள். அத்துறையில் அளவிடற்கரிய கஷ்டமும், சிரமமும் மேற்கொண்டு தங்களைவிடப் பெரியோரான ஸூபிய்யாக்கள் சமூகத்தில் அதிகமான ஜனங்களைத் திரட்டுகிறார்கள். மகான்களான ஸூபிய்யாக்களுக்குப் பணிபுரிதலே தங்கள் கடன் என்று வாயால் கூறிக்கொள்கிறார்கள். ஆனால், உண்மை யில் அவ்வாறு இவர்கள் சிரமம் மேற்கொள்ளக் காரணம் அதைக்கொண்டு, பிரபலமான ஸூபிய்யாக்கள் பெயரைச் சொல்லித் தமக்குக் காசு, பணம், செல்வாக்கு முதலிய வற்றைத் தேடிக்கொள்ளும் வாய்ப்பை உண்டாக்கிக் கொள்வதற்குத்தான். இவ்வாறான சுயநலந்தான் இவர்களின் அந்தரங்க நோக்கமாகும்.

இவ்வளவெல்லாம் செய்யும் இவர்கள் உள்ளச்சத் துடன் ஸூபிய்யாக்களுக்குப் பணிவிடை செய் வதாக வெளிக்குக் காட்டிக்கொள்கிறார்கள். அவர்களின் அன்பையும் ஆசியையும் பெறவே அவர்களை அண்டி வாழ்வதாகவும் கூறிக்கொள்கிறார்கள். ஆனால், அந்தரங் கத்தில் ஸூபிய்யாக்களின் பேரைச் சொல்லிப் பணங்

திரட்டுவதோடு பலரின் சகவாசத்தையும், தொடர்பையும், ஒத்தாசையான பக்கபலத்தையும் பெருக்கிக் கொள்வதற்காகவே இத்திட்டத்தை நிறைவேற்றிவருகிறார்கள்.

இத்தன்மையில் இவர்கள் ஜனங்களிடமிருந்து ஹராமான பொருள்களையும், ஷுப்ஹத்தான சந்தேகப் பொருள்களையும் நிதியாக வசூலிக்கிறார்கள். அவற்றிலிருந்தே ஸூபிய்யாக்கள் பெயரால் மிகத் தாராளமாகச் செலவிடுகிறார்கள். அதன் மூலம் அதிக ஜனங்கள் இவர்களை ஆதரிக்கிறார்கள். இவர்களுடைய பிரக்கியாதியும், பேரும் மேலோங்குகிறது. இவர்களில் சிலர் ஆட்சியாளர்களிடமிருந்தும் திரவியங்களைப் பெற்று இத்துறையில் செலவிடுகிறார்கள்.

மற்றுஞ் சிலர் ஆட்சியாளர்களிடமிருந்து பெற்ற பணத்தையும், அநியாயம், அக்கிரமம் ஆகிய துறைகளில் திரட்டிய பணத்தையும் ஹஜ்ஜுக்குச் செல்வதற்காக என்று ஸூபிய்யாக்களுக்கு அளிப்பார்கள். இவ்வாறு தாங்கள் புரியும் செயல்களெல்லாம் பரோபகாரம், நன்றி, புண்ணிய கைங்கரியங்களைச் செய்யத் தூண்டுவது என்றெல்லாம் காரணங் கூறுவார்கள். ஆனால், உண்மையில் இவர்கள் அச்செயற்களை யெல்லாம் புரியும் நோக்கம் முகஸ்துதி, புகழ், பிரக்கியாதி இவையன்றி வேறில்லை.

என்னே, இவர்களின் போக்கு! அல்லா(ஹ்)வின் ஏவல்களை இவ்வளவு தூரம் அலட்சியப்படுத்துகிறார்களே! ஹராமான பொருள்களை மனமாரத் தெரிந்தும் மனமகிழ்வுடன் ஏற்றுக்கொள்கிறார்களே! அதையே தமக்காகவும் பிறருக்காகவும் செலவு செய்துகொண்டிருக்கிறார்களே!

ஒரு புத்திசாலி, அல்லா(ஹ்)வை வணங்கும் பள்ளிவாசலை நிர்வாகம் செய்துவருகிறார். அவர் பள்ளி

வாசல் தரையைப் பூச முனைகிறார். அவ்வாறு பூசும் போது மலஜலம், சாணி முதலிய நஜீஸுப் பொருள் களைக் கொண்டு கலந்து பிசைந்த களிமண்ணால் பூசுகிறார். பள்ளிவாசலைத்தானே பூசுகிறோம், எதைக் கலந்து பிசைந்தாலும் பாதகமில்லை என்று கருதிக்கொண்டு காரியம் செய்கிறார். நாம் மேலே குறிப்பிட்ட ஸூபிய் யாக்களிலுள்ள வகையினருடைய போக்கு இப்புத்தி சாலியின் போக்கையே ஒத்திருக்கிறது. இவர்கள் ஹராம் என்ற நஜீஸான பொருள்களை ஹஜ்ஜு என்ற புனித காரியத்துக்குப் பயன்படுத்துகின்றனர்.

ஸூபிய்யாக்களில் மற்றொரு வகையினர்: ஆத்மாவைப் பரிபக்குவப்படுத்துவதிலும், கேவல நிலையை விட்டுப் பரிசுத்தமாவதிலும், விருப்பு வெறுப்பை விட்டுப் பற்றற்றிருப்பதிலும், குணங்களைத் தூய்மையாக்குவ திலும் இவர்கள் மிகுந்த கஷ்டமெடுத்து முனைந்துள்ள னர். அவ்வகையிலே முற்றும் மூழ்கியுள்ளனர். சதாவும் ஞானம் சம்பந்தமாகவே பேசுகின்றனர்.

ஆத்மாக்களிலுள்ள குற்றங்குறை (ஐபு)களைப்பற்றி யும் அதன் குபாடங்களைப்பற்றியும் வாதுசெய்து கொண்டேயிருக்கின்றனர். அவ்வாறாகச் செய்யும் வாதப் பிரதிவாதங்களையே தமக்குத் தொழிலாகவும் விளம்பர மாகவும் ஆக்கிக்கொள்கின்றனர்.

நுணுக்கமான விஷயங்களிலும் ஆத்மாவுக்கு மிகவும் பொல்லாத அபாயங்கள் உள்ளனவாதலால், நுண்ணிய ஆராய்ச்சி செய்தலே போதுமானது, அதனாலேயே தங்கள் ஆத்மாவைக் கெடுதல்களை விட்டும் காப்பாற்றிக் கொள்ளமுடியும் என்று இவர்கள் கருதிக்கொண்டிருக் கிறார்கள்.

"இஃது ஆத்மாவுக்கு இன்னல் உண்டாக்கும் இழிவான சுபாவம்" என்று கூறிக்கொள்கிறார்கள். ஆனால்,

அனுஷ்டானத்தில் அதைத் தவிர்த்து நடக்க மறந்துவிடுகிறார்கள். இழிவான சுபாவம் இழிவானது என்பதை மறந்திருப்பதும் ஓர் இழிவான காரியமே.

இவர்களின் இத்தகைய போக்குப்பற்றிக் கேட்கப் பட்டால் சங்கிலித்தொடர் போன்ற வார்த்தைகளால் போலி சமாதானங் கூறுகிறார்கள். இவ்வாறாகத் தங்கள் ஆத்மாவைக் கவனிக்கும் தொடர்பை மட்டுமே சர்வ காலமும் கொண்டிருப்பார்களே தவிர தங்களைப் படைத்த சிருஷ்டிகர்த்தா (காலிகு)வை இதயத்தால் பற்றிப்பிடிக்க முற்படுவதில்லை.

ஹஜ்ஜுக்குப் போக ஏற்பாடுசெய்த ஒரு மனிதனை இத்தகையோருக்கு உவமானமாகக் குறிப்பிடலாம். அவன் ஹஜ்ஜுக்குப் போவதற்காக, ஹஜ்ஜு செய்வது எப்படி, எப்போது புறப்படவேண்டும், வழியில் என்னென்ன சங்கடங்கள் சம்பவிக்கும் என்று துருவித் துருவி அணுவணுவாக ஆராய்ந்துகொண்டிருந்தான். அதனால் அவன் முழு நேரத்தையும் அதிலேயே கழித்துவிட்டானேயன்றி, ஹஜ்ஜுடைய பிரயாணத்தை மேற்கொள்ளவோ, அதனுடைய முறைகளை அனுஷ்டித்துக் கஃபதுல்லாஹ் பக்கம் செல்லவோ இல்லை. தான் இருந்த இடத்திலேயே இருந்துகொண்டு ஹஜ்ஜுடைய வகை விபரங்களைப்பற்றி மலையளவு கூறிக் கொண்டிருப்பதால் மட்டும், மக்கமா நகர் சென்று கஃபத்துல்லா(ஹ்)வைத் தரிசித்து அரபாவில் தரிபட்டு ஹஜ்ஜை நிறைவேற்றியவனாக ஆக முடியுமா? இவனைப் போன்றே மேலே குறிப்பிட்ட வகையினரும் மதிமயங்கி யுள்ளனர்.

ஸூபிய்யாக்களில் வேறொரு வகையினர்: இவர்கள் முன்பு குறிப்பிட்ட பதவிகளையெல்லாம் தாண்டி

முன்னேறியுள்ளார்கள். தரீக்காவில், ஸுலூக்கு வழி நடந்து ஓரளவு பலாபலன் பெற்றுள்ளார்கள். ஞான தீபச் சுடர் சிறிதளவு இவர்களுக்குத் திறந்தருளப்பட்டுள்ளது. ஏனையோருக்குச் சித்திக்காத சில காட்சிகள், ஞானத் தோற்றங்கள் இவர்களுக்கு காட்டப்படுகின்றன. இக்காரணங்கள்பற்றி, "நாம் சித்திபெற்றுவிட்டோம்" என்ற அகப்பெருமை இவர்களுக்கு உண்டாகிவிடுகிறது. "மற்றவர்களுக்கு அடைபட்டிருக்கும் அகக்கண், ஞான வாயில்கள் நமக்குத் திறந்துவிட்டன" என்ற பெருமிதம் உண்டாகிறது. தமக்குண்டாகும் அபூர்வ ஞானத் தோற்றங்களையும், விசேஷக் காட்சிகளையும் நினைத்துப் பெருமகிழ்வடைந்து தாங்களே பாக்கியசீலர்கள் என்று மருட்சியடைகிறார்கள்.

நிச்சயமாக, இவர்கள் மதிமயங்கியவர்கள் தாம். ஏனெனில், அல்லா(ஹ்)வை அறியும் மஃரிபா பாதையில் ஏற்படும் அதிசய அற்புதங்களுக்கும், காட்சிகளுக்கும் வரம்பே கிடையாது. என்றாலுங் கூட இவர்கள் அவற்றிற்கு ஒரு வரம்பெல்லை கற்பித்துக்கொண்டு, தாமனுபவிக்கும் காட்சிகளும், தோற்றங்களும் அவ்வரம்பின் எல்லையை எய்திவிட்டன, சர்வமும் தங்களுக்குச் சித்தியாகிவிட்டன என்று மகிழ்ந்து மயங்கியுள்ளார்கள். இவ்வண்ணம் ஞான முன்னேற்றப் பாதையில் தடையை உண்டாக்கிக்கொள்கிறார்கள். அதன்மூலம் மெய்ப்பொருள் ஹக்கை அண்டி வஸ்லு பெறும் பேரானந்தப் பாக்கியத்தை இழந்தவர்களாகி விடுகிறார்கள்.

அரசனுடைய தரிசனத்தைப் பெறச் சென்ற ஒரு மனிதனை இவர்களுக்கு உவமானமாகக் குறிப்பிடலாம். அரசனின் அரண்மனை வாயிலை அண்டிய அவன், வாயிற்புறத்துக்குப் பக்கத்திலுள்ள அழகிய மைதானத்தில் இருந்த கவர்ச்சி மிக்க நந்தவனத்தையும், அற்புதப்

புஷ்பங்கள் பூத்துக் குலுங்கும் பூஞ்சோலையையும் கண்டு சொக்கிவிட்டான். அவ்விதக் காட்சிகளை அவன் தன் ஆயுளில் கண்டதேயில்லை. எனவே, புதிதாகக் காண நேர்ந்த அவற்றின் கவர்ச்சியானந்தத்தில் லயித்துப் பிரமித்துவிட்டான். அவற்றிலேயே சொக்கி மயங்கிய அவன் அரச தரிசனம் பெறுவதை மறந்து அதற்குரிய சந்தர்ப்பத்தையும் இழந்துவிட்டான். நாடிச் சென்ற காரியத்தை இழந்து ஏமாறிய இம்மனிதனுடைய நிலைமையிலேயே மேற்கூறியவர்களும் உள்ளனர்.

ஸூபிய்யாக்களில் உள்ள கடைசி வகையினர்: மேலே குறிப்பிட்ட வகையினரைப் போல இவர்கள் ஞானவழியில் காணும் காட்சிகளையும், அற்புதத் தோற்றங்களையுங் கண்டு மதிமயங்கிவிடவில்லை. தங்களுக்குண்டாகும் அற்புதத் தோற்றங்கள், அருட் காட்சிகளைக் கண்டு சொக்கியிருந்துவிடவில்லை. எனவே, முந்தியவர்களைவிட இவர்கள் விசேஷமானவர்கள்தாம். என்றாலும், மேன்மேலும் முதிர்ச்சியும், பிரயாசையும், துணிவுங்கொண்டு ஞானப் பாட்டையில் உள்ள பல கணவாய்களையுங் கடந்து உஸூல் மூலஸ்தானத்தின் சமீபம் நெருங்கிய இவர்கள், அந்தச் சமீப ஸ்தலமே மூலஸ்தானம் என்று நினைத்துத் தாங்கள் மூலஸ்தானமான உஸூலையடைந்துவிட்டதாக முடிவுசெய்து விடுகிறார்கள். இம்முடிவுடன் அந்த வெளியிடத்திலேயே நிற்கிறார்களேயன்றி அதைக் கடந்து யதார்த்த மூலஸ்தானத்திற்கேகவில்லை. இவ் விஷயத்தில் இவர்கள் பெருந் தவறிழைத்துவிட்டனர்.

முடிவுரை

மாட்சிமையும், மகத்துவமும் மிக்க அல்லாஹ் ஜல்ல ஷஃனுஹூ"த் தஆலாவை அறிந்து பேரின்பமுக்திபெறும் ஞான மார்க்கத்தில் இருள்கொண்டும், ஜோதிகொண்டும் ஆன எழுபது திரைகள் உள்ளன. ஞான பாட்டையில் செல்லும் ஸாலிக் தான் ஒவ்வொரு திரையைத் தாண்டியதும் நிச்சயமாக இறுதி மகாமை அடைந்து விட்டதாகக் கருதுவான்; ஆனால், அங்கு அத்தகைய திரைகளிலொன்று இருக்கும். இவ்வாறாகவே, ஒவ்வொரு திரையை அண்டும்போதும், தான் பூரண நிலையை எய்திவிட்டதாக அவன் நினைக்கும் வண்ணமிருக்கும்.

> "ஆகவே அவர் (நபி இப்ராஹீம்) மீது இரவு கவிந்தபோது அவர் ஒரு நட்சத்திரத்தைக் கண்டு, "இது என் ரப்பு" என்றார். பின்னர் அஃது அஸ்தமித்தபோது, "அஸ்தமிப்பவைகளை நான் நேசிக்கவில்லை" என்று கூறினார். பின்னர், சந்திரன் உதயமாவதைப் பார்த்தபோது, "இஃது என் ரப்பு" என்று கூறினார். அஃது அஸ்தமித்தபோது,"(அஸ்தமிக்கும் இஃது என் ரப்பு அல்ல.) என் ரப்பு (அல்லாஹ்) எனக்கு நேர்வழி காட்டாவிடில் நிச்சயமாக நான் வழிகெட்ட கூட்டத்தாரில் ஒருவனாகி விடுவேன்" என்றார். (6: 77, 78)......இப்ராஹீம் நபியவர்கள் தமது சமூகத்தாரது கொள்கையைச் சுட்டிக்காட்டி அவர்களின் விளக்கத்துக்குத் தக்க பதில் கூறியதைப் பிரஸ்தாபிக்கும் திருகுர்ஆன் வாக்கியங்கள் ஞான பாட்டையிலுண்டாகும் இத்தகைய திரைத் தடைகளையே சுட்டிக்காட்டுகின்றன இந்த முறையில் திரைகளும் தடைகளும் ஏராளமுண்டு.

அடியானுக்கும் ஆண்டவனுக்கும் இடையே உள்ள பிரதான முதல் திரை அவனுடைய ஆத்மாவேயாகும். ஏனெனில், அஃது இறைவனின் சார்பு பெற்றுள்ள தனியம்சம் (அம்ரு ரப்பானீ); மகத்துவம் மிக்கது.

அல்லா(ஹ்)வின் ஜோதிகளில் மேலான ஜோதி (நூருல்லாஹி) அதுவே. அதில்தான் ஹக்குத் தஆலா வின் இரகசிய உள்ளமை தஜல்லியாகிப் பிரதிபலிக் கிறது. அகில லோகமும் அதிலேயே அடங்கியுள்ளது. சர்வ காட்சிகளும் அதிலேயே உண்டாகின்றன. அதிலே தான் அல்லா(ஹ்)வின் ஞானச் சுடர் கொழுந்துவிட்டுப் பிரகாசிக்கிறது. சர்வத்தின் யதார்த்தத் தோற்ற வுஜூ தும் அதில்தான் வெளியாகிறது. ஆரம்பத்தில், அஃது ஒளிப்பிழம்பின்ஜோதிப் பெருக்கால்திரையிடப்பட்டிருந் தது. அப்பெரும் ஜோதியே அதை மூடியிருந்தது. அதன்மீது அல்லா(ஹ்)வின் ஒப்புவமையற்ற நூர் சுடர் வீசியதும் இதயம் தன் யதார்த்த அம்சத்தைப் பெற்றுவிடுகிறது. தன் அகமியத்தின் சிறப்பு மிக்க ஜமாலிய்யத்தைக் கண்ட ஞானி சில சமயங் களில் பிரமிப்படைகிறான். சில சந்தர்ப்பங்களில் 'அனல் ஹக்' என்று சப்தமிடுகிறான். இவ்வாறான திரை யைக் கடந்து மேலான யதார்த்த மகாமை அடையத் தவறிவிட்டவன் நிச்சயமாக மோசம்போய் விட்டவன்தான்.

இத்தகைய போக்கில்தான் கிறிஸ்துவர்கள் சென்று விட்டனர். அல்லா(ஹ்)வின் ஒளிப்பிழம்பு மஸீஹ் ஈஸா (அலை) இடம் இருக்கக் கண்டு அன்னாரையே இறைவன் என்று பாவித்துத் தவறிப்போய்விட்டார்கள். தெளிந்த நீரில் அல்லது கண்ணாடியில் சந்திரனுடைய பிரதிபிம்பத்தைக் காணும் ஒருவன் அதுவே சந்திரன் என்று தீர்மானித்து அதைப் பிடிப்பதற்காகக் கை நீட்டு வது போலவே மதிமயங்கிவிட்டார்கள். நிச்சயமாக, இவர்கள் மதிமயக்கமுற்றே இவ்வாறு பிசகிவிட்டனர்.

அல்லா(ஹ்)வின் அளவில் சேர்ப்பிக்கும் ஞான பாட்டையில் (ஸுலூக்கில்) ஏற்படக்கூடிய மதி மயக்க விபரங்கள் இன்னும் எவ்வளவோ உண்டு. அவற்றை இம்மட்டென்று ஏட்டில் எழுத இயலாது.

நுணுக்கமான அவற்றையெல்லாம் விளக்கமாக எடுத்தியம்புவது சாமான்யமான கருமமுமன்று.

நுண்ணிய ஞானவிஷயமான பல அந்தரங்களைத் தீர்க்கமாக அலசி அலசிப் பார்த்து அனுபவித்த பின்புதான் ஓரளவு உணரமுடியும். அவைகளை அப்பட்டமாகக் கூறுவது இலகுவான விஷயமன்று. அவ்வாறு துலக்கிக் கூற அனுமதிக்கப்படவுமில்லை. ஆயினும், ஞான வழி நடப்பவர்கள் மருட்சி, சிக்கல்களில் சிக்கியுழன்று விடலாகாதே என்பதற்காக உணர்ச்சியூட்டச் சில காரியங்களை எடுத்தியம்புவது ஆகுமானதாய் இருக்கிறது.

முன் கூறப்பட்ட மதிமயக்கம், மருட்சி, சிக்கல் முதலிய அபாயங்களிலிருந்து புத்திசாலியானவன் எச்சரிக்கையுடன் விலகிக் கவனமாக நடந்து சித்தி பெறுவான்.

அல்லா(ஹ்)வைக் கொண்டே சர்வத்துக்கும் நல்லுதவி உள்ளது. அவனே நமக்குப் போதுமானவன். பொறுப்புச்சாட்ட நம்பிக்கையான பொறுப்புதாரி (வக்கீல்) அவனே. எல்லா விஷயங்களுக்கும் அல்லா(ஹ்)வையே நம்பி இருப்போமாக!

ஈடிணையில்லா மகத்துவமும், மாண்பும் மிக்க அவனன்றி ஓரணுவும் அசையாது; அவனைக் கொண்டல்லாமல் நமக்கு ஒருவித உசும்புதலோ சக்தியோ கிடையாது.

நமக்கு வழிகாட்டியான நாயகம் (ஸல்) மீதும், அவர்களின் அருமைக் கிளையார், தோழர், உறவினர், சகாக்கள் அனைவரின் மீதும் அல்லா(ஹ்) ஸலவாத்தும், ஸலாமும் அருள்வானாக! ஆமீன்.

மௌலவீ மூ. முஹம்மது ஹஸன காதிரி தர்ஜுமா செய்த "கிதாபுல் கஷ்பி வத்தபீனி பீ குரூரில் ஹல்கி அஜ்மயீன்" முற்றிற்று.

110715

Printed at Rajan Electric Press, Madras, 1.